47

[illegible]

[illegible]

[illegible] 20, [illegible] 2. [illegible] 12, 2002

©

D
V211, 31'P01
P02.2.2
224968

வெளியீடு 29-11-2002 Issued 29-11-2002

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, ஏப்ரல் 12, 2002 – தொகுதி 20 – எண் 2

**Friday the 12th April, 2002 – Volume 20 – No. 2**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Chennai - 600 009**

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

46/2003

**12-4--2002**

## உள்ளடக்கம்


பக்கங்கள்

1. வினாக்கள்-விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள் 203-243

2. தகவல் கோரல்—

(அ) தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. பிரபாகரனின் பேட்டி மற்றும் அவரை இந்தியாவுக்குக் கொண்டுவந்து, அவர் மீதான வழக்கை விரைந்து நடத்துதல் 243-254

(ஆ) நீலகிரி மாவட்டத்தில் தேயிலை விலை வீழ்ச்சியால் விவசாயிகளும், தொழிலாளர்களும் பாதிப்பு 254

(இ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை 271

(ஈ) அருப்புக்கோட்டை அருகில் இருக்கங்குடி மாரியம்மன் கோயில் நில ஆக்கிரமிப்புகளை அகற்ற முயன்றபோது ஏற்பட்ட பிரச்சினை 271-274

3. சிறப்புக் கவன ஈர்ப்பு—

சென்னை, பெசன்ட் நகர், பாரத ஸ்டேட் வங்கியில் நடந்த கொள்ளை முயற்சி 255-271

திரு. ஜி. பழனிசாமி 255-257

திரு. ஜே. ஹேமச்சந்திரன் 258-259

திரு. இ. புகழேந்தி 259-260

திரு. சி. ஞானசேகரன் 257,261,262, 263,264

பக்கங்கள்

3. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

திரு. ஐ. கணேசன் 264-265,266

திரு. லா. சந்தானம் 266

*மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா 266-274

4. விதி 110-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கைகள்—

(அ) சென்னை நகரில் குடிநீர் விநியோகம் செய்ய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் 275-278

(ஆ) திரையரங்குகளில் நுழைவுக் கட்டணச் சீரமைப்பு 278-281

5. கவன ஈர்ப்பு—

சாத்தனூர் அணை இடதுபுறக் கால்வாய் விவசாயிகளின் நெற்பயிருக்கு அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடுதல் 281-285

*திரு. எ.வ. வேலு 281,282, 283,284

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 281-282, 283-285

6. அறிக்கைகள் அளித்தல்—

பொதுக் கணக்குக் குழு 285

பக்கங்கள்

7. மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 13—எரிசக்தித் துறை
(ஆ) கோரிக்கை எண் 17—கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை-கதர் கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள்
(இ) கோரிக்கை எண் 42—சிறு தொழில்கள் துறை
— 285-398

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன் 285,296,340, 376-381

*மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன் 297,308, 320,323,324, 361-376

*திரு. பா. பரணிகுமார் 320-327

*திரு. ந. கணபதி 328-331

திரு. கா. கந்தசாமி 331-335

திரு. ஆர். கிருஷ்ணன் 335-341

*திரு. எச்.எம். ராஜு 341-347

*திரு. டி. மணி 348-352

*திரு. ஏ.எஸ். கண்ணன் 353-361

8. அறிவிப்பு—

பேரவை அலுவல் குறித்து 353

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— 398-400


தமிழ்நாடு சட்டமன்ற நூலகம் 224968 சென்னை-600 009 நூலகம்.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பங்குனி 29, விசு - திருவள்ளுவர் ஆண்டு 2033**
**2002 ஏப்ரல் 12, வெள்ளிக்கிழமை**

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"இரவார் இரப்பார்க்கொன்று ஈவர் கரவாது*
*கைசெய்தூண் மாலை யவர்."*

*தாமே தொழில் செய்து ஊதியம் பெற்று உண்ணும் இயல்புடையவர், பிறரிடம் சென்று கையேந்தமாட்டார். தம்மிடம் வேண்டி நின்றவர்க்கும் ஒளிக்காமல் வழங்குவார்.*

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 125, திரு. ரா. ஈஸ்வரன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்.

**125—**

### செண்பகவல்லி அணை

***5143—திரு. ரா. ஈஸ்வரன்:**

*மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) செண்பகவல்லி அணை உடைப்பை அடைக்கும் பணி நடைபெறவில்லை என்பதை அரசு அறியுமா?*

(ஆ) ஆம் எனில், அரசு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) மற்றும் (ஆ) செண்பகவல்லி அணை கேரள மாநில எல்லைக்குள் அமைந்திருப்பதால் அவ்வணையைப் பழுதுபார்க்கும்படி கேரள அரசை இவ்வரசு தொடர்ந்து கேட்டுக்கொண்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஈஸ்வரன் (குறுக்கீடு) திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த செண்பகவல்லி அணை உடைப்பு அடிக்கடி ஏற்பட்டு விவசாயப் பயிர்கள் பாதிக்கப்படுகின்றன. எனவே, பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் மீண்டும் கேரள அரசோடு தொடர்பு கொண்டு இதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** கேரள மாநிலம், இடுக்கி மாவட்டத்தில் உள்ள சொக்கம்பட்டி மலையின் பள்ளத்தாக்கிற்குச் செல்லும் சொக்கப்பட்டித்தோடு மற்றும் புளியம்பட்டித்தோடு ஆகிய இரண்டு ஓடைகளில், பல நூற்றாண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட இவ்வணையைப் பொறுத்தவரை, 1964 ஆம் ஆண்டு பெய்த கூடுதல் மழையினால் அணையும், கால்வாயும் பழுதடைந்து உடைப்பு ஏற்பட்டது. செண்பகவல்லி பிரிப்பு அணை மற்றும் கால்வாய் கேரள மாநில எல்லையில், அடர்ந்த வனப் பகுதியில், மிகவும் உட்பகுதியில் அமைந்துள்ளது. மேற்படி செண்பகவல்லி பிரிப்பு அணை மற்றும் கால்வாயில் ஏற்பட்ட உடைப்பைச் சரிசெய்வதற்கு 1978 ஆம் ஆண்டு கேரள அரசு ரூ.5,80,000-க்கு அனுப்பிய மதிப்பீட்டிற்கு தமிழக அரசு ஒப்புதல் அளித்தது. மீண்டும் 1-7-1982-ல் உள்ள விலைப்புள்ளியின் அடிப்படையில் கேரள மாநில அரசால் ரூ.10,29,732-க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. இதில் 50 சதவிகிதத் தொகையான ரூ.5.15 இலட்சம் முன்பணமாக மார்ச் 1986-ல் கேரள அரசுக்குச் செலுத்தப்பட்டது. மேற்கண்ட பணியிடமானது கேரள-பெரியாறு வனப் புலிகள் சரணாலயமாக கேரள வனத் துறையால் அறிவிக்கப்பட்டுள்ளதால், கேரள வனத் துறையின் அனுமதி தேவைப்படுகிறது. ஆகவே, தற்போது



மேற்படி உடைப்பைச் சரிசெய்வதற்கு ஆகும் செலவுக்குண்டான மதிப்பீட்டை கேரள மாநில அரசே தயாரிக்கலாம் அல்லது கேரள மாநில வனப் பகுதியில் நுழைந்து மதிப்பீடு தயாரிப்பதற்கான நில அளவை செய்வதற்கும் மற்றும் புள்ளிவிவரங்களைச் சேகரிப்பதற்கும் கேரள மாநில அரசிடமிருந்து அனுமதி கிடைக்கப்பெற்றால்தான் தமிழக அரசால் மதிப்பீடு தயாரிக்க முடியும். 28-11-1996 அன்று சென்னையில் அமைச்சர்கள் நிலையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது, இந்த இடம் வனப் பகுதியில் உள்ளதால் கேரள வனத் துறையுடன் தொடர்பு கொண்டு ஆவன செய்வதாக கேரளத் தரப்பில் கூறப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, கேரள அரசுடன் கடிதப் போக்குவரத்து மேற்கொள்ளப்பட்டது. 8-7-1999 அன்று அமைச்சர், பொதுப் பணி மற்றும் வனம், அவர்களிடமிருந்து கேரள பாசனத் துறை அமைச்சருக்கு அனுப்பிய கடிதத்திற்கு, கேரள பாசனத் துறை அமைச்சர், அவரது 1-9-1999 ஆம் நாளிட்ட கடிதத்தில் இந்தச் சீரமைக்கும் பணிகளைக் கீழ்க்கண்ட காரணங்களினால் தற்போது மேற்கொள்ள இயலாது என்று தெரிவித்துள்ளார்:

"செண்பகவல்லி அணை கட்டுவதற்கு எவ்வித ஒப்பந்தமும் ஏற்படுத்தப்படவில்லை. எனவே, அனுமதி பெறாமல் இவ்வணை கட்டப்பட்டுள்ளது என்று யூகிக்கப்படுகிறது. பெரியாறு புலிகள் சரணாலயத்திற்குள் இவ்வணை உள்ளதால், இவ்வணையில் எந்தவொரு பணியையும் மேற்கொள்வதற்கு முன்னர், வனத் துறையின் அனுமதியைப் பெறவேண்டும். உச்ச நீதிமன்றம் அண்மையில் பிறப்பித்துள்ள ஆணையின்படி, வனமல்லாத பணிகளை வனத்திற்குள் மேற்கொள்ளக்கூடாது."

மீண்டும் 22-2-2000 அன்று அமைச்சர், பொதுப் பணி, அவர்களிடமிருந்து கேரள பாசனத் துறை அமைச்சருக்கு, செண்பகவல்லி அணையைச் சீரமைக்கும் பணியை உடனடியாக மேற்கொள்வதற்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டது. இதற்கு, 30-9-2000 அன்று கேரள பாசனத் துறை அமைச்சர் அவர்களிடமிருந்து, அமைச்சர், பொதுப் பணி மற்றும் வனம் அவர்களுக்கு, அனுப்பப்பட்ட பதிலில், ஏற்கெனவே சொல்லப்பட்ட காரணங்களையே வலியுறுத்தி, இவ்வரசின் செயற்குறிப்பை ஏற்க இயலாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில் தமிழ்நாடு, கேரளா அமைச்சர்களுக்கிடையில் நிலுவையில் இருந்து வரும் நதி

[2002 ஏப்ரல் 12

நீர்ப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும்பொருட்டு, புதிதாகப் பேச்சுவார்த்தை மேற்கொள்ளலாம் என்றும், இதற்கான கேரள அரசின் வசதியைத் தெரிவிக்குமாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் மாண்புமிகு கேரள முதலமைச்சருக்கு செப்டம்பர் 2001-ல் கடிதம் அனுப்பப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, அமைச்சர்கள் நிலையில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முன்னர், அதிகாரிகள் நிலையில் பேச்சுவார்த்தை மேற்கொள்ளலாம் என்று கருதப்பட்டு, கேரள அரசின் வசதியைத் தெரிவிக்குமாறும் கடிதப் போக்குவரத்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதிகாரிகள் நிலையில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையில், "செண்பகவல்லி அணைக்கட்டினைப் பழுதுபார்க்கும் பணி" என்ற பொருளும் பேசப்பட உள்ளது. மேலும், செண்பகவல்லி அணைக்கட்டினைப் பழுதுபார்க்கும் பணியை விரைவில் முடித்திட கேரள அரசுக்குத் தகுந்த அறிவுரை வழங்குமாறு மார்ச் 2000-ல் மத்திய அரசு கேட்டுக்கொள்ளப்பட்டது. மத்திய அரசின் பதில் எதிர்பார்க்கப்படுகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு)

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், அமைச்சர் விளக்கமாகச் சொல்லிவிட்டார்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செண்பகவல்லி அணை உடைப்பை உடனடியாக அடைக்கும் பணியை மேற்கொள்வதற்காக, பேச்சுவார்த்தை என்று தொடங்கினால்தான் எதையாவது சாதிக்க முடியும். நேற்றுக்கூட அரசு உறுதிமொழிக் குழுவிலே வந்திருந்த செயலாளர், மற்றவர்கள் எல்லாம் கூறுகின்றபோது, எந்தக் கடிதம் எழுதினாலும், கேரள அரசிடமிருந்து பதிலே வருவதில்லை என்கிற ஒரு நிலையினைக் கூட்டத்திலே அவர்கள் தெரிவித்தார்கள். ஆகவே, அதிகாரிகளை விட்டு, கடிதப் போக்குவரத்து என்று வைத்துக் கொள்வதைவிட, இனி அமைச்சர்கள், நீங்களே கடிதப் போக்குவரத்து மூலமாக அல்லது—இப்போதுதான் S.T.D. facilities எல்லாம் இருக்கிறது, நீங்களே—தொலைபேசி மூலமாகப் பேசியாவது, ஒரு நாளைக் குறித்து, ஒரு பேச்சுவார்த்தை தொடங்கி, இந்தப் பணியை முடிப்பதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2002 ஏப்ரல் 12]

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனை நல்ல யோசனை; தொடர்ந்து இவ்வரசு அந்த யோசனை அமைச்சர்களிடத்தில் நேரிடையாகத் தொடர்பு கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 126, திரு. ப. அண்ணாவி, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்.

**126—**

### தடுப்பணை

***15894—திரு. ப. அண்ணாவி:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், தொட்டியம் வட்டம், ஸ்ரீராமசமுத்திரம், காவிரியில் தடுப்பணை கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) காவிரி டெல்டாவிற்காக மேட்டூர் அணை மூடப்பட்ட பிறகு காவிரியில் வரும் குறைந்த அளவு நீர் ஸ்ரீராமசமுத்திரம் வாய்க்கால் (வடகரை வாய்க்கால்) தலைப்பிற்குச் செல்ல ஏதுவாக, வருடந்தோறும் காவிரியில் மண் கொரம்பு அமைத்து தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ப. அண்ணாவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு, சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னைச் சட்டமன்ற உறுப்பினர் ஆக்கிய அம்மா அவர்களுக்கு கோடானு கோடி வணக்கங்கள். திருச்சி மாவட்டம், தொட்டியம்

[2002 ஏப்ரல் 12

வட்டம், ஸ்ரீராமசமுத்திரம், வடகரை வாய்க்கால் தலைப்பில் மேட்டூர் அணை அடைப்புக் காலங்களில் தடுப்புகளைக் கட்டி விவசாயத்திற்குத் தண்ணீர் கொடுப்பது வழக்கமாக இருந்து வருகிறது. அந்த மண் அணை அடிக்கடி உடைந்து விடுவதால், அதைப் பழுதுபார்த்துத் தண்ணீர் எடுப்பது வழக்கம். இதனால் அரசுக்கு, ஆண்டு ஒன்றுக்கு பல இலட்சம் ரூபாய் செலவாகிறது. இதற்கு நிரந்தரத் தீர்வு காண, பொதுப் பணித் துறை அதிகாரிகள் பார்வையிட்டு, நிரந்தரத் தடுப்பணை அமைக்கத் திட்டம் தயார் செய்து, அரசிடம் உள்ளது. இதை முந்தைய அரசு கிடப்பில் போட்டுவிட்டது. இந்த நிரந்தரத் தடுப்பணை மூலம் வடகரை வாய்க்காலில் சுமார் 14,000 ஏக்கரும் சீனன் வாய்க்காலில் 2,702 ஏக்கரும், மெயின் வாய்க்காலில் 827 ஏக்கரும், பெலாறு வாய்க்காலில் 427 ஏக்கரும், முள்ளிப்பாடி வாய்க்காலில் 1,500 ஏக்கரும் பயனடைகின்றன. இப்படி இவற்றின் மூலம் சுமார் 20,000 ஏக்கரில் வாழை, வெற்றிலை, நெல், கரும்பு ஆகியவை சாகுபடி செய்யப்படுகின்றன. ஆகவே, இதயதெய்வம் அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், நிரந்தரக் கொரம்பு தடுப்பணை அமைக்கும் திட்டத்தை எடுத்து நிறைவேற்றித் தர அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் அணை திறந்து விடப்பட்டு, காவிரியில் வாய்க்காலில் தண்ணீர் வழங்கப்படுகிறபோது, அந்தப் பகுதிக்கு நீர் இலகுவாய்ச் சென்று அடைகிற ஒரு சூழ்நிலை இருக்கின்றது. காவிரி நீர் மூடப்பட்ட பிறகு, வாய்க்காலில் இருந்து பெறப்படுகின்ற உபரி நீரை அந்தப் பகுதியினுடைய விவசாயத்திற்கு எடுத்துக் கொள்வதற்காகத்தான், ஒவ்வோர் ஆண்டும் இந்த மாதிரியான கொரம்புகள், அதாவது மண் கொரம்புகள் அமைக்கப்படுகின்றன; தடுப்பு அணைகள் அமைக்கப்படுகின்றன. ஆகவே, ஒவ்வோர் ஆண்டும் இதற்காக அரசால் 1,67,500 ரூபாய் செலவில் 1,500 மீட்டர் நீளத்திற்குத் தடுப்பணைகள் ஏற்படுத்தப்படுகின்றன. மற்றபடி, காவிரியில் சராசரியாக மேட்டூர் அணை திறக்கப்பட்டு நீர் வருகின்றபோது, அதற்கு இந்தக் கொரம்பு அணை தேவையில்லாத சூழ்நிலை இருக்கும்போது, நிரந்தரமாகக் கொரம்பு அணை கட்டுகின்ற திட்டம் அரசின் ஆய்வில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



2002 ஏப்ரல் 12]

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 127. திரு. எம்.எஸ். சந்திரசேகரன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**127—**

### மேல்நிலைப் பள்ளி

***10451—திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:**

*மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*இராணிப்பேட்டை தொகுதி, வள்ளிமலை அரசு உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்படுமா?*

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இராணிப்பேட்டை தொகுதி, வள்ளிமலை அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த, வரும் கல்வி ஆண்டில் கருத்துரு பெறப்பட்டால், அரசினுடைய நிதிநிலைக்குட்பட்டு மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தக் கருதப்படும்.

**திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்க் கடவுள் முருகன் வள்ளியை மணம் முடித்த இடமான வள்ளிமலையில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தினால், வள்ளிமலை மாண்புமிகு அம்மாவின் புகழ்பாடும் ஸ்தலமாகவும் மாறும். மேலும், இப்பள்ளியில் நான் படித்தவன் என்கின்ற காரணத்தினால் ஒன்றைச் சொல்கிறேன். இந்தப் பள்ளியில் படிக்கின்ற மாணவ, மாணவிகள், 10ஆம் வகுப்பில் கடந்த ஆண்டு 78 சதவிகிதம் பேர் தேர்வு பெற்றிருக்கிறார்கள். மேற்படிப்பிற்காக இவர்கள் அருகில் உள்ள பொன்னை அரசு மேல்நிலைப் பள்ளியிலும், பின்னம்பள்ளி மேல்நிலைப் பள்ளியிலும் சென்று படிக்க வேண்டிய நிலை இருக்கின்றது. கிட்டத்தட்ட 10 கிலோ மீட்டர் பயணம் செய்து படிக்க வேண்டிய சூழ்நிலையில் அந்தப் பள்ளியில் படிக்கின்ற மாணவ, மாணவிகள் இருந்து வருகின்றார்கள். ஏழை விவசாயிகள் நிறைந்த பகுதியான அந்தக்

[2002 ஏப்ரல் 12

கிராமத்தில் இருக்கின்ற மாணவ, மாணவிகள் அங்கே சென்று படிப்பதற்கு மிகவும் சிரமப்படுகின்ற சூழ்நிலையிலே இருக்கின்ற காரணத்தினால், இதயதெய்வம் டாக்டர் மாண்புமிகு அம்மாவின் அரசானது—சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர்களை எல்லாம் இன்றைக்கு பெரிய நிலைக்கு உருவாக்கி வருகின்ற இந்தக் காலகட்டத்தில்—எங்களுடைய பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தித் தர இந்த நிதி ஆண்டில் ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல், புரட்சித் தலைவி அரசானது கிராமப்புறங்களுக்கு நல்ல கல்வியைத் தர வேண்டும் என்பதற்காக, அந்த மாணவர்களுக்கு உதவியாக பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அதிலும் குறிப்பாக, தேர்தல் அறிக்கையிலே 'படிப்படியாக அனைத்து உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும், நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும் ஆக்குவோம்' என்று இந்த அரசு வாக்குறுதி தந்திருக்கிறது. அதற்கேற்ப சென்ற ஆண்டில் இதுவரையில் எந்த அரசும் செய்யாத அளவுக்கு 125 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தியிருக்கிறது. இதுபோல, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தன்னுடைய பகுதியான வள்ளிமலை அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அதில் சில வரைமுறைகள் இருக்கின்றன. ஓர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்க வேண்டுமென்றால், என்னென்ன செய்ய வேண்டுமென்று வரைமுறை வகுக்கப்பட்டிருக்கிறது. அதன்படி, பொதுமக்களுடைய பங்குத் தொகையான ரூபாய் 2 இலட்சம் கட்ட வேண்டும். எங்களுக்குத் தெரிந்த புள்ளிவிவரத்தின்படி, இந்தப் பள்ளியின் சார்பில் பொது மக்களிடமிருந்து ரூபாய் 2 இலட்சம் பெற்று வைப்பு நிதியாக இதுவரையில் செலுத்தப்படவில்லை. இரண்டாவது, அங்கே 10ஆம் வகுப்பில் 100 மாணவர்களுக்குக் குறையாமலும், அதற்கு மேலும் இருந்தால், அந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்கலாம் என்ற ஒரு விதிமுறை இருக்கிறது. ஆனால், இந்தப் பள்ளியைப் பொறுத்தவரையில், 80 மாணவர்கள் இருக்கின்றார்கள். இருப்பினும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோளை இந்த அரசானது கனிவுடன் பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2002 ஏப்ரல் 12]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 128, திரு. கே.கே. சிவசாமி, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**128—**

## நீதிமன்றங்கள்

***7469—திரு. கே. கே. சிவசாமி:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் மாவட்டம், திருச்சுழி மற்றும் காரியாப்பட்டி வட்டங்களில், மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குற்றவியல் நடுவர் நீதிமன்றம் ஆகியவை ஏற்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், திருச்சுழி மற்றும் காரியாப்பட்டி வட்டங்களில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு எதுவும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. கே. கே. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டத்தில் 6 சட்டமன்றத் தொகுதிகள் உள்ளன. இதில் அருப்புக்கோட்டை தொகுதியில்தான் நீதிமன்றங்கள் இல்லை. மீதம் உள்ள 5 சட்டமன்றத் தொகுதிகளில் நீதிமன்றங்கள் உள்ளன. பெயர்தான் அருப்புக்கோட்டை தொகுதி என்று உள்ளது. அருப்புக்கோட்டை இல்லாதது அருப்புக்கோட்டை தொகுதியாகும். அருப்புக்கோட்டை தொகுதி என்பது முற்றிலும் கிராமங்கள் அடங்கிய பின்தங்கிய தொகுதியாகும். கிராம மக்கள் நீதிமன்றங்களுக்குச் செல்வதற்கு சராசரியாக 70 கிலோ மீட்டர், 80 கிலோ மீட்டர் பயணம் செய்ய வேண்டியுள்ளது. மேலும், கிராம மக்கள் பல்வேறு கஷ்டங்களுக்கு உள்ளாகிறார்கள். எனவே, அரசாணையின்படி திருச்சுழி மற்றும் காரியாப்பட்டி தாலுக்காக்களில் நீதிமன்றங்களை அமைத்துத் தர, வரும் நிதி ஆண்டிலாவது நமது அரசு முன்வருமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2002 ஏப்ரல் 12

முற்பகல் 10-15

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதி involvement-ஐ நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏதோ ஹாஸ்டல் ஒவ்வொரு தொகுதிக்கும் வேண்டும் என்பதைப்போல, அருப்புக்கோட்டை தொகுதிக்கு என்று ஒரு நீதிமன்றம் கேட்டிருக்கிறார். நீதிமன்றம் என்று சொல்லும்போது, ஓரளவிற்கு வழக்குகள் இருக்க வேண்டும். திருச்சுழி மற்றும் காரியாப்பட்டி போன்ற இடங்களில் மொத்த வழக்குகள் என்று பார்த்தால் 737 வழக்குகள்தான் இப்போது இருக்கின்றன. எனவே, இந்தச் சூழ்நிலையில் அந்த இடத்தில் ஒரு புதிய நீதிமன்றம் ஆரம்பிக்கப்படுவது என்ற அந்தக் கருத்து ஏற்புடையதாக இல்லை. திருச்சுழி மற்றும் காரியாப்பட்டி வட்டங்களிலுள்ள வழக்குகளெல்லாம் அருப்புக்கோட்டை நீதிமன்றத்திலே விசாரிக்கப்படுகின்றன. அருப்புக்கோட்டைக்கும், காரியாப்பட்டிக்கும் உள்ள தூரம் 24 கிலோ மீட்டர். அருப்புக்கோட்டைக்கும், திருச்சுழிக்கும் உள்ள தூரம் 14 கிலோ மீட்டர். எனவே, இந்தச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, இதனை ஏற்பதற்கில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 129, திரு. சி. சண்முகம், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**129—**

## கோயில்களைப் புதுப்பித்தல்

***9101—திரு. சி. சண்முகம்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகம் முழுவதும் பழுதடைந்துள்ள கோயில்கள் அனைத்தும் செப்பனிடப்பட்டு, புதுப்பிக்கப்பட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது செயல்படத் தொடங்கும்?

**மாண்புமிகு திரு. பி. சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



2002 ஏப்ரல் 12]

(அ) மற்றும் (ஆ) அரசே பழுதடைந்துள்ள கோயில்கள் அனைத்தையும் செப்பனிட்டுப் புதுப்பித்தல் என்பது இயலாத ஒன்றாகும். இருந்தபோதிலும், அரசின் நிதியுதவி மற்றும் நன்கொடை இவற்றைப் பெற்றும், ஆன்மீக ஈடுபாடும், திருப்பணிகளில் ஆர்வமும் உள்ள மெய்யன்பர்களைத் தொடர்பு கொண்டு அவர்களின் நிதியுதவியோடும் இதுவரை திருப்பணி செய்யப்படாத அனைத்து திருக்கோயில்களுக்கும் முக்கியத்துவத்தின் அடிப்படையில் படிப்படியாகத் திருப்பணிகள் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை உங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் பல கோயில்களில்—பெரிய கோயில்களில்- திருப்பணி நடைபெறாமல் உள்ளது. திருமணம், சித்துக்காட்டைச் சேர்ந்த கோயிலில் 30 ஏக்கர் நிலம் இருந்தும், அந்தத் தொகுதியிலுள்ள 250 சேம்பர்காரர்கள் சேர்ந்து 10 அடி ஆழத்திற்குப் பள்ளம் எடுத்துவிட்டார்கள். 10 அடிக்கு மேலே பள்ளம் எடுத்து, பாழ்படுத்தி, வருமானம் வராமல் இருக்கிறது. ஆவடி பகுதியிலுள்ள கோவில்பதாகை கோயிலில் 30 ஏக்கர் சொந்த நிலம் இருந்தும், அந்த நிலங்கள் பராமரிப்பு இல்லாமலும், குத்தகைக்கு விடாமலும், கோயிலுக்கு வருமானம் வராத நிலையில், அந்தப் பகுதி மக்கள் அதை ஆழப்படுத்துகின்றனர். அதையும் அரசு தடுக்க வேண்டும். எனது பக்கத்துத் தொகுதியில், கோவூர், சுந்தரேஸ்வரர் தேவஸ்தானம் கோயிலானது 30 ஆண்டுகளாகக் கும்பாபிஷேகம் செய்யாமலும், அதற்கு நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலம் இருந்தும் அதிலிருந்து வருமானம் வராமலும் உள்ளது. வருமானத்தை அங்கே குத்தகைதாரர்கள் கோயிலுக்குக் கொடுக்கவில்லை. அதற்கும் அரசு நடவடிக்கை எடுத்து, கோயிலுக்கு வருமானம் கிடைக்க நடவடிக்கை எடுக்குமா என்பதையும், அந்தக் கோயிலில் ‘10 நாட்கள் திருவிழா’ வெகு விமரிசையாக நடக்கும். 15 வருடங்களாக அது நடைபெறாமல் இருப்பதையும் அரசு கவனத்தில் கொண்டு செயல்படுமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி. சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறையினுடைய ஆலயங்கள் என்று மட்டுமல்ல, தமிழ்நாட்டிலே ஏறக்குறைய 4 இலட்சத்திற்கும் மேலான நிலங்கள் இருக்கின்றன. இப்படித்தான் பல்வேறு இடங்களில் அனுபவித்துக் கொண்டிருப்பவர்கள், தங்களுக்குச் சொந்தமாக ஆக்கிக்

[2002 ஏப்ரல் 12

தொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், பல்வேறு ஆலயங்களில் திருப்பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நடைபெறாமல் இருக்கின்ற, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற அந்த ஆலயங்களிலும், எந்தெந்த நிலங்கள் இருக்கின்றன என்பதைக் கணக்கெடுத்து, கூடிய விரைவிலே மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் அதற்கெல்லாம் நடவடிக்கை எடுப்பார்கள் என்பதை உங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே உள்ள பழுதடைந்த கோயில்களைச் சரிபண்ணுவது சம்பந்தமான கேள்வி இது. கன்னியாகுமரி மாவட்டத்தில் மிகப் பிரசித்தி பெற்ற கோயில் திருவட்டாறு, ஆதிகேசவசுவாமி கோயில். அந்தக் கோயிலில் ஒரு சில வருடங்களுக்கு முன்னால் மிகப் பெரிய கொள்ளை நடந்து, அங்கே சுவாமிக்குப் போடப்பட்டிருந்த நகைகளையெல்லாம் திருடிச் சென்றிருக்கிறார்கள்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், இதற்குத் தனிக் கேள்வி போட்டால்தான் முடியும். அமைச்சரிடம் உடனே பதில் இருக்காது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அந்தக் கோயிலில் கொள்ளையடித்த கொள்ளையரைக் கண்டுபிடித்து, அந்த நகைகளைத் திரும்பப் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லிய அந்த மாவட்டத்தில் மட்டுமல்ல, தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் இருக்கிற ஆலயங்களில்—திருடர்கள் வேண்டுமென்றே கொள்ளையடித்து—அரசுக்குத் தொந்தரவு கொடுப்பதற்காக, அந்தப் பகுதியிலே இருக்கின்றவர்களே, கொள்ளையடித்திருக்கிறார்கள். சில பகுதிகளிலே யார், யார் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. 'வேண்டுமென்றே' என்று சொல்வதில் தவறு அல்ல. சில காரணங்களுக்காகச் சொல்கிறோம். அப்படிப்பட்ட சூழ்நிலை பல பகுதிகளில் ஏற்பட்டிருக்கிறது. இதுபோன்று உங்களுடைய மாவட்டத்தில் மட்டுமல்ல, அனைத்து மாவட்டங்களிலுமுள்ள ஆலய உண்டியலை உடைப்பவர்கள்மீது இந்த



2002 ஏப்ரல் 12]

அரசு நடவடிக்கை எடுத்து, அவர்கள்மீது வழக்குத் தொடர்ந்திருக்கிறது என்பதை உங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. பூ. முனுசாமி.

**திரு. கா. பூ. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய நல்லரசில், பழுதடைந்த கோயில்கள் எல்லாம் மறுமலர்ச்சி அடையும் அளவிலே, தரம் வாய்ந்த கோயில்களாக உயர்த்தக்கூடிய வகையில் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். வரலாற்றுச் சிறப்பு மிக்க பல கோயில்கள் பழுதடைந்த நிலையிலே உள்ளன. அந்தக் கோயில்களைச் சீர் செய்வதற்கு அங்குள்ள பொது மக்கள் நிதி வழங்குகின்ற பட்சத்தில், அந்த நிதியை ஒரு பங்காகப் பெற்று, மேலும் அந்தக் கோயில்களைச் சீரமைப்பதற்காக அரசும் நிதி வழங்குவதற்கு இந்த நிதியாண்டிலே முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு திரு. பி. சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இத்துறைக் கட்டுப்பாட்டில் மொத்தம் 35,355 திருக்கோயில்கள் உள்ளன. இவற்றில் ஏற்கெனவே திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு, குடமுழுக்குச் செய்யப்பட்டவை 6,822 திருக்கோயில்கள் ஆகும். எஞ்சிய திருக்கோயில்களில் உடனடியாகத் திருப்பணிகளை மேற்கொண்டு குடமுழுக்குச் செய்வதற்கு பல கோடிக்கணக்கான ரூபாய் தேவைப்படுகிறது. இதை உடனடியாகச் செய்ய இயலாது. எனவே, திருக்கோயில்களின் முக்கியத்துவம், தொன்மை, ஆழ்வார்கள் மற்றும் நாயன்மார்களால் பாடப்பட்டவை, மங்களாசாசனம் செய்யப்பட்டவை போன்றவற்றைக் கருத்தில் கொண்டு, அவற்றிற்கு முன்னுரிமை அளித்து, 1,897 திருக்கோயில்களில் 2005 ஆம் ஆண்டுக்குள் திருப்பணி செய்து குடமுழுக்குச் செய்ய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது,

[2002 ஏப்ரல் 12

கோயில்களுக்குத் திருப்பணி செய்வதற்காக நிதியாதாரம் இல்லை; வருமானம் குறைவாக இருக்கிறது என்கிற கருத்தைச் சொன்னார்கள். நான்கு இலட்சம் ஏக்கர் நிலம் இருக்கிறது. அதிலே இருந்து வருமானம் இல்லையென்று சொன்னார்கள். இந்த மாதிரியான குறைபாடுகளைப் போக்குவதற்கான முயற்சியாக அரசு, உழுகின்ற விவசாயிகளிடத்திலேயே அந்த நிலத்தை விற்பனை செய்து, அந்தத் தொகையை வைப்பு நிதியாக வைத்து, ஆலயங்களுடைய திருப்பணி, பூஜைகள் செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கான திட்டத்தை ஏற்படுத்துமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி. சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மாவட்டமாகிய திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில்கூட, நான் நேற்றுச் சொல்லியதைப் போல, 621 ஏக்கர் நிலங்களை, கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர்களே அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் எல்லாம் முன்வந்து அதைக் கொடுப்பீர்களேயானால், செய்வதற்கு வசதியாக இருக்கும் என்பதை உங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கிடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேண்டாம், வேண்டாம். சிவபுண்ணியம், விட்டு விடுங்கள், திரு. சோ. பாலகிருஷ்ணன். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் பதில் சொல்லக்கூடாது. அவர்தான் பதில் சொல்ல வேண்டும், திரு. சோ. பாலகிருஷ்ணன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,..... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லாக் கட்சிகளைச் சார்ந்தவர்களும் இருக்கிறார்களா? சரி.

**மாண்புமிகு திரு. பி. சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குக் கொடுத்த தகவல்படி—ஒரு நெல் மணிகூட—நாற்பது ஆண்டு காலமாக திருத்துறைப்பூண்டியிலே 621 ஏக்கர், இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் இராமநாத சுவாமி கோயிலுக்குச் சொந்தமானதில் பெரும்பான்மையோர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சொல்கிறேன். (குறுக்கீடு)



2002 ஏப்ரல் 12]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிவபுண்ணியம், பெரும்பான்மையினர் நீங்கள், சிறுபான்மையினர் மற்ற ஆட்கள். திரு. சோ. பாலகிருஷ்ணன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....(குறுக்கீடு)

**திரு. வை. சிவபுண்ணியம்:** விவசாயிகள் என்பவர்கள் பெரும்பான்மையாகத்தான் இருப்பார்கள். அதனால், எல்லாக் கட்சியைச் சேர்ந்த விவசாயிகளும் அதில் இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோயில் என்பது ஏழைகளுக்குச் சோறு போடுவதற்குத்தான். பரவாயில்லை.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியில் தாழ்த்தப்பட்டவர்களுக்குச் சொந்தமான கோயில்களைப் பராமரிப்பதற்காக, 100 கோயில்களுக்கு 25,000 ரூபாய் வீதம் கொடுக்கப்படும் என்று பழைய அரசாங்கத்தில் அறிவிக்கப்பட்டது. என்னுடைய பழைய தொகுதியான முதுகுளத்தூர் தொகுதியில்கூட இரண்டு கோயில்களைப் பற்றி தாழ்த்தப்பட்டவர்களுக்கே சொந்தமான கோயில்களைப் பற்றி, எழுதிக் கொடுத்திருந்தேன். இதுவரை அந்தப் பணம் வந்ததாகத் தெரியவில்லை. ஆகவே இந்த அரசு, தாழ்த்தப்பட்டவர்களுக்குச் சொந்தமான அந்த 100 கோயில்களுக்கு 25,000 ரூபாய் கொடுக்கின்ற திட்டத்தை அமல்படுத்துமா, அதன்படி ஏதாவது கோயில்களுக்குக் கொடுத்திருக்கிறார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி. சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சராக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, ஏறக்குறைய 100 ஆலயங்களைத் தேர்வு செய்து, பொதுமக்களுடைய வசூலாக ரூ.2,500-ம், இந்து சமய அறநிலையத் துறையின் மூலமாக ரூ.22,500-ம் சேர்த்து, வைப்பு நிதியாக வைக்கப்படுகின்ற அடிப்படையில் இந்த ஆண்டு ஆயிரம் ஆலயங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. எனவே, உங்களுடைய ஆலயம் இருக்கிறதா என்பதைப்பற்றித் தனிக் கேள்வி போட்டால், பதில் சொல்வதற்கு வசதியாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. கே. மணி. (குறுக்கீடு)

[2002 ஏப்ரல் 12

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மட்டும் உரிமையுள்ள கோயில்களுக்கு எந்தவிதமான வைப்பு நிதியும் இல்லாமல், 25,000 ரூபாய் வழங்கப்படும் என்று பழைய அரசு அறிவித்தது. அதில் சில கோயில்களுக்குக் கொடுத்திருப்பதாகக்கூட நான் அறிகிறேன். இது அமல்படுத்தப்பட்டிருக்கிறதா? கொடுப்பதற்கு நீங்கள் தயாராக இருக்கிறீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக்கேள்விக்குத் தொடர்பற்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) இது மூலக் கேள்வியோடு தொடர்பற்றது. தனியாக ஒரு கேள்வி போட்டால் அதற்கு விளக்கம் சொல்லுங்கள். திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் பதிலுரையிலே, பல பழம்பெருமை வாய்ந்த ஆலயங்கள் எல்லாம் பழுதுபார்க்கப்பட்டு, திருப்பணிகள் மேற்கொள்ளப்பட இருப்பதாகச் சொன்னார்கள். அந்த வகையிலே ஆலயத்தினுடைய கட்டடங்களைப் பழுதுபார்ப்பதோடு, பழம்பெருமை வாய்ந்த ஆலயங்களில் நீண்ட காலமாக இயக்கப்படாமல் திருத்தேர்கள் எல்லாம் பழுதடைந்த நிலையில் இருந்து கொண்டிருக்கின்றன; பொது மக்கள் எல்லாம் நீண்ட நாட்களாகக் கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். நான் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், என்னுடைய தொகுதியிலே இரண்டு ஆலயங்கள்; பல்வேறு இடங்களிலே அப்படித் திருத்தேர்கள் பழுதுபட்ட நிலையில் இருக்கின்றன. ஆகவே, ஆலயங்களைப் பழுதுபார்க்கக்கூடிய அதேநேரத்தில், திருத்தேர்கள் எல்லாம் பழுதுபார்க்கப்பட்டு, அவை ஓடுவதற்கு ஆவன செய்ய அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு திரு. பி. சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு ஆலயங்களில் இப்போது பழுதுபட்டிருக்கிற திருத்தேர்கள் புதுப்பிக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த ஆலயம் என்று குறிப்பிட்டுச் சொன்னால், அதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2002 ஏப்ரல் 12]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர்.

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1991-96-ல் ஆட்சியில் இருந்தபோது— 1994-ல் அவர் இருந்தபோது— என்னுடைய சொந்தக் கிராமமான ஆதிதிராவிடர் கிராமத்திற்குத் தனியாக இருக்கிற கிளியூர் மாரியம்மன் கோயிலுக்கு புரட்சித் தலைவி அறிவித்த திட்டத்தில் 1 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் வாங்கி, பல ஆண்டுகளாகக் கட்டாமல் போடப்பட்டு, புரட்சித் தலைவி ஆட்சி திரும்ப வந்து, அதைக் கட்டுகிற சூழ்நிலையில், அந்த 1 இலட்சத்து 20 ஆயிரத்தையும் செலவு செய்து முடித்துவிட்டார்கள். நானும் கொஞ்சம் பங்கு போட்டு, அந்தக் கோபுரத்தைக் கட்டுகிற சூழ்நிலையில் இன்னும் ஒரு 25 ஆயிரம் ரூபாய் இருந்தால் போதும், அதைக் கட்டி முடித்து விடலாம். மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் நம்முடைய அருள்மிகு சமயபுரம் மாரியம்மன் கோயிலினுடைய நிதி 7 கோடி இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதிலேயிருந்து கருணையோடு ஒரு சிறிய தொகையைக் கொடுத்தால், அந்தப் பணி—ஆதிதிராவிடர் காலனிக்கு—புரட்சித் தலைவி கொடுத்த நிதி மூலம் நிறைவு பெறும் என்பதை இந்த நேரத்தில் உங்கள் வாயிலாகச் சொல்லி அதை ஒதுக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் சொல்லிய கோரிக்கை சிந்திக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 130, திரு. எஸ்.எஸ். மணி நாடார், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**130—**

## மருத்துவமனை

***739—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) ஆழ்வார் திருநகரியிலுள்ள சுகாதார நிலையத்தை மீண்டும் மருத்துவமனையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் தொகுதி, ஆழ்வார் திருநகரியிலுள்ள கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தும் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை.

(ஆ) வினா எழாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணிநாடார் (குறுக்கீடு)

வினா எண் 131, திரு. சி. இராசேந்திரன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**131—**

## ஊராட்சி ஒன்றியத்தைப் பிரித்தல்

***2821—திரு. சி. இராசேந்திரன்:**

*மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஒரத்தநாடு ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து ஈச்சங்கோட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு ஓர் ஒன்றியம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்தல் தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவர், அந்தத் தொகுதியினுடைய நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர் மற்றும் மாவட்ட ஊராட்சித் தலைவர் போன்றவர்களைக் கொண்டு, மாவட்ட ஆட்சித் தலைவர்





தலைமையிலே ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழு மூலமாக ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிப்பது தொடர்பாக, கோரிக்கையாக அரசுக்கு வருகிறபோது ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்தல் தொடர்பாகப் பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியத்தைப் பிரிப்பது தொடர்பாக அரசிற்கு எவ்விதத் தகவலும் இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராசேந்திரன்.

**திரு. சி. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்றாம் முறையாக தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கிற, கழகத்தினுடைய காவல் தெய்வம், தமிழகத்தினுடைய ஒளிவிளக்கு, தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சமுதாயத்தினுடைய விடிவெள்ளியாகத் திகழ்ந்து கொண்டிருக்கிற என்னுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கிற திசை நோக்கி வணங்குகிறேன். கடந்த 1991-96 ஆண்டுகளில் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்றபோது, அன்றையதினம் ஒரத்தநாடு ஒன்றியத்தைப் பிரிக்க வேண்டும் என்று சொல்கிறபோது, பிரிக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய தொகுதி ஒரு பெரிய தொகுதியாகும். தஞ்சை மாவட்டத்திலே ஒரு தொகுதியும் முழுமையான நிலையில் இல்லை. ஒரத்தநாடு ஒன்றியத்தில் 23 ஊராட்சிகளையும், தஞ்சை ஒன்றியத்தில் 33 ஊராட்சிகளையும், புதுக்கோட்டை மாவட்டத்தில் கறம்பக்குடி ஒன்றியத்தில் 4 ஊராட்சிகளையும் உள்ளடக்கிய தொகுதியாக இருக்கின்றது. இந்த ஒரத்தநாடு ஒன்றியத்தில் 58 ஊராட்சிகளும், தஞ்சை ஒன்றியத்தில் 60 ஊராட்சிகளும் இருக்கின்றன. இந்த இரண்டையும் ஒன்றாக இணைக்கின்ற இடம்தான் ஈச்சங்கோட்டை. அதை மையமாக வைத்துப் பிரிப்பதற்கு வேண்டிய வழிவகைகளை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, இதைப் பரிசீலித்து ஆவன செய்ய வேண்டும் என்று பணிவன்புடன் தங்கள் மூலமாகக் கேட்டு, செய்யுமா என்று அறிய விரும்புகின்றேன்.

[2002 ஏப்ரல் 12

முற்பகல் 10-30

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சிகளைப் பிரித்தல், அல்லது ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்தல் தொடர்பாகக் கடந்த 1999 ஆம் ஆண்டு ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழு மூலமாக ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிப்பது தொடர்பாகப் பரிந்துரை செய்து, அரசுக்கு அனுப்பப்படுமேயானால், அது தொடர்பாகப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிப்பதைப் பொறுத்தவரை, ஒன்று சொல்ல விரும்புகிறேன். இப்போது தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களும்கூட, இரண்டாக, மூன்றாகக்கூட பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், தமிழகத்திலேயிருக்கக்கூடிய சிற்றூராட்சிகளை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பழனிசாமி, பிரிக்கப்பட்ட மாவட்டங்கள் இணைக்கப்பட்டும் இருக்கின்றன.

**திரு. ஜி. பழனிசாமி:** அதையும் இணைத்துக் கொள்வோம். இணைக்கப்பட்டும் இருக்கின்றன. ஆனால், ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள் எல்லாம், 10 ஆயிரம் பேர், 15 ஆயிரம் பேர் இருக்கக்கூடியதும், அதே மாதிரி 60 ஊராட்சிகள், சிற்றூராட்சிகளைக் கொண்டிருக்கிற ஊராட்சி ஒன்றியங்களும் இருக்கின்றன. ஆகையினால், மக்களுடைய பணிகளை, திட்டங்களை நிறைவேற்றுவதிலே ஏற்படுகிற காலதாமதத்தைத் தவிர்ப்பதற்கு ஏற்கெனவே 1991-லேயும், 1992-லேயும் அமைக்கப்பட்ட குழுவினுடைய சிபாரிசுகளை, இடைக்காலமாக அன்றைக்கு இருந்த அரசு நிறுத்தி வைத்திருக்கிறது. மீண்டும் அந்தக் குழுவின் சிபாரிசுகளை அமல்படுத்துவதற்கு அரசு உத்தரவிடுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.



2002 ஏப்ரல் 12]

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1999 ஆம் ஆண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலே நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட ஊராட்சித் தலைவர், மாவட்ட ஆட்சித் தலைவரால் நியமனம் செய்யப்படுகிற ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், ஊராட்சித் தலைவர்கள் போன்றவர்களால் அமைக்கப்பட்ட குழு மூலமாக ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிப்பது தொடர்பாகப் பரிந்துரை செய்யப்பட்டு அரசுக்கு அனுப்பப்படுமேயானால், அரசால் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பன்னீர்செல்வம், நீங்கள் கேட்கிற கேள்விக்கும் அமைச்சர் சொன்ன பதில்தான் பொருந்தும். அதைத்தான் சொல்லப் போகிறார் மறுபடியும். (குறுக்கீடு) சொல்லுங்கள்.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சட்டமன்றத் தொகுதியில் குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் பெருமத்தூர் ஊராட்சி கடந்தகால தி.மு.க. ஆட்சியில் பிரிக்கப்பட்டு, உருவாக்கப்பட்டு, அதற்குத் தனி அலுவலர் இதுவரை நியமனம் செய்யப்படவில்லை. காரணம், தேர்தல் நெருங்கியதால் அது முடியாமல் போய்விட்டது. இப்போது புதிய அரசு வந்துள்ள காரணத்தால், பெருமத்தூர் ஊராட்சிக்குத் தனி அலுவலர் நியமனம் செய்து, அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பார்களா என்ற கேள்வியை உங்கள் மூலமாகக் கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது தொடர்பாகச் சொல்கிறேன். ஊராட்சியாக இருந்தாலும், பேரூராட்சியாக இருந்தாலும், தேர்தல் நடந்து முடிந்ததற்குப் பிறகு, தனி அலுவலர்கள் பொறுப்பு வகிக்கமாட்டார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்தான் செயல்படுவார்கள். எனவே, இது தொடர்பாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி கேட்டால், அதற்குத் தக்க விடை அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 132. திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

[2002 ஏப்ரல் 12

132—

## சுரங்கப் பாதை

***6868—திரு. பி. கே. சேகர்பாபு:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆர்.கே. நகர் பகுதியில் கொருக்குப்பேட்டை, தியாகப்பச்செட்டி தெரு, கத்திவாக்கம் நெடுஞ்சாலை, போஜராஜ நகர்—பென்சில் தொழிற்சாலை—கண்ணன் சாலை, மீனாம்பாள் நகர்—கத்திவாக்கம் நெடுஞ்சாலை ஆகிய இடங்களிலுள்ள இருப்புப் பாதை சந்திக் கடவில் சுரங்கப் பாதை அமைக்க அரசு பரிசீலிக்குமா?

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதியில் சுரங்கப் பாதை அமைப்பது தொடர்பாக மாநகராட்சித் துறை அலுவலர்கள் மூலம் ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஆய்வுப் பணி தொடர்பான இறுதி அறிக்கை கிடைத்த பிறகு, சுரங்கப் பாதை அமைப்பது தொடர்பாகப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் பகுதியில் கொருக்குப்பேட்டை தியாகப்பச்செட்டி தெரு, கத்திவாக்கம் நெடுஞ்சாலை இரயில்வே கடவிலும், போஜராஜ நகர்—பென்சில் தொழிற்சாலை—கண்ணன் சாலை சந்திப்பு இரயில்வே கடவிலும், மீனாம்பாள் நகர்—கத்திவாக்கம் நெடுஞ்சாலை இரயில்வே கடவிலும் மேம்பாலமோ அல்லது சுரங்கப் பாதையோ அமைப்பது தொடர்பான கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கிறபோது, ஆய்விலே இருப்பதாகக் குறிப்பிட்டிருந்தார்கள். கடந்த 20-12-2001 அன்று, அந்தப் பகுதி மக்களுடைய தேவைகளை அறிவதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களை நேரடியாக அந்தப் பகுதிக்கு அழைத்துச் சென்று, அந்தப் பகுதி மக்களின் 40 ஆண்டுகளுக்கு மேலான கோரிக்கையை அமைச்சர் அவர்களிடத்திலே அந்தப் பகுதி மக்கள் வலியுறுத்தியதற்குப் பிறகு, கடந்த 6-3-2002 அன்று சென்னை மாநகராட்சி மன்றத்தினுடைய



2002 ஏப்ரல் 12]

நிதிநிலை அறிக்கையிலே, நான் கேட்டிருக்கின்ற இந்த 3 இரயில்வே கடவுகளில், கொருக்குப்பேட்டை இரயில்வே கடவுப் பணிக்கு, முதல் கட்டமாக ரூபாய் 50 இலட்சமும், அதேபோன்று கத்திவாக்கம் நெடுஞ்சாலை—மீனாம்பாள் நகர் இரயில்வேக் கடவிற்கு ரூபாய் 50 இலட்சமும் ஒதுக்கியிருப்பதற்காக, தேவையற்ற இடங்களில் பாலங்களுக்குப் பதிலாக தேவையுள்ள டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் பகுதியில் பாலங்கள் அமைப்பதற்காக உத்தரவு பிறப்பித்திருக்கின்ற நாங்கள் வணங்கும் தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்ப் பகுதியின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, இந்தப் பணிகளுக்கு உண்டான அடிப்படை வேலைகள் எப்போது தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையின் மூலமாக இறுதி அறிக்கை பெற்றதற்குப் பின்பு, சுரங்கப் பாதை அமைப்பது தொடர்பாக மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 133, டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

133—

## பண்ணைப் பராமரிப்பு

***4285—டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தொகுதி, குடுமியான்மலையிலுள்ள அண்ணா பண்ணையில் பணிபுரியும் அதிகாரிகள் அங்குள்ள குடியிருப்புகளிலேயே தங்கி பண்ணையைச் சரியாகப் பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[2002 ஏப்ரல் 12

குடுமியான்மலை அண்ணா பண்ணையில் பணிபுரியும் அதிகாரிகள், அவர்களுக்கெனக் கட்டப்பட்ட குடியிருப்புகளில் தங்கி பண்ணையைப் பராமரிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது என்பதைத் தங்களின் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மண்டிணி ஞாலத்து வாழ்வோருக்கு எல்லாம் உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்ற உன்னத அறத்தைச் செயலாக்கிக் கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி எனது வினாவைத் தொடுக்கின்றேன். மாண்புமிகு அம்மா அவர்களின் கோட்டையாகத் திகழும் குளத்தூர் தொகுதியில் அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், குடுமியான்மலையில் 1967-ல் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருப்பெயரில் வேளாண் பண்ணையானது சுமார் 1,017 ஏக்கரில் தொடங்கப்பெற்று, மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வந்தது. இப்பண்ணையில் பணியாளர்களுக்கென, அனைத்து வசதிகளுடன் 130 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இதில் 17 விழுக்காடு அரசுப் பணியாளர்களே குடியிருந்து வருகின்றனர். கடந்த சில ஆண்டுகளாகப் பண்ணை மிகவும் சீர்கேடடைந்து உள்ளது. எனவே, பண்ணை மீண்டும் சிறப்பாகச் செயல்பட, பணியாளர்களின் குழந்தைகள் நகர்ப்புறத்தில் உள்ள பள்ளிகளுக்குச் சென்று வர வேளாண்மைத் துறை மூலம் தனியாகப் பேருந்து வசதி செய்து கொடுத்து, பணியாளர்களைக் குடியிருப்புகளில் தங்கச் செய்ய வேண்டும். பண்ணையின் பாதுகாப்புக்காக முள்வேலி அமைத்துக் கொடுப்பதற்கு மதிப்பீடு செய்யப்பெற்று அரசுக்கு அனுப்பப் பெற்றுள்ளது. எனவே, முள்வேலி அமைத்துக் கொடுப்பதுடன், பண்ணையில் உற்பத்தி செய்யப்பெறும் தரமான விதைகள் அனைத்தையும் வேளாண் பெருமக்கள் வாங்கிப் பயன் பெறவும், பண்ணை சீரடைந்து இலாபகரமாக இயங்கவும் அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடுமியான்மலையில் இதற்கென 1017 ஏக்கர் உள்ளது. அதில் 643.5 ஏக்கரில் அண்ணா பண்ணை சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. அந்த மாநில வேளாண்மை மேலாண்மை நிலையத்தில் கிட்டத்தட்ட 87 வீடுகள் உள்ளன. அண்ணா பண்ணையில் 16 குடியிருப்புகள் உள்ளன. இந்தக் குடியிருப்புகளில் 7 பழுதுபட்டு



2002 ஏப்ரல் 12]

உள்ளன. மற்ற குடியிருப்புகள் நல்ல நிலையில் இருக்கின்றன. அங்கேயுள்ள அலுவலர்கள் அங்கே தங்கியிருந்துதான் தங்களுடைய பணிகளைச் செய்து வருகிறார்கள். அங்கு இருக்கிற குழந்தைகள் பள்ளிகளுக்குச் செல்வதற்கு வேளாண்மைத் துறையின் மூலமாகத் தனியாகப் பேருந்து விட இயலாது. அவர்கள் அங்கே அந்த வழியாகச் செல்கிற பேருந்துகளின் மூலமாகச் செல்ல வேண்டும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறன்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரிவர பராமரிக்கப்படாமல், இயங்காமல் தமிழகத்தில் எத்தனை பண்ணைகள் இருக்கின்றன? அவற்றை மீண்டும்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்விக்குத் தொடர்பற்றது.

வினா எண் 134, திரு. த. ஆறுமுகம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**134—**

## பேருந்து வசதி

***7025—திரு. த. ஆறுமுகம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர் தொகுதி, எண்ணூர், மாதவரம் ஆகிய பேருந்து நிலையங்களில் வந்து செல்லும் பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவொற்றியூர் தொகுதி, திருவொற்றியூர், எண்ணூர், மாதவரம் ஆகிய பேருந்து நிலையங்களில் பொது மக்களின்

தேவைக்கேற்ப போதுமான அளவில் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. எனவே, மேற்கொண்டு பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகரிக்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு முதற்கண் என் நன்றியைத் தெரிவித்து, திருவொற்றியூர் தொகுதியில் உள்ள எண்ணூர், கத்திவாக்கம் நகரம், மாதவரம் நகரம், மணலி பேரூராட்சி, திருவொற்றியூர் நகரத்திலுள்ள பேருந்து நிலையங்களிலிருந்து கடந்த 1991 முதல் 1996 வரையிலான காலங்களில் இயக்கப்பட்ட பேருந்துகள், கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நிறுத்தப்பட்டன. பல்வேறு வழித்தடங்களில், எண்ணூரிலிருந்து உயர்நீதிமன்றம் வரை, 56எச் என்ற பேருந்தும், எண்ணூரிலிருந்து வடபழனி வரை செல்லக்கூடிய எண் 237 என்ற பேருந்தும், எண்ணூரிலிருந்து கொடுங்கையூர் செல்லக்கூடிய 138 என்ற பேருந்தும் மற்றும் மணலி பகுதியிலிருந்து செல்லக்கூடிய 64சி என்ற பேருந்தும், மாதவரத்திலிருந்து உயர்நீதிமன்றம் வரை செல்லக்கூடிய 142 என்ற பேருந்தும், திருவொற்றியூர் பகுதியிலிருந்து இயக்கப்படுகிற 42 என்ற பேருந்தும் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது நிறுத்தப்பட்டுவிட்டன. அந்தப் பேருந்துகளை மறுபடியும் இயக்கச் செய்வதோடு மட்டுமல்லாமல், மணலி பேரூராட்சியில், மேற்கூரைகள் இல்லாமல் கடந்த பல ஆண்டுகளாகப் போக்குவரத்துக் கழகங்களில் பேருந்துகள் அப்படியே வெயிலில் இருந்துகொண்டிருக்கின்றன, அங்கே மேற்கூரை அமைக்கச் செய்வதோடு மட்டுமல்லாமல், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தற்போது 275 கோடி ரூபாய் செலவில் புதிய பேருந்துகளை இயக்க இருக்கின்றார்கள். திருவொற்றியூர் தொகுதி மக்களுடைய தேவைக்கேற்ப, மக்கள் தொகை அதிகம் மிகுந்த திருவொற்றியூர் மக்களுடைய கோரிக்கையை நிறைவேற்றும் பொருட்டு, புதிய பேருந்துகளை அதிகமான வகையில் திருவொற்றியூர் தொகுதி மக்களுக்கு அளித்து அரசு உதவிடுமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்களின் வேண்டுகோளை அரசு பரிசீலிக்கும். இருந்தபோதிலும், இப்போது திருவொற்றியூர், எண்ணூர் மற்றும் மாதவரம் பேருந்து நிலையங்களிலிருந்து பல்வேறு வழித்தடங்களில் போதுமான





எண்ணிக்கையில் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. குறிப்பாக, திருவொற்றியூரிலிருந்து 18 வழித்தடங்களில் 116 பேருந்துகளும், எண்ணூருக்கு 10 வழித்தடங்களில் 59 பேருந்துகளும், மாதவரத்திற்கு 7 வழித்தடங்களில் 25 பேருந்துகளும் சீராக இயக்கப்படுகின்றன. பொது மக்களின் தற்போதைய தேவைக்கு இப்போது இயக்கப்படுகின்ற பேருந்துகள் போதுமானதாக இருக்கின்றன என்று கூடுதல் பேருந்துகள் இயக்கத் தேவையில்லை என்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. மேலும், இப்போது இருக்கின்ற சூழ்நிலையில், பெருநகரப் போக்குவரத்துக் கழகம் பெரும் நஷ்டத்தில் இயங்குகிறது என்பதையும் நமது உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். இருந்தபோதிலும், சென்ற ஆட்சிக் காலத்தில் நிறுத்தப்பட்டுள்ள சில வழித்தடங்களில் மீண்டும் பேருந்துகளை இயக்குவது குறித்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 135, திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன் மற்றும் திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

**135—**

## சுகாதாரக் கேடு

***11834—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**
**திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் சாலைகளில் செல்லும் வாகனங்கள் அதிக அளவில் புகை வெளியிடுவதால் ஏற்படும் சுகாதாரக் கேட்டினைத் தடுக்க அரசிடம் சிறப்புத் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வாகனங்கள் அதிக அளவில் புகை வெளியிடுவதால் ஏற்படும் சுகாதாரக் கேட்டினைத் தடுப்பதற்கு

அரசிடம் பல்வேறு திட்டங்கள் உள்ளன என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மத்திய மோட்டார் வாகன விதி 115(1) 1989-ன்படி, ஒவ்வொரு மோட்டார் வாகனமும் நிர்ணயிக்கப்பட்ட வாகனப்புகை மாசின் அளவிற்குட்பட்டு தயாரிக்கப்படவும், பராமரிக்கப்படவும் வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

சென்னை நகரில் உள்ள அனைத்து வாகனங்களும் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை புகை சோதனை செய்யப்பட்டு, புகை தர அளவுச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும் என்ற ஆணை தமிழக அரசால் பிறப்பிக்கப்பட்டு, 1-1-1997 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், இத்திட்டம் அமல்படுத்தப்படுவதற்காக தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரிய புகை சோதனை மையங்கள் சென்னை, திண்டுக்கல், காஞ்சிபுரம், திருவள்ளூர், நீலகிரி ஆகிய மாவட்டங்களிலும், தனியார் புகை சோதனை மையங்கள் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம் ஆகிய மாவட்டங்களிலும் செயல்பட்டு வருகின்றன. இத்திட்டம் இதர மாவட்டங்களிலும் விரிவுபடுத்தப்பட அரசு உத்தேசித்துள்ளது.

வாகனப் புகை மாசினைக் குறைக்க, சென்னை மாநகரில் Catalytic Convertor பொருத்தப்பட்ட கார்கள் மட்டுமே 1996 முதல் பதிவு செய்யப்பட்டு வருகின்றன.

வாகனப் புகை மாசினைத் தவிர்க்க பிப்ரவரி 2000 முதல் காரீயம் நீக்கப்பட்ட பெட்ரோல் தமிழகம் முழுவதும் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

தமிழகம் முழுவதும் கந்தக அளவு குறைக்கப்பட்ட (0.25%) டீசல், பெட்ரோல் ஆகிய எரிபொருட்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. வாகனங்கள் அதிகமுள்ள சென்னையில் காற்றின் மாசினைக் குறைப்பதற்காக 1-7-2001 முதல் மிகவும் குறைந்த அளவு கந்தகம் (0.05%) உள்ள எரிபொருள் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலைகள் 0.05% அளவு கந்தகம் உள்ள டீசல் மற்றும் பெட்ரோல் சென்னையின் சுற்றுப்புறங்களிலும் மற்றும் இதர மாவட்டங்களிலும் விநியோகிப்பதற்கான சாத்தியக் கூறுகளைப் பரிசீலித்து அதனை அமல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.



எரிபொருளில் தரம் குறைந்த ஆயிலைக் கலப்பது மற்றும் அதிகமாக ஆயிலைக் கலப்பதைத் தடுக்கும் பொருட்டு எரிபொருளில் நிர்ணயிக்கப்பட்ட தரமான 2டி ஆயில் கலந்த எரிபொருள் (பெட்ரோல்) பெட்ரோல் பங்குகளில் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

சென்னை நகரில் 1-7-2001 அன்று அல்லது அதற்குப் பிறகு உற்பத்தி செய்யப்பட்ட தனியார் நான்கு சக்கர வாகனங்கள் பாரத்-2 நிறை மாசின் தர அளவிற்குள் உட்பட்டு இருந்தால் மட்டுமே பதிவு செய்யப்பட வேண்டும் என்ற விதிமுறை செயல்படுத்தப்பட்டு வருகிறது.

எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலைகள், பெட்ரோல் எரிபொருளில் பென்சின் அளவை 3-லிருந்து 1% அளவுக்குக் குறைத்து விநியோகம் செய்வதற்கான சாத்தியக் கூறுகளைப் பரிசீலிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

வாகனங்கள் உமிழும் நச்சு மாசுகளைக் குறைப்பதற்காக, குறிப்பாக ஆட்டோ ரிக்ஷா, கார் போன்ற மோட்டார் வாகனங்களுக்கு எல்.பி.ஜி. திரவ பெட்ரோலிய எரிவாயு நிரப்பும் மையங்களை நிறுவுவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்குமாறு ஆயில் நிறுவனங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

எரிபொருள் (பெட்ரோல், டீசல்) விநியோகிக்கும் நிலையங்களிலிருந்தும், வாகனங்களைப் பயன்படுத்துபவர்களிடமிருந்தும், மாதிரிகள், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மூலமாகவும் எடுக்கப்பட்டு, அவற்றில் இந்தியத் தொழில்நுட்பக் கழகம் (ஐ.ஐ.டி), சென்னை மூலமாக, எரிபொருளின் தரம் மற்றும் கலப்படம் குறித்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

போக்குவரத்தினை மேம்படுத்தவும், வாகனங்கள் உமிழும் புகையைக் குறைப்பதற்காகவும், வினாடித் துளிகளைக் காட்டும் தானியங்கி சாலை சிக்னல் நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

தற்பொழுது வெளியூர் பேருந்துகள் சென்னை நகருக்குள் வருவதைத் தடுக்க, கோயம்பேட்டில் பேருந்து நிலையம் ஒன்று கட்டப்பட்டு வருகிறது. கனரக சரக்கு வாகனங்கள் நிறுத்தும் நிலையம் ஒன்று மாதவரத்தில் கட்டப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேற்கூறிய இரண்டு நிலையங்களும் செயல்படத் தொடங்கிய பின், சென்னையில் காற்றின் மாசின் அளவு பெருமளவு குறையும் என நம்பப்படுகிறது.

[2002 ஏப்ரல் 12

சென்னை நகரில் வாகனப் புகையைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, நகரின் முக்கியச் சாலைகளில் கனரக சரக்கு வாகனங்கள் வாகன நெரிசல் மிக்க நேரங்களில் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டு அமல்படுத்தப்பட்டு வருகிறது.

வாகனங்கள் திடீர் புகை சோதனைக்கு உட்படுத்தப்பட்டு, புகை மாசின் அளவு, நிர்ணயிக்கப்பட்ட தர அளவிற்கு இல்லாத வாகனங்கள்மீது, காவல் துறை (போக்குவரத்து) மற்றும் போக்குவரத்துத் துறை அலுவலர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

நிர்ணயிக்கப்பட்ட புகை மாசின் அளவு, வாகனங்கள் உமிழும் புகையில் கார்பன் மோனாக்ஸைடு தவிர, ஹைடிரோ கார்பன்கள் அளவுகளை நிர்ணயித்து சரியான முறையில் வாகனங்களைப் பராமரிக்க வேண்டும் என்பதை, ஹைட்ரோ கார்பன்கள் மாசினையும் அளவிட தரைவழிப் போக்குவரத்து அமைச்சகம் பரிசீலனை செய்து வருகிறது. இது சம்பந்தமாக மைய அரசின் அறிவிப்பினைப் பெற்று அமல்படுத்த அரசு உத்தேசித்துள்ளது.

போக்குவரத்து வாகனங்களால் ஏற்படும் காற்று மாசேற்றம் குறித்து விழிப்புணர்வுப் பயிற்சி முகாம், வாகனப் புகை கட்டுப்படுத்துவது பற்றிய கருத்தரங்கு, வாகனங்களில் பெட்ரோல்/டீசல் எரிபொருளினால் ஏற்படும் நெஞ்சக நோய்கள் சம்பந்தமான பரிசோதனை முகாம், வாகனப் பராமரிப்பு, புகை மாசு நிர்ணயிக்கப்பட்டுள்ள தர அளவிற்குட்பட்டிருக்க வேண்டும் என்ற சான்றிதழ், தரமான எண்ணெய் பயன்படுத்துதல், கலப்பு எண்ணெய் தவிர்த்தல் மற்றும் சாலை விதிகளை மதித்தல், போக்குவரத்து மேலாண்மை மூலமாக வாகனப் புகை மாசினைக் கட்டுப்படுத்துதல் பற்றிய கருத்தரங்கு மூலமாக மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். வாகனங்களிலிருந்து அதிக அளவில் புகை வெளியிடுவதால் ஏற்படும் மாசு கட்டுப்படுவதற்கு இதயதெய்வம் புரட்சித் தலைவி அரசு



2002 ஏப்ரல் 12]

எடுத்திருக்கின்ற நடவடிக்கைக்கு முதற்கண் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சென்னையைப் போன்று வாகன மாசு படிந்த நகரங்கள், தமிழகத்தில் எத்தனை நகரங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன என்பதையும், மாசைக் கட்டுப்படுத்துவதற்கு எத்தனை வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன, அதன் வாயிலாகத் தமிழகத்திற்கு அபராதத் தொகையாக எவ்வளவு கிடைத்துள்ளது என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாகனங்கள் ஒவ்வொரு முறையும் சோதனை செய்யப்பட்டு சான்றிதழ் பெற்றிருக்க வேண்டுமென்று தமிழக அரசால் உத்தரவிடப்பட்டு அந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தை அமல்படுத்துவதற்காக தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரிய புகை சோதனை மையங்கள் சென்னை, திண்டுக்கல், காஞ்சிபுரம், திருவள்ளூர், நீலகிரி ஆகிய மாவட்டங்களிலும், தனியார் புகை சோதனை மையங்கள் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம் ஆகிய மாவட்டங்களிலும் செயல்பட்டு வருகின்றன என்பதையும் சென்னை மாநகரில் Catalytic convertor பொருத்தப்பட்ட கார்கள் மட்டுமே பதிவு செய்யப்பட்டு வருகின்றன என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் பல்வேறு சோதனைகளுக்கு உட்பட்டு, 2001-2002 ஆம் நிதியாண்டில் 300 வாகனங்கள் மீது, தற்காலிகமாக உரிமம் ரத்து செய்யப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பால் மனோஜ் பாண்டியன்.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்டோ ரிக்ஷா, கார் போன்ற வாகனங்களுக்காக L.P.G.. திரவ பெட்ரோலிய எரிவாயு மையங்களை ஏற்படுத்த Oil நிறுவனங்களுக்கு நடவடிக்கை எடுத்து அரசு அறிக்கை ஏதும் சமர்ப்பித்துள்ளதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாகனங்கள் உமிழும் நச்சு மாசினைக் குறைப்பதற்கு, குறிப்பாக, ஆட்டோ ரிக்ஷா, கார் போன்ற மோட்டார் வாகனங்களுக்கு

[2002 ஏப்ரல் 12

L.P.G. திரவ பெட்ரோலிய எரிபொருள் நிரப்பு மையங்களை நிறுவுவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்குமாறு Oil நிறுவனங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழகத்தில் சென்னை மற்றும் மக்கள் தொகை நெருக்கமாக உள்ள நகரங்களிலே, பாதைகளிலே செல்லக்கூடிய வாகனங்களுடைய புகை என்பது மிக, மிக நச்சுத் தன்மை வாய்ந்தது என்ற காரணத்தாலே, அதைத் தடுக்க வேண்டிய மிகப் பெரிய சவாலை, பிரச்சினையை எதிர்கொள்ள வேண்டி இருக்கக்கூடிய காரணத்தாலே, இதை நான் இங்கே சுருக்கமாக மட்டும் அல்லாமல் சற்றுத் தெளிவாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய இந்திய அரசமைப்புச் சட்டம் பிரிவு 21-ன்படி மனிதனுக்கு அளிக்கப்பட்ட வாழ்வுரிமையின் அடிப்படையிலே, சுத்தமான காற்றைச் சுவாசிப்பது ஒவ்வொரு மனிதனுடைய அடிப்படை உரிமை. அந்த அடிப்படை உரிமை என்று சொல்லக்கூடிய காற்றை மாசுபடுத்துவதற்கு இந்த நாட்டிலே எந்த ஒரு மனிதனுக்கும் உரிமை கிடையாது என்ற அந்த அடிப்படையிலே, சமீபத்திலே 5-4-2002 அன்று நம்முடைய உச்ச நீதிமன்றம் ஒரு மிகப் பெரிய தீர்ப்பை வழங்கியிருக்கிறது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, அமைச்சரிடம் கேட்க வேண்டிய கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** இதன் முக்கியத்துவத்தைச் சொல்லுகிறேன். அந்தத் தீர்ப்பின் அடிப்படையிலே, இன்று இந்தியாவிலே இருக்கக்கூடிய வாகனங்கள் புகை கக்கக்கூடாது, அதற்குத் தடுப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற அந்த அடிப்படையிலே ஓர் அறிவுறுத்தலை உச்ச நீதிமன்றம் வெளியிட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே 30-8-2001 அன்று தமிழ்நாடு அரசு, மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் சார்பிலே சென்னையிலே மட்டும் 12.6 இலட்சம் வாகனங்கள் இயங்குவதாகவும், அதிலே 1.5 இலட்சம் வாகனங்களுக்கு E.C.C., அதாவது, Emission control certificate —மாசுக் கட்டுப்பாட்டுச் சான்று— வழங்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, 20 சதவீதம் போக, மீதி இருக்கக்கூடிய 80 சதவீத வாகனங்களிலே மாசு கட்டுப்படுத்த இயலாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. இன்னொன்று



2002 ஏப்ரல் 12]

1995-லே உலக வங்கி அறிவித்தபடி, நம்முடைய சென்னை மாநகரத்திலே மட்டும் இந்த வாயுவினாலே நுரையீரல் பாதிக்கக்கூடிய நோய்கள் போன்று ஏற்பட்டு, ஓராண்டுக்கு 863 பேர் இறப்பதாகப் புள்ளிவிவரங்கள் சொல்லுகின்றன. அதைப்போலவே, சமீபத்திலே இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் செய்த ஆய்வின்படி, சென்னையை ஒட்டியுள்ள திருவொற்றியூர் நகரிலே 2-1/4 இலட்சம் மக்கள் வாழக்கூடிய அந்த நகரத்திலே மாத்திரம், ஓராண்டுக்கு 200 பேர் இதனாலே இறக்கக் கூடிய நிலை- இருப்பதாக ஆய்வறிக்கையில் சொல்லப்படுகிறது. அதேபோல, சென்னையிலே டிராஃபிக் போலீஸ், இதிலே 51 பேரைப் பரிசோதனை செய்த நேரத்திலே.....

முற்பகல் 10-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, கேள்விக்கு வாருங்கள். (குறுக்கீடு) கேள்விக்கு வாருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** 32 பேருக்கு நுரையீரல் பாதிப்பு இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த வாயுவினாலே மிகப் பெரிய கொடூரம் ஏற்படுகிறது. அதாவது கேன்சர்—புற்று நோய், இருதய நோய் மட்டுமல்லாமல் சிறுநீரகம் பாதிப்பு, நுரையீரல் பாதிப்பு, ஆஸ்துமா போன்ற நோய்களெல்லாம் வருவதற்கு வாய்ப்பிருக்கின்ற காரணத்தினாலே, இதை மனதிலே வைத்து, உச்ச நீதிமன்றம் சொல்லியபடி, எல்லா வாகனங்களிலும் சி.என்.ஜி. பொருத்தப்படுமா? இன்று டில்லியிலே ஓர் அறிவிப்பின்படி 7000 பேருந்துகள் நிறுத்தப்பட்டிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, மானியக் கோரிக்கையிலே இதைப் பற்றியெல்லாம் விளக்கமாகப் பேசுங்கள். அமைச்சரிடம் தெரிந்துகொள்ள வேண்டிய விவரங்களைக் கேளுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** அந்த அடிப்படையிலே, நம்முடைய அரசு முக்கியத்துவம் கருதி, சி.என்.ஜி. பொருத்துவதற்கு ஆவன செய்யுமா? அல்லது எந்த நடவடிக்கையின் அடிப்படையிலே இதைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவிருக்கிறது என்பதை அன்போடு அறிய விரும்புகிறேன்.

[2002 ஏப்ரல் 12

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய அந்தக் கேள்விகளுக்கு, இங்கே விநியோகிக்கின்ற நிலையங்களிலேயிருந்து, வாகனங்கள் பயன்படுத்துவோரிடமிருந்து மாதிரிகள் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், உணவுப் பொருள் வழங்கு வாரியம், நுகர்வோர் பாதுகாப்புத் துறை மூலமாகவும் எடுக்கப்பட்டு, இந்தியத் தொழில்நுட்பக் கழகம், சென்னை மூலமாக எரிபொருள் தரம் மற்றும் கலப்படம் குறித்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் இதற்குப் பல்வேறு அறிவுரைகளை வழங்கியிருக்கிறார்கள். அவற்றிற்கேற்ப தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 136, திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

136—

## மிகவும் பிற்படுத்தப்பட்டோர்

*18624—**திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:**

*மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் வாழும் செக்காளர் சமுதாயத்தினரை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே,

ஒரு சாதாரண விவசாயக் குடும்பத்திலே பிறந்து, கிளைக் கழகச் செயலாளராகவும், ஒன்றியக் கழகச் செயலாளராகவும் இருந்த என்னை தாயுள்ளம் கொண்ட இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் ஆக்கி, மேலும்



2002 ஏப்ரல் 12]

நம்பிக்கையுடன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல அமைச்சராகவும் அமர்த்தி, தாயுள்ளத்துடன், எங்கள் நேரத்தை வீணாக்காமல் மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும்; நல்ல பெயர் எடுக்க வேண்டுமென்று அறிவுறுத்தினார்கள். எங்கள் அம்மா அவர்களின் நம்பிக்கை வீணாகாமல் நடந்து கொள்வேன் என்று இந்த மாமன்றத்திற்கு உறுதியளிக்கிறேன். தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் 15-3-1993-ல் ஓய்வு பெற்ற நீதிபதி, நீதியரசர் திரு. கே. சண்முகம் அவர்கள் தலைமையில் ஏற்படுத்தப்பட்டது என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விடை—(அ) மற்றும் (ஆ) செக்காளர் வகுப்பினை மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக் கோரும் கோரிக்கை குறித்து ஆய்வு செய்து, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நலஆணையம் அளித்துள்ள அறிக்கை அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்ட மக்களின் பிரச்சினைகளை இம்மாமன்றத்தில் எடுத்துக்கூற, சாதாரணத் தொண்டனாகிய எனக்கு வாய்ப்பளித்த மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்தில், குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் கல் செக்கில் எண்ணெய் அரைத்து, வணிகர்களிடம் விற்பனை செய்து வாழ்க்கை நடத்தும் மிகப் பின்தங்கிய இடத்திலே வாழ்ந்து வருகின்றவர்கள் செக்காளர் சமுதாயத்தினர் என்று அழைக்கப்படுகிறார்கள். இவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் இரணியல், வழுக்கலம்பாடு, பத்மநாபபுரம், அழகியபாண்டிபுரம், இடைக்கோடு, திருவிதாங்கோடு, காட்டுக்கடை, தோவாளை, குலசேகரம், கொல்லங்கோடு, காஞ்சாம்புறம், புதுக்கடை, அருமனை, குளச்சல், பளுகல் என்று பல்வேறு பகுதிகளில் சுமார் 1-1/2 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் வசித்து வருகிறார்கள். தற்போது, இயந்திரங்களைப் பயன்படுத்தி தேங்காய், புன்னைக்காய், வேப்பங்காய், எள் போன்ற எண்ணெய் வித்துக்களிலிருந்து எண்ணெய் எடுப்பதால் இவர்களது தொழில் மிகவும் பாதிக்கப்பட்டு வாழ்க்கைக்கு வழியின்றி அவர்கள் வறுமையோடு போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

[2002 ஏப்ரல் 12

இவர்களின் குழந்தைகள் படிப்பதற்கு அரசு சலுகைகள் கிடைக்கவும், அரசு வேலைகளில் முன்னுரிமை கிடைக்கவும் இவர்களைச் சமுதாயத்தில் முன்னேற்றப் பாதையில் எடுத்துச் செல்லவும், மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் அரசு கருணை உள்ளம் கொண்டு, செக்காளர் சமுதாய மக்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க நடப்பாண்டிலாவது முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு இதைப் பரிசீலனையில் எடுத்துக்கொள்ளும் என்று இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். ராஜம்மாள்.

**திருமதி எஸ். ராஜம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதயதெய்வம் அம்மா அவர்களை வணங்கி எனது கேள்வியினைத் தொடங்குகிறேன். தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம் எதனை அளவுகோலாகக் கொண்டு பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப் பரிந்துரைத்துள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையத்தால், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க, சமூக ரீதியான பிற்படுத்தப்பட்ட நிலை, கல்வி ரீதியான பிற்படுத்தப்பட்ட நிலை மற்றும் பொருளாதார ரீதியான பிற்படுத்தப்பட்ட நிலை ஆகிய அளவுகோல்களின்படி பரிந்துரைக்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 137, திரு. கே.கே. உமாதேவன், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.



2002 ஏப்ரல் 12]

137—

**நினைவுச் சின்னம்**

***9273—திரு. கே.கே. உமாதேவன்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கனியன் பூங்குன்றனாருக்கு நினைவுச் சின்னம் அவர் பிறந்த இடமான மகிபாலன்பட்டியில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. கே.கே. உமாதேவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைக் காக்க வந்த தாயாக, நிகழ்காலப் புறநானூற்று வரலாறாகத் திகழ்கிற மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற உலக ஒருமைப்பாட்டுக் கருத்தை கடைச்சங்க காலத்திலே தமிழகத்தில் இருந்து, அதுவும் குறிப்பாக, என்னுடைய திருப்பத்தூர் தொகுதி, மகிபாலன்பட்டி கிராமத்தில் பிறந்து உலகிற்கு உணர்த்திய அந்தச் சங்கப் புலவர் கனியன் பூங்குன்றனார் பிறந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மண்ணில் அவருடைய நினைவுச் சின்னம் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசின் சார்பாக உருவாக்கப்படுமா என்று பேரவைத் தலைவர் மூலமாகக் கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திரத்திற்காகவும், சமுதாய முன்னேற்றத்திற்காகவும் அயராது பாடுபட்ட தலைவர்களின் நினைவகங்கள், சிலைகள் ஆகியவை எல்லாம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சி 1991-1996 ஆண்டுகளில் நடைபெற்றபோது அந்தத் தலைவர்களை நினைவு கூர்கின்ற வகையிலே சிறப்பாக அமைக்கப்பட்டன. தற்போது அரசின் நிதி நிலைமைக்கேற்ப அரசு சிந்திக்கும் என்பதை அவையின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 138, திரு. க. முருகவேல் ராஜன், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

[2002 ஏப்ரல் 12

138—

## மீன் வளர்ப்பு

*2725—திரு. க. முருகவேல் ராஜன்:

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வண்ண மீன் வளர்ப்புத் தொழிலை ஊக்கப்படுத்தி ஏற்றுமதி செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது வண்ண மீன்களை ஏற்றுமதி செய்யும் திட்டம் அரசிடம் இல்லை. எனினும், வண்ண மீன் வளர்ப்பாளர்களை ஊக்குவிக்க அவர்களுக்கு மானியத் தொகை வழங்கி, வண்ண மீன் வளர்ப்புத் தொழிலை அரசு ஊக்கப்படுத்தி வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. முருகவேல் ராஜன் (குறுக்கீடு)

வினா எண் 139, திரு. வெ. ஏழுமலை, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

139—

## சுற்றுலா மையம்

*1133—திரு. வெ. ஏழுமலை:

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சிக் கோட்டையை சுற்றுலா மையமாக அறிவிக்க அரசு முயற்சி எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



2002 ஏப்ரல் 12]

(அ) மற்றும் (ஆ) செஞ்சிக் கோட்டையை சுற்றுலாத் தலமாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை. சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகையைக் கருத்திற் கொண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆலோசனையைப் பெற்று, நிதி ஆதாரங்களுக்கேற்ப, தேவையான அடிப்படை வசதிகளை சுற்றுலாத் துறை ஏற்படுத்தி வருகிறது.

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வணங்கும் அன்னை, நடமாடும் மனித தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன். தமிழ்நாட்டில் பழமையான வரலாற்றுப் புகழ்பெற்ற நகரங்கள், அவற்றின் தன்மையினை மாற்றாமல் வளர்ச்சியடையச் செய்ய, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கடந்த கழக ஆட்சியின்போது, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் 191, 18-7-1994-ன்படி காஞ்சிபுரம், மாமல்லபுரம், தஞ்சாவூர், செஞ்சி உட்பட 38 நகரங்கள் சான்றுரைக்கப்பட்டன. அவற்றில் செஞ்சியும் இடம் பெறுகிறது. இந்த செஞ்சி நகரில், ராஜகிரி, கிருஷ்ணகிரி, சக்கிலி என்ற மூன்று குன்றுகளில், முக்கோண வடிவிலே பாதுகாப்பான சுவர் அமைக்கப்பட்டுள்ளது. செஞ்சி நகரத்தில் உள்ள செஞ்சிக் கோட்டை மத நல்லிணக்கத்திற்கு ஓர் அடையாளமாகத் திகழ்கிறது. செஞ்சிக் கோட்டையில் வெங்கடரமணர் கோயில், ஆஞ்சநேயர் கோயில், அத்துடன் சாத்-அத்--உல்லாகான் பள்ளிவாசல் ஆகியவை உள்ளன. இந்தப் பகுதியைக் காண உள்நாடு, வெளிநாடுகளில் இருந்து தினந்தோறும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வந்து கொண்டிருக்கிறார்கள். செஞ்சிக் கோட்டையைப் பார்க்க வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு, நவீனக் கழிப்பிடம், குடிநீர் வசதி, ஓய்விடம் அமைத்து, இயற்கை அமைப்பைப் பொலிவுபடுத்தி, அரசுக்கு மேலும் வருமானம் கிடைக்க மாண்புமிகு அமைச்சர் வழிவகை செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்அனுமதியோடு வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. வெ. ஏழுமலை:** செஞ்சிக் கோட்டையைச் சுற்றியிருக்கிற பகுதியிலே, சுற்றுலாத் துறை மூலம் சாலையோர விடுதி கட்ட 40

[2002 ஏப்ரல் 12

இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. அந்தக் கட்டுமானப் பணிகள் எப்போது தொடங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரித்திர முக்கியத்துவம் பெற்ற செஞ்சிக் கோட்டை தமிழ்நாட்டின் பிரசித்தி பெற்ற சுற்றுலா மையமாகும். செஞ்சிக் கோட்டையின் சுற்றுலா முக்கியத்துவத்தை உலகெங்கும் பரப்ப செஞ்சிக் கோட்டை பற்றிய விவரங்கள் அடங்கிய இலவசக் கையேடு ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டு, அயல்நாடுகளில் அமைந்துள்ள மைய அரசு சுற்றுலா அலுவலகங்கள் மூலம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அறிந்துகொள்ளும் வகையில் விநியோகம் செய்யப்பட்டு வரப்படுகிறது.

விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள செஞ்சியில் உள்ள கோட்டைகள் மிகவும் புகழ்பெற்றவையாகும். இதனைக் கண்டுகளிக்க ஏராளமான சுற்றுலாப் பயணிகள் நாள்தோறும் செஞ்சிக்கு வருகை புரிகின்றனர். எனவே, செஞ்சியை மேம்படுத்த 92 இலட்சம் ரூபாய் செலவில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டன. மத்திய அரசு இத்திட்டத்தை ஏற்றுக்கொண்டுள்ளது. மொத்த மதிப்பீடான ரூபாய் 92 இலட்சத்தில் மத்திய அரசின் பங்கான ரூ. 42 இலட்சத்தை ஒதுக்கீடு செய்ய ஒப்புக்கொண்டு முதல் தவணையாக 2001–2002 ஆம் ஆண்டில் ரூ. 11 இலட்சத்து 50 ஆயிரம் வழங்க ஆணை வெளியிட்டுள்ளது. இதில் தற்போது 10,000 ரூபாய் மட்டும் வழங்கப்பட்டுள்ளது. விரைவில் எஞ்சிய தொகை மத்திய அரசிடமிருந்து பெறப்படும். இப்பணி செஞ்சி பேரூராட்சி மூலம் நிறைவேற்றப்படும். செஞ்சிக் கோட்டையில் கம்பி வழிப் பயண வசதி செய்ய RITES என்னும் நிறுவனம் 733 இலட்சம் ரூபாய்க்கு ஒரு திட்டம் தயாரித்துள்ளது. இது பிப்ரவரி 2001-இல் மாநில அரசு மூலம் மத்திய அரசுக்கு நிதி கோரி அனுப்பப்பட்டது. மத்திய அரசு ஏப்ரல் 2001-ல் இத்திட்டத்தை B.O.O.T அல்லது B.O.T. போன்ற திட்டங்கள் மூலம் செயல்படுத்த இயலுமா என ஆராயும்படி அறிவுறுத்தியுள்ளது. செஞ்சியைச் சுற்றியுள்ள இடங்கள் தொல்பொருள் ஆய்வுத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளதால், எந்த ஒரு திட்டத்தையும் செயல்படுத்துவதற்கு முன்னதாகத் தொல்பொருள் ஆய்வுத் துறையின் அனுமதி பெறுவது அவசியமாகிறது என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



2002 ஏப்ரல் 12]

2000--2001 ஆம் நிதியாண்டில் முன்னுரிமைப்படுத்தப்பட்ட திட்டமாக மொத்தம் 15 செயற்குறிப்புகள் மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இதில் செஞ்சி சாலையோர ஓட்டல் கட்டும் திட்டமும் ஒன்று. இந்த 15 திட்டங்களில் 10 திட்டங்களுக்கு மட்டுமே மைய அரசின் ஒப்புதல் பெறப்பட்டது. செஞ்சியில் சாலையோர ஓட்டல் கட்டும் திட்டத்திற்கு மைய அரசால் ஒப்புதல் தரப்படவில்லை. இந்த நிதியாண்டில், 2002-2003 ஆம் ஆண்டில் இத்திட்டம் முன்னுரிமைப்படுத்தப்பட்ட திட்டமாக மீண்டும் மைய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட உள்ளது. மொத்த மதிப்பீட்டில் மத்திய அரசு 50 சதவீதம், மாநில அரசு 50 சதவீதம் என்ற விகிதாச்சாரத்தின்படி இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்பதை இந்த அவைக்குத் தெரியப்படுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### (அ) தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. பிரபாகரனின் பேட்டி மற்றும் அவரை இந்தியாவுக்குக் கொண்டுவந்து, அவர் மீதான வழக்கை விரைந்து நடத்துதல்.

முற்பகல் 11-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்.

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய முன்தினம் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்கள், பத்திரிகையாளர்கள், செய்தி நிறுவனங்கள் மற்றும் தொலைக்காட்சி நிருபர்களையெல்லாம் சந்தித்து இருக்கிறார்கள். உலகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து நிருபர்கள் அந்தப் பத்திரிகையாளர் சந்திப்பிலே கலந்துகொண்டதாகச் செய்திகள் சொல்கின்றன. அதற்கு ஒரு முக்கியத்துவம் கொடுக்கிற முயற்சியும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவரை ஒரு நாயகனாகச் சித்தரிக்க வேண்டும் என்றும் முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்] [2002 ஏப்ரல் 12

நம்மைப் பொறுத்தவரையில், அவர் இங்கே பிரகடனப்படுத்தப்பட்ட குற்றவாளி. ஒரு கொலை வழக்கிலே சம்பந்தப்பட்டவர். முதல் குற்றவாளியாக அவர் கருதப்படுகிறார். அவர் அதைப்பற்றி ஏதாவது சொன்னாரா என்று பார்த்தால், கேட்ட கேள்விக்கு அவர் சொல்லியிருக்கிற பதில்; 'அது ஒரு துன்பியல் சம்பவம்; 10 ஆண்டுகளுக்கு முன்னாலே நடைபெற்றது. அதற்கு மேல் ஏதும் சொல்லவியலாது' என்று சொல்லியிருக்கிறார். ராஜிவ் கொலைபற்றி பன்னிப் பன்னிக் கேட்ட நேரத்திலேகூட, கேட்ட நிருபர்களை உட்கார வைப்பதற்கு முயற்சிகள் நடைபெற்றிருக்கின்றதே தவிர, கடைசியாக அவருடைய ஆலோசகர் சொன்ன பதில்-Amnesty. There is no question of amnesty. இங்கே இருக்கின்ற 4 பேர்களுக்குக் கேட்கப்பட்டிருப்பது Mercy Petition, கருணை மனு கொடுத்திருக்கிறார்கள். Amnesty அல்ல, Amnesty-க்கும் கருணை மனுவிற்கும் நிறைய வித்தியாசம் இருக்கின்றது. அவர்களுக்குத் தூக்குத் தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது. அந்தத் தூக்குத் தண்டனையிலேயிருந்து அவர்களுக்குக் கருணை காட்டவேண்டும். அந்தத் தண்டனையிலேயிருந்து அவர்கள் தப்பிப்பதற்காக எடுக்கப்பட்ட முயற்சி அந்த முயற்சி. ஆக, எந்தக் கட்டத்திலேயாவது அவர் அந்தக் கொலை வழக்கிலே தனக்கு சம்பந்தமில்லையென்றோ, தனக்கும், தன்னுடைய அமைப்பிற்கும், நிறுவனத்திற்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லையென்றோ அவர் சொல்லவேயில்லை. அதுமட்டுமல்ல, குறைந்தபட்சம் ஒரு வருத்தமாவது தெரிவித்தாரா, தான் செய்தது தவறு என்று உணர்ந்தாரா என்றால், எதுவுமே கிடையாது. அதை அவர் நேரடியாக நியாயப்படுத்தவில்லையே தவிர, அதற்கு அவர் கொஞ்சம்கூட வருத்தம் தெரிவிக்கவில்லை. தனக்குச் சம்பந்தம் இல்லை என்றும் சொல்லவில்லை.

இன்றையதினம், பிரபலமான இந்து பத்திரிகை, தலையங்கம் ஒன்றை எழுதியிருக்கிறது. அதிலே, இரண்டே இரண்டு வரிகளை மட்டும் படிக்கின்றேன்.

"The manner in which Prabakaran fielded questions on his complicity in the assassination of India's former Prime Minister and political leader Rajiv Gandhi testifies to the LTTE leader's total lack of remorse for the ghastly act."

அந்தக் கொடூரமான சம்பவத்திற்கு, செய்த தவறுக்கு எந்தவிதமான வருத்தமும் தெரிவிக்கவில்லை என்பது மிகத் தெளிவாகக்



2002 ஏப்ரல் 12] [திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, his unrepentant attitude is compounded by a complete absence of any denial of the LTTE's involvement in what he dismissively characterises as a 'tragic incident'.

'அது துன்பியல் சம்பவம்' என்பதைத் தவிர, அதற்கு மேல் அவர் சொல்லவேயில்லை. இந்த மாதிரி நேரத்திலே, தமிழகத்திலே அதற்கு நம்முடைய எண்ணங்கள் என்ன என்பதை அறிந்து கொள்வதிலே பலரும் மிகவும் அக்கறையோடு வந்து கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

குறிப்பாக, நேற்றையதினம் பத்திரிகையாளர்கள் நம்முடைய முதலமைச்சரைச் சந்தித்து, அவரிடத்திலே அதைப்பற்றிக் கேட்டிருக்கிறார்கள். 'பிரபாகரன் பேட்டி கொடுத்திருக்கிறார். அவர் ஏற்கெனவே இந்த நாட்டிலே கொலைக் குற்றவாளியாகப் பிரகடனப்படுத்தப்பட்டவர், எனவே நீங்கள் இதைப்பற்றி என்ன சொல்கிறீர்கள்?' என்று கேட்ட நேரத்திலே மிகத் தெளிவாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். 'பிரகடனப்படுத்தப்பட்ட குற்றவாளியாக இருக்கும் பிரபாகரன், நம்மோடு நட்புறவோடு இருக்கும் அண்டை நாடான இலங்கையில் சுதந்திரமாக அனுமதிக்கப்படுவதும், பத்திரிகையாளர்களையும், தொலைக்காட்சியினரையும் சந்திப்பதையும், அவரை 'மக்கள் நாயகன்' என்பது போலப் பத்திரிகையாளர்கள் நடத்துவதும் இந்தியரால் சகிக்க முடியாததும், தாங்கிக்கொள்ள முடியாததுமாகும். நான் இது குறித்து பிரதமருக்குக் கடிதம் எழுதவிருக்கிறேன். இந்திய அரசு இலங்கை அரசிடம் கேட்டு பிரபாகரனை ராஜிவ் காந்தி கொலை வழக்கில் நீதி விசாரணையைச் சந்திக்க இந்தியாவுக்கு அனுப்பி வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தப் போகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி). பிரபாகரனை நீதி விசாரணைக்கு உட்படுத்த வேண்டும். அவராக அதைச் செய்யமாட்டார். எனவே, இலங்கை அரசாங்கம் அவரை இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டுமென்று வற்புறுத்தப் போகிறேன்', என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நான் உள்ளபடியே, துணிச்சலாக அவர் எடுத்த அந்த முடிவை (மேசையைத் தட்டும் ஒலி) வரவேற்கிறேன், பாராட்டுகிறேன்.

அதுமட்டுமல்ல, நேற்றையதினம் நம்முடைய பிரதமரிடத்திலேயும் அதே கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். ஒரு கேள்விக்கு மிகத் தெளிவாக அவர் பதில் சொல்லியிருக்கிறார். L.T.T.E.-யின்மீது

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்] [2002 ஏப்ரல் 12

இருக்கின்ற தடையை நீக்குகின்ற பிரச்சினையே எழவில்லை, தடையை நீக்க மாட்டோம் என்று மிகத் தெளிவாக நேற்றையதினம் பிரதமர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதையும் நான் வரவேற்கின்றேன்.

பிரபாகரனைப் பொறுத்தவரையில், இந்த நாட்டிலே பிரகடனப்படுத்தப்பட்ட குற்றவாளி. முன்பு அவர் தலைமறைவாக இருந்தார். இப்பொழுது he has surfaced— அவர் வெளியே வந்தாச்சு. வெளியே வந்து தாராளமாக சுதந்திரப் பறவையாக அவர் நடமாடிக் கொண்டிருக்கிறார். நம்முடைய நாட்டிற்கும், Srilanka—விற்கும்— இலங்கை நாட்டிற்கும், Extradition Treaty இருக்கிறது. நம்முடைய நாட்டிலே குற்றம் செய்த ஒருவர் அந்த நாட்டுப் பிரஜையாக இருந்தாலும், அல்லது வேறு எந்த நாட்டுப் பிரஜையாக இருந்தாலும், நம்முடைய நாட்டுப் பிரஜையாக இருந்தாலும்கூட, அவரை அந்த நாட்டிலேயிருந்து நம்முடைய நாட்டிற்கு அனுப்பி வைப்பதற்கான Extradition Treaty நம்முடைய இரண்டு நாடுகளுக்கும் இடையே இருக்கிறது. எனவே, பிரகடனப்படுத்தப்பட்ட குற்றவாளியாக விளங்குகின்ற பிரபாகரனை இந்தியாவிற்கு அனுப்ப வேண்டுமென்று இந்திய நடுவண் அரசு, நிச்சயமாக இலங்கை அரசை நிர்பந்திக்க வேண்டும். அதற்காக உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும், கடிதம் எழுத வேண்டுமென்று முதலமைச்சர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். நானும் அதையே வலியுறுத்த விரும்புகின்றேன். இந்த நேரத்திலே, கண்டிப்பாக, இதைப்போலக் கேள்வி கேட்காமல் விடுவது எந்தக் காரணத்தைக் கொண்டும் நமக்குப் பெருமை சேர்க்காது. அதனால் கண்டிப்பாக அவர் இந்த நாட்டிற்கு, இங்கே கொண்டுவரப்பட்டு- இலங்கை அரசிடமிருந்து பெற்று இங்கே கொண்டுவரப்பட்டு—நீதியின் முன்னாலே நிறுத்தப்பட்டு விசாரணை நடைபெறவேண்டும். விசாரணையிலே என்ன தண்டனை அவருக்குக் கிடைக்கிறதோ, என்ன தீர்ப்பு அளிக்கப்படுகிறதோ, அந்தத் தீர்ப்பை நாம் தலைவணங்கி ஏற்றுக்கொள்வோம். எனவே, கண்டிப்பாக இந்த நாட்டிற்கு அவரைக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

L.T.T.E.-யின்மீது இருக்கின்ற தடையை நீக்கவேண்டுமென்று யார் சொல்கிறார்களோ, அவர்கள் இந்த நாட்டினுடைய துரோகிகள். அதில் எந்தவிதமான சந்தேகமும் யாருக்கும் வேண்டியதில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் சொல்லப் போனால், தமிழினத் துரோகிகள். தமிழன் யாரையும் பின்னாலேயிருந்து தாக்கியது கிடையாது. அதைவிட



2002 ஏப்ரல் 12] [திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

ஒரு மோசமான சம்பவம் இருக்க முடியாது. எனவே, அவர்கள் தமிழினத் துரோகிகள், இந்த நாட்டினுடைய துரோகிகள். அந்த அளவிற்கு நாம் இடம் கொடுக்கக் கூடாது. முதலமைச்சர் அவர்கள் விரும்புவார்களேயானால், இந்த அவையிலேயே நாம் தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். பிரபாகரனை உடனடியாக extradite செய்து, இந்தியாவிற்குக் கொண்டு வந்து, நீதிமன்றத்தின் முன்னாலே நிறுத்துவதற்கு இந்திய அரசாங்கம் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்று இந்த அவையிலேயே தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டு அமைகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுகுறித்து போளூர் வரதன் அவர்களும் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். இப்போது எஸ்.ஆர்.பி. அவர்கள் இதை எழுப்பியிருக்கிற காரணத்தால், அரசின் சார்பிலே முதலமைச்சர் அவர்கள் ஏதாவது இதற்குச் சொல்ல வேண்டுமென்றால் சொல்லலாம். (குறுக்கீடு)

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, உட்காருங்கள். நீங்கள் காலையிலே அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். அந்த அறிவிப்பிலே ஒன்றையும் எடுக்கவில்லை. (குறுக்கீடு) இல்லை, இல்லை, வேண்டாம், வேண்டாம், உட்காருங்கள். எஸ்.ஆர்.பி. அவர்கள் முழுமையாகச் சொல்லி விட்டார்கள். இப்போது அந்தத் தீர்மானத்தை எடுக்கவில்லை. அவர் கிளப்பிய காரணத்தினால்தான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், வரதன்.

**திரு. போளூர் வரதன்:** எனது கருத்தைச் சொல்ல விரும்புகிறேன், இரண்டு நிமிடங்கள் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் வரதன்.

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, .....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வரதன், இது குறித்து எஸ்.ஆர்.பி. அவர்கள் முழுமையாகச் சொல்லி விட்டார்கள். இப்போது உங்களுடைய தீர்மானம் ஒன்றும் இங்கே வரவில்லை. அவர் எழுப்பிய

காரணத்தால், அதற்கு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லப் போகிறார்கள். தயவுசெய்து அமருங்கள்.

**திரு. போளூர் வரதன்:** என்னுடைய கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், எல்லாவற்றிற்கும் சேர்த்து அவர்கள் சொல்வார்கள். (குறுக்கீடு) உங்களுடைய பெயரைச் சொன்னதற்குத் தண்டனையா?

**திரு. போளூர் வரதன்:** இல்லை, தண்டனை இல்லை. அந்த நிகழ்ச்சி நடைபெற்றபோது நான் அந்தப் பகுதியிலே இருந்த வேட்பாளர். ஆகவே, பேசுகிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, பிரபாகரன் அவர்கள் தேடப்பட்ட குற்றவாளி மட்டுமல்ல. உலக நாட்டிலே தீவிரவாத அமைப்பு என்று ஒப்புக்கொள்ளப்பட்ட ஓர் அமைப்பினுடைய தலைவர். அச்சுறுத்தல்கள், கொல்வது, பலாத்காரம் செய்வது, பலவந்தப்படுத்துவது,.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, வரதன் உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) தயவுசெய்து உட்காருங்கள்.

**திரு. போளூர் வரதன்:** ஒரு நிமிடம் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், ஒரு நிமிடம் முடிந்துவிட்டது, வரதன் உட்காருங்கள்.

**திரு. போளூர் வரதன்:** நான் சொல்ல வந்தது, அவரை ஆதரித்து வை. கோபால்சாமி போன்றவர்கள், தமிழகத்திலே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, வரதன் உட்காருங்கள். இது குறித்து எஸ்.ஆர்.பி. அவர்கள் கிளப்ப வேண்டியதைக் கிளப்பி விட்டார்கள். அதற்கு அரசின் சார்பிலே பதில் வரப்போகிறது. உட்காருங்கள், வேறு நேரத்திலே தீர்மானம் வரும்போது இதை எடுத்துக்கொள்ளலாம். உட்காருங்கள். (குறுக்கீடு) தயவுசெய்து உட்காருங்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீலங்கா நாட்டைச் சார்ந்த தீவிரவாத இயக்கமான தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம், (L.T.T.E.)





இந்திய நாட்டில் ஊடுருவி, குறிப்பாகத் தமிழ்நாட்டில் சட்டவிரோதமான செயல்களைச் செய்து வந்ததையடுத்து, L.T.T.E. இயக்கம் கடந்த 1992 மே மாதம் 14 ஆம் தேதியன்று, Unlawful Activities (Prevention) Act, 1967--ன்படி தடை செய்யப்பட்டது. குறிப்பாக, முன்னாள் பாரதப் பிரதமர் மறைந்த திரு. ராஜீவ் காந்தி அவர்கள் தமிழ்நாட்டிற்குத் தேர்தல் பிரச்சாரத்திற்காக வருகை தந்திருந்தபோது, 1991-ல் படுகொலை செய்யப்பட்டதும், அந்தக் கொடூரமான நிகழ்ச்சியின் பின்னணியில் இருந்தது L.T.T.E..-தான் என்று முறையான விசாரணைக்குப் பின்னர் தெரிய வந்ததையும் அடுத்து, L.T.T.E. இயக்கத்தின் மீதான மத்திய அரசால் பிறப்பிக்கப்பட்ட தடையுத்தரவு, இந்தியத் துணைக் கண்டத்தில் அமைதியை விரும்புகின்ற அனைத்துத் தரப்பு மக்களாலும் வரவேற்கப்பட்டது என்பதையும் நான் இங்கே நினைவுகூர விரும்புகிறேன்.

முதன்முதலாக, L.T.T.E. தீவிரவாத அமைப்புக்குத் தடை, நான் எடுத்துக்கொண்ட பெருமுயற்சியால் 1992 ஆம் ஆண்டில் மத்திய அரசால் விதிக்கப்பட்டது. 1991 ஆம் ஆண்டு நான் தமிழக முதலமைச்சராக இருந்தபோது, தமிழகத்தில் அமைதி நிலவ பயங்கரவாத இயக்கமான L.T.T.E. இயக்கம் தடை செய்யப்பட வேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்தினேன். அதையடுத்துத்தான், முதன்முறையாக நான் அன்றைய பிரதமருக்கு விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில், L.T.T.E. இயக்கம் மத்திய அரசால் 1992 ஆம் வருடம் தடை செய்யப்பட்டது. அதன் பின்னர், 1994 மே மாதம் 14 ஆம் தேதி முதல் மீண்டும் எனது வற்புறுத்தலால், மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு L.T.T.E. இயக்கம் மீண்டும் தடை செய்யப்பட்டது. இதேபோன்று மேலும் L.T.T.E. இயக்கத்தின் மீதான மத்திய அரசின் தடையுத்தரவு தொடர்ந்து நீட்டிக்கப்பட்டு வந்துள்ளது. தற்போது அந்த இயக்கத்தின் மீதுள்ள தடையுத்தரவு இந்த ஆண்டு மே மாதம் 13 ஆம் தேதியுடன் முடிவடைய உள்ளது. ஆகவே, மீண்டும் L.T.T.E. இயக்கத்தின் மீதான தடையுத்தரவு மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட வேண்டும் என்று 10-4-2002 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதி என்னுடைய கோரிக்கையை வலியுறுத்தி உள்ளேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2002 ஏப்ரல் 12

முற்பகல் 11-15

இதற்கிடையில், L.T.T.E. தீவிரவாத இயக்கத்தின் தலைவர் வி. பிரபாகரன், ஸ்ரீலங்காவில் சர்வதேச பத்திரிகையாளர்களுக்கு 10-4-2002 அன்று பேட்டி அளித்துள்ளார். அந்தப் பேட்டியில், ராஜீவ் காந்தி கொலை குறித்துக் கேட்கப்பட்டபோது, 'அது ஒரு துயரமான சம்பவம்' என்றும், 'அது 10 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த சம்பவம்' என்றும், 'தற்போது அது குறித்து வழக்கு நடைபெற்றுக் கொண்டிருப்பதால் இதைப் பற்றிக் கருத்து ஏதும் தெரிவிக்க முடியாது' என்றும் கூறியுள்ளார். (குறுக்கீடு)

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறுக்கிட வேண்டும் என்று குறுக்கிடவில்லை. பிரபாகரன் அந்த பதிலே சொல்லவில்லை. அவருடைய அரசியல் ஆலோசகர் முதன்முறையாகவும் அந்த பதிலைச் சொல்லவில்லை. மீண்டும் கேள்வி வந்தபோது பிறகு அவர் யோசித்துவிட்டு, 'அதுகுறித்து வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது; அவர்கள் மன்னிப்பும் கேட்டிருக்கிறார்கள்; அந்தக் கருணை மனு பரிசீலனையில் இருக்கிறது; எனவே அதைப் பற்றி இப்போது ஒன்றும் சொல்ல விரும்பவில்லை' என்று ஆன்டன் பாலசிங்கம் சொன்னார்களே தவிர, பிரபாகரன் வாயிலேயிருந்து அந்த வார்த்தை வரவேயில்லை. (குறுக்கீடு) 'துயர சம்பவம்' என்று சொன்னார். (குறுக்கீடு) 'துயர சம்பவம்' என்று சொன்னார். துயர சம்பவம் என்றுகூட அல்ல, அதற்கு துன்பியல் சம்பவம் என்று சொன்னார். —நான் முழுக்கக் கேட்டேன். துன்பியல் சம்பவம்— tragic event என்று வைத்துக் கொள்ளுங்களேன். அது நம்முடைய ஊரில் ஏற்றுக்கொள்ளத்தக்க வார்த்தை அல்ல. 'துன்பியல் சம்பவம்' அதுவும் யோசித்து, 'அது நடந்து 10 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. அது குறித்து இப்போது எதுவும் பேச இயலாது, சொல்ல இயலாது என்று அந்த வார்த்தைதான் சொன்னார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசியது ஈழத்தமிழ்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஆமாம். ஈழத்தமிழ். (குறுக்கீடு) 'சொல்ல இயலாது' என்று அதுதான் சொன்னார், tragedy-.....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** '10 ஆண்டுகளுக்கு முன்பு' என்று பிரபாகரன் சொல்லவில்லையா? (குறுக்கீடு).



2002 ஏப்ரல் 12]

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** 10 ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற சம்பவம்; அதுகுறித்து எதுவும் சொல்ல இயலவில்லை என்று இவர் சொல்லிவிட்டார். வழக்கு நடைபெறுகிறது; 4 பேர் கருணை மனு கொடுத்திருக்கிறார்கள். அந்தக் கருணை மனு கொடுத்திருப்பதன்மீது பரிசீலனையில் இருக்கும்போது நான் எதுவும் அது குறித்து இப்போது சொல்வது சரியல்ல என்று சொன்னது ஆன்டன் பாலசிங்கம், அதுவும் யோசித்து, ரொம்ப நேரத்திற்குப் பிறகு. முதலில் அல்ல; மூன்றாவது கேள்வியோ, நான்காவது கேள்வியோ வந்தபோது.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் பின்வருமாறு திருத்தி வாசிக்கிறேன்.

அந்தப் பேட்டியில் ராஜீவ் காந்தி கொலை குறித்துக் கேட்கப்பட்டபோது, 'அது ஒரு துயரமான சம்பவம்' என்றும் 'அது 10 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த சம்பவம்' என்றும் பிரபாகரன் பதிலளித்தார். மேலும், இதைப் பற்றித் திரும்பத் திரும்பக் கேள்விகள் கேட்கப்பட்டபோது, 'தற்போது அது குறித்து வழக்கு நடைபெற்றுக் கொண்டிருப்பதால், இதைப் பற்றிக் கருத்து எதுவும் தெரிவிக்க முடியாது' என்று அவருடைய அரசியல் ஆலோசகர் ஆன்டன் பாலசிங்கம் கூறியுள்ளார். ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விரிவான விசாரணை நடத்தப்பட்டு, குற்றவாளிகள் L.T.T.E. இயக்கத்தைச் சார்ந்தவர்கள்தான் என்பது சந்தேகத்திற்கு இடமின்றி நீதிமன்றங்களில் நிரூபிக்கப்பட்டது. குற்றவாளிகள் சிலருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. அது இன்னும் நிறைவேற்றப்படாததால் சிறையில் இருந்து வருகின்றார்கள். மேலும், ராஜீவ் காந்தி கொலை வழக்கில், 'அறிவிக்கப்பட்ட முக்கியமான குற்றவாளியாக' 'பிரகடனப்படுத்தப்பட்ட குற்றவாளியாக'—Proclaimed offender-ஆக வி. பிரபாகரன், நிர்ணயிக்கப்பட்ட நீதிமன்றத்தால்— Designated Court-ஆல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் ஸ்ரீலங்கா அரசின் ஒத்துழைப்புடன் பிரபாகரன் இந்தியாவுக்குள் கொண்டு வரப்பட வேண்டும், நீதிமன்றத்தில் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்றும், அதற்கான நடவடிக்கையை இந்திய அரசு, ஸ்ரீலங்கா அரசுடன் தொடர்பு கொண்டு மேற்கொள்ள வேண்டும் என்றும், தேவைப்பட்டால் இந்திய இராணுவத்தையே ஸ்ரீலங்காவிற்கு அனுப்பி பிரபாகரனைக் கைது செய்து இந்தியாவிற்குக் கொண்டு வர ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும், 1991-லேயே நான் அன்றைய பாரதப் பிரதமருக்குக் கடிதம் எழுதினேன். இந்நிலையில், ராஜீவ் காந்தி

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2002 ஏப்ரல் 12

கொலை 10 ஆண்டுகளுக்கு முன் நடந்தது என்றும், ராஜிவ் காந்தி கொலை வழக்கு நடைபெறும் வரை அதுபற்றிக் கருத்துக் கூற முடியாத நிலையில் இருப்பதாகவும் பிரபாகரனின் அரசியல் ஆலோசகர் கூறியுள்ளது கடும் கண்டனத்திற்கு உரியதாகும்.

L.T.T.E. இயக்கத் தலைவர் பிரபாகரன் ஒரு பயங்கரவாத அமைப்பின் தலைவர். இந்தியாவின் 'நிர்ணயிக்கப்பட்ட நீதிமன்றத்தால்' முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தியின் கொலை வழக்கில், 'அறிவிக்கப்பட்ட, பிரகடனப்படுத்தப்பட்ட குற்றவாளியான' பிரபாகரன், ஸ்ரீலங்காவில் சுதந்திரமாகச் செயல்பட்டு வருவதையும், மக்கள் இயக்கத் தலைவர்போல தம்மைச் சித்தரித்துக்கொள்வதையும், நம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது. நியாய உணர்வு படைத்த எந்த இந்தியரும் ஏற்றுக்கொள்ளமாட்டார். ராஜிவ் காந்தி கொலையில் 'அறிவிக்கப்பட்ட குற்றவாளியான' பிரபாகரன், இந்தியாவுக்குக் கொண்டு வரப்பட்டு, நீதி விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும். இந்திய அரசு, ஸ்ரீலங்கா அரசிடம் பிரபாகரனை இந்தியாவுக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள வேண்டும் என வலியுறுத்தி நான் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு, நேற்று, அதாவது 11-4-2002 அன்று மீண்டும் கடிதம் எழுதியுள்ளேன் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11-20

தற்போது அமைதிப் பூங்காவாகத் திகழும் தமிழகத்தில் எக்காரணத்தைக் கொண்டும் தீவிரவாத இயக்கங்கள், குறிப்பாக அந்நிய நாட்டைச் சேர்ந்த L.T.T.E. போன்ற பயங்கரவாத அமைப்புகள் ஒருபோதும் காலூன்ற அனுமதிக்க மாட்டோம்; இந்த அரசு அனுமதிக்காது. L.T.T.E.-ஐ மீண்டும் தமிழ்நாட்டிற்குள் நுழைய அனுமதிக்கக் கூடாது என்பதே எங்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசின் தெளிவான கொள்கையாகும். (மேசையைத் தட்டும் ஒலி) இதன் அடிப்படையில்தான், L.T.T.E. இயக்கத்திற்கும், ஸ்ரீலங்கா அரசுக்கும் இடையில் அமைதிப் பேச்சுவார்த்தைகள் நார்வே நாட்டு தூதுக் குழுவின் முயற்சியில் சென்னையில் நடைபெற வேண்டும் என்று வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டபோது, அதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று இந்தத் தமிழக அரசும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அரசை வலியுறுத்தியதை நான் இங்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே,



2002 ஏப்ரல் 12] [செல்வி ஜெ ஜெயலலிதா]

L.T.T.E. தீவிரவாத இயக்கத்தின் தலைவர் பிரபாகரன், ஸ்ரீலங்கா அரசால் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அவர் நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்பதே இந்தத் தமிழக அரசின் உறுதியான நிலை.

பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த பயங்கரவாத இயக்கங்களின் தீவிரவாத நடவடிக்கைகளையும், ஸ்ரீலங்கா நாட்டைச் சேர்ந்த L.T.T.E. தீவிரவாத இயக்கத்தின் நடவடிக்கைகளையும் வெவ்வேறு அளவுகோல்களைக் கொண்டு மத்திய அரசு அணுகக் கூடாது என்பதே நம் அனைவருடைய எதிர்பார்ப்பும் ஆகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அமைதியை விரும்புகின்ற தமிழக மக்களும், பல்வேறு அரசியல் இயக்கங்களும், இன்னும் சொல்லப் போனால், இந்திய நாட்டு மக்கள் அனைவருமே, இதே கருத்தைத்தான் வலியுறுத்தி வருகின்றார்கள் என்பதை மீண்டும் ஒருமுறை தெளிவுபடுத்திக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் இங்கே தெரிவித்ததைப் போல், விருப்பம் தெரிவித்ததைப் போல், இந்த அரசு இது குறித்து ஒரு தீர்மானத்தையே இந்த அவையில் கொண்டுவரத் தயாராக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, ராஜிவ் காந்தி கொலை வழக்கில், 'பிரகடனப்படுத்தப்பட்ட முதல் குற்றவாளியான' பிரபாகரனை இந்தியாவிற்குக் கொண்டு வந்து, நீதி விசாரணைக்கு உட்படுத்த, மத்திய அரசு இலங்கை அரசுடன் தொடர்பு கொண்டு, அதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். தேவைப்பட்டால், அதற்காக இந்திய இராணுவத்தைக்கூட ஸ்ரீலங்காவிற்கு அனுப்ப வேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை வலியுறுத்துகின்ற ஒரு தீர்மானத்தைத் தயாரித்து, அதன் வரைவைத் தயார் செய்து, மீண்டும் செவ்வாய்க்கிழமை அன்று சட்டப் பேரவை கூடுகின்றபோது, அந்தத் தீர்மானத்தை இந்த அரசு இந்த அவையில் கொண்டு வரும். அதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் ஒத்துழைப்பைத் தந்து ஒருமனதாக அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) என்று கேட்டுக்கொண்டு, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சென்னை, பெசன்ட் நகர், ஸ்டேட் வங்கியில் நடந்த கொள்ளை முயற்சி குறித்து.....

**திரு. கு. ஜெயக்குமார்:** பேரவைத் தலைவர் அவர்களே....

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**திரு. போளூர் வரதன்:** பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்திலே, திருப்பூர் நகரத்திலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. ஹேமச்சந்திரன், என்னுடைய . அறைக்கு வாருங்கள், பேசிக்கொள்ளலாம். சென்னை, பெசன்ட் நகர், ஸ்டேட் வங்கியில் நடந்த கொள்ளை முயற்சி குறித்து (குறுக்கீடுகள்) உட்காருங்கள். என்னுடைய அறைக்கு வாருங்கள். ஆய்வில் இருக்கிறது. எப்போது எடுத்துக்கொள்வது என்று பேசிக்கொள்ளலாம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், என் ஆய்வில் இருக்கிறது. அறைக்கு வாருங்கள், பேசிக்கொள்ளலாம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

சென்னை, பெசன்ட் நகர், ஸ்டேட் வங்கியில் நடந்த கொள்ளை முயற்சி குறித்து ஒத்திவைப்புத் தீர்மானமாக திரு. ஜி. பழனிசாமி, திரு. சி. ஞானசேகரன், திரு. இ. புகழேந்தி, திரு. ஆர். சக்ரபாணி, திரு. எ.வ. வேலு, திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்.. (குறுக்கீடு)

### (ஆ) நீலகிரி மாவட்டத்தில் தேயிலை விலை விழ்ச்சியால் விவசாயிகளும் தொழிலாளர்களும் பாதிப்பு.

***திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்திலே தேயிலை விலை வீழ்ச்சி தொடர்பாக 65000 சிறு விவசாயிகளும், இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களும் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ராஜு உட்காருங்கள். என்னுடைய ஆய்வில் இருக்கிறது. அறைக்கு வாருங்கள். எப்போது எடுத்துக்கொள்வது என்பதை நான் சொல்கிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

***திரு. எச்.எம். ராஜு:** தேயிலை விலை வீழ்ச்சி குறித்து நான் கொடுத்த சிறப்புக் கவன ஈர்ப்பை எடுத்துக்கொள்ளாததற்காக நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

(இந்த நேரத்தில், திருமதி டி. யசோதா அவைக்குள் வந்துகொண்டிருந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யசோதா, சீக்கிரம் வாருங்கள்.



## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### சென்னை, பெசன்ட் நகர், பாரத ஸ்டேட் வங்கியில் நடந்த கொள்ளை முயற்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சென்னை, பெசன்ட் நகர், ஸ்டேட் வங்கியில் நடந்த கொள்ளை முயற்சி குறித்து ஒத்திவைப்புத் தீர்மானமாக திரு. ஜி. பழனிசாமி, திரு. சி. ஞானசேகரன், திரு. இ. புகழேந்தி, திரு. ஆர். சக்ரபாணி, திரு. எ.வ. வேலு, திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன். திரு. ப. ரங்கநாதன், திரு. ஐ. கணேசன், திரு. கோ. இரவிராஜ், திரு. கே. ஆறுமுகம், திரு. பரிதி இளம்வழுதி, திரு. மு. கார்த்தி, திரு. ஜி.கே. மணி ஆகியோரும், சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பாக திரு. ஹேமச்சந்திரன், திரு. டி. மணி, திரு. லா. சந்தானம் ஆகியோரும், கவன ஈர்ப்பு அறிவிப்பாக திரு. கி. பாரிமோகன், திரு. வை. சிவபுண்ணியம், திரு. சோ. இராசேந்திரன், திரு. வே. கிருஷ்ணமூர்த்தி ஆகியோரும் அறிவிப்பினைக் கொடுத்துள்ளார்கள். அதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்ள அனுமதி அளிக்கிறேன். முதலில் அறிவிப்புக் கொடுத்தவர் என்ற முறையில் திரு. ஜி. பழனிசாமி அவர்களை, இதுபற்றிச் சுருக்கமாக முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருமாறு அழைக்கிறேன். திரு. ஜி. பழனிசாமி.

முற்பகல் 11-25

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10-4-2002 காலை 8-1/2 மணியளவில் சென்னையைச் சேர்ந்த பெசன்ட் நகரில் மக்கள் நடமாட்டம் எப்பொழுதும் மிகுதியாக உள்ள இடத்தில், காலையில் 8-1/2 மணியளவில் அந்த பாரத ஸ்டேட் வங்கியினுடைய ஊழியர்கள், அங்கே ஆடிட் நடைபெறுவதால் அந்த வங்கியை முன்கூட்டியே காலை நேரத்திலே திறந்து பணிகளைத் தொடங்குவதற்காகச் சென்றபோது, 4 மர்ம மனிதர்கள் மொப்பெட்டிலே அவர்களோடு பின்தொடர்ந்து சென்று, 2 பேர் வாசலிலே நின்று, 2 பேர் உள்ளே நுழைந்து, வங்கியைத் திறந்தவுடன் அவர்களிடத்திலே வெடிகுண்டுகளையும், கத்தியையும் காண்பித்து, அங்கே இருக்கக்கூடிய பணம், நகைகளுடைய லாக்கரின் சாவிகளைக் கேட்டு, அதனுடைய பணியாளர்கள் 2 பேரைக் கட்டிப்

போட்டுவிட்டு, அங்கே இருக்கக்கூடிய தஸ்தாவேஜுகளையெல்லாம் தேடிப் பார்த்திருக்கிறார்கள். அந்த நேரத்திலே அதனுடைய கேஷியர் திரு. விசுவநாதன் அவர்கள் அலுவலகத்திற்குச் சென்றவுடனே, அவரிடத்திலேதான் சாவி இருக்கிறது என்று சொல்லி, அந்தச் சாவியை அவரிடத்திலே கேட்கிறபோது, அவர், இல்லை என்று மறுத்தவுடன் கத்தியால் குத்தி படுகாயங்கள் பயங்கரமாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. திரும்பவும் லாக்கரைத் திறக்கிறபோது அதனுடைய மணியோசை கேட்டவுடன், அக்கம்பக்கத்திலுள்ள மக்கள் எல்லாம் கூட ஆரம்பித்தவுடன் அந்த இடத்திலேயிருந்து அவர்கள் தப்பிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு தப்பி ஓடியிருக்கிறார்கள். சென்னையிலே பெசன்ட் நகர் என்பது மக்கள் நடமாட்டம் உள்ள ஒரு பகுதி. இன்னும் சொன்னால், வசதி படைத்தவர்கள் வசிக்கக்கூடிய பகுதி. எந்த நேரத்திலும் மக்கள் கூட்டம் இருக்கக்கூடிய இடம். அந்த இடத்தில் இதுபோன்ற ஒரு பயங்கரமான கொள்ளை நடப்பதற்கு வாய்ப்பு உருவாகியிருக்கிறது.

இதுபோன்ற சம்பவங்கள் எப்பொழுது நடக்கும் என்று சொன்னால், இரவு நேரங்களில் கொள்ளைகள் நடக்கும். ஆனால், இன்றைக்குப் பட்டப்பகலிலே காலை நேரத்திலே பயங்கர ஆயுதங்களைக் கொண்டு, வெடிகுண்டைக் கொண்டு, கத்தியைக் கொண்டு, கொள்ளையடிப்பதற்கான தைரியம் தமிழ்நாட்டிலே கொள்ளையரிடத்திலே வந்திருக்கிறது. இன்றைக்குக் காவல் துறைமீது அச்சம் இல்லாத போக்கு தமிழ்நாட்டிலே உருவாகியிருக்கிறது; மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியாதது அல்ல. இன்றைக்கு மக்களிடத்திலே, வங்கியிடத்திலே, பெரிய வசதி படைத்தவர்களிடத்திலே, ஆலை முதலாளிகளிடத்திலே, வர்த்தகர்களிடத்தலேகூட ஒரு பயம் வந்திருக்கிறது. அச்சம் வந்திருக்கிறது. ஏனென்றால், இரவில் நடக்கிற கொள்ளைகளும், கொலைகளும்கூட பட்டப்பகலிலே நடக்கக்கூடிய அளவிற்குத் துணிவு இன்று கொள்ளையர்களிடத்திலே வந்திருக்கிறது என்று சொன்னால்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, காவல் துறை மானியக் கோரிக்கையில் பேசலாம். இந்தச் சம்பவத்தைப் பற்றி மட்டும் பேசுங்கள்.





**திரு. ஜி. பழனிசாமி:** உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இப்படி ஒரு பயங்கரமான கொள்ளை பட்டப்பகலிலே நடந்திருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே பதில் இல்லாவிட்டாலும்கூட, அவர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காக அவருடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். திருப்பூர் ஒரு பெரிய தொழில் நிறைந்த நகரம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, திரு. பழனிசாமி, பெசன்ட் நகருடன் உட்காருங்கள் (குறுக்கீடு) உட்காருங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை, காவல் துறை மானியக் கோரிக்கையிலே இதைப்பற்றியெல்லாம் பேசலாம். மற்ற நேரங்களில் நீங்கள், தீர்மானம் வரும்போது பேசலாம். இதுதான் சந்தர்ப்பம் என்று சொல்லி, பெசன்ட் நகருடன் எல்லாவற்றையும் சேர்த்தால் எப்படி? உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) *(மணியடிக்கப்பெற்றது)* பெசன்ட் நகர் சம்பவம் பற்றிப் பேசுவதற்காக உங்களை அழைத்திருக்கிறேன். அதோடு உட்காருங்கள். *(மணியடிக்கப்பெற்றது)* உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** Point of order. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 56-ன் படி Adjournment Motion-ஐ நாங்கள் உறுப்பினர் என்ற முறையிலே தங்களிடம் கொடுத்து அனுமதி கேட்டிருக்கிறோம். இதிலே.. *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், உட்காருங்கள். சொல்லிவிடுகிறேன். என்ன என்பதைச் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள், சொல்கிறேன். என்ன விளக்கம் என்று சொல்கிறேன்.

முற்பகல் 11-30

**திரு. சி. ஞானசேகரன்:** எங்களுக்கான வாய்ப்பை, உறுப்பினர்களுக்கு இருக்கக்கூடிய உரிமைகளைப் பயன்படுத்துவதற்காவது மாண்புமிரு பேரவைத் தலைவர் அவர்கள் எங்களை அனுமதிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். என்ன விளக்கம் என்று சொல்கிறேன். அதாவது, ஒத்திவைப்புத் தீர்மானமாக, சிறப்புக் கவன ஈர்ப்பாக, கவன ஈர்ப்பாகக் கொடுத்த உறுப்பினர்கள் அத்தனை பேருடைய பெயர்களையும் நான் சொல்லியிருக்கிறேன். அன்றைக்கு சென்னை, தியாகராய நகரிலே நடைபெற்ற ஒரு சம்பவம் குறித்து அவையிலே இதேபோலப் பிரச்சினை வந்தபோது, அந்தத்

தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே திரு. அன்பழகன் அவர்களைப் பேச நான் அழைத்தேன். இந்தப் பிரச்சினையில் இந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் எதுவும் கொடுக்கவில்லை. ஆனால், இதிலே பிரச்சினை என்பதுதான் முக்கியம். அதற்கு அரசு தரக்கூடிய பதில் என்பதுதான் முக்கியம். ஆகவே, இதிலே முதலிலே அறிவிப்பைக் கொடுத்தவர் என்ற முறையில்தான் நான் பழனிசாமி அவர்களைப் பேச அழைத்திருக்கிறேன். (குறுக்கீடு) அந்த வகையில் முதலமைச்சர் அவர்கள் இப்போது பதில் சொல்வார்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. ஒரே சம்பவத்தைப் பற்றித்தான் சொல்லப் போகிறீர்கள். (குறுக்கீடு) அவையினுடைய நேரத்தைக் கருதி, இன்றைக்கு இரண்டு மானியக் கோரிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய சூழ்நிலை; ஆக, நேரத்தைக் கருதித்தான் நான் இந்த ஏற்பாட்டைச் செய்தேனே தவிர, வேறு ஒன்றும் இல்லை. எதிர்காலத்தில் இதுபோன்ற பிரச்சினைகள் வருகிறபோது, இதுதான் முறை என்று நீங்கள் வரையறுத்துச் சொன்னால், அதை அப்படி எடுத்துக்கொள்வதற்கு நான் தயாராக இருக்கிறேன். அதிலே ஒன்றும் இல்லை. (குறுக்கீடு) இல்லை, இல்லை, விதி 56 அல்ல; எல்லா வகையிலும்—சிறப்புக் கவன ஈர்ப்பு, ஒத்திவைப்புத் தீர்மானம் என்று—கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடு) சரி, இப்போது அனுமதிக்கிறேன், சொல்லுங்கள் (குறுக்கீடு) பெசன்ட் நகர் சம்பவம் பற்றி ஒரு கட்சிக்கு ஒருவர் சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. ஹேமச்சந்திரன் சொல்லுங்கள். (குறுக்கீடு) சொல்லிவிடட்டும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இது பெசன்ட் நகரில் நடந்த கொள்ளை என்று இருந்தாலும்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்காகத்தான் நான் அனுமதிப்பதில்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். அவர் பெசன்ட் நகர் கொள்ளையோடு திருப்பூரையும் சேர்த்துச் சொல்கிறேன் என்கிறார். சரியாக வராது அதெல்லாம். (குறுக்கீடு) உட்காருங்கள், ஹேமச்சந்திரன் (குறுக்கீடு).

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பிரச்சினை என்ன என்றால், இன்று சென்னை நகரில் தினசரி பத்திரிகைச் செய்திகளைப் பார்த்தால்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பெசன்ட் நகர் சம்பவம் பற்றி இப்போது அவையில் எடுத்துக்கொள்ளப்படுகிறது. முதலமைச்சர் பதில் சொல்ல இருக்கிறார். (குறுக்கீடு) இதிலே எல்லாவற்றையும் சேர்த்துச் சொன்னால் எப்படி? (குறுக்கீடு) முடியாது, முடியாது, உட்காருங்கள்.



உட்காருங்கள். (குறுக்கீடு) காவல் துறை மானியக் கோரிக்கை வருகிறபோது இதைப்பற்றி நீங்கள் பேசலாம். (குறுக்கீடு) காவல் துறை மானியக் கோரிக்கை வருகிறபோது நீங்கள் பேசலாம் அல்லது உங்களுடைய தீர்மானம் வருகிறபோது பேசலாம்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** காவல் துறை மானியக் கோரிக்கையில் நீங்கள் 5 நிமிடம் அல்லது 10 நிமிடம் தந்தால் இந்த விஷயத்தை எல்லாம் பேசிக் கொண்டிருக்க முடியாது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே பேச முடியாது. (குறுக்கீடு) ஒத்திவைப்புத் தீர்மானம் வழியாக ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருப்பதைப் பற்றி மட்டும்தான் பேச முடியும். எல்லாவற்றையும் பேச முடியாது. (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) சரி, உட்காருங்கள். புகழேந்தி, சொல்லுங்கள். ஒரு கட்சிக்கு ஒருவர் வீதம் இந்த பெசன்ட் நகர் சம்பவம் பற்றிச் சொல்வதற்கு நான் அழைக்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** திருப்பூர் சம்பவம் பற்றிப் பேச வேண்டும். ஏற்கெனவே நடந்த கொலையிலே எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பேச அனுமதிக்காததால், நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

*(மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.) (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள் (குறுக்கீடு) திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 10-4-2002 அன்று காலை 8-30 மணிக்கு, பணிகளைத் தொடங்க இருந்த பெசன்ட் நகர் வேளாங்கன்னி ஆலயத்திற்கு அருகே அமைந்துள்ள பாரத ஸ்டேட் வங்கியில் பணியாற்றிக் கொண்டிருக்கிற ஊழியர்கள் வருகை தருகிற நேரத்தில், காலை 8-20 மணியளவில் 2 பேர், வாட்ச்மேனாக இருக்கின்ற முருகேசன் என்பவரைத் தாக்கியும், பிறகு உள்ளே வந்த உதவி மேலாளர் விசுவநாதன் அவர்களையும், ஆடிட்டர் மோகன் அவர்களையும் மிரட்டுதல் மூலமாக, அச்சுறுத்தல் மூலமாக, மோகன் அவர்களின்மீது பெட்ரோலையும் ஊற்றி, சாவியைப் பிடுங்கச் செல்கிற நேரத்தில், உதவி மேலாளராக இருந்த விசுவநாதன் அவர்கள் குரல் கொடுத்ததன் காரணமாக, வந்திருந்த ஐவரில் ஒருவர், கையில் வைத்திருந்த பட்டாக்கத்தியின் மூலமாக அவருடைய முதுகில்

[திரு. இ. புகழேந்தி] [2002 ஏப்ரல் 12

குத்தி, ரத்த வெள்ளத்திலே அவரைச் சாய்த்துவிட்டு, அதற்குப் பிறகு அவர்கள் கொள்ளையடிக்க முனைகின்றபோது, ஆடிட்டர் மோகனும் வருகிறார். அவருடைய கழுத்திலும் குத்தப்படுகிறது. அதற்குப் பிறகு அண்ணாமலை என்பவருடைய கழுத்திலே அணிந்திருந்த நகை-செயினும் பறிக்கப்பட்டு, இன்னொருவர் கோபால் ரத்தினம் என்பவருடைய பாக்கெட்டில் இருந்த 900 ரூபாயும் பறிக்கப்பட்டு, அதற்குப் பிறகு கொள்ளையடிக்க முடியாமல், வெளியே ஓடுகிறார்கள்.

அப்படி ஓடுகின்ற நேரத்திலே—ஒன்றை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்— ஒரு பைப் வடிவிலே இருக்கின்ற வெடிகுண்டை வீசிவிட்டுப் போகிறார்கள். காலை 8-20 மணிக்குத் தொடங்குகிற இந்தச் சம்பவம், 8-30-க்கு முடிகிறது. 40 நிமிட நேரம் விசுவநாதன் ரத்த வெள்ளத்திலே துடித்துக் கொண்டிருக்கிறார். 40 நிமிடங்களுக்குப் பிறகுதான், அவர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்படுகிற நிலை அங்கே ஏற்படுகிறது. வெடிகுண்டை வீசிவிட்டுப் போகிறார்கள். ஆகவே, பைப் வெடிகுண்டு மிகச் சாதாரணமாக இந்தக் கொள்ளையர்களால் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. சென்னையிலே நடைபெறுகின்ற, தொடர்ந்து நடைபெறுகின்ற கொள்ளைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்காமல், 'கமா' வைக்கின்ற காரணத்தினால், அச்சம் ஏற்பட்டு, பாதுகாப்பு இல்லாத நிலையை மக்கள் உணருகிறார்கள்; பயப்படுகிறார்கள். சட்டம்-ஒழுங்கு பாதிக்கப்படுகிறது. ஆகவேதான், அரசின் கவனத்திற்கு இதை நாங்கள் கொண்டு வருகிறபோது— கொள்ளையும் அடிக்கிறார்கள்; கொலையும் செய்கிறார்கள்; வெடிகுண்டையும் வீசியிருக்கிறார்கள். ஆக, அப்படியெல்லாம் இருக்கிறபோது—காவல் துறை உடனடியாக அதிலே நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய சூழ்நிலை இருந்தாலும், **ஆகவேதான், இதை நாங்கள் உங்கள் மூலமாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறோம் ** என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (குறுக்கீடுகள்)

முற்பகல் 11-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புகழேந்தி சொன்ன கடைசி வாக்கியங்கள் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகின்றன. திரு. ஞானசேகரன்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



2002 ஏப்ரல் 12]

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு சம்பவம் பற்றி விளக்கம் சொல்வதற்கு அழைத்தால், கடைசியாக **என்றெல்லாம் சொல்வது முறையல்ல. சம்பவத்தைப் பற்றித்தான் விளக்கம் சொல்வதற்கு அவரை அழைத்தேன். திரு. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே... (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், என்ன? சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொல்கிற கருத்து, அவையிலே சொல்லக்கூடாத சொற்களைச் சொன்னாலோ அல்லது தேவையற்ற...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. பொத்தாம்பொதுவிலே சொல்லப்படக்கூடிய குற்றச்சாட்டு என்பதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? ஒரு குறிப்பிட்ட சம்பவம் பற்றி விளக்கம் சொல்வதற்காக, கவன ஈர்ப்பாகவோ, ஒத்திவைப்புத் தீர்மானமாகவோ கொண்டு வருவதற்காக என்று சொல்லி அழைக்கப்படுகிறார். அழைக்கப்படக்கூடிய நண்பர், அந்தச் சம்பவத்தைப் பற்றி விளக்கம் சொல்ல வேண்டுமே தவிர, இதுதான் வாய்ப்பு என்று ** சொல்வது, முறையற்றது. அந்தப் பகுதி அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்படுகிறது. மற்றபடி அவர் சொன்ன அத்தனையும் அவைக் குறிப்பிலே ஏறும். (குறுக்கீடுகள்)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** ஒரு கருத்தைச் சொல்கிறபோது... (குறுக்கீடுகள்) நீங்கள் ஒரு கருத்தைச் சொல்கிறபோது, இப்படிப்பட்ட தொடர்

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

[திரு. துரைமுருகன்] [2002 ஏப்ரல் 12

கொள்ளைகள், கொலைகள் நடக்கிற காரணத்தினால், ** என்று சொல்வதற்கு, ஓர் எதிர்க் கட்சியிலே இருக்கிற உறுப்பினருக்கு உரிமை இல்லையா என்பதை மட்டும் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்பது ஒரு பொதுவான நிலைமை. இது ஒரு குறிப்பிட்ட சம்பவம். தி.மு.க. ஆட்சியிலும் நடந்தது; அதற்கு முன்னாலேயும் நடந்தது. கொலை, கொள்ளை என்பது, எல்லாக் காலத்திலும் நடப்பது. ஆகவே, நடக்கக்கூடிய சம்பவத்தைச் சொல்ல வேண்டுமே தவிர, இதுபற்றி அரசாங்கத்தின்மீது ஒட்டுமொத்தமாகக் குற்றச்சாட்டுச் சொல்வது சரியல்ல. இதைக் காவல் துறை மானியக் கோரிக்கை வரும்போது பேசுங்கள்; முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்வார்கள். இதுதான் வாய்ப்பு என்று, கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவது முறையல்ல. அதே நிலையைத்தான் நம்முடைய ஹேமச்சந்திரன் அவர்களும் மேற்கொண்டார்கள். அவர்கள் சொன்ன அந்தத் தீர்மானத்தை எடுத்துக்கொள்வது இன்னொரு நாளில். அதுதான் பிரச்சினை. திரு. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடு)

***மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, தாங்கள் சொல்லியதைப்போல, கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் என்ன நிகழ்வு என்பதை விளக்குவதற்கு நீங்கள் வாய்ப்பு அளித்தீர்கள். ஆனால், மாண்புமிகு முதல்வர் பதில் சொல்வதற்கு முன்பாக, அவர் ஒரு கருத்தை வைத்துக் கொண்டு, அதை வலியுறுத்துவது சரியல்ல. அதற்கு விளக்கம் கொடுத்ததற்குப் பிறகு வேண்டுமென்றால், அவர் துணைக் கேள்வி கேட்பதற்கு உரிமை உண்டு. (குறுக்கீடு) ஆனால் அதற்குள்ளாக, அவர் இதுதான் கருத்து என்று சொல்லி, அரசு ஏதோ தன்னுடைய கடமையிலே இருந்து தவறிவிட்டது என்பது போன்ற ஒரு கருத்தைச் சொல்வது, கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆகவேதான் அவர் சொன்ன சில பதங்கள் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்பட்டு விட்டன. திரு. ஞானசேகரன்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



2002 ஏப்ரல் 12]

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெசன்ட் நகரில், State Bank of India-வில் விசுவநாதன் என்கிற அந்த மேனேஜர் கொல்லப்பட்ட வழக்கின், facts of the case-க்குள்ளே நான் செல்ல விரும்பவில்லை. காரணம், ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் பழனிசாமி அவர்கள் விளக்கமாகச் சொல்லிவிட்டார்கள். ஆனால், என்னென்ன நடவடிக்கைகளை எடுத்து, இதுபோன்று பட்டப்பகலில் நடக்கக்கூடிய இந்தக் கொடூரமான கொலைகளை அரசு தடுக்க வேண்டும் என்பதற்கான சில கருத்துகளை மட்டும் நான் சொல்ல வுருகிறேன். குறிப்பாக, சென்னை நகரில், பட்டப்பகலில், ஏற்கெனவே securities எல்லாம் இருக்கக்கூடிய நம்முடைய தமிழகத்தினுடைய தலைநகராம் சென்னையிலேயே, அதுவும் சட்டமன்றம் கூடுகிறபோது, இப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்படுவது என்பது, உண்மையிலேயே—இந்தச் சம்பவம்—தமிழக அரசுக்கு ஒரு சவால் என்றுதான் நான் இந்த நேரத்திலே சொல்ல விரும்புகிறேன். இதை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் வேரறுக்க வேண்டும். எப்படித் தீவிரவாதத்தை வேரறுக்க வேண்டும் என்பதிலே உறுதியாக, அதாவது இப்போதுகூட, ராஜீவ் காந்தி கொலை வழக்கு பற்றிய பிரச்சினை வந்தபோது அவர்கள் மிகத் தெளிவாகச் சொன்னார்கள். இவர்கள் இப்படி உறுதியாகச் செயல்படுகிறபோது, தமிழகத்தில் இருக்கக்கூடிய காவல் துறையினுடைய உளவுத் துறையின் மூலம்—எங்கெங்கெல்லாம் சென்னையிலே இதுபோன்ற கொள்ளைக் கூட்டமும், கொலைகாரக் கும்பலும், கட்டப் பஞ்சாயத்து ஆட்களும் இருக்கிறார்கள் என்பதை உளவுத் துறையின் மூலமாக—இவர்கள் முதலிலே ஓர் ஆய்வினைச் செய்து கண்டுபிடித்து, அவர்களை வேரறுத்தால் இதுபோன்று பட்டப்பகலில் நடக்கக்கூடிய கொலைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளியை நிச்சயமாக வைக்க முடியும். 'இந்து' பேப்பரிலே இன்றுகூட இந்தக் கொலைச் சம்பவத்தைப்பற்றி ஒரு செய்தி வந்திருக்கிறது. யாருமே இது குறித்துப் போலீஸுக்குத் தகவல் கொடுப்பதற்குக்கூடப் பயப்படுகிறார்கள் என்று சொன்னால், --since they have no confidence even on the police-- இந்தப் போலீஸுக்குத் தகவல் கொடுத்தால்கூட, இந்தப் போலீஸே நம்மைக் காட்டிக் கொடுத்துவிடுவார்களேயொழிய, நமக்குப் பாதுகாப்பாக இருக்க மாட்டார்கள் என்பதற்காகத்தான், அவர்கள் தடயத்தைச் சொல்வதற்குக்கூட மறுக்கிறார்கள் என்று 'இந்து'-விலே இன்று எழுதி இருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால், உடனே என்ன பண்ணுகிறார்கள் என்றால் 'ஒரு இலட்சம் ரூபாய்' என்று அறிவிப்புக் கொடுக்கிறார்கள்.

[2002 ஏப்ரல் 12

முற்பகல் 11-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாகச் சொல்லுங்கள். இன்னும் 2, 3 தலைவர்கள் பேச வேண்டியிருக்கிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** குற்றவாளிகளைக் குறித்து யாராவது தடயம் தந்தால் அல்லது தகவல் தந்தால், அவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் கொடுக்கப்படும் என்று நம்முடைய மாநகரக் காவல் துறையினுடைய ஆணையர் மறுநாளே ஓர் அறிவிப்புக் கொடுக்கிறார் 'ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்படும்' என்று. ஸ்காட்லாந்து யார்டுக்கு இணையான ஒரு போலீஸை வைத்துக் கொண்டு, இவர்கள் சென்னையிலே தலைநகரில் நடந்த இந்தக் கொலைக் குற்றத்தைக் கண்டுபிடிக்க முடியாமல், 'யாராவது தகவல் கொடுத்தால், அவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் கொடுப்போம்' என்று சொல்கிற அறிவிப்பு. இது காவல் துறையால் செய்ய முடியாத ஒரு காரியம்; அவர்கள் கைவிட்டுவிட்டார்கள்; யாரோ தகவல் கொடுத்தால்தான் இவர்கள் பிடிப்பார்கள் என்ற ஒரு நிலையை உருவாக்கிவிடும். ஆகவே, காவல் துறை இப்படிப்பட்ட அறிவிப்புகளை உடனுக்குடன் கொடுத்து இப்படி இவர்கள் தடம் புரண்டு போவதைவிட, காவல் துறை இரும்புக்கரம் கொண்டு இவர்களையெல்லாம் அடக்குவதற்கு, கொலைக் கும்பல், கொள்ளைக்காரக் கும்பல் எங்கெல்லாம் செயல்படுகின்றன என்பதை உளவுத் துறை மூலமாகவாவது கண்டுபிடித்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்; உடனடியாக இப்படிப்பட்ட heinous crime-ஐச் செய்து இருக்கக்கூடிய அந்தக் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து அவர்களைச் சிறையிலே தள்ளுவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக வற்புறுத்தி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி (குறுக்கீடு) திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரிலே மக்கள் நெருக்கம் உள்ள பெசன்ட் நகரிலே State Bank of India-வில்--கிட்டத்தட்ட 19 ஊழியர்கள் பணியாற்றக்கூடிய அந்த பேங்கிலே--காலை 8-15 மணிக்கு முருகேசன் என்ற காவலாளியும் மற்றும் ஒரு சில பேங்க் ஊழியர்களும், ஆடிட்டர்களும் உள்ளே செல்ல, 2 மோட்டார் சைக்கிள்களிலே வந்த 4 கொள்ளையர்கள்--பேங்கிலே 2 பேரும், வெளியே 2 பேரும்



2002 ஏப்ரல் 12] [திரு. ஐ. கணேசன்]

நின்றுகொண்டு--அந்த பேங்க் ஊழியர்களை லாக்கரைத் திறக்கச் சொல்லி பல்வேறு சித்திரவதைகளைச் செய்து, அவர்களிலே ஒரு சிலரைக் கட்டிப் போட்டுவிட்டு, ஒரு சிலரை பெஞ்சுக்கு அடியிலே போட்டு அழுத்திவிட்டு, அந்தக் கொள்ளையர்கள் எவ்வளவு முயற்சி எடுத்தபோதிலும், ஆடிட்டராக இருந்த மோகனுடைய கழுத்திலே வெடிகுண்டை வைத்துக் கட்டிய அந்த நேரத்திலே கூட, அந்த உண்மை ஊழியர் லாக்கரினுடைய சாவியைக் கொடுக்கவோ, அது யாரிடத்திலே இருக்கிறது என்று சொல்லவோ இல்லை. துளியும் அஞ்சாமல் எவ்வளவு வேதனைகள் பட்டபோதிலும், விலா எலும்பிலே கத்தியால் வெட்டப்பட்டபோதும் கூட அந்த ஊழியர் உண்மையாகப் பணியாற்றினார். அதேபோல உதவி மேனேஜர் அவர்கள், உள்ளே என்ன நடக்கிறது என்பதை அறியாமல், விசுவநாதன் அவர்கள் உள்ளே சென்றபோதுகூட, உள்ள நிலைமையைப் புரியாமல், பாதிக் கதவு திறந்து இருக்கக்கூடிய அந்த வாசல் வழியாக உள்ளே நுழைந்து பார்க்கும்போது, 4 கொள்ளையர்களும் அவரைப் பிடித்து சித்திரவதைக்கு ஆளாக்கினார்கள். அந்தச் சித்திரவதையை எல்லாம் தாங்கிக்கொண்டு, அவரை மிரட்டி, உருட்டி, கத்தியால் குத்தியபோதுகூட தன்னுடைய கடமையை நிறைவேற்ற, அபாய ஒலியை ஆன் செய்து, மக்களுக்கு, வெளியே இருப்பவர்களுக்கு ஓர் அறிவிப்பைக் கொடுத்தார்; அவர் கடமையிலே தவறாதவர். அந்த விசுவநாதன் பல்வேறு இடங்களிலே கத்தியால் குத்தப்பட்டு, குற்றுயிரும், கொலையுயிருமாக இருக்கும் நேரத்திலேகூட, அவரிடத்திலே சாவியைப் பெற முடியவில்லை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கணேசன், சுருக்கமாகச் சொல்லுங்கள். எங்களையே பயமுறுத்துகிற மாதிரி இருக்கிறது. (சிரிப்பு) சுருக்கமாகச் சொல்லுங்கள்.

முற்பகல் 11-45

**திரு. ஐ. கணேசன்:** ஒரு நிமிடத்திலே முடித்து விடுகிறேன். எவ்வளவோ சித்திரவதைக்கு நடுவிலே உண்மையாகப் பாடுபட்ட அந்த ஊழியர் துடிதுடித்து இறந்திருக்கிறார். இறந்த ஊழியருக்கு, நியாயமாக நம்முடைய அரசு, மரியாதை செலுத்துவதோடு, அவருடைய மனைவிக்கும், அவருடைய குடும்பத்தாருக்கும் அனுதாபத்தைச் சொல்வதைவிட, நம்மால் முடிந்த உதவிகளை அந்தக் குடும்பத்தாருக்குச் செய்ய வேண்டும். அப்போதுதான் நேர்மையாகப் பணியாற்றக்கூடிய ஊழியர்களுக்குத் தமிழக அரசு பாதுகாப்போடு

விளங்குகிறது என்பதை நாட்டு மக்கள் புரிந்துகொள்வார்கள் என்பதைத் தெள்ளத் தெளிவாகச் சொல்லிக்கொள்கிறேன். இதுபோல அநியாயமாக சென்னை நகரிலும், மற்றப் பகுதிகளிலும் நடக்கக்கூடிய கொள்ளைகளை இந்த அரசு இரும்புக்கரம் கொண்டு அடக்க வேண்டும் என்று எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக வேண்டி, விரும்பிக் கேட்டு, இந்த அவையினுடைய கவனத்தை உங்கள் மூலமாக ஈர்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம், சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு முன்தினம் மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள, குடியிருப்புகள் நிறைந்த பகுதியாகிய பெசன்ட் நகர் பகுதியிலேயிருக்கிற பாரத ஸ்டேட் வங்கியிலே கொள்ளையர்கள் நுழைந்து, அதிலே பொறுப்பு வகித்திருக்கின்ற விசுவநாதன் என்கின்ற துணை மேலாளரைக் கொலை செய்து, அந்த வங்கியிலே கொள்ளை அடிப்பதற்கு முயற்சி மேற்கொண்டிருக்கின்றனர். ஆனால் அதிர்ஷ்டவசமாக, அவர்களுக்கு ஒரு சாவிதான் கிடைத்தது என்கிற நிலையில் அந்த பேங்கிலே வைக்கப்பட்டிருந்த மக்களுடைய பொருட்கள் எல்லாம் கொள்ளையடிக்கப்படாது தடுக்கப்பட்டு இருக்கிறது என்கின்ற சூழ்நிலையில், இப்படிப்பட்ட துயரமான சம்பவங்கள் மக்களுக்கு ஒரு பீதியை ஏற்படுத்துகின்ற நிலையை உருவாக்கி இருக்கிறது என்கின்ற நிலையில், இந்த அரசு அப்படிப்பட்ட நிலைகளை இரும்புக்கரம் கொண்டு காவல் துறையின் மூலமாக அடக்குவதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள். (குறுக்கிடு)

**திரு. போளூர் வரதன்:** பேரவைத் தலைவரவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்னை, பெசன்ட் நகர், 16--வது குறுக்குத் தெருவில் பாரத ஸ்டேட் வங்கியின் பெசன்ட் நகர் கிளை இயங்கி வருகிறது. 10-4-2002 அன்று காலை, அதன் துணை மேலாளர்





திரு. மோகன், ஸ்பெஷல் அசிஸ்டென்ட் திரு. கோபால் ரத்தினம் மற்றும் அட்டெண்டர் திரு. அண்ணாமலை ஆகியோர் வங்கியைத் திறந்து உள்ளே அலுவலில் இருந்தனர். வங்கிக் காவலாளி திரு. முருகேசன், வங்கி நுழைவு வாயிலில் பணியில் இருந்தார். வங்கி தணிக்கைக் குழுவினர் மூன்று பேரும் வங்கியினுள் இருந்தனர். அப்போது சுமார் 8-30 மணியளவில், அடையாளம் தெரியாத 5 நபர்கள் கத்தியுடன் வங்கியினுள் நுழைந்து நுழைவு வாயிலில் நின்று கொண்டிருந்த காவலாளி திரு. முருகேசனை, கத்தியைக் காட்டி மிரட்டி, அவருடைய கைகளைப் பின்னால் கட்டி, மேலாளர் அறை அருகே கீழே தலைக்குப்புறப் படுக்க வைத்தனர். மேலும், வங்கியிலிருந்த திரு. கோபால் ரத்தினம், திரு. அண்ணாமலை மற்றும் வங்கி தணிக்கைக் குழுவினர் மூவரையும் கத்தியைக் காட்டி, 'சத்தம் போட்டால் குண்டு வெடிக்கும்' என்று மிரட்டி கீழே படுக்க வைத்தனர். துணை மேலாளர் திரு. மோகனிடம் கத்தி முனையில் வங்கி லாக்கர் சாவியைக் கேட்க, அவர் தன்னிடம் இல்லையென்று மறுத்துள்ளார். ஆனாலும், கொள்ளையர்கள், அவர் அருகிலிருந்த சிறிய லாக்கரைத் திறந்து பார்த்து, அதிலிருந்து வங்கி லாக்கர் சாவியை எடுத்துக்கொண்டு மோகனைக் கத்தியால் கழுத்தில் குத்தி, குப்புற கீழே படுக்க வைத்தனர். அப்போது Cash officer திரு. விசுவநாதன் வங்கியினுள் வந்தார். கொள்ளையர் உடனே அவரையும் கத்தியால் மிரட்டி, இன்னொரு லாக்கர் சாவியைப் பிடுங்க முற்படும்போது அவர் சத்தம் போட, அவரைக் கத்தியால் இடுப்புக்கு மேலே ஓங்கிக் குத்தியுள்ளனர். உடனே அவர் கீழே மயங்கி விழுந்துவிட்டார். அவரையும், மற்றவர்களைப் படுக்க வைத்திருந்த இடத்தில் படுக்க வைத்தனர். பின்னர் திரு. விசுவநாதனிடம் இருந்த சாவியையும் எடுத்துக்கொண்டு, இரண்டு சாவிகளையும் திரு. மோகனிடம் கொடுத்து வங்கி லாக்கர் உள்ள இடத்திற்குச் சென்று, திரு. மோகனை லாக்கரைத் திறக்கும்படிக் கூறினர். திரு. மோகன் இரண்டு சாவிகளையும் வாங்கிக் கொண்டு, வங்கி லாக்கரைத் திறக்க முயன்றபோது, திடீரென்று அபாய மணி அடிக்க, அந்தச் சத்தத்தைக் கேட்டு, கொள்ளையர் பயந்து வெளியே ஓடி வந்து மோட்டார் சைக்கிள்களில் ஏறி, தப்பி ஓடிவிட்டார்கள். அவ்வாறு வெளியே வரும்போது, 'சத்தம் போட்டால் குண்டு வெடிக்கும்' என்று பயமுறுத்தி, சுமார் அரையடி நீளமுள்ள ஒரு பைப் வெடிகுண்டை திரு. மோகனின் சட்டைப் பையில் போட்டும், பெட்ரோல் பிளாஸ்டிக் பாட்டில் ஒன்றை வங்கியினுள் வைத்தும் சென்றுள்ளனர். மேலும், இவர்கள் வங்கியினுள்

நுழைந்தவுடன், இரண்டு டெலிபோன் ஒயர்களையும் துண்டித்து விட்டனர். அப்போது வங்கிப் பணிக்கு வந்த Senior Assistant லீலா ரமணி என்பவர், ரத்த வெள்ளத்திலிருந்த திரு. விசுவநாதன் மற்றும் திரு. மோகன் ஆகியோர்களைப் பார்த்துவிட்டு, அங்கிருந்து ஜே-5 சாஸ்திரி நகர் காவல் நிலையத்திற்கு ஓடி வந்து தகவல் தெரிவித்துள்ளார். காவல் துறையினர் உடனடியாக சம்பவ இடத்திற்குச் சென்று, திரு. விசுவநாதனையும், திரு. மோகனையும் அருகிலிருந்த தனியார் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததில், அங்கு அவர்களை மருத்துவர் பார்த்தபோது, திரு. விசுவநாதன் இறந்துள்ளதாகக் கூறியுள்ளார். திரு. மோகனுக்குத் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 11-50

காவல் துறையினர் சம்பவ இடத்தைப் பார்த்துவிட்டு விசாரணை செய்ததில், கொள்ளையர்கள் மோட்டார் சைக்கிள்களில் வந்துள்ளனர் என்றும், அப்பொழுதுதான் வங்கி திறக்கப்பட்டதால், காவலாளி முருகேசன் தனது துப்பாக்கியை எடுத்துக் கொண்டு தயாரான நிலையில் இல்லாததால், கொள்ளையர்களை எதிர்கொள்ள முடியவில்லை என்றும், பணப்பெட்டியைத் திறக்கும்போது அபாய மணி அடித்ததால் கொள்ளை முயற்சி தோல்வி அடைந்து தப்பி ஓடிவிட்டனர் என்றும் தெரிய வருகிறது. பணம் எதுவும் திருடு போகவில்லை. சம்பவ இடத்திற்கு போலீஸ் மோப்ப நாய்கள் வரவழைக்கப்பட்டன. தடயவியல் மற்றும் விஞ்ஞான நிபுணர்களும் வரவழைக்கப்பட்டனர். இவர்கள் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு தடயங்களைச் சேகரித்துள்ளனர்.

ஏற்கெனவே வங்கிகளின் பாதுகாப்பு ஏற்பாடுகளின் அவசியத்தைப் பற்றி பல முறை அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. 19-2-2002 அன்று சென்னை மாநகரம், பூக்கடை மாவட்டத் துணை ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெற்ற பூக்கடை மாவட்ட உதவி ஆணையாளர்களின் கூட்டத்தில், வங்கிகளின் பாதுகாப்பு ஏற்பாடுகளின் அவசியத்தைப் பற்றியும், வங்கி அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் வலியுறுத்தப்பட்டது. இதில் சென்னை மாநகர வடக்கு சரக இணை ஆணையாளர், அனைத்து வங்கி அதிகாரிகளையும் தொடர்பு கொண்டு, வங்கிகளின் பாதுகாப்பு ஏற்பாடுகளின் அவசியத்தை வலியுறுத்த வேண்டுமென்று அறிவுரை வழங்கியுள்ளார். 11-3-2002 அன்று சென்னை மாநகரக் காவல் துறை





ஆணையர், அனைத்து இணை ஆணையாளர்களுக்கும், தங்கள் சரகத்தில் உள்ள அனைத்து வங்கி மேலாளர்களின் கூட்டத்தைக் கூட்டி, அவர்களுக்கு வங்கிகளின் பாதுகாப்பு ஏற்பாடுகளின் அவசியத்தை எடுத்துக் கூறும்படி அறிவுரை வழங்கியுள்ளார். அதில் ஒவ்வொரு வங்கியிலும் துப்பாக்கி ஏந்திய பாதுகாப்புக் காவலாளியை நியமிக்க வேண்டியது அவசியம் என்றும், அவர்கள் ஒரு shift--க்கு இருவர் வீதம் இரண்டு shift-களாகப் பணிபுரிய வேண்டும் என்றும், அவர்களுக்குத் துப்பாக்கி சுடும் பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என்றும், அனைத்து வங்கிகளிலும் நுழைவு வாயில் மற்றும் வாகனம் நிறுத்துமிடம் ஆகியவற்றிலும், தேவைப்பட்டால் ஒவ்வொரு counter அருகிலும் closed circuit cameras அமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும், இது தொடர்பாக வங்கி அதிகாரிகள் மற்றும் Security Guard-களுக்கு இரண்டு பிரிவுகளாக விழிப்புணர்வு வகுப்புகள் நடத்தப்பட வேண்டும் என்றும் அறிவுரை வழங்கப்பட்டது.

இந்தத் துயர சம்பவத்தைப் பொறுத்தவரை, வங்கிக் காவலாளி முருகேசன் சற்று முன்னெச்சரிக்கையாகச் செயல்பட்டிருந்தால் இந்தச் சம்பவத்தையே தவிர்த்திருக்கலாம், கொள்ளையர்களையும் பிடித்திருக்கலாம். ஏனென்றால், இவர் கண்டிப்பாகச் செய்திருக்க வேண்டியது, முதலாவதாக வங்கிக்குள் சென்று அவரது துப்பாக்கியை எடுத்துக் கொண்டு வந்து, வெளியில் அமர்ந்து காவல் புரிந்திருக்க வேண்டும். அவர் வங்கிக்குள் செல்லும்போது வங்கியின் collapsible gate-மடிக்கக்கூடிய வாயில் கதவை அடைத்துவிட்டு அல்லது பூட்டிவிட்டுச் சென்றிருக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தால், கொள்ளையர்கள் பலாத்காரமாக உள்ளே நுழைந்திருக்க முடியாது. அப்படிக் கொள்ளையர்கள் வங்கிக்குள் நுழைய முயற்சி செய்தபோது, அதைத் தடுக்க காவலாளியிடம் துப்பாக்கியாவது இருந்திருக்கும். காவலாளி செய்த சிறிய தவறு ஒரு பெரிய சம்பவத்திற்குக் காரணமாக அமைந்துவிட்டது.

கொள்ளையர்களைத் தைரியமாக எதிர்கொண்டு மரணமடைந்த திரு. விசுவநாதன் அவர்களுடைய குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சம்பவத்தில் காயம் அடைந்த திரு. மோகன் அவர்களுக்கு எல்லா மருத்துவ வசதிகளும் அளிக்கும்படி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருக்கு அறிவுறுத்தி உள்ளேன்.

இந்தக் கொலை மற்றும் கொள்ளை முயற்சி தொடர்பாக ஜே-5 சாஸ்திரி நகர் காவல் நிலையத்தில் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. மூத்த காவல் துறை அதிகாரிகள் சம்பவ இடத்தைப் பார்வையிட்டனர். இந்த வழக்கைத் துரிதமாகக் கண்டுபிடிக்க, மைலாப்பூர் மாவட்டத் துணை ஆணையாளர் தலைமையில் 5 தனிப் படைகள் அமைக்கப்பட்டு, தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுபோன்ற சம்பவங்கள் இனிமேல் நிகழாமல் இருக்க, சென்னை மாநகரக் காவல் துறையினர் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளேன்.

முற்பகல் 11-55

சென்னை மற்றும் சுற்றுப்புறங்களில் தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுவரை 25 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர்.

குற்றவாளிக் கூட்டத்தினர், வெளி மாநிலங்கள் மற்றும் வெளி மாவட்டங்களைச் சேர்ந்த குற்றவாளிக் கூட்டத்தினர், தீவிரவாத மற்றும் பயங்கரவாத அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் ஆகியோரைப் பற்றியும் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது குறித்து 'Q' Branch போலீசாரும் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

சம்பவத்தையும், கொள்ளையர்களையும் நேரில் பார்த்த நபர்கள் கூறிய அங்க அடையாளங்களை வைத்து, கம்ப்யூட்டர் மூலம் கொள்ளையர்களின் உருவப் படம் வரையப்பட்டு, அதன் மூலம் கொள்ளையர்களை அடையாளம் காண அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சம்பவ இடத்தில் 5 கைவிரல் ரேகைப் பதிவுகள் கிடைத்துள்ளன. இவை கைரேகைப் பதிவுக் கூடத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. கடலூர், ஒசூர், பெங்களூர் மற்றும் பாண்டிச்சேரி ஆகிய இடங்களுக்குத் தனிப் படையினர் அனுப்பப்பட்டுள்ளனர். இவர்கள், இம்மாதிரியான கொள்ளைகளில் ஈடுபடும் கொள்ளைக் கூட்டத்தினரை அடையாளம் கண்டு விசாரணை நடத்துவர்.

இதுவரை 25 சந்தேகக் குற்றவாளிகள் பிடிக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர். தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா மற்றும் பாண்டிச்சேரி ஆகிய மாநிலங்களில் உள்ள முக்கிய இடங்களில் தகவல் சேகரிக்க இரகசியத் துப்பு வைக்கப்பட்டுள்ளது.



கொள்ளையர் பற்றித் தகவல் கொடுப்பவர்களுக்கு பாரத ஸ்டேட் வங்கி ஒரு இலட்சம் ரூபாய் வெகுமதி அறிவித்துள்ளது.

இந்த வழக்கை விரைவில் கண்டுபிடிப்பதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைக் கூறி அமைகிறேன்.

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (இ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம். (குறுக்கீடு)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Privilege Matter ஒன்று கொடுத்திருந்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. இன்னும் நான் பார்க்கவில்லை. பார்க்கிறேன். திரு. லா. சந்தானம்.

### (ஈ) அருப்புக்கோட்டை அருகில் இருக்கங்குடி மாரியம்மன் கோயில் நில ஆக்கிரமிப்புகளை அகற்ற முயன்றபோது ஏற்பட்ட பிரச்சினை

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருக்கங்குடியில் கோயில் நிலத்திலே கடைகள் வைப்பது சம்பந்தமாக சில பிரச்சினைகள் வந்ததாக நேற்றைக்குக்கூட இந்த அவையிலே பேசப்பட்டது. அந்தப் பிரச்சினைகளினுடைய உண்மை நிலை என்ன என்பது அரசுக்கு வந்திருக்கிறதா? அப்படி வந்திருந்தால், இந்த அவை அறிந்துகொள்ளும்படி அந்த நிகழ்ச்சிகளைச் சொல்வதற்கு அரசு முன்வருமா என்று தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஏதாவது தகவல் இருந்தால் சொல்லலாம்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஜனவரி மாதம் அருப்புக்கோட்டை வட்டத்தைச் சேர்ந்த வருவாய்த் துறை அதிகாரிகள், இருக்கங்குடி அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் நுழைவாயில் பாதையில்

ஆக்கிரமிப்பு செய்திருந்த கடைகளை அப்புறப்படுத்தத் தொடங்கினார்கள். கோயில் நிர்வாகத்தினரால் இவர்களுக்கு மாற்று இடம் தரப்பட்ட நிலையிலும், இந்த நடவடிக்கையைக் கடைக்காரர்கள் பலமாக எதிர்த்துள்ளார்கள்.

3-3-2002 அன்று ஆக்கிரமிப்புகளை அகற்ற வந்த வருவாய்த் துறை அலுவலர்களின் பாதுகாப்புக்காக வந்திருந்த திரு. சுந்தரேசன் என்ற காவல் துறை ஆய்வாளரை, கடைக்காரர்களில் ஒரு கூட்டத்தினர் தாக்கியிருக்கின்றனர். இந்தச் சம்பவம் தொடர்பாக ஓட்டல் சுப்பையா என்கிற சுப்பையா, அருப்புக்கோட்டை குற்றவியல் நீதிமன்றத்தில் 7-3-2002 அன்று சரண் அடைந்துள்ளார். பின்னர், அவர் அருப்புக்கோட்டை சார் நிலைச் சிறையில், விசாரணைக் கைதியாக அடைக்கப்பட்டார். அவருக்கு அங்கு நெஞ்சு வலி எடுக்கவே, அவர் அருப்புக்கோட்டை பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். ஆனால், சிகிச்சை பலனளிக்காமல், அவர் 11-3-2002 அன்று பிற்பகல் 2-30 மணிக்கு மரணம் அடைந்துள்ளார். இறந்து போன சுப்பையாவின் உறவினர்கள், சிறையில் அவர் சித்திரவதை செய்யப்பட்டு இறந்து போனதாகக் கருதினார்கள். எனவே, அருப்புக்கோட்டை வருவாய்க் கோட்ட அலுவலர் ஆரம்பக் கட்ட விசாரணை செய்தார். அதை அடுத்து, விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் காவல் துறை நிலை ஆணை எண் 145-ன்கீழ் விரிவான விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தை அரசியல் ஆக்குவதற்காக, மாண்புமிகு வந்தவாசி சட்டமன்ற உறுப்பினர் திரு. முருகவேல் ராஜன் மற்றும் ஒரு சிலரும் சேர்ந்துகொண்டு, 16-3-2002 அன்று முதல் தொடர் உண்ணாவிரதத்தை மேற்கொண்டார்கள். இதற்கிடையே விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர், அரசு துயர் துடைப்பு நிதியிலிருந்து, மரணம் அடைந்த சுப்பையாவின் மனைவிக்கு, பத்தாயிரம் ரூபாய்க்கான காசோலையை வழங்க முன்வந்தார். ஆனால் உறுப்பினர் திரு. முருகவேல் ராஜன் அவர்களின் தூண்டுதலினால், இறந்து போன சுப்பையாவின் மனைவி, அந்தத் தொகையைப் பெற்றுக்கொள்ளவில்லை. மேலும், உறுப்பினர் திரு. முருகவேல் ராஜன் அவர்களின் தூண்டுதலினால், அவரைச் சார்ந்த ஒரு சிலர், ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்ட இடத்திலேயே மீண்டும் கடைகளை அமைப்பதற்கு முயற்சி செய்துள்ளனர். ஆனால், மாவட்ட நிர்வாகத்தினர் மிகவும் பொறுமை காத்து, அவர்களுக்கு எடுத்துச் சொல்லி, அவர்களுக்கெனப் புதிதாக ஒதுக்கப்பட்ட இடத்தில்





அவர்களை அமர்த்த முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள். நிலைமை இப்போது அமைதியாக உள்ளது. சட்டம்-ஒழுங்கு நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அறிக்கை அனுப்பியுள்ளார்.

நண்பகல் 12-00

மாண்புமிகு உறுப்பினர் திரு. முருகவேல் ராஜன் போன்ற வெளியாட்களின் தலையீடு இல்லை என்றால், எவ்விதப் பிரச்சினையும் இருந்திருக்காது. இங்கு முக்கியமான விஷயம், ஆக்கிரமிப்புகளை அகற்றுவதுதான். இந்த ஆக்கிரமிப்புகளைச் செய்தவர்கள் மூன்று பிரிவுகளாக உள்ளனர். இரண்டு பிரிவினர், கோயில் நிர்வாகத்தினருடன் ஒத்துழைக்க முன்வருகின்றனர். சட்டமன்ற உறுப்பினருடைய வழிகாட்டுதலில் இயங்கும் ஒரு பிரிவினர் மட்டும், கோயில் நிர்வாகத்தினருக்கு எதிரான நிலையை மேற்கொண்டுள்ளனர். சட்டமன்ற உறுப்பினரின் தலையீடு இல்லாமல் இருந்திருந்தால், இந்த ஆக்கிரமிப்புப் பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்பட்டு இருக்கும். ஆக்கிரமிப்புச் செய்தவர்களுக்குத் தகுந்த மாற்று இடம் வழங்க, கோயில் நிர்வாகம் நடவடிக்கை எடுத்து வருகிறது. ஆகவே, விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம், ஆக்கிரமிப்புப் பிரச்சினைக்கு ஒரு சுமுகமான தீர்வு காண்பதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டு, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி (குறுக்கீடு)

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் இருங்கள், திரு. ஜி.கே. மணி, பேசுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே விளக்கம் அளித்தார்கள். அந்த விளக்கத்திலே, எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. முருகவேல் ராஜன் ஏதோ பொதுமக்களைத் தூண்டியதைப் போல, அல்லது ஒரு சாரார்— அதிலே ஒரு பிரிவினர், அவர்களுக்கு ஆதரவாக இருந்தாகவும்—அரசு அதிகாரிகளுக்கு ஒத்துழைக்காமல், அந்தப் பிரச்சினைக்குக் காரணமாக இருப்பதைப் போல இங்கே எடுத்துச் சொன்னார்கள். உள்ளபடியே அது

எங்களுக்கெல்லாம் வருத்தம் அளிக்கிறது. ஒருவர் இறந்திருக்கிறார் என்று சொன்னால், இறந்ததற்குக் காரணம் கேட்பதற்கு, அவர்களுக்கு நிவாரண நிதி வேண்டுமென்று ஒரு சட்டமன்ற உறுப்பினர், ஓர் இயக்கத்தின் சார்பிலே கோரிக்கை விடுப்பது என்பது தவறானது அல்ல. அதிலும் முதலமைச்சர் அவர்கள் விளக்கத்திலே சொல்கின்றபோது, ரூ.10 ஆயிரத்திற்கான காசோலை என்று சொல்கிறார். மற்ற இடங்களில் இறப்பு என்று சொன்னால் 50 ஆயிரம், ஒரு இலட்சம் வழங்கப்படுகிறது. ஆகவே, இது குறைவாக இருக்கிறது. கூடுதலாக வேண்டும். இறப்புக்கு நியாயம் கேட்டு உண்ணாவிரதம் இருக்கிற நேரத்திலே, எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. முருகவேல் ராஜன் அவர்கள் சென்றார்களே தவிர, பிரச்சினையைப் பெரிதுபடுத்த வேண்டுமென்ற நோக்கம் அல்ல என்பதை அவைக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன். நீங்கள் சொல்லுங்கள்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் நான் பணிவோடு உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்வது, இறந்து போனவர்களுக்கு, முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து அதிகப்படியான பணம் தரவேண்டும். நாங்களெல்லாம் பிரச்சினை நடந்த நேரத்தில் போய் இருந்து சமாதானமாக, ஒரு சாதிக் கலவரம் வராமல் தடுத்து நிறுத்திவிட்டு வந்திருக்கிறோம். அங்கே கோரிக்கை, முதலமைச்சருடைய நிதியில் இருந்து அதிகமான தொகையைப் பெற்றுத் தர வேண்டுமென்பது. நாங்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் எல்லாம், முதலமைச்சரிடம் தெரிவித்து, வாங்கித் தருவதாகத் தெரிவித்து ஒரு சுமுகமான சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறோம். ஆகவே, முதலமைச்சர் அவர்கள், அவர்களுடைய நிதியிலிருந்து இறந்தவர்களுடைய குடும்பத்திற்கு அதிகப்படியான பணத்தைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறந்து போனவரது குடும்பத்திற்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சாத்தூர் இராமச்சந்திரன், பருத்தி புடவையாகவே காய்த்து விட்டது உங்களுக்கு. (சிரிப்பு)



## 4. விதி 110-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கைகள்

### (அ) சென்னை நகரில் குடிநீர் விநியோகம் செய்ய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110-ன்கீழ் இரு அறிக்கைகளை அவைக்கு அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அந்த இரண்டு அறிக்கைகளை அவைக்கு அளிக்க அனுமதி அளிக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2001-ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற சட்டமன்றப் பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, என் தலைமையில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டபோது, சென்னை நகரில் கடுமையான குடிநீர்த் தட்டுப்பாடு நிலவியதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள்.

அப்போது, சென்னை நகரில் குடிநீர் விநியோகம் நாள் ஒன்றுக்கு 260 மில்லியன் லிட்டர் வீதம் வழங்கப்பட்டு வந்தது. அந்தச் சமயத்தில், சென்னை நகரின் குடிநீர் விநியோகத்திற்காகப் பயன்படுத்தப்படும் மூன்று ஏரிகளின் மொத்தக் கொள்ளளவான 7,413 மில்லியன் கன அடியில், தண்ணீர் இருப்பு 920 மில்லியன் கன அடியாக இருந்தது. பருவ மழை தவறியதைத் தொடர்ந்து, முந்தைய திமுக அரசு எடுக்கத் தவறிய நடவடிக்கைகளினால், தண்ணீர் இருப்பில் முன்னேற்றம் இல்லாமல், கடுமையான குடிநீர்த் தட்டுப்பாடு நிலவியது என்பதை அனைவரும் அறிவார்கள். ஆனால், புதிதாகப் பதவி ஏற்றுக்கொண்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, பல புதுவிதமான யுக்திகளைக் கையாண்டு, சென்னைக் குடிநீர்ப் பிரச்சினையின் சிக்கலுக்குச் சீரான தீர்வு கண்டது. அதாவது, மேட்டூர் மற்றும் ஈரோடு ஆகிய இடங்களிலிருந்து நாள்தோறும் இரயில் மூலம் தண்ணீர் கொண்டு வரப்பட்டது; நெய்வேலி, மாமண்டூர், பாலூர் போன்ற தொலைதூர இடங்களில் இருந்து லாரிகள் மூலம் தண்ணீர் கொண்டு வரப்பட்டது; தனியார் விவசாயக் கிணறுகள் வாடகைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, நிலத்தடி

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2002 ஏப்ரல் 12

நீர் அதிக அளவில் எடுக்கப்பட்டு சென்னைக் குடிநீர் விநியோகத்திற்குப் பயன்படுத்தப்பட்டது.

பிற்பகல் 12-05

இவ்வாறு பல்வேறு வழிகளில் கொண்டு வரப்பட்ட குடிநீர் சென்னை நகர மக்களுக்கு, குழாய்கள் மூலமாகவும், லாரிகள் மூலமாகவும். இதற்கெனத் தனியாக நிறுவப்பட்ட சுமார் 10,000 நிலைத் தொட்டிகள் மூலமாகவும் வழங்கப்பட்டது.

மேலும், சென்னை நகரில் 100 குடிசைப் பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவற்றில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு, அவற்றிற்கு விசைப் பம்புகள் மற்றும் தொட்டிகள் நிறுவப்பட்டு, அந்தக் கிணறுகளில் இருந்து கிடைக்கும் நீர் சற்று உவர்ப்பாக இருந்தாலும், அது குடிநீர் அல்லாத மற்ற உபயோகத்திற்காகப் பயன்படுத்தப்பட்டது. இந்த முயற்சி பொது மக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றதை அனைவரும் அறிவார்கள்.

மேலும், கொளவாய் ஏரியில் இருந்து லாரிகள் மூலம் சென்னைக்கு அருகே உள்ள தொழிற்சாலைகளுக்குத் தண்ணீரை வழங்கி, அதற்கு ஈடாக அந்தத் தொழிற்சாலைகளுக்கு வழங்கப்பட்ட தரமான தண்ணீர், சென்னை நகரின் குடிநீர் உபயோகத்திற்காகத் திருப்பி விடப்பட்டது. சென்ற கோடைக் காலத்தில், சென்னை நகரின் குடிநீர்த் தட்டுப்பாட்டைச் சமாளிக்க ஏறத்தாழ 98 கோடி ரூபாய் செலவான போதிலும், அப்போது இந்த அரசு, போர்க்கால அடிப்படையில் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுத்தது என்ற திருப்தி எல்லோருடைய மனதிலும் நிலைத்து நின்றது. கடுமையான நிதி நெருக்கடிக்கு இடையேயும், சென்னை நகரின் குடிநீர்ப் பிரச்சினையில் எங்கள் அரசு தனிப்பட்ட கவனமும், அக்கறையும் செலுத்தி, நிலைமையைச் சமாளித்ததை நினைத்துப் பார்த்து, நாங்கள் பெருமிதம் அடைகிறோம்.

அதனைத் தொடர்ந்து பெய்த வடகிழக்குப் பருவ மழையின் காரணமாக, 1-12-2001 ஆம் தேதி நிலவரப்படி மூன்று ஏரிகளிலும் தண்ணீர் இருப்பு 2,333 மில்லியன் கன அடியாக உயர்ந்தது. அதன் காரணமாக, 27-12-2001 அன்று முதல் சென்னை நகரில் குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகம் தொடங்கப்பட்டு, நாள் ஒன்றுக்கு



2002 ஏப்ரல் 12] [செல்வி ஜெ ஜெயலலிதா]

180 மில்லியன் லிட்டர் என்ற அளவில் குடிநீர் விநியோகம் பராமரிக்கப்பட்டது. அதுவே, 12-1-2002 முதல், நாள் ஒன்றுக்கு 220 மில்லியன் லிட்டராக உயர்த்தப்பட்டது.

தற்போதைய நிலவரப்படி, மூன்று ஏரிகளிலும் உள்ள நீர் இருப்பு ஏறத்தாழ 3,244 மில்லியன் கன அடியாக உள்ளது. சென்ற டிசம்பர்-ஜனவரி மாதத்தில் பெய்த மழையால், இரட்டை ஏரி மற்றும் கொரட்டூர் ஏரி ஆகியவற்றில் நிரம்பிய நீர் மற்றும் ஆந்திர மாநிலம் கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் வரத்து ஆகியவையே இந்தத் திருப்திகரமான நீர் இருப்புக்குக் காரணமாகும். இன்றைய தினத்தில், சென்னை நகரின் குடிநீர் விநியோக அளவு, நாள் ஒன்றுக்கு 340 மில்லியன் லிட்டராக உள்ளது.

தற்போதுள்ள நீர் இருப்பு, எதிர்வரும் கோடைப் பருவத்தில் சென்னை நகருக்குத் தேவைப்படும் குடிநீரின் அளவு ஆகியவை ஆய்வு செய்யப்பட்டு, ஒரு முக்கியமான முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அதாவது, வரும் தமிழ்ப் புத்தாண்டு—ஏப்ரல் 14ஆம் தேதி முதல், நாள் ஒன்றுக்கு சென்னைக்கு 400 மில்லியன் லிட்டர் குடிநீர் விநியோகிக்கப்படும் என்ற அறிவிப்பை வெளியிடுவதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதே அளவு வரும் ஜூன் மாதம் 15 ஆம் தேதி வரை வழங்கப்பட்டு, பின்னர் நிலைமை ஆய்வு செய்யப்பட்டு, அப்போது நிலவும் சூழ்நிலைக்கு ஏற்ப முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முன்பு எப்போதும் இல்லாத வகையில், இந்த ஆண்டு மட்டுமே கோடைக் காலத்தில் குடிநீர் அளவை உயர்த்தி வழங்க ஆணையிட்டுள்ளோம் என்பதை மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழக அரசு இப்படிப்பட்ட மகிழ்ச்சிகரமான முக்கிய முடிவினை எடுக்க முக்கியக் காரணங்கள், சென்னை மாநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றும் வாரியம் மேற்கொண்ட முன்னெச்சரிக்கையான மற்றும் திறமையான குடிநீர் விநியோக நிர்வாகம், இந்த அரசின் தீவிர முயற்சியால் செயல்படுத்தப்பட்ட மழை நீர்ச் சேமிப்புத் திட்டங்கள் மற்றும் இயற்கையின் ஒத்துழைப்பு ஆகியவையே ஆகும்.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2002 ஏப்ரல் 12

இந்த நேரத்தில், இந்த மாமன்றத்தின் வாயிலாக, பொதுவாக தமிழக மக்களுக்கும், குறிப்பாக, சென்னை மாநகர மக்களுக்கும் ஒரு வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். அரசு மேற்கொண்டு வரும் மழை நீர்ச் சேகரிப்புத் திட்டங்களை முழு மனதுடன் ஏற்றுக்கொண்டு, அவற்றை நிறைவேற்றிட ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், குடிநீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தி, அடுத்த வடகிழக்குப் பருவமழை பெய்யும் வரையில், இதே அளவிற்குக் குடிநீர் விநியோகத்தைப் பராமரிக்கும் வகையில் தகுந்த ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அமைகிறேன்.

பிற்பகல் 12-10

## (ஆ) திரையரங்குகளில் நுழைவுக் கட்டணச் சீரமைப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த விவர அறிக்கை.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரையரங்குகளில் அனுமதிச்சீட்டுகள் சட்டத்திற்குப் புறம்பாகவும், கள்ளச்சந்தையிலும் விற்பனை செய்யப்படுவதைத் தடுக்கவும், வரையறுக்கப்பட்ட எண்ணிக்கைக்கு மேல் திரையரங்குகளில் பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுவதைத் தடுக்கவும், கடந்த 1991 முதல் 1996 வரை நடைபெற்ற எனது தலைமையில் அமைந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, தமிழ்நாடு திரைப்படத் துறையினரின் கோரிக்கைக்கு இணங்க, 28-10-1994 அன்று புதிய அரசாணை ஒன்றைப் பிறப்பித்தது. அதன்படி, கடைசி வகுப்பைத் தவிர மற்ற வகுப்புகளுக்கான நுழைவுக் கட்டணத்தைத் திரையரங்குகள் தாமே உயர்த்தி, மாற்றி அமைத்துக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது.

பின்னர், 1996 ஆம் ஆண்டு மே மாதம் ஆட்சிக்கு வந்த முந்தைய தி.மு.க. அரசு தமிழகத் திரைப்படத் துறையினரின் நலனைப் புறக்கணிக்கும் வகையில், குறிப்பாக, திரையரங்குகள் உரிமையாளர்களின் வணிக நலன் பாதிக்கும் வகையில், எனது தலைமையில் அமைந்திருந்த முந்தைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசால் பிறப்பிக்கப்பட்டது என்ற ஒரே காரணத்திற்காக 28-10-1994 தேதியிட்ட அரசு ஆணையை, அதன் நோக்கத்தைச் சிதைக்கும் வகையில் மாற்றியமைத்தது. அதாவது,



2002 ஏப்ரல் 12] [செல்வி ஜெ ஜெயலலிதா]

திரையரங்குகளில் நிர்வாகத்தினர் நுழைவுக் கட்டணங்களை மிகவும் அதிகமாக உயர்த்திவிட்டனர் என்ற ஒரு தவறான காரணத்தைக்காட்டி, அதன் அடிப்படையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு கொண்டு வந்த அரசாணைக்கு முன்னர் இருந்த கட்டணங்களில் 75 சதவீதத்திற்கு மிகாமல் மட்டுமே உயர்த்திக்கொள்ளலாம் என்று புதிய அரசாணையை 6-11-1996 அன்று பிறப்பித்தது.

முந்தைய தி.மு.க. அரசு பிறப்பித்த இந்தப் புதிய அரசாணையின் விளைவாக, தமிழகத்தில் திரைப்படத் துறை, குறிப்பாக, திரையரங்குகள் வணிக நலன் பாதிக்கப்பட்டு, அதன் வாயிலாகத் தயாரிப்பாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்கள் உட்பட ஒட்டுமொத்தத் தமிழ்த் திரைப்படத் துறையே கடந்த ஐந்தாண்டு கால தி.மு.க. ஆட்சிக் காலத்தில் பெருத்த சரிவைச் சந்திக்க நேரிட்டது என்பதை நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு, தமிழகத் திரைப்படத் துறையினர் என்னைச் சந்தித்து விளக்கமாக எடுத்துக் கூறினார்கள்.

தமிழகத் திரைப்படத் துறையின் பல்வேறு பிரிவுகளைச் சார்ந்த பல்வேறு பிரதிநிதிகள் என்னிடத்தில் எடுத்துக் கூறிய கோரிக்கைகளின் அடிப்படையில் நான் அவற்றை ஆய்வு செய்து, முந்தைய தி.மு.க. அரசு தமிழ்த் திரைப்படத் துறைக்குச் செய்த மாபெரும் துரோகத்தைக் களைய வேண்டும் என்று முடிவு செய்தேன்.

அதன் அடிப்படையில், தற்போது புதிய அரசாணையின் வாயிலாக தமிழ்நாட்டில், திரையரங்குகளின் நுழைவுக் கட்டணம் உயர்த்தி மாற்றியமைக்கப்பட முடிவு செய்யப்பட்டுள்ளது என்ற, திரைப்படத் துறையினருக்கு மகிழ்ச்சி தரக்கூடிய செய்தியை இந்தப் பேரவையின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1996 ஆம் ஆண்டுக்குப் பின்னர், பல ஆண்டுகளாகத் திரையரங்குகள் நுழைவுக் கட்டணம் மாற்றியமைக்கப்படவில்லை. மேலும், கேபிள் டி.வி. மற்றும் புதிய ரக ஆடியோ, வீடியோ தகவல் தொடர்பு சாதனங்கள் அதிகமாகப் பெருகி வருவதால், திரையரங்குகளின் வருவாய் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது என்பதையும் அரசு கவனத்தில் கொண்டுள்ளது. மேலும், திரையரங்குகள் நுழைவுக் கட்டணத்தை மாற்றி அமைப்பதால், கூடுதல் கேளிக்கை வரி மூலம் அரசுக்கு அதிக வருவாய் கிடைக்கும் வாய்ப்பும்

உள்ளது. மேலும், புதிய திரைப்படங்கள் வெளியாகும்போது நிறையக் கூட்டம் வருவதால், கூடுதல் கட்டணத்துடன் கள்ளச்சந்தையில் அனுமதிச் சீட்டுகள் விற்கப்படுவதால், அரசுக்கு வருவாய் இழப்பும் ஏற்படுகிறது. ஆகவே, ஒட்டுமொத்தமாகக் கடந்த தி.மு.க. ஆட்சியின் தவறான போக்கினால் நலிவடைந்த தமிழகத் திரைப்படத் துறையினரின் வணிக நலன் மீண்டும் ஆரோக்கியமான நிலையை அடைய வேண்டும் என்பதற்காக தமிழக அரசு புதிய ஆணையைப் பிறப்பித்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் புதிய அரசாணையின் முக்கிய அம்சங்களைத் தற்போது விளக்கிக் கூற விரும்புகிறேன்:

1. உரிமம் வழங்கும் அதிகாரி மற்றும் வணிக வரி அதிகாரிகளுக்கு முன்னறிவிப்புச் செய்து திரையரங்குகள் நிர்வாகம் கடைசி வகுப்பைத் தவிர மற்ற வகுப்புக் கட்டணங்களில் தற்போதுள்ள கட்டணங்களைவிட 75 சதவீதம் கூடுதலாக நிர்ணயித்துக்கொள்ள அனுமதி வழங்கப்படும்.

2. சென்னை, மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகிய நகரங்களில் கடைசி வகுப்புக் கட்டணம் 10 ரூபாய்க்கு மிகாமலும், இவை தவிர மற்ற ஊர்களில் 5 ரூபாய்க்கு மிகாமலும் நிர்ணயித்துக்கொள்ள அனுமதி வழங்கப்படும். எனினும், கடைசி வகுப்புக் கட்டணம், அதற்கு முந்தைய வகுப்புக் கட்டணத்திற்கு மிகாமல் இருக்குமாறு நிர்ணயித்துக்கொள்ள அனுமதி வழங்கப்படும்.

பிற்பகல் 12-15

3. திரையரங்குகளில் மொத்த இருக்கைகள் கடைசி வகுப்பிற்குத் தற்போதுள்ள 20 சதவீதத்திற்கு பதிலாக 10 சதவீதம் இருக்குமாறு இருக்கைகள் அமைத்துக்கொள்ள அனுமதி வழங்கப்படும்.

4. புதிய திரைப்படங்கள் திரையிடும்போது, 2 வாரங்களுக்கு திரையரங்குக் கட்டணம் உச்சவரம்பு இல்லாமல், உரிமம் வழங்கும் அதிகாரி மற்றும் வணிக வரித் துறை அதிகாரிகள் அனுமதியுடன் நிர்ணயித்துக்கொள்ள திரையரங்கு உரிமையாளர்களுக்கு அனுமதி வழங்கப்படும்.

5. திரையரங்குகளில் நுழைவுக் கட்டணம் உயர்த்தப்படுவதால், ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்ட 8-9-1994 தேதியிட்ட உள் துறை





அரசாணை எண் 1076-ன்படி அனுமதிக்கப்பட்ட திரையரங்குப் பராமரிப்புக் கட்டணம் இனிமேல் விதிக்கப்படமாட்டாது.

தமிழகத் திரைப்படத் துறையினரின் ஒட்டுமொத்த நலனைப் பாதுகாக்கும் வகையில் பிறப்பிக்கப்பட்டுள்ள இந்தப் புதிய அரசாணை, வருகின்ற தமிழ்ப் புத்தாண்டு நாள், அதாவது 14-4-2002 முதல் அமலுக்கு வரும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 5. கவன ஈர்ப்பு

### சாத்தனூர் அணை இடதுபுறக் கால்வாய் விவசாயிகளின் நெற்பயிருக்கு அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்புத் தீர்மானம். திரு. எ.வ. வேலு அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. எ.வ. வேலு.

***திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சாத்தனூர் அணை இடதுபுறக் கால்வாய் விவசாயிகளின் நெற்பயிருக்கு அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடுவது' குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

**அறிக்கை.**

திருவண்ணாமலை மாவட்டம், சாத்தனூர் நீர்த்தேக்கத்திலிருந்து அரசு ஆணை ஆர்ட்டி எண் 687 பொ.ப. (ட்டி2) துறை, நாள் 28-12-2001-ல் வழங்கப்பட்ட ஆணைப்படி 2-1-2002 முதல் 90 நாட்களுக்கு இரண்டு தவணைகளில் நீர் திறந்து விடப்பட்டு சாத்தனூர் இடதுபுற மற்றும் வலதுபுறக் கால்வாய் வழியாக 45,000 ஏக்கர்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2002 ஏப்ரல் 12

ஆயக்கட்டின் பாசனத்திற்கு நீர் வழங்கப்பட்டு வருகிறது. இதற்கிடையில் 4-3-2002 அன்று நடைபெற்ற விவசாயிகள் கூட்டத்தில், சாத்தனூர் ஆயக்கட்டுப் பகுதியில் பயிரிடப்பட்டுள்ள கூட்டுப் பயிர்கள், நெல், மணிலா, கரும்பு மற்றும் எள் ஆகியவை முழு வளர்ச்சி அடையாமல் உள்ளதால், மேலும் தொடர்ந்து கால்வாய்களில் நீர் திறந்துவிட வேண்டுமென விவசாயிகள் மற்றும் பாசன சங்கத் தலைவர்கள் கோரியதை அடுத்து, இது குறித்து நேரடியாக பொதுப் பணித் துறையினர் பார்வையிட்டு, 2-4-2002-க்குப் பின்னரும் தொடர்ந்து மேலும் 10 நாட்களுக்கு அணையிலிருந்து நீர் திறந்துவிட்டால் மட்டுமே நெற்பயிர்களைக் காக்க இயலுமெனத் தெரிவித்துள்ளனர்.

தற்போது பெறப்பட்ட இடது மற்றும் வலதுபுறக் கால்வாய்ப் பாசன சங்கத்தினரின் மனுவில், நெற்பயிரைக் காப்பாற்ற, தொடர்ந்து நீர் வழங்க வேண்டும் என்ற கோரிக்கைமீது ஆயக்கட்டு நிலங்கள் ஆய்வு செய்யப்பட்டன. 9-4-2002 அன்று அணையில் உள்ள நீரின் மட்டம் 83 அடி நீரிருப்பு [1766 (ஆயிரத்து எழுநூற்று அறுபத்து ஆறு) மில்லியன் கன அடி ஆகும்] இதில் (1) அணைப் பூங்கா பராமரிப்பு மற்றும் நிலையான நீர் இருப்பு (307.42 மி.க.அடி) (2) ஆவியாதலில் இழப்பு (176.60 மி.க.அடி) (3) திருவண்ணாமலை நகரக் குடிநீர்த் தேவைக்கு ஒதுக்கீடு (104.94 மி.க.அடி), (4) திருக்கோவிலூர் அணைக்கட்டு இரண்டாம் போகப் பாசனத்திற்குத் தர வேண்டிய மீதி நீர் இருப்பு 206.40 மில்லியன் கன அடி மற்றும் (5) 9-4-2002 முதல் 12-4-2002 காலை வரை கால நீட்டிப்பு 10 நாட்களில், மீதமுள்ள 3 நாட்களுக்கு வழங்க வேண்டிய நீர் அளவு (159.93 மி.க. அடி) ஆகியவற்றிற்கு வழங்குவது போக 12-4-2002 எதிர்பார்க்கும் நிகர இருப்பு 810 மி.க. அடியாகும்.

விவசாயச் சங்கங்கள் கூடுதல் தண்ணீர் கோரியுள்ளதைப் பரிசீலனை செய்து, சாத்தனூர் அணை இடதுபுறக் கால்வாய், வலதுபுறக் கால்வாய்களில் 2-4-2002 முதல் 22-4-2002 வரை பாசனத்திற்குத் தண்ணீர் தொடர்ந்து வழங்க, அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தனூர் அணையினுடைய மொத்தக் கொள்ளளவு 119 அடி உயரம் இருக்கிறது. தண்ணீர் 84 அடி இருந்து கொண்டிருக்கிறது. இதனுடைய பயன்பாடாகக் கிட்டத்தட்ட 24 ஆயிரம் ஏக்கர் அந்தப்



2002 ஏப்ரல் 12] [திரு. எ.வ. வேலு]

பகுதியிலே விவசாயிகள் பயிர் செய்கிறார்கள். 2-1-2002 அன்று இது திறக்கப்பட்டது. பொதுவாக, நெற்பயிர் நான்கு மாத காலம். ஆனால், இன்றையதினம் 12-4-2002 ஆம் தேதி அதை மூடுவதாக மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலிருந்து தகவல் வந்த காரணத்தினால், அங்கே இருக்கின்ற பெருவாரியான விவசாயப் பெருங்குடி மக்களெல்லாம், நாங்கள் நான்கு மாதப் பயிர் வைத்திருக்கிறோம், மூன்று மாதம்தான் தண்ணீர் விடப்பட்டிருக்கிறது, இந்த நிலையிலே, 30-4-2002 ஆம் தேதி வரை தண்ணீர் விட்டால்தான் அந்த 14 ஆயிரம் ஏக்கர் பயிரைப் பாதுகாக்க முடியும் என்கிறார்கள். ஏனென்று சொன்னால், 24 ஆயிரம் ஏக்கராவிலே 10 ஆயிரம் ஏக்கர் மட்டில்தான் நிலக்கடலைப் பயிர் வைத்தார்கள். எனவே, நிலக்கடலைப் பயிர்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சரிடம் கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. எ.வ. வேலு:** அதுதான் சொல்கிறேன். விவரம் சொல்லாமல் விட்டு விடலாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவரம் பூராவும் இருக்கிறது. சொல்லுங்கள்.

**திரு. எ.வ. வேலு:** 14 ஆயிரம் ஏக்கர் நெற்பயிரும், 10 ஆயிரம் ஏக்கர் மணிலாவும் பயிரிடப்பட்டிருக்கின்ற பகுதி. எனவே, 10 ஆயிரம் ஏக்கர் மணிலாவுக்கு மூன்று மாதம் தண்ணீர் போதும். ஆனால் 14 ஆயிரம் ஏக்கர் நெற்பயிருக்கு நான்கு மாதம், அதுவும் குறிப்பாக, 30-4-2002 வரை தண்ணீர் விட்டால்தான் அந்த 14 ஆயிரம் ஏக்கர் நெற்பயிரைக் காப்பாற்ற முடியும். எனவே, இது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் கவனம் செலுத்தி, 30-4-2002 வரை தண்ணீர் விட்டு, அந்த 14 ஆயிரம் ஏக்கர் நெற்பயிர் காப்பாற்றப்படுமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே நான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், சாத்தனூர் நீர்த்தேக்கத்திலிருந்து, 28-12-2001-ல் வழங்கப்பட்ட அரசாணையின்படி 2-1-2002 முதல் 90 நாட்களுக்கு இரண்டு தவணைகளில் நீர் திறந்துவிடப்பட்டு, சாத்தனூர் இடதுபுற மற்றும் வலதுபுறக் கால்வாய் வழியாக 45 ஆயிரம் ஏக்கர் ஆயக்கட்டின் பாசனத்திற்கு நீர் வழங்கப்பட்டு வருகிறது. இதற்கிடையில், 4-3-2002 அன்று நடைபெற்ற

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2002 ஏப்ரல் 12

விவசாயிகள் கூட்டத்தில் சாத்தனூர் ஆயக்கட்டுப் பகுதியில் பயிரிடப்பட்டுள்ள கூட்டுப் பயிர்கள் நெல், மணிலா, கரும்பு மற்றும் எள் ஆகியவை முழு வளர்ச்சி அடையாமல் உள்ளதால், மேலும் தொடர்ந்து கால்வாய்களில் நீர் திறந்து விட வேண்டுமென விவசாயிகள் மற்றும் பாசன சங்கத் தலைவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். இதையடுத்து விவசாயச் சங்கங்கள் கூடுதல் தண்ணீர் கோரியுள்ளதைப் பரிசீலனை செய்து சாத்தனூர் அணை இடதுபுறக் கால்வாய் மற்றும் வலதுபுறக் கால்வாய்களில் 2-4-2002 முதல் 22-4-2002 வரை பாசனத்திற்குத் தண்ணீர் தொடர்ந்து வழங்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு)

பிற்பகல் 12-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுதான், தண்ணீர் திறந்துவிட்டாச்சு. நன்றி சொல்லுங்கள், அவ்வளவுதான்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெற்பயிர் என்பது, 4 மாதப் பயிர் வைத்திருக்கிறார்கள். ஆனால், மணிலா என்பது 3 மாதப் பயிர், 90 நாளைக்குப் போதும். இப்போதுகூட நீங்கள், மாண்புமிகு அமைச்சர், தயவுசெய்து 30ஆம் தேதி வரையில் தண்ணீர் விடுங்கள். மீண்டும் 8 நாளைக்கு நீட்டிக்க வேண்டும். அப்போதுதான் 14 ஆயிரம் ஏக்கர் நெற்பயிரும் வளர முடியும். எனவே, மீண்டும் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், அந்த 8 தினங்களுக்குத் தண்ணீர் விடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மைக் இல்லாமலேயே கேட்கிறது. (குறுக்கீடு) உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயச் சங்கங்களிடமிருந்து அரசின் கவனத்திற்குக் கோரிக்கை வந்தவுடனேயே அந்தப் பகுதிக்குப் பொதுப் பணித் துறை அதிகாரிகள் சென்று, விவசாயப் பெருங்குடி மக்களையும் சந்தித்து, அந்தப் பகுதியில் இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல, நெற்பயிருக்கு 22-4-2002 வரை தண்ணீர் விட்டால் போதுமென்ற கருத்தினை இசைவாகத் தெரிவித்துள்ளார்கள். அதன் அடிப்படையில் தண்ணீர் விடுவதற்காக அரசாணை



2002 ஏப்ரல் 12] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

பெறப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்துள்ளபடி, தேவையிருப்பின் மீண்டும் அவருடைய கருத்து ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

## 6. அறிக்கைகள் அளித்தல்

### பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள்.

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக சட்டமன்றப் பேரவை பொதுக் கணக்குக் குழுவின் 41 முதல் 45 வரையிலான ஐந்து அறிக்கைகளை, குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 7. மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 13—எரிசக்தித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002-2003 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 13--எரிசக்தித் துறை, மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"எரிசக்தித் துறை மானியக் கோரிக்கை எண் 13-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.2,330,54,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.200,00,00,000/- ஆகியவற்றிற்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2141, திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.2,330,54,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 686, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மாதா மாதம் மின் கட்டணம் வசூலிக்கும் முறையைக் கொண்டுவர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.2,330,54,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 540, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.2,330,54,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1553, திருமதி எஸ். மகேஸ்வரி.

***திருமதி. எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நலிவுற்ற தொழிற்சாலைகளுக்கு மின் கட்டணச் சலுகை



வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.2,330,54,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 975, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.2,330,54,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 121, திரு. கே.சி. கருணாகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 227, திரு. எச்.எம். ராஜு.

***திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. 'நீலகிரி மாவட்டத்தில் மின்சாரம் தயாரிக்கப்பட்ட பிறகு வீணாகச் செல்லும் நீரின் மூலமாக மீண்டும் மின்சாரம் தயார் செய்யும் திட்டம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.2,330,54,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 871, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,330,54,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1347, திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,330,54,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1589, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,330,54,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1672, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,330,54,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1947, திரு. மு. கார்த்தி.





**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,330,54,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2349, திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,330,54,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2543, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,330,54,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2907, திரு. க. முருகவேல் ராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3422, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. கி. பாரிமோகன்] [2002 ஏப்ரல் 12

"எரிசக்தித் துறை பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,330,54,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3584, திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,330,54,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 824, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1176, திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி.

***திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,330,54,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1890, திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1007, திரு. ப. ரங்கநாதன்.

***திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,330,54,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



2002 ஏப்ரல் 12]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1076, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,330,54,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1770, டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர். தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,330,54,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3073, திரு. வி.கே. லட்சுமணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1492, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழகத்தில் காற்றாலை மூலம் மின்சாரம் தயார் செய்வதை ஊக்குவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,330,54,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1158, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,330,54,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1280, திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவண்ணாமலை தொகுதியில், நாடழகானந்தல், ஆலூர் ஆகிய இடங்களில் புதிய துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,330,54,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1319, திரு. மு.பெ. சாமிநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2380, திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பாபநாசம் தொகுதி, திருப்புறம்பியம் பகுதியில் துணை மின் நிலையம் தொடங்க வேண்டியது குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,330,54,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1531, திரு. கே.என். சேகரன்.



**திரு. கே.என். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருச்சிராப்பள்ளி பாரத மிகுமின் தொழிற்சாலைப் பகுதியில் அனல்மின் உற்பத்தி நிலையம் அமைப்பது குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,330,54,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2396, திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,330,54,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8167, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,330,54,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3165, திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூர் மாவட்டம், நாட்ராம்பள்ளி தொகுதி, ஜோலார்பேட்டை ஒன்றியத்திற்கு உட்பட்ட புதுப்பேட்டை ஊராட்சியில் துணை மின் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. எஸ். நடராஜன்] [2002 ஏப்ரல் 12

"எரிசக்தித் துறை பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,330,54,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3499, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கன்னியாகுமரி மாவட்டம், பரளியாறு மின் உற்பத்தித் திட்டத்திற்குப் போதுமான நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,330,54,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3756, திரு. ஏ.எஸ். கண்ணன்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '(Tiny Sector) குறுந்தொழில்களுக்கான சலுகை மின் கட்டண வசதியை பயன்படுத்துவதற்குத் தடையாகவுள்ள பல நியாயமற்ற நிபந்தனைகள் விலக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,330,54,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2094, திரு. பி.எஸ். உலகரட்சகன்.

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,330,54,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



2002 ஏப்ரல் 12]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2177, திரு. கு. ஜெயக்குமார்.

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,330,54,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7107, திரு. எச். ராஜா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2679, திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கடலூர் மாவட்டம், தீர்த்தனகிரி ஊராட்சிப் பகுதியில் மின்னழுத்தம் குறைவாக இருப்பதால் துணை மின் நிலையம் அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,330,54,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2612, திரு. அ. அசோகன்.

**திரு. அ. அசோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவாரூர் மாவட்டத்தில் கிடைக்கும் இயற்கை எரிவாயுவைக் கொண்டு மின்சாரம் தயாரிக்க வேண்டியது குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,330,54,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 388, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மின் விநியோகத்தின்போது ஏற்படும் மின் இழப்பைத் தடுப்பதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,330,54,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எரிசக்தித் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பேரவைப் பதிவேட்டில் பதிந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (ஆ) கோரிக்கை எண் 17-கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கதர் கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த மானியக் கோரிக்கைகளும் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. உறுப்பினர்கள் இரண்டையும் இணைத்தே பேசலாம். மானியக் கோரிக்கை எண் 17-

@ 401 முதல் 441 வரையிலான பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கதர் கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கதர் கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் மானியக் கோரிக்கை எண் 17-ன்கீழ் வருவாய்க் கணக்கில் 56,70,74,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2142, திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கதர் கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.56,70,74,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 673, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூர் மாவட்டத்தில் கிடைக்கும் ஜவ்வாது மலை சந்தனத்தை வைத்து சந்தன சோப், சந்தன ஊதுவத்தி போன்றவற்றைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளை காதித் துறை மூலம் உருவாக்க வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கதர் கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.56,70,74,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 530, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கதர் கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.56,70,74,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2229, திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கன்னியாகுமரி மாவட்டம். இரணியலில் கதர்த் துணி, துணி நூல் மற்றும் வியாபாராம் நடத்தும் கதர்த் துறையைச் சார்ந்த சர்வோதய சங்க நிறுவனத்தில் நடைபெற்றுவரும் ஊழல் நிர்வாக முறைகேடுகளைக் களைய நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கதர் கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.56,70,74,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 969, திரு. என் நன்மாறன்.

**திரு. என் நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கதர் கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.56,70,74,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2652, திரு. டி. சுதர்சனம்.



**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கதர் கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.56,70,74,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 162, திரு. கே.சி. கருணாகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 187, திரு. எச்.எம். ராஜு.

***திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கதர் கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.56,70,74,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 88, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கைத்தறி உற்பத்தியில் கைத்திறனை வளர்க்க மாவட்டந்தோறும் கைத்திறன் பயிற்சிக்கான பயிற்சிப் பள்ளிகள் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை — கதர் கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.56,70,74,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1343, திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கதர் கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.56,70,74,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1852, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கதர் கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.56,70,74,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1694, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கதர் கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.56,70,74,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1951, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கதர் கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 17 ஆம் எண்



மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.56,70,74,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3113, திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கதர் கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.56,70,74,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2546, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தாரமங்கலம் தொகுதியில் தேனீ வளர்ப்புக்கு மானிய அடிப்படையில் தேனீ வளர்ப்புப் பெட்டிகள் வழங்குவதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கதர் கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.56,70,74,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2923, திரு. க. முருகவேல் ராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3432, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கதர் கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.56,70,74,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3590, திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கதர் கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.56,70,74,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 828, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1175, திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கதர் கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.56,70,74,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1886, திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1011, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கதர் கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.56,70,74,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1074, திரு. வை. சிவபுண்ணியம்.



**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கதர் கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.56,70,74,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் 1797, டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கதர் கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.56,70,74,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3071, திரு. வி.கே. லட்சுமணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1490, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழகத்தில் உள்ள பனையேறும் தொழிலாளர்களுக்கு அரசு இலவச வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கதர் கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.56,70,74,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1160, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கதர் கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.56,70,74,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1309, திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவண்ணாமலை மாவட்டம், ஆவூரில் பாய் முடையும் தொழிற்சாலை ஒன்று அமைக்கப்பட வேண்டியது குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கதர் கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.56,70,74,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1519, திரு. அன்பில் பெரியசாமி.

**திரு. அன்பில் பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தேங்கிக் கிடக்கும் துணிகளைக் கொள்முதல் செய்து, திருச்சி, உறையூர் நெசவாளர்களின் துயர் துடைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கதர் கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.56,70,74,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2392, திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சங்கராபுரம் தொகுதியில் உள்ள மலைப் பகுதியில் கிடைக்கும் மரங்களைக் கொண்டு விளையாட்டுப் பொம்மைகள் தயாரிக்க பெண்களுக்குக் கடன் உதவி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கதர் கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.56,70,74,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

*பிற்பகல் 12-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 939, திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூர் மாவட்டத்தில் கதர் கிராமத் தொழில்களை ஊக்குவிக்க, தொழில் தொடங்கும் இளைஞர்களுக்கு ரூ.2 லட்சம் வட்டியில்லாக் கடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கதர் கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.56,70,74,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3509, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நலிவடைந்து வரும் கதர்த் துணித் தொழிலைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கதர் கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.56,70,74,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3755, திரு. ஏ.எஸ். கண்ணன்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கூட்டுறவு நெசவாளர்களுக்கு, சங்கங்களுக்கு, அரசின் கோ-ஆப்டெக்ஸ், அரசுத் துறைகள் வழங்க வேண்டிய நிலுவைத் தொகையை உடனடியாக வழங்க வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கதர் கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.56,70,74,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2205, திரு. பி.எஸ். உலகரட்சகன்.

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கதர் கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.56,70,74,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2178, திரு. கு. ஜெயக்குமார்.

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நூற்பு நூலின்மீது மத்திய கலால் வரி விதிப்பால் கைத்தறித் தொழிலுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்களைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியது குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கதர் கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.56,70,74,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1103, திரு. சோ. இராசேந்திரன்.



**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கதர் கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.56,70,74,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2447, திரு. ஜெ. அன்பழகன்.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஆண்டு முழுவதும் கதர் கைத்தறித் துணிகளுக்குத் தள்ளுபடி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கதர் கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.56,70,74,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 382, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கதர் கிராமத் தொழில்களை வலுப்படுத்துவதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கதர் கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.56,70,74,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

## (இ) கோரிக்கை எண் 42—சிறு தொழில்கள் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 42—சிறு தொழில்கள் துறை, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சிறு தொழில்கள் துறை மானியக் கோரிக்கை எண் 42-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.44,42,40,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.52,15,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். முன்மொழிவோர் பெயர்கள்.

வெட்டுத் தீர்மானம் எண் 1232, திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சிறு தொழில்கள் ஆரம்பிக்கின்ற சமயத்தில் ஒவ்வொரு வட்டார அளவிலும், ஒரே அளவிலான 25 விழுக்காடு மானியம் அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறு தொழில்கள் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.44,42,40,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 634, திரு. சி. ஞானசேகரன்.

**திரு சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூர் தொகுதியில் சிட்கோ, சிப்காட் மூலம் தொழிற்பேட்டைகளை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறு தொழில்கள் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.44,42,40,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 520, திரு. ஜி.கே. மணி.



**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறு தொழில்கள் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.44,42,40,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2227, திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கன்னியாகுமரி மாவட்டத்தில் உற்பத்தியாகும் பூக்களை வைத்து சிறு தொழில்கள் தொடங்க சிறுதொழில்கள் துறை தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறு தொழில்கள் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.44,42,40,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 957, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறு தொழில்கள் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.44,42,40,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 167, திரு. கே.சி. கருணாகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 196, திரு. எச்.எம். ராஜு.

***திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறு தொழில்கள் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.44,42,40,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 72, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறு தொழில்கள் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.44,42,40,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1376, திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறு தொழில்கள் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.44,42,40,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1819, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறு தொழில்கள் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற



ரூ.44,42,40,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1701, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறு தொழில்கள் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.44,42,40,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1975, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறு தொழில்கள் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.44,42,40,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2590, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தாரமங்கலம் தொகுதியிலுள்ள மூங்கில் கூடை முடைந்து வெளியூருக்கு அனுப்பும் தொழிலாளிகளுக்கு கடனுதவிகள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறு தொழில்கள் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.44,42,40,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2969, திரு. க. முருகவேல் ராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3303, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தருமபுரி தொகுதி, தருமபுரி ஒன்றியத்தில் சிட்கோ மூலம் ஒரு சிறு தொழிற்பேட்டை உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறு தொழில்கள் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.44,42,40,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3653, திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறு தொழில்கள் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.44,42,40,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 584, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1861, திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2192, திரு. க. பாரமலை.

***திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மானாமதுரை தொகுதியைச் சேர்ந்த மூத்தனேந்தலில் கட்டப்பட்டு பயன்படாமல் உள்ள சிட்கோ (SIDCO) வளாகத்திலுள்ள தொழிற்கூடங்களைச் சீரமைத்து பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"சிறு தொழில்கள் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.44,42,40,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1036, திரு. ப. ரங்கநாதன்.

***திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறு தொழில்கள் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.44,42,40,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1073, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறு தொழில்கள் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.44,42,40,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1784, டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறு தொழில்கள் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.44,42,40,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1429*, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நெல்லை மாவட்டத்தில் வறட்சிப் பகுதியான ராதாபுரம் தாலுகாவில் சிறு தொழிற்பேட்டை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறு தொழில்கள் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.44,42,40,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1128*, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழகத்தில் பீடித் தொழிலுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதால் பீடித் தொழிலாளர்களுக்கு மாற்றுத் தொழில் செய்ய அரசு சிறு தொழில் துறை மூலம் கடன் உதவி வழங்கி சுய தொழில் தொடங்க வழி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறு தொழில்கள் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.44,42,40,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1308*, திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவண்ணாமலை நகரில் புதிய தொழிற்பேட்டை அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறு தொழில்கள் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.44,42,40,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2399*, திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறு தொழில்கள் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.44,42,40,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2415*, திரு. துரை. கி. சரவணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *3702*, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழகத்தில் மண்பாண்டத் தொழில் நலிந்து விடாமல் இருக்க அந்தத் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு சிறு தொழில்கள் துறை மூலம் கடன் மற்றும் சலுகைகள் வழங்கி ஊக்குவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறு தொழில்கள் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.44,42,40,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3176*, திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூர் மாவட்டம், நாட்ராம்பள்ளி தொகுதியில் மண்பாண்டத் தொழிலாளர்கள் சூளை கட்டிக்கொள்ள அரசு மானியத்துடன் கூடிய கடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறு தொழில்கள் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

ரூ.44,42,40,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3489, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கன்னியாகுமரி மாவட்டத்தில் காப்பிக்காடு என்னுமிடத்தில் தொழிற்பேட்டையில் ரப்பரையும், தேங்காய் மட்டை நாரையும் சேர்த்து மெத்தைகள் தயாரிக்க ஒரு யூனிட் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறு தொழில்கள் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.44,42,40,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3740, திரு. ஏ.எஸ். கண்ணன்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'டாக்டர் ஜெ ஜெயலலிதா மின்னணு வளாகத்தில் விற்கப்படாமல் உள்ள 50 குறுந்தொழில் கூடங்களை விற்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறு தொழில்கள் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.44,42,40,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1196, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டத்தில் சிறு தொழில் ஏதுமில்லை என்பதால் அங்கு சிறு தொழில் கூடம் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"சிறு தொழில்கள் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.44,42,40,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 447, செல்வி க. பாலபாரதி.

***செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திண்டுக்கல் மாவட்டத்தில் அதிக அளவில் விளையும் பல்வேறு வகையிலான வாசனைப் பூக்களிலிருந்து வாசனைத் திரவியம் உற்பத்தி செய்யும் சிறு தொழில் கூடம் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறு தொழில்கள் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.44,42,40,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 350, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நீலகிரி மாவட்டம், கோத்தகிரி தொழிலியல் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலையை மீண்டும் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறு தொழில்கள் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.44,42,40,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2279, திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறு தொழில்கள் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.44,42,40,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1398, திரு. மு.பெ. சாமிநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1523, திரு. அன்பில் பெரியசாமி.

**திரு. அன்பில் பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலையில்லா பட்டதாரிகள் சுயதொழில்கள் தொடங்க தொழில்களின் அடிப்படையில் குறைந்தபட்ச மானியம் வழங்க வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறு தொழில்கள் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.44,42,40,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1544, திருமதி எஸ். மகேஸ்வரி.

***திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சிறு தொழில்களை ஊக்குவிக்க, அரசு சிறு தொழில்களுக்கு புதிய சலுகைத் திட்டங்களும், மானியக் கடன் தொகைகளும் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறு தொழில்கள் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.44,42,40,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2187, திரு. கு. ஜெயக்குமார்.



**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நலிந்து கிடக்கும் சிறு தொழிற்சாலைகளை சீர் செய்ய வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறு தொழில்கள் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.44,42,40,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1174, திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி.

**திரு எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறு தொழில்கள் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.44,42,40,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2069, திரு. பி.எஸ். உலகரட்சகன்.

**திரு பி.எஸ். உலகரட்சகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறு தொழில்கள் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.44,42,40,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை - கதர் கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் மற்றும் சிறு தொழில்கள் துறை ஆகியவை குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பேரவைப் பதிவேட்டில் பதிந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். எட்டு உறுப்பினர்கள் பேசவேண்டும். 1-00 மணிக்கு மேலே இரண்டு அமைச்சர்களும் பதில் சொல்ல வேண்டும். ஆகவே, நேரத்தைக் கொஞ்சம் சுருக்கிப் பேச வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். திரு. பா. பரணிகுமார்.

***திரு. பா. பரணிகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறுகிறேன். பத்து முறை தேர்தலில் போட்டியிட்டு, ஜனநாயக முறையில் பத்து முறையும் வெற்றி பெற்று, சாதனை படைத்த எங்களது அய்யன் கலைஞர் அவர்களையும், இனமானப் பேராசிரியர் அவர்களையும், இந்தியாவிலேயே முதன்முறையாக சென்னை மாநகரத்தில் 40 இலட்சம் மக்களிடம் வாக்குப் பெற்று மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மேயராக, அதற்குப் பின் இரண்டாவது முறையாக, பல அராஜகங்களையும், சூழ்ச்சிகளையும் சந்தித்து, மீண்டும் மேயராக அமர்ந்து இருக்கும் சென்னை மேயர் அவர்களையும் வணங்கி என் பேச்சை ஆரம்பிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 20, 30 நாட்களுக்கு முன்பு 3 வயதுக் குழந்தையும், அதனுடைய பெற்றோரும் சேர்ந்து கொடுத்த ஒரு பேட்டியை டி.வி. நிகழ்ச்சியில் நான் பார்த்தேன். அந்தப் பேட்டியிலே • எந்த நாட்டின் பெயரைச் சொன்னாலும், அந்தக் குழந்தை உடனடியாக அந்த நாட்டின்

@ 442 முதல் 508 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் II மற்றும் III ஆக அச்சிடப்பெற்றுள்ளன.



தலைநகரைக் கூறுகிறது. இதைப் பார்த்த நமக்கு வியப்பாக இருக்கிறது. இப்படி அந்தச் சிறிய வயதிலேயே, சிறிய மூளையில், இவ்வளவு பெரிய விஷயங்களை ஞாபகம் வைத்துக்கொண்டு, இவ்வளவு அழகாகச் செய்வது அந்தக் குழந்தையினுடைய சாதனை. இதுவே படித்த அறிஞர்களோ, சான்றோர்களோ கூறினால், அது ஒரு செய்தியாகத்தான் இருக்கும். அப்படி எங்களது கலைஞர் ஆட்சியில் சிறிய அளவிற்கு வரி போட்டு, அந்த வரியின் மூலமாக பல நலத் திட்டங்களை நிறைவேற்றினோம். அதற்கு உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால் நிறையச் சொல்லலாம். அதற்கெல்லாம் நேரமில்லை. ஆனால் நீங்களோ, இப்போது இடை பட்ஜெட் என்று 4,800 கோடி ரூபாய்க்கு வரி போட்டு, அதற்குமேல் இப்போது 690 கோடி ரூபாய்க்கு வரி போட்டு, மக்கள் மேலே வரிச் சுமையைச் சுமத்தியும், அதனால் அரசுக்கு எந்தப் பயனும் இல்லை என்கிறீர்கள். அப்படிச் சொல்கிறபோது, இந்த மக்களுக்கு வேதனைதான் கிடைக்கிறது. எங்கள் கலைஞர் ஆட்சியில் செய்யும்போது அது சாதனைகளாகவும், உங்கள் ஆட்சியில் அது வேதனையாகவும் மக்களிடம் செல்கிறது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 12-30

அதுமட்டுமல்ல, பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் ஆட்சியில் என்ன திட்டங்களைத் தீட்டியிருக்கிறீர்கள் என்று கேட்டோம். அதற்கு நீங்கள், 'மத்தியில் கூட்டணியில் இருக்கிறீர்கள், அதனால் நீங்கள்தான் எங்களுக்கு நிதி பெற்றுத்தர வேண்டும், நீங்கள் செய்தால்தான் எங்களால் திட்டங்களை எல்லாம் நிறைவேற்ற முடியும்' என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். இது உங்களுடைய இயலாமையைத்தான் காட்டுகிறது. பொதுவாக என்னவென்றால், 'ஆடத் தெரியாதவள் மேடை கோணல்' என்று சொன்னாளாம். அதாவது 2001-ல் சட்டமன்றப் பொதுத் தேர்தல் நடந்து கொண்டிருக்கும்போது நாங்கள் மத்திய அரசில் கூட்டணியுடன்தான் இருந்தோம். அது உங்களுக்கும் தெரியும். உங்களுக்குத் தெரிந்துதான் பொது மக்களிடம் நீங்கள் வாக்குறுதி கொடுத்தீர்கள். 'நாங்கள் வெற்றி பெற்றால் வானத்தை வில்லாய் வளைப்போம், ஊர் முழுவதும் பாலும், தேனும் ஓடும்' என்றெல்லாம் சொன்னீர்கள். ஆனால் இன்றைக்கு அதை மாற்றி, ஜெயித்ததற்குப் பிறகு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பரணிகுமார், 10 மணித்துளிகள் உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. எரிசக்தித் துறை, சிறு தொழில்கள் துறை, கைத்தறி, கைத்திறன், துணிநூல், கதர்த் துறை-கதர் கிராமத் தொழில்கள் இவ்வளவும் பற்றி என்றைக்குப் பேசப் போகிறீர்கள்?

**திரு. பா. பரணிகுமார்:** சீக்கிரம் பேசிவிடுகிறேன். வேகமாகப் பேசிவிடுகிறேன். இடையூறு இல்லாமல் இருக்க வேண்டும். மத்திய அரசிடமிருந்து கேட்கிறோம் என்று சொன்னீர்கள். அப்போது நீங்கள் வாக்குறுதி கொடுக்கிறபோது மக்களிடம் இவ்வளவும் செய்கிறோம் என்று சொன்னீர்கள். இப்போது நீங்கள் ஜெயித்ததற்குப் பிறகு, குற்றம் சொல்கிறீர்கள் 'மத்திய அரசில் கூட்டணி வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்' என்று. அதுமட்டுமா சொன்னீர்கள்? சந்திரபாபு நாயுடுவோடு ஒப்பிடுகிறீர்கள். சந்திரபாபு நாயுடுவோடு ஏன் ஒப்பிடுகிறீர்கள்? நீங்கள் வந்து.......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் அடிக்கொரு தடவை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அறிவுறுத்துகிறீர்கள். நேரம் போதவில்லை என்று. மானியக் கோரிக்கையிலே பேசாமல் அவர் பேசுகின்ற கருத்து சம்பந்தமாக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பல்வேறு சந்தர்ப்பங்களிலே விளக்கம் தந்திருக்கிறார்கள். அந்த விளக்கங்களை எல்லாம் கேட்டதற்குப் பிறகும்கூட, மறுபடியும், மறுபடியும், மாண்புமிகு உறுப்பினர் பேசுவது முறையா? இது சரியா? மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் என்ன பேசினாலும், குறுக்கீடு என்று என்ன வந்தாலும், 10 மணித்துளிகள்தான் அவருக்கு. 12-38-க்கு அவர் உரையை முடித்துவிடுவார்.

**திரு. பா. பரணிகுமார்:** நீங்கள் நடுவில் நேரம் எடுத்துக் கொள்கிறீர்கள். இது மாதிரியெல்லாம் செய்கிறீர்கள். சரி. அதாவது நைசாக ஐஸ் வைத்து எங்களிடம் சந்திரபாபு நாயுடுவைப் பார்த்தீர்களா, அவர் எப்படி அரசில் வெளியே இருந்துகொண்டு மாநிலத்திற்கு உண்டான தேவைகளை எல்லாம் பூர்த்தி செய்துகொள்கிறார், அதனால் நீங்களும் தயவுசெய்து அதே மாதிரி



செய்து வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொல்லுகிறீர்கள். எங்களுக்கென்ன பாட்டி வடை சுட்ட கதை தெரியாதா? குள்ள நரி நைசாக அந்த வடையை வாங்குவது எங்களுக்குத் தெரியாதா? எங்களுக்கு எல்லாம் தெரியும். இருந்தாலும், நாங்கள் ஒன்றும் சாதாரண ஆட்கள் கிடையாது. அந்த வடையைக் காலிலே வைத்துக்கொண்டு, 'ஏமாற்றாதே, ஏமாற்றாதே, ஏமாறாதே, ஏமாறாதே' என்று பாடிவிடுவோம். எங்களுடைய தலைவருக்கும், மத்திய அமைச்சருக்கும் மத்தியிலிருந்து எப்படித் தமிழக மக்களுக்கு வாங்க வேண்டும் என்று தெரியும். எப்படி வாங்கிக்கொண்டிருக்கிறார்கள் என்பது இந்த ஊர் மக்களுக்குத் தெரியும். அதற்காக நீங்கள் ஒன்றும் கவலைப்பட வேண்டாம். (குறுக்கீடு) "ஆடு நனைகிறதே என்று ஓநாய் வருத்தப்பட வேண்டியதில்லை". "எப்படா அண்ணன் சாவான், திண்ணை எப்படா காலியாகும்?" என்ற அளவுக்கு நீங்கள் இருக்க வேண்டியதில்லை என்று கூறிக்கொள்கிறேன்.

இந்த மானியத்தில் சிறு தொழில் துறைக்கு நீங்கள் கொள்கை விளக்கக் குறிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். அதில் இரண்டாவது பக்கத்தில், 'இந்த அரசு பொறுப்பேற்றவுடன், அரசாணை எண் 75 நிதித் துறை, நாள் 19-2-1997-ல் வெளியிடப்பட்ட ஆணையை ரத்து செய்தது' என்றுள்ளது. இதற்கு முன்னால் யார் ஆட்சி செய்தது? அ.தி.மு.க. ஆட்சி முன்னால் இருந்தது. அப்போது என்ன செய்தீர்கள்? அப்போது டெண்டர் விட்டதில், ஓப்பன் டெண்டர் விடாமல், சிறு தொழிலுக்கு நீங்கள்தான் பாதுகாப்புத் தருவது மாதிரி அவர்களிடம் டெண்டர் விடுவதற்குக் கொடுத்தீர்கள். ஆனால், அவர்கள் எல்லாம் Paper Pad வைத்து, Letter Pad வைத்து இருந்தவர்களுக்கெல்லாம் நீங்களாகச் செய்துகொண்டீர்கள். அதனால் இது ஒன்றும்......(குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும்போது, 'நீங்கள் ஆட்சியிலே இருந்தபோது என்ன செய்தீர்கள், சிறு தொழில்களுக்கு நீங்கள்தான் காவலர்கள்போல் பேசுகிறீர்களே' என்று கூறினார்கள். நாங்கள் ஆட்சியில் இருந்தபோது, 75 என்ற அரசாணையைப் போட்டு சிறு தொழில்கள் மற்றும் குறுந்தொழில்கள் நலிவடையக் காரணமாக இருந்ததில்லை. நீங்கள்தான் அந்த வேலையைச் செய்து, சிறு தொழிலையும், குறுந்தொழிலையும் நலிவடையச் செய்தீர்கள் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. பா. பரணிகுமார்:** பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் சொல்ல வருகிறேன். அதாவது நீங்கள் Letter Pad வைத்திருந்தவர்களுக்குத்தான் செய்தீர்கள். ஆனால், தலைவர் வந்த உடனே இந்தக் குற்றத்தை எல்லாம் கண்டுபிடித்து, அரசாணை 75-ஐக் கொண்டுவந்து 'open tender' விட்டார்கள். அதனால் அரசுக்கு இலாபம். இதிலேயும் சிறு தொழில்களிலே உள்ளவர்களுக்கு 50 சதவீதம் கொடுக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்தோம். அதனாலே, சிறு தொழில்களுக்கு நாங்கள்தான் பாதுகாவலர்களாக இருந்தோமே ஒழிய, நீங்களல்ல. சரி. இப்படித்தான் போட்டுவிட்டீர்கள். சரி, சட்டத்தை மாற்றினீர்கள், பரவாயில்லை. இந்த ஒரு வருடத்திலே எத்தனை சிறு தொழில்காரர்கள் வந்திருக்கிறார்கள், சொல்லுங்கள் பார்க்கலாம். எத்தனை பேர் இதைப் பயன்படுத்தியிருக்கிறார்கள், அதுமாதிரி? (குறுக்கீடுகள்) சைக்கிளைக் கூட நீங்கள் பஞ்சாபிலேயிருந்துதான் வாங்கியிருக்கிறீர்கள். அதுமட்டுமல்ல......

*பிற்பகல் 12-35*

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்களே, அவர் பேசி முடிக்கட்டும். கடைசியில் பதில் சொல்லுங்கள்.

**திரு. பா. பரணிகுமார்:** இப்போது இதை விடுங்கள். மாண்புமிகு அமைச்சர் பொன்னையன் அவர்கள் சொன்னார்கள்; 75 என்கிற அரசாணையைப் போட்டதாலே நாட்டிலே பணப் புழக்கமே இல்லை, அதனாலேதான் நட்டம் ஆயிற்று என்றார்கள். ஆனால், அன்றைக்கு சிமெண்ட்டைப் பற்றிக் கேட்கும்போது, மாண்புமிகு எதிர்க் கட்சிக்காரர்கள் வரியைக் குறைக்க வேண்டுமென்று சொல்லும்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்ன சொன்னார்கள்? (குறுக்கீடு) சிமெண்டுக்கு வரி குறைக்க முடியாது. அதை நீங்கள் அதிகமான விலை கொடுத்து வாங்குவது தேவையில்லை, பக்கத்து மாநிலத்திலேயிருந்து வருவதற்கு நுழைவு வரியை நாங்கள் கேன்செல் பண்ணிவிட்டோம். உங்களுக்கு அதனால் குறைந்த விலையிலேயே கிடைக்கும். நீங்கள் வாங்கிக் கொள்ளலாம் என்று சொல்கிறீர்கள். அப்படி என்றால் இங்கே தமிழ்நாட்டிலே இருக்கிற மக்கள் பாதிக்கப்படமாட்டார்களா? அப்போது, நீங்கள் செய்தால் நியாயம்,



நாங்கள் செய்தால் அநியாயமா? அதனாலே அதை மட்டும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சாமி கும்பிடுவதற்கு சூடம், சாம்பிராணி, ஊதுவத்தி, இவற்றுக்கு வரி விலக்கைக் கொடுத்தோம். ஆனால், நீங்கள் இவற்றுக்கு வரியைப் போட்டிருக்கிறீர்கள். இதை விட்டுவிட்டு, அன்னதானம் வழங்குகிறோம் என்று சொல்கிறீர்கள். அன்னதானம் வழங்குவதை நீங்கள் மட்டுமா செய்கிறீர்கள்? கர்நாடக மாநிலத்திலேயுள்ள எல்லாக் கோயில்களிலுமே அன்னதானம் வழங்குகிறார்கள். திருப்பதி கோயிலுக்குப் போனால் எப்போது வேண்டுமானாலும் சாப்பிடலாம். இதை என்னவோ பெரிய திட்டமாகச் செய்த மாதிரி நீங்கள் சொல்கிறீர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அன்னதானத் திட்டத்தைப் பற்றி மேலைநாட்டு அறிஞர்களெல்லாம் பாராட்டுகிறார்கள். "போற்றுவோர் போற்றட்டும், புழுதி வாரித் தூற்றுவோர் தூற்றட்டும் என்று ஏற்றமிகு தமிழகத்தை இனிதே நடத்துகிறேன்" என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்திருக்கிற திட்டம்; நீங்கள் பாராட்டவில்லை என்று சொன்னாலும், தமிழ்நாட்டிலே இருக்கின்ற மக்கள் பாராட்டுகின்றார்கள். நீங்கள் ஏன் அன்றைக்கு ஆட்சிப் பொறுப்பிலே இருந்த நேரத்தில், திருப்பதியிலே போடுவதுபோல் போடவில்லை? அங்கேயிருக்கின்ற கர்நாடகத்திலே போடுவதுபோல் ஏன் போடவில்லை என்பதை விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பரணிகுமார், உரையை முடித்துவிட்டு வாருங்கள். மத்தியானம் கபாலீசுவரர் கோயிலுக்குச் சாப்பிடப் போய்விடுவோம், இரண்டு பேரும். (சிரிப்பு)

**திரு. பா. பரணிகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச மின்சாரத் திட்டத்தை எங்கள் தலைவர்தான் முதன்முதலில் கொண்டு வந்தார்கள். (குறுக்கீடுகள்) ஏன் 1991-96-லே நீங்கள் அதை ரத்து செய்யவில்லையா? (குறுக்கீடுகள்) கட்டை வண்டிப் போராட்டத்தை நாங்கள் அறிவிக்கவில்லையா? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. உட்காருங்கள்.

**திரு. பா. பரணிகுமார்:** அதனாலே நீங்கள் அதைத் திரும்பவும் மாற்றவில்லையா? இப்போதுகூட நான் என்ன சொல்கிறேன்? நீங்கள் ஒன்றும்.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பரணிகுமார் இன்னும் இரண்டு மணித்துளிகள்தான் இருக்கின்றன. முடித்து விடுங்கள். (குறுக்கீடு) அவர் பேசி முடித்து விடட்டும். (குறுக்கீடு) உட்காருங்கள். இரண்டு மணித்துளியில் உரையை முடித்துவிடுவார். (குறுக்கீடுகள்) முடித்துவிடுவார். (குறுக்கீடுகள்) முடித்துவிடுவார், இன்னும் இரண்டு மணித்துளிகளிலே. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** தலைவர் அவர்களே......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அவர் பேசி முடித்து விடட்டும்.

**திரு. பா. பரணிகுமார்:** இப்போது அவர் விவாதத்திலே பேசுகிறாரா?

***மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச மின்சாரத்தைக் கொண்டு வந்தது புரட்சித் தலைவர் அவர்கள்தான். அது விளக்கமாகப் பலமுறை இந்த அவையிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதுதான் உண்மை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளிகளில் உரையை முடியுங்கள்.

**திரு. பா. பரணிகுமார்:** அதைத்தான் நானும் சொல்ல விரும்புகிறேன். அதாவது, 20 இலட்சம் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். அதற்கு என்ன காரணம் சொல்கிறீர்கள்? 'மீட்டர் பொருத்துவது, நாங்கள் அந்தத் திட்டத்தை ஒழிப்பதற்காக அல்ல, அதற்குக் கணக்குப் பார்க்க' என்று சொல்கிறீர்கள். இது என்ன பெரிய கணக்கு? மொத்தம் எவ்வளவு உற்பத்தி ஆகிறது? (குறுக்கீடுகள்) இருங்கள், நான் பேசுகிறேன் இல்லையா? உங்களுக்கு வாய்ப்புக் கிடைத்தால் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளிகளில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. பா. பரணிகுமார்:** மொத்த உற்பத்தியின் அளவைப் பார்த்துக் கொள்ளுங்கள். பயனாளிகள் எவ்வளவு உபயோகப்படுத்துகிறார்கள் என்று பார்த்துக்கொள்ளுங்கள். Power loss-ஐக் கொஞ்சம் கணக்குப் போட்டுக்கொள்ளுங்கள். இது போக மீதி, விவசாயத்திற்குப் போவதுதானே? இதை எதற்கு நீங்கள் முறையாகக் கணக்குப் போடுவதற்காகப் பார்க்கிறோம் என்று சொல்கிறீர்கள்? இதனாலே



20 இலட்சம் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். அதுமட்டுமா? இன்றைக்கு சிறு தொழில்கள் செய்ய வேண்டுமென்றால், மூலதனம் மட்டும் போதாது. அங்கே அமைதியும் இருக்க வேண்டும். சந்தோஷமாகவும் சிறு தொழில்காரர்கள் சிறு தொழில்கள் ஆரம்பிப்பதற்கு, அவர்களுக்கு இடமும் கொடுக்க வேண்டும். ஆனால் இன்றைக்கு நடக்கிற நிலைமை எப்படியிருக்கிறது? இன்றைக்கு பேப்பர்களிலே தினமும் பார்க்கிறோம். கொலை, கொள்ளைகள், இன்றைக்குக் காலையிலேகூட வங்கியிலே கொள்ளை என்று இப்படியெல்லாம் இருக்கிறது. இதற்கெல்லாம்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பரணிகுமார், ஒரு மணித் துளியில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. பா. பரணிகுமார்:** இவற்றையெல்லாம் மீறி அவர்கள் சிறு தொழில்களை எப்படி ஆரம்பிக்க முடியும்? இப்போது சுவாமி சங்கராச்சாரியாருடன் ஏ.கே.47 வைத்துக்கொண்டு போகிறார்கள். அவருக்கு 'இசட்' பிரிவு பாதுகாப்பு இருக்கிறது. இந்த அளவிற்கு சட்டம் ஒழுங்கு மோசமாக இருக்கும்போது, எப்படி அவர்களால் சிறு தொழில்கள் ஆரம்பிக்க முடியும்? அதனால் சிறு தொழில்களுக்குப் பாதுகாவலர்கள் என்று சொல்கிறவர்கள், இவற்றை எல்லாம் முதலிலே சரி பண்ணிவிட்டு, அப்புறம் சிறு தொழிலுக்கு வரவேண்டும்.

அதேபோல, திருச்சி, காவிரிக் கரையிலே இருக்கக்கூடிய ஒரு தொகுதி; ஓர் ஊர். இப்போது தண்ணீர் மேட்டூரிலே 45 அடிக்கு மேலே இருக்கிறது. ஆனால், 20, 25 அடி இருக்கும்போதே தண்ணீர் திறந்து விட்டிருக்கிறார்கள். இன்றைக்கு 45 அடி இருக்கும்போது தண்ணீர் திறந்துவிடாமல், நிலைமை என்னவாயிற்று? குடிக்கக்கூட தண்ணீர் இல்லை. என்ன செய்கிறார்கள் என்றால், தண்ணீர் ஓடிக் கொண்டிருக்கிற ஆற்றிலே ஊற்றைத் தோண்டுகிறார்கள், தண்ணீர் எடுக்க. அந்த அளவுக்கு மோசமான நிலைமை. அதனாலே தயவுசெய்து தண்ணீரைத் திறந்து விடும்படிக் கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன்.

பிற்பகல் 12-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைமீது தாங்கள் வழங்கிய சீரிய கருத்துகளுக்கு மிக்க நன்றி. (சிரிப்பு) திரு. ந. கணபதி.

***திரு. ந. கணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சிற்றூரின் மூலையிலே இருந்த சாதாரணத் தொண்டனுக்கு, சட்டமன்ற முகவரியைத் தந்திட்ட இதயதெய்வம் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் பாதத்தில் மலர் தூவி பணிவோடு வணங்குகிறேன். அடுக்கடுக்கான சோதனைகள், அக்கினிக் குண்டங்களாக வீசப்பட்ட வேதனைகள், பொய் வழக்கிற்காகச் சிறைவாசம், புரட்சித் தலைவரால் உருவாக்கப்பட்ட இயக்கத்தையும், கழக உடன்பிறப்புகளையும் காத்திட எத்தனையோ தியாகங்களைச் செய்து புதிய சரித்திரம் படைத்திட்ட இதயதெய்வம் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் பாதத்தில் மலர் தூவி பணிவோடு வணங்குகின்றேன்.

விழுப்புரம் மாவட்டம் வானூர் தனித் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக என்னைத் தேர்ந்தெடுத்த எனது தொகுதி மக்களுக்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். வறுமையை ஒழிக்கவும், வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், விவசாயிகள், தொழிலாளர்கள் வருமானத்தை அதிகரிக்கவும், தொழில் துறையில் நம் மாநிலத்தை முதல் மாநிலமாக ஆக்கவும், மகளிர் நல மேம்பாட்டிற்கு முன்னுரிமை அளிக்கவும், நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட அனைத்து அம்சங்களையும் எனது தொகுதி மக்கள் சார்பாக வரவேற்கின்றேன்.

இதயதெய்வம் புரட்சித் தலைவி டாக்டர் அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் தமிழ்நாட்டில் சிறு தொழில் நிலையை அறிய ஆய்வு செய்தபோது, கடந்த ஐந்தாண்டு தி.மு.க. ஆட்சியில் சிறு தொழில்களுக்கு விலை மற்றும் கொள்முதல் கொடுக்கப்பட்ட முன்னுரிமை பெருமளவு பாதிக்கப்பட்டதை அறிந்து புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசாணை (நிலை) எண் 75, நிதித் துறை, நாள் 19-12-1997 என்பதை ரத்து செய்து, விலை மற்றும் கொள்முதலில் சிறு தொழில்களுக்கு மீண்டும் முன்னுரிமை வழங்கினார்கள். அவர்களின் சாதனையை வரவேற்கின்றேன். அம்மா அவர்கள் சிறு தொழிலை முதன்மையாகக் கொண்டு ஆய்வு செய்தபோது, சிறு தொழிலில் முதலீடு செய்யும் ஒவ்வொரு கோடி ரூபாய்க்கும் 523 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க முடியும் என்றும், பெரிய தொழிலில் முதலீடு செய்யும் ஒவ்வொரு கோடி ரூபாய்க்கும் 100 நபர்களுக்கு மட்டுமே வேலைவாய்ப்பு அளிக்க முடியும் என்றும் கண்டறிந்தார்கள். புரட்சித் தலைவி டாக்டர் அம்மா அவர்களின் கண்டுபிடிப்பை வரவேற்கின்றேன். சிறு தொழில் சிறப்பாக முன்னேறும் வகையில்,



தொழில் அமைந்திருக்கும் இடத்திற்குத் தகுந்தாற்போல் முதல் மூன்று ஆண்டுகளுக்கு மின் கட்டணச் சலுகை முறையே, 40, 30, 20 சதவிகிதம் எனக் குறைத்தளித்து, சிறு தொழில் வளர்ச்சிக்குப் பாடுபடுகின்ற புரட்சித் தலைவி அம்மா அரசின் சாதனையை நான் வரவேற்கின்றேன்.

'இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் தமிழ்நாட்டை உருவாக்குவேன்' என்று சூளுரைத்த மேதகு ஆளுநர் உரையில் வடிவமைக்கப்பட்டுள்ள 15 அம்சத் திட்டங்கள் சிறப்பு அம்சமாகும். இதில் வாழ்க்கைப் பாதுகாப்பு அம்சம், கட்டமைப்பு வசதி மேம்பாடு, கிராமப்புற மற்றும் நகர்ப்புற அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருவதை சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் குறிக்கோளாகக் கொண்டு செயல்படத் திட்டம் தீட்டியது நமது புரட்சித் தலைவி அம்மா அரசுதான் என்று சொல்வதில் நான் பெருமை அடைகின்றேன்.

பால் பண்ணைத் துறையில் வேலைவாய்ப்பை அதிகரிக்கும் வகையில், 10,000 மகளிர் பயன்பெறும் வகையில், 145 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதில், தாயுள்ளத்தோடு எங்களது விழுப்புரம் மாவட்டத்தையும் சேர்த்துக் கொண்ட மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கிழக்குக் கடற்கரைச் சாலையிலும், புதுவை மாநிலத்தையொட்டியும் வானூர் தொகுதி இருப்பினும், பல்வேறு தொழில்கள் அமைந்திட மூலப் பொருள்களும், உழைக்கும் தொழிலாளர்களும் நிரம்ப இருப்பினும், எத்தகைய தொழிற்சாலையும் இல்லாமல் இருந்து வருகிறது. குறிப்பாக மரக்காணத்தை ஒட்டியுள்ள ஊரணி என்ற கிராமத்தில் வெள்ளை மணல் மிகுதியாகக் கிடைக்கிறது. இது பீங்கான் தயாரிக்கத் தேவையான மூலப் பொருளாக இருப்பதால் இப்பகுதியில் பீங்கான் தொழிற்சாலை ஒன்றை அமைத்துத் தர அம்மா அவர்களை வேண்டுகிறேன்.

உலகிலேயே மிகத் தரமான சிறந்த கறுப்புக்கல் வானூர் தொகுதியின் குன்னம் கிராமத்தில்தான் கிடைக்கிறது. இக்கிராமத்தில் மட்டுமல்லாமல், அருகில் உள்ள கரசானூர், சேமங்கலம், பரங்கனி, பெரும்பாக்கம், ஏரையூர், சிறுநாவூர் போன்ற கிராமங்களிலும் மிகுதியாகக் கறுப்புக்கல் கிடைக்கின்றது. அரசு நிறுவனமான 'டாமின்' மற்றும் சில தனியார் நிறுவனங்களும் அங்குக் கிடைக்கும் கறுப்புக்

கற்களைக் கறுப்பு வைரமாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து, அது அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகிறது. எனவே, இப்பகுதியிலே மேற்படி கற்களைப் பட்டை தீட்டும் தொழிற்சாலை ஒன்றை மேலும் நிறுவி அப்பகுதியின் வேலைவாய்ப்பைப் பெருக்கவும் அம்மா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

புதுவை-மைலம் சாலையில் திருச்சிற்றம்பலம் கிராமத்தையடுத்து சேதராப்பட்டு எனும் பகுதியில் புதுவை மாநிலத்தின் தொழிற்பேட்டை அமைந்துள்ளது. அதனையொட்டியுள்ள வானூர் தொகுதி கிராம மக்களின் உழைப்பால் உயர்ந்தும், செழித்தும் வருகிறது. எனவே, மரக்காணம்-பாண்டி சாலையில் தொழிற்பேட்டை ஒன்றை அமைத்து அப்பகுதி மக்களின் மேம்பாட்டிற்கும், நம் மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கும் உதவும் வகையில் அம்மா அவர்கள் நடவடிக்கை எடுக்கப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-45*

வேளாண்மையில் தன்னிறைவு கண்டிட பல திட்டங்களைக் கொண்டு வந்தும், முன்னுரிமை அளித்தும், தாயுள்ளத்தோடு செயல்படும் அம்மா அவர்கள் நீண்ட காலமாகப் பாசனத்திற்குப் பயன்பட்டு தற்போது தூர்ந்து கிடக்கும் மரக்காணம் மண்டவாய் புளியங்கால்வாயைச் சீரமைத்து அப்பகுதி விவசாய மக்களுக்குப் பசுமையை வழங்க வேண்டுகிறேன்.

வானூர் தொகுதியில் கல்லூரிகள், அரசு தொழிற்கல்விப் பயிலகங்கள் ஏதும் இல்லை. மகளிர் மேம்பாட்டிற்கு முன்னுரிமை அளித்து வரும் அம்மா அவர்கள் எனது தொகுதியில் மகளிருக்கென தனி மேல்நிலைப் பள்ளி ஒன்றும், மகளிர் கல்லூரி ஒன்றும் அமைத்து, அம்மா அவர்கள் புகழ் என்றும் நிலைக்க மனது வைக்க வேண்டுகிறேன்.

மருத்துவம், சுகாதார நலப் பணிகள் மூலைமுடுக்கில் உள்ள குக்கிராமங்களுக்கும், ஏழையெளிய விவசாய மக்களுக்கும் கிட்ட வேண்டும் என்று திட்டம் தீட்டிவரும் அம்மா அவர்கள் எனது தொகுதியில்—வெளித் தொடர்பற்ற கிராமங்கள் மிகுந்து இருக்கின்றன. அப்பகுதிகளில்—உள்ள மக்கள் நல்வாழ்வு உறுதி செய்யப்படும் வகையில் நாணக்கால்மேடு என்ற கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று அமைத்திட வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.



வானூர் தொகுதி வங்காள விரிகுடாக் கடலை கிழக்கு வாயிலாகக் கொண்டுள்ளதால், மீன் வளத்தையும், சிறந்த உப்பளங்களையும் கொண்டுள்ளது. மீன் பிடித் தொழில் அபிவிருத்திக்கும், உப்பள வாணிப மேம்பாட்டிற்கும் சிறிய துறைமுகம் ஒன்று அமைத்து மரக்காணத்தை ஒட்டியுள்ள பகுதிகளின் வளர்ச்சிக்கும், பொருளாதாரப் பெருக்கத்திற்கும் ஆவன செய்ய அம்மா அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

சட்டத்திற்கு வழிவகுத்து, சரிந்த தமிழ்நாட்டைத் தலைதூக்க வந்துவிட்ட எங்கள் தங்கத் தலைவி மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எனக்கு சட்டப் பேரவையில் பேச வாய்ப்பளித்ததற்கு மீண்டும் என் நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக இந்த மாணிக்கக் கோரிக்கைகள் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு (குறுக்கீடு) மானியக் கோரிக்கைகள்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கையை அவர் மாணிக்கத்திற்கு நிகராகக் கருதுகிறார். *(சிரிப்பு)*

**திரு. கா. கந்தசாமி:** அமெரிக்கா, சீனா போன்ற நாடுகள், அவர்கள் தயாரிக்கும் பொருட்களை விற்கின்ற கேந்திரமாக இந்திய நாட்டைப் பயன்படுத்துகின்றன. கோகா-கோலா, பெப்ஸி போன்ற வெளிநாட்டு பானங்கள் வந்த பிறகு, மதுரையில் புகழ்பெற்று விளங்கிய 'மாப்பிள்ளை விநாயகர்', கோவை, திருச்சி, சேலம் போன்ற நகரங்களில் நன்றாக விற்கப்பட்டு வந்த 'வின்சென்ட்' போன்ற குளிர்பானங்கள், சேலம் மாவட்டத்திலே விற்கப்பட்டு வந்த 'லவ் ஓ, லிவ் ஓ' போன்ற பானங்கள்—அந்தச் சிறிய தொழில்கள்—எல்லாம் நசுங்கி அந்தத் தொழில்கள் மூடப்படுகின்ற அளவுக்கு இன்றைக்கு ஒரு மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றன. W.T.O. ஒப்பந்தம் வந்த பிறகு, 10 பைசாவிற்கு விற்ற 'அவில்' மாத்திரை இன்றையதினம் 90 பைசா, 1 ரூபாய் என்ற அளவிற்கு விற்கின்றது. இது மாதிரி ஒரு மோசமான சூழ்நிலையை மாற்றி, சிறு தொழில்கள் நசுங்காமல், நலியாமல்

இருக்கின்ற நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

சிறு தொழில்களை ஆரம்பிக்கும்போது, சொந்த மூலதனம், அரசு நிதியுதவி, வங்கிக் கடன்களைப் பெற்று சிறு தொழில்களை ஆரம்பித்து வருகின்றார்கள். ஆனால் அந்தச் சிறு தொழில்களை ஆரம்பித்து, அதன் மூலம் உற்பத்தி செய்கின்ற பொருட்களை இன்றையதினம் விற்க முடியாமல் தொழிற்சாலைகளை மூடுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படுகின்றது.

நேற்றைய முன்தினம் கல்வித் துறை மானியக் கோரிக்கைக்கான விளக்கக் குறிப்பிலே ஆண்டுதோறும் 60,470 மாணவர்கள் பொறியியல் கல்லூரிகளில் சேர்க்கப்படுவதாகவும், 40,337 பேர் தொழில்நுட்பப் பயிலகங்களில் சேர்க்கப்படுவதாகவும், பட்டப் படிப்பு, முதுநிலைப் பட்டப் படிப்பு மற்றும் பிற உயர் கல்வி பெறுவோர் எண்ணிக்கை 4,30,841 பேர் எனவும் மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இவர்கள் தவிர, மேல்நிலைப் பள்ளிகளில் இறுதித் தேர்வு எழுதுவோர் எண்ணிக்கை 4 இலட்சத்து 30 ஆயிரம் எனவும், 10 ஆம் வகுப்பு இறுதித் தேர்வு எழுதுவோர் எண்ணிக்கை 7 இலட்சத்து 50 ஆயிரம், ஆக மொத்தம் 11 இலட்சத்து 80 ஆயிரம் மாணவர்கள் ஒவ்வோர் ஆண்டும் படித்துவிட்டு வெளியே வருகின்றார்கள்.

பிற்பகல் 12-50

இவர்கள் அனைவரும் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்கின்றார்கள். இவர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கின்ற முயற்சிகளை நீங்கள் எடுக்கவேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நீலகிரி மாவட்டத்திலே தலையாய பிரச்சினையாக இருப்பது தேயிலைப் பிரச்சினை. கடந்த மாதம் 4 ஆம் தேதி தேயிலைப் பிரச்சினையில் தேயிலை விலை உயர்வு வேண்டுமென்று நான்கூட கோத்தகிரி நகரத்திலே உண்ணாவிரதம் இருந்தேன். இன்றையதினம் நமது காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும் வெளிநடப்புச் செய்தார்கள். அவர்கள் உணர்வோடு எனது உணர்வுகளையும் இணைத்துக்கொள்கிறேன். வரலாறு காணாத வகையிலே பச்சைத் தேயிலை விலை குறைந்திருக்கிறது. 50 ஆயிரம் தேயிலை விவசாயிகள்



இதனை நம்பியிருக்கிறார்கள். ஒரு கிலோ தேயிலை கடந்த காலத்திலே 18 ரூபாய்க்கு விற்றது. இன்றைக்கு ரூ.5-50 காசுக்கு விற்கப்படுகிறது. தேயிலை விவசாயிகளின் கஷ்டங்களை உணர்ந்த நீங்கள் ஊட்டித் தேயிலையை அறிமுகப்படுத்தி, ஓரளவு நிவாரணம் வழங்கியிருக்கின்றீர்கள். ஆனாலும்கூட நிலைமை சீரடையவில்லை. நியாயமான விலை கிடைக்கவேண்டுமென்று சொன்னால் Tata, Hindustan Lever, Brooke Bond போன்ற கம்பெனிகளின் ஆதிக்கத்தை நீங்கள் உடைத்தாகவேண்டும். தமிழக அரசுக்குச் சொந்தமான Incoserve-தான் குன்னூரிலே இருக்கின்ற ஏல மையத்திலே, வாரா வாரம் நடக்கின்ற ஏல மையத்திலே, ஏலத்தை முதன்முதலிலே ஆரம்பிக்கின்றது. அவர்கள் ஆரம்பிக்கின்றபோது, 10 கிலோ பச்சைத் தேயிலை 35 ரூபாய் என்று ஆரம்பிக்கின்றார்கள். அப்படியில்லாமல் 10 கிலோ பச்சைத் தேயிலையை 55 ரூபாய் என்று நீங்கள் ஆரம்பித்தீர்களேயானால், நிச்சயமாக நியாயமான விலை கிடைப்பதற்கு வாய்ப்புகள் ஏற்படும். மத்திய அரசு 1 கிலோ தேயிலைக்கு 2 ரூபாய் மானியம் கொடுத்து வந்தது. ஆனால், உங்கள் கொள்கை விளக்கக் குறிப்பிலே அந்த 2 ரூபாய் மானியம் தற்போது கொடுப்பது போலக் கூறப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த மானியத்தை மத்திய அரசு நிறுத்திவிட்டது. இப்பொழுது அந்த மானியத்தைக் கொடுப்பதற்கு மாநில அரசானது மத்திய அரசை வலியுறுத்தவேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். தேயிலைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக Mishra Committee என்ற ஒரு Committee அமைக்கப்பட்டது. அந்தக் கமிட்டியின் அறிக்கை கொடுக்கப்பட்டு 2 வருட காலம் ஆகியும்கூட, அந்தக் கமிட்டியின் அறிக்கை வெளியிடப்படவில்லை. எனவே, அந்தக் கமிட்டியின் அறிக்கையை வெளியிடவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்வதோடு, கேரள மாநிலத்தில் ரப்பருக்குக் குறைந்தபட்ச விலையை நிர்ணயம் செய்யவேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்தி அந்த மாநில சட்டசபையிலே தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றார்கள். அதேபோன்று ஒரு தீர்மானத்தை—தேயிலைக்கும் நியாயமான விலை கிடைக்கச் செய்ய வேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்தி ஒரு தீர்மானத்தை —நிறைவேற்ற வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். ஒரு டி.வி. விளம்பரத்திலே தண்டி உப்பு என்று விளம்பரம் செய்யப்படுகிறது. மகாத்மா காந்தியடிகள் அவர்கள் சுதந்திரப் போராட்டத்தின்போது உப்பு விலையைக் குறைப்பதற்காக தண்டி யாத்திரை செய்தார். அந்தத் தண்டியின் பெயராலே இன்றைக்கு

உப்பு விளம்பரம் டி.வி.க்களிலே செய்யப்படுகிறது. அந்த உப்பு நன்றாக இனிக்கிறது என்று வேண்டுமானால்கூட அந்த டி.வி. விளம்பரம் செய்யட்டும். நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் அந்த தண்டி விளம்பரக்காரர்கள், 'டீ குடிக்காதீர்கள்' என்று விளம்பரம் செய்கிறார்கள். இது நீலகிரி மாவட்டத்திலே தேயிலை விவசாயிகளிடத்திலே ஒரு கொந்தளிப்பை ஏற்படுத்துகின்றது. இந்த விளம்பரத்தை மாநில அரசு தடை செய்ய வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

இன்றையதினம் இந்த மாநில அரசு தேயிலை விவசாயிகளுக்காக இன்னின்ன காரியங்களைச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்ற அதே சூழ்நிலையிலே, மகளிருக்கு சிறு தொழில்கள் மூலம் வேலைவாய்ப்பினை ஏற்படுத்துகின்ற அளவிற்கு நீலகிரி மாவட்டத்திலே ஒரு நல்ல காரியம் நடைபெற்று வருகின்றது. மகளிர் சுய உதவிக் குழுக்கள் 2000 குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த 2,000 குழுக்களிலே 30,000 பெண்கள் உறுப்பினர்களாக இருக்கின்றார்கள். அவர்களுக்கு 20 கோடி ரூபாய் மதிப்புள்ள கான்டிராக்ட் வேலைகள் கொடுக்கப்படுகின்றன. மகளிருக்கு 33 சதவிகிதம் சட்டமன்றத்திலும், நாடாளுமன்றத்திலும் கொடுக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை (மணியடிக்கப்பெற்றது) வைத்திருக்கின்ற இந்த நேரத்தில், இந்த மாவட்டத்தில் 20 கோடி ரூபாய் மதிப்புள்ள கான்டிராக்ட் வேலைகள் பெண்களுக்காகக் கொடுக்கப்படுகின்றன. இதுநாள்வரை இந்த வேலைகளைச் செய்து கொடுத்த ஆண்கள், இந்தப் பெண்களைத் துரத்திக்கொண்டு ஓடி, இந்த வேலைகளையெல்லாம் எங்களுக்குக் கொடுங்கள் என்று அவர்கள் கெஞ்சுகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது.

*பிற்பகல் 12-55*

அதுமட்டுமல்லாமல், மகளிர் நியாய விலைக் கடைகளை நடத்துவதற்கும், பால் பூத்துகளை நடத்துவதற்கும் அங்கே ஏற்பாடு செய்திருக்கின்றார்கள். அதுபோன்ற ஒரு நிலை பிற இடங்களுக்கும் பரவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறு தொழில் துறை கொள்கை விளக்கக் குறிப்பில், முதல் பக்கத்தில், 'நவீன உயர் தொழில் நுட்பம், தகவல் தொழில் நுட்பம் ஆகியன சிறு தொழில் வளர்ச்சிக்குத் தூண்டுகோலாக



அமைந்துள்ளதாகக்' கூறப்பட்டுள்ளது. தகவல் தொழில்நுட்பத் துறை என்பது நாட்டின் வளர்ச்சிப் பணிகளை உடனுக்குடன்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கந்தசாமி, அந்த வாக்கியத்துடன் முடியுங்கள். இன்னும் 5 பேர் பேசவேண்டும். ஒரு மணிக்கு அமைச்சர்கள் பதில் சொல்லவேண்டும்.

**திரு. கா. கந்தசாமி:** தகவல் தொழில்நுட்பத் துறை என்பது, நாட்டு மக்களுக்குத் தகவல்களை அவ்வப்போது தெரிவிக்கின்ற துறையாகும். ஆனால், தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் 1998-99 ஆம் ஆண்டறிக்கை இந்த மாதம் 9 ஆம் தேதிதான் இந்த அவையிலே வைக்கப்பட்டுள்ளது. மூன்று வருடம் காலதாமதமாகி ஏன் அந்த ஆண்டறிக்கை வெளியிடப்பட்டது என்பதை நிதியமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று பணிவன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியுங்கள், முடியுங்கள். அடுத்து, திரு. ஆர். கிருஷ்ணன்.

**திரு. கா. கந்தசாமி:** ஒரேயொரு நிமிடம் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, வேண்டாம், நேரம் ஆகிவிட்டது. (குறுக்கீடு) இல்லை, இல்லை, இன்னும் 5 உறுப்பினர்கள் பேசவேண்டும். திரு. ஆர். கிருஷ்ணன்.

**திரு. கா. கந்தசாமி:** ஒரேயொரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். திரு. கிருஷ்ணன்.

**திரு. ஆர். கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய மானியக் கோரிக்கைகளில் பேசுவதற்கு வாய்ப்பினை அளித்த தங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 2002-2003 ஆம் ஆண்டிற்கான சிறு தொழில்கள் துறை, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை, கதர் கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் மற்றும் எரிசக்தித் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகச் சில கருத்துகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சாதாரண அருந்ததியர் சமுதாயக் குடும்பத்தில் பிறந்த ஏழையான என்னை இந்த மாமன்றத்திற்கு அனுப்பி வைத்த எனது பாதுகாவலர், நிறுவனத் தலைவர், சமூக நீதிக் காவலர் டாக்டர் அய்யா அவர்களுக்கும், எங்கள் இளைய தளபதி, பசுமைத் தாயகத்தின் தலைவர் டாக்டர் சின்ன அய்யா அவர்களுக்கும், எங்கள் பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவரும், சட்டமன்றக் கட்சித் தலைவருமான தியாகச் செம்மல் ஜி.கே.எம். அவர்களுக்கும், எனது தொகுதி மக்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது மாநிலத்தில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக பழமை வாய்ந்த தொழில் நெசவுத் தொழிலாகும். இலட்சக்கணக்கான பேர் இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளார்கள். ஒவ்வோர் ஆண்டும் கவர்னர் உரையிலும், பட்ஜெட் உரையிலும் கைத்தறித் தொழில் பற்றியும், நெசவாளர்கள் நலன்கள் குறித்தும் குறிப்பிடப்பட்டு வந்திருக்கிறது. இதிலிருந்து இந்தத் துறையின் முக்கியத்துவமும், நெசவாளர்கள்மீது அரசு கொண்டுள்ள அக்கறையும் புலப்படும். ஆனால் இந்த ஆண்டு கவர்னர் உரையிலும், நிதியமைச்சரின் பட்ஜெட் உரையிலும் கைத்தறி பற்றி எந்தக் குறிப்பும் சொல்லப்படவில்லை. செலவினங்களுக்கான பட்டியலில் 'கைத்தறி மற்றும் கதர்' என்ற தலைப்பில் மொத்தம் 6 இனங்கள் இடம் பெற்றிருக்கின்றன. 2001-2002 ஆம் ஆண்டில், இந்த இனங்களுக்கு மொத்தம் 257 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், 2002-2003 ஆம் நிதியாண்டில் 128 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதாவது, கடந்த ஆண்டைக் காட்டிலும், இந்த ஆண்டு கைத்தறித் துறைக்கு 50 சதவிகித நிதி குறைக்கப்பட்டிருக்கிறது. ரூ.129 கோடி அளவிற்கு நிதி குறைக்கப்பட்டிருப்பது ஏன் என்று பார்த்தபோது, இலவச வேட்டி-சேலைத் திட்டம் என்று போடப்பட்ட இடத்தில், இந்த ஆண்டிற்கு நிதி ஒதுக்கப்படவில்லை. அதாவது, அமரர் எம்.ஜி.ஆர். அவர்கள் அறிமுகப்படுத்திய இலவச வேட்டி-சேலைத் திட்டத்தை நிறுத்திவிட்டது மிகுந்த வேதனையளிக்கிறது. இலவச வேட்டி-சேலைத் திட்டத்தை ரத்து செய்ததால் 1-1/2 கோடி ஏழைத் தாய்மார்களும், பெரியவர்களும் வருடத்தில் ஒரு நாளாவது புத்தாடை அணிந்து மகிழ்வது இல்லாமல் போய்விட்டது. "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்று அண்ணா சொன்னார். "இன்று நான் ஏழையெளிய மக்களின் சிரிப்பில், வாழ்வின் அர்த்தத்தையே காண்கிறேன்" என்று நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் 8-3-1992-ல் ஒரு முறை குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், ஏழைகளின் இலவச வேட்டி-சேலை பறிபோய்விட்டது மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது.



பிற்பகல் 1-00

இலவச வேட்டி-சேலை 1½ கோடி ஏழையெளியவர்களுக்கு சந்தோஷத்தைக் கொடுத்து வந்தது என்பதுடன், கைத்தறி நெசவாளர்களுக்கும் வேலைவாய்ப்பினை உருவாக்கிக் கொடுத்தது. இன்றைக்குக் கைத்தறித் துணித் தேக்கத்தால், மூடுவிழாவை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மேலும் நசிந்து போய்விடும். தமிழகத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களில் சுமார் 500 கோடி ரூபாய் அளவிற்குத் துணிகள் தேங்கிக் கிடப்பதாகக் கூறுகிறார்கள். இலவச வேட்டி-சேலை வழங்கி வந்த திட்டம், துணித்தேக்கத்தை ஓரளவு குறைத்து வந்தது. இனி துணித் தேக்கம் அதிகரிக்கும். நெசவுத் தொழிலாளர்கள் வேலை இழப்பார்கள். எனவே, இலவச வேட்டி-சேலைத் திட்டத்தை ரத்து செய்யாதீர்கள் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறித் துணிகள் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் மூலம் கொள்முதல் செய்யப்படுகின்றன. கொள்முதல் செய்யப்பட்ட துணிகளுக்குப் பெருமளவில் பணம் பட்டுவாடா செய்யப்படாமல் இருப்பதாகச் சொல்கிறார்கள். அந்த பாக்கியையும் உடனடியாகக் கொடுக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறித் துணிகளுக்கு வழங்கப்படும் தள்ளுபடி மானியத் தொகையும், கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 6 கோடி ரூபாய் குறைக்கப்பட்டிருக்கிறது. செலவுக் குறைப்பு என்ற போர்வையில், ஏழையெளியவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் கைத்தறித் துணிக்கான தள்ளுபடிச் சலுகையையும் குறைப்பது என்பது மக்களுக்குப் பெருத்த ஏமாற்றத்தை அளிக்கிறது.

Powerloom என்று சொல்லப்படும் விசைத்தறித் தொழில் தற்போது நலிவடைந்துள்ளது. அந்தத் தொழிலில் ஈடுபட்டு வருபவர்கள் வாழ்வும் இன்று கேள்விக்குறியாகிவிட்டது. கைத்தறித் தொழிலுக்கும், Powerloom தொழிலுக்கும், கதர் உற்பத்திக்கும் அரசு புத்துயிர் ஊட்ட வேண்டும். தற்போது தமிழகத்தில் விசைத்தறிக்கான மின் கட்டணம் ரூபாய் 1.75 முதல் ரூபாய் 3.25 வரை tariff முறையில் வசூல் செய்யப்படுகிறது. மின் கட்டணம் குறைக்கப்பட வேண்டும். சிட்டா நூலுக்கு அரசு அறிவித்துள்ள 2 சதவிகித விற்பனை வரியை ரத்து செய்ய வேண்டும். மத்திய அரசு விதித்துள்ள 9.2 சதவிகித கலால் வரியை ரத்து

செய்ய மத்திய அரசுக்குத் தொடர்ந்து பரிந்துரை செய்ய வேண்டும். நெசவாளர்களுக்குக் கூலி உயர்வு கிடைக்க அரசு வழிவகை செய்ய வேண்டும். ஆந்திர மாநிலத்தில் விசைத்தறி நெசவாளர்களுக்கு வங்கிகளில் பெற்ற கடனுக்கு அனைத்து வட்டிகளையும் ரத்து செய்து, அசல் தொகையிலும் 50 சதவிகிதம் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. கைத்தறி, கதர் அனைத்தையும் போர்க்கால அடிப்படையில் கொள்முதல் செய்து, சங்கத்திடம் உடனடியாகப் பணம் பட்டுவாடா செய்து, நெசவாளர் குடும்பத்திற்குக் கூலி கிடைக்க ஆவன செய்ய வேண்டுமாயக் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிலுவையில் உள்ள rebate தொகைகளையும், வட்டி மானியத் தொகைகளையும் உடனடியாக அனுப்பி வைத்து, சங்கம் தொடர்ந்து நடைபெற வழிவகை செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். கைத்தறி நெசவாளர் குடும்பத்தில் படிக்கின்ற மாணவ, மாணவிகளுக்கு உயர்நிலைப் பள்ளி முதல் கல்லூரிப் படிப்பு வரை பாட வகுப்புக்கு ஏற்றவாறு கருணைத் தொகை (Stipend) வழங்க வேண்டும்.

கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டத்தையும், வீடுகள் பணியிடத் திட்டத்தையும் மேலும் விரிவுபடுத்த வேண்டும் என்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன். நலிந்து கொண்டிருக்கும் கூட்டுறவு நூற்பாலைகளை நவீனப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். கைத்தறிகளைப் படிப்படியாக விசைத்தறிகளாக மாற்றும் திட்டத்தின்கீழ், மேலும் பல கைத்தறிகளை விசைத்தறிகளாக மாற்ற வேண்டும். விசைத்தறிப் பிரிவுகளுக்குப் பயன் அளிக்கும் வகையில் மின் கட்டண விகிதத்தைக் குறைக்க வேண்டும். நெசவாளர்கள், கிராமத் தொழிலில் ஈடுபட்டு இருப்பவர்கள் ஆகியவர்கள் கடன் பெறுவதில் பல சிக்கல்கள் இருப்பதால், அச்சிக்கல்களைப் போக்கும் வகையில் சுலபமான மற்றும் குறைந்த வட்டியில் கடன் அளிக்க தனி வங்கியை ஏற்படுத்த வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன். கைத்தறி மேம்பாட்டு மையங்களின் செயல்பாடுகளையும் விரிவுபடுத்த வேண்டும்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

உலகளவில் நெசவுத் துறையின் பொருள்களின் ஏற்றுமதியைப் பெருக்குவதற்குத் தகுந்த திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். இதற்கென்று உலகளவில் நமது பொருட்களுக்கு நிலவக்கூடிய அங்காடி



நிலவரத்தை ஆராய்ச்சி செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டு, அந்த ஆராய்ச்சியின் பயனாகப் பொருட்களின் தரம், வடிவமைப்பு ஆகியவற்றை மாற்றி, ஏற்றுமதியின் அளவினை உயர்த்த வேண்டும்.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பாடுகளை இழந்து நலிந்து கொண்டிருக்கின்றன. அவற்றைக் காப்பாற்ற நிதி உதவி, மானியங்கள், நல்ல மேலாண்மைத் திறன் ஆகியவற்றை அரசு வழங்க வேண்டும். ரூ. 3000-க்கு மேல் விலையுள்ள பட்டுச் சேலைகளுக்கு (மணியடிக்கப்பெற்றது) அரசு விற்பனை வரி விதித்துள்ளது. இது, இப்பொருள்களின் விற்பனையைப் பாதித்து ஒரு மந்த நிலையை உருவாக்கும். ஏற்கெனவே நலிந்து வரும் இந்தத் தொழில் வளர்வதற்கு இந்த நடவடிக்கை உதவாது. எனவே, அரசு இந்த விற்பனை வரியை ரத்து செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய காலகட்டத்தில், சம்சாரம் இல்லாமல் நிறையப் பேர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், மின்சாரம் இல்லாமல் யாரும் வாழ முடியாது. இன்று எல்லாவற்றிற்கும் மின்சாரம் தேவைப்படுகிறது. பட்டிதொட்டியில் வாழும் பாமர மக்களிலிருந்து பணக்காரர்கள் வரை பயன்படுத்தும் மின்சாரத்திற்கு இந்த ஆண்டு நமது அரசு மானியத்தைக் குறைத்துள்ளதும் நிதி குறைத்துள்ளதும் மிகுந்த வருத்தமளிக்கிறது.

பிற்பகல் 1-05

மின்சாரக் கட்டணத்தைத் தமிழக அரசு உயர்த்தி உள்ளதால், அனைத்துத் தரப்பு மக்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். தற்போது மீட்டர் பொருத்த வேண்டும் என்று செய்தி வந்துள்ளது. இப்படி மானியத்தைக் குறைத்தும், கட்டணத்தை உயர்த்தியும் மீட்டர் பொருத்தும் செய்தி; இதையெல்லாம் பார்த்தால் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் பறிபோய் விடுமோ என்ற அச்சம் இன்று எல்லோருக்கும் வந்துள்ளது. இனி எப்போதும், எந்தச் சூழ்நிலையிலேயும், இலவச மின்சாரத்தை ரத்து செய்ய மாட்டோம் என்று அரசு அறிவிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இலவச மின்சாரம் தொடர்ந்து வழங்கப்படும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தச் சபையில் அறிவித்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் சீக்கிரம் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஆர். கிருஷ்ணன்:** தொடர்ந்து வழங்குவதற்கு மிக்க நன்றி. மின் உற்பத்திக்கு நிறைய வாய்ப்புள்ளது. அரசு அதிக அக்கறை காட்ட வேண்டும். எங்கள் தலைவர் தியாகச் செம்மல் ஜி.கே.எம். அவர்களின் பென்னாகரம் தொகுதியில் ஒகேனக்கல் நீர்வீழ்ச்சியில் குறைந்த செலவில் அதிக அளவு மின் உற்பத்தி செய்ய வாய்ப்பு உள்ளது. கரும்புச் சக்கையிலிருந்து மின் உற்பத்தி செய்தால், மின் வருவாயோடு, கரும்பு விவசாயிகளும் பயன்பெறுவார்கள். காற்றாலை மின் உற்பத்தி, குப்பைகளிலிருந்து (மணியடிக்கப்பெற்றது) மின் உற்பத்தி ஆகியவற்றில் அரசு ஆர்வம் காட்ட வேண்டும். ஆகவே, கிராமப்புறத்தில் உள்ள ஏழையெளியவர் வீடுகளுக்கு, அமரர் எம்.ஜி.ஆர். அவர்கள் வழங்கியதுபோல் இலவச மின்சாரம் வழங்க வேண்டுமாய் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளின் பம்புசெட்டுகளுக்கு ரூபாய் 25 ஆயிரம் என்பதைக் குறைத்து, ரூபாய் 10 ஆயிரம் செலுத்தினாலே போதும் என்றும், செலுத்திய உடனேயே மின் இணைப்புக் கொடுக்க வேண்டும் என்றும் அதற்கு அரசு ஆணை பிறப்பிக்கவும் வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு. (குறுக்கீடு)

**திரு. ஆர். கிருஷ்ணன்:** சீக்கிரம் பேசி முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை. 11 நிமிடங்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடு) சரி, சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ஆர். கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியைப் பற்றிக் கொஞ்சம் சொல்லிவிடுகிறேன். என்னுடைய அந்தியூர் தொகுதி மிகவும் வறட்சியான தொகுதியாக



இருக்கிறது. அங்குத் தண்ணீர் இல்லாமல் பொது மக்கள் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணையுள்ளத்தோடு, எங்கள் தொகுதி வறட்சியான தொகுதியாக இருப்பதால், அங்கே தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டுமாய்ப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். மேலும், எங்கள் பகுதியில் பர்கூர் மலைப்பகுதி, 25 ஆயிரம் மக்கள் தொகையைக் கொண்ட மலைப்பகுதியாக இருக்கிறது. இந்த மலைவாழ் மக்களுக்காக ஒரு சுகாதார நிலையம்தான் இருக்கிறது. பர்கூர் மலைப்பகுதியிலேதான் அது இருக்கிறது. ஆகவே, கிட்டத்தட்ட 250 மைல் சுற்றளவில் இருக்கின்ற பெண்கள் எல்லாம் இன்றைக்கு ஒத்தையடிப் பாதையில் ஆஸ்பத்திரிக்கு வரவேண்டுமென்றால்கூட அவர்கள் இப்போது மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, பர்கூர், மலைப்பகுதியை மையமாக்கி, தேவர்மலையில் ஒரு துணைச் சுகாதார நிலையமும், தட்டக்கரையிலே ஒரு சுகாதார நிலையமும் இருந்தால், கிட்டத்தட்ட 25 ஆயிரம் மக்கள் தொகையைக் கொண்ட அந்த மலைவாழ்ப்பகுதி மக்களுக்கு மிகுந்த நன்மையாக இருக்கும் என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு.

* **திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை எண்கள் 13, 17 மற்றும் 42 ஆகியவற்றில் என்னைப் பேச அழைத்ததற்கு நன்றியைக் கூறி, எனது கருத்துகளைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நீலகிரி மாவட்டத்திலே உள்ள 65 ஆயிரம் சிறு, குறு விவசாயிகள், முன்பு கிழங்கு, காய்கறிகளை எல்லாம் பயிர் செய்து, இப்போது தேயிலையைப் பயிர் செய்திருக்கும்போது, ஒரு கிலோ 15 ரூபாய்க்கு விற்றுக் கொண்டிருந்த தேயிலை இப்போது 5 ரூபாய்க்கும் குறைவாக உள்ள காரணத்தினால், விவசாயிகள் பல போராட்டங்களை நடத்தி மிகவும் அவலமான ஒரு நிலையிலே இருக்கிறார்கள். இலட்சத்திற்கும் மேற்பட்ட தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் அவர்களுடைய குடும்பங்களைக் கவனிக்க முடியாமல் இருக்கும் அவலமான நிலையை நாம் பார்க்கிறோம். குறைந்தபட்ச ஆதரவு நிர்ணய விலையான, ஒரு கிலோ தேயிலைக்கு 15 ரூபாயை நாங்கள் கேட்பதில் எந்தத் தவறும் கிடையாது. நிதிநிலை அறிக்கையிலே, பத்தி 67-ல் 'தக்க நடவடிக்கை எடுக்கப்படும்' என்று சொல்லி, மாண்புமிகு முதலமைச்சரவர்கள்

புதியதாக ஒரு ஏல மையம் அமைக்க இருப்பதாக அறிவித்து இருப்பதற்கு, மாவட்ட மககளின் சார்பாக நன்றியைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்தியாவிற்கு வெளிநாட்டிலேயிருந்து வரும் தேயிலையை முழுமையாக ரத்து செய்தே ஆக வேண்டும் என்கின்ற நடவடிக்கையை எடுத்தேயாகவேண்டும். கலால் வரி 150 சதவிகிதம் வரை நாம் போடலாம். W.T.O. ஒப்பந்தத்தின்படி அந்த 150 சதவிகிதம் போட்டால்தான் நம்முடைய தேயிலை உற்பத்தியாளர்களுக்கு ஒரு விடிவுகாலம் வரும் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தேயிலைச் சட்டம் 1953, பிரிவு 30-ன்படி தேயிலைக்கு விலை நிர்ணயம் செய்ய மத்திய அரசுக்கு எல்லா வகை உரிமையும் உண்டு. The Tea Act 29/1953—அதை வலியுறுத்தும் வகையிலே நம்முடைய சட்டமன்றத்தில் கண்டிப்பாக ஒரு தீர்மானம் நிறைவேற்றி, மத்திய சர்க்காரை வலியுறுத்த வேண்டுமென்று ஒரு கோரிக்கையை வைக்கிறேன்.

பிற்பகல் 1-10

கேரள மாநிலத்திலே ஏப்பருக்காக அந்த மாதிரி ஒரு போராட்டம் நடத்தி, சட்டமன்றத்தில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, அதற்குப் பின்பு கடைசியில் அவர்கள் வெற்றியடைந்ததை நாம் பார்க்க வேண்டும். அதேமாதிரி, இப்பொழுது Assam மாநிலத்தில் 'Commodity News' என்ற பத்திரிகையிலே 'Assam to fix minimum rate for green tea leaves' என்று, கௌஹாத்தியிலே டிசம்பர் மாதம் 3 ஆம் தேதி 2001-ல் ஓர் அறிவிப்புத் தந்திருக்கிறார்கள். அவர்களும் அந்த நடவடிக்கையை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். அதே மாதிரி நாமும் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். Rameshram Mishra Committee' அறிக்கை இதுவரை வெளியிடப்படவில்லை. இருந்தாலும் கூட, நான் அதன் உள்ளே போகவில்லை. விவசாயிகளிடமே அந்த அறிக்கை இருக்கிறது என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நூற்றுக்கணக்கான விவசாயிகளிடம் இந்த அறிக்கை இருக்கிறது.

(பேரவைத் துணைத் தலைவருக்கு அறிக்கை காண்பிக்கப்பட்டது.)

ஆனால் அரசு அதிகாரபூர்வமாக இந்த அறிக்கையை வெளியிட வேண்டும். முன்பு இருந்த தி.மு.க. அரசு 30-6-2000ல் அறிக்கையைப் பெற்றுக்கொண்டது. ஆனால் அரசு அதிகாரபூர்வமாக அறிவிக்க



வேண்டும். அந்த மிஷ்ரா அறிக்கையின் மூலமாக விவசாயிகளுக்கு நன்மைகள் அதிகம் இருக்கின்றன. ஆகவே, அதை உடனடியாக அறிவிக்க வேண்டும் என்றும், பெர்குசன் கமிட்டி என்று ஒரு Committee அறிக்கையைத் தந்தார்கள். அந்தக் கமிட்டியினுடைய விவரத்தையும் அறிவிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

தேயிலையின் விற்பனை மூலமாக நமது நாட்டுக்கு மூவாயிரம் கோடி ரூபாய் அந்நியச் செலாவணி மூலம் நாம் பெற்றுக் கொண்டிருக்கிறோம். நமக்கு கிலோவுக்கு 15 ரூபாய் பச்சைத் தேயிலைக்கு என்று சொன்னால் தேயிலைத் தூளுக்கு 1 கிலோ 60 ரூபாய் என்ற வகையிலே அது 150 கோடிக்குள்ளேதான் வரும். அதனால், நமது நீலகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து மக்களையும் நாம் காப்பாற்ற முடியும். நாங்கள் தமிழ்நாட்டில் இருந்தாலும்கூட, தேயிலை மத்திய சர்க்காருடைய துறையின்கீழ் வரும் பொருளாக இருந்தாலும்கூட, தமிழ்நாடு அரசுதான் நீலகிரி மாவட்டத்திலுள்ள மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற ஒரு கடமை இருக்கிறது. எந்த வகையிலும் நாங்கள் காப்பாற்றப்படவேண்டும். எங்களுக்கு ஒரு வேளையாவது சாப்பாட்டிற்கு வழி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். மத்திய சர்க்கார், அவர்கள் முன்பு கொடுத்த 2 ரூபாய் மானியத்தை நவம்பர் மாதம் 2000 வரையில் தந்தார்கள். அதற்குப் பின்பு தரவில்லை. அதை மீண்டும் தருவதற்கு நமது அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். கொச்சின் துறைமுகத்தில் மட்டும் நவம்பர் மாதத்தில் 20 இலட்சம் கிலோ தேயிலைத் தூள் இறக்குமதி ஆகி இருக்கிறது. முன்பெல்லாம் கல்கத்தா துறைமுகம் ஒன்றில்தான் இறக்குமதி இருந்தது. இப்பொழுது, கொச்சி, மும்பை, தூத்துக்குடி, சென்னை போன்ற துறைமுகங்களிலும் வர ஆரம்பித்துவிட்டது. டாட்டா கம்பெனி உலகத்திலேயே 2ஆம் நிலையிலான 'TETLEY Tea'-ஐ-கோடிக்கணக்கான ரூபாய்க்கு—1,890 கோடி ரூபாய் கொடுத்து வாங்கியிருக்கிறார்கள். அந்த brand name-க்காக. உலக அளவிலே தேயிலை விற்பனை' நன்றாகப் போகிறது. நமது நீலகிரி மாவட்டதிலும்கூட ஒரு காட்டேரி தேயிலைத் தோட்டத்தில் 401 ரூபாய்க்கு 1 கிலோ தேயிலைத் தூள் விற்பனையாகிறது என்று பத்திரிகைச் செய்தி வருகிறது. நாங்கள் கேட்பதெல்லாம், ஒரு கிலோ பச்சைத் தேயிலைக்கு 15 ரூபாய் என்றால், 60 ரூபாய் ஒரு கிலோ தேயிலைத் தூளுக்குத் தந்தால் போதும்.

இன்றையதினம் சட்டமன்ற விடுதி வளாகத்திலுள்ள அண்ணா நிலையத்தில் ஒரு கோப்பை டீக்கு 5 ரூபாய் 50 பைசா வாங்குகிறார்கள். அந்தமாதிரி வாங்கினால் 150 ரூபாய் வரை தேயிலைக்கு விலை கிடைக்கும். நாங்கள் கேட்பதெல்லாம் 60 ரூபாய் மட்டும். 4 கிலோ பச்சை தேயிலையை அரைத்தால் ஒரு கிலோ தூள் வரும். 1 கிலோவுக்கு 60 ரூபாய் கொடுத்தால் இந்த 65,000 சிறு, குறு விவசாயிகள் நல்ல நிலையில் இருப்பார்கள் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எவ்வாறு TETLEY Tea-க்கு டாடா கம்பெனியினர் கோடிக்கணக்கான ரூபாயை brand name-க்காக வாங்கியிருக்கிறார்களோ—அந்தத் தேயிலைத் தூள் உலக அளவில் நன்றாக விற்பனையாகிறது. பெப்சியைவிட, Coco Cola-வை விட, மற்ற குளிர்பானங்களைவிட தேயிலையை மக்கள் நன்றாக விரும்பிச் சாப்பிடுகிறார்கள். நாங்கள் மட்டும் என்ன பாவம் செய்தோம் என்பதை நீங்கள் உணர்ந்தாக வேண்டும். Incoserve—தொழில் கூட்ட ஆணையம் ஏல மையத்திற்கு broker licence வாங்க வேண்டும். State Trading Corporation-ம் ஏல மையத்திற்கு வர வேண்டும். நமது Incoserve அங்கு broker ஆக வந்தால், இங்குள்ள 4, 5 broker-களை அடக்கி வைத்துவிடலாம். அவர்கள் அந்த இடத்திற்கு, ஏல மையத்திற்கு வருவதற்கு முன்பாக, விலையை நிர்ணயம் செய்துவிட்டு வருகிறார்கள். 5 வினாடிகளுக்குள் அந்த ஏல hammer தட்டப்படுகிறது. அடுத்த விலையை உயர்த்துவதற்கு விடுவதில்லை. நமது எம்.பி.க்கள், எம்.எல்.ஏ.க்கள் ஒருவராலும் அங்கு ஏல மையத்திற்கு போக முடியாது. அந்த அளவிற்கு அவர்களுக்காகவே ஏல மையம் வைத்திருக்கிறார்கள். புதிய ஏல மையம் வரும்போது, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அங்கு வரவேண்டும். மக்களுக்காக நாங்கள் இருக்கிறோம். அந்த வகையிலே இந்த 5, 6 brokers மட்டிலும் ஏலம் கோருவார்கள். இவர்களுக்காக தேயிலை வாரியம்கூட இதில் ஈடுபட்டிருக்கிறது. அவர்களுக்கெல்லாம் தேயிலை வாரியம் உதவி செய்யக்கூடாது. அவர்கள் கோடிக்கணக்கிலே பணம் சம்பாதித்துக் கொண்டிருக் கிறார்கள். இதற்கு முன்பு மாண்புமிகு ஆர். பிரபு அவர்கள் அமைச்சராக இருந்தபோது, டில்லிக்கு 30 விவசாயிகளை அழைத்துச் சென்று, அன்றையதினம் மாண்புமிகு பிரணாப் முகர்ஜி அவர்களைச் சந்தித்து, அந்த multi-millionaires, multi-nationals, வியாபாரிகளை எல்லாம் கூப்பிட்டு, 'கோடிக்கணக்காகப் பணம் சம்பாதித்துக் கொண்டு இருககிறீர்கள். நீலகிரி மக்களை வாழவைப்பதற்கு நீங்கள் ஒரு வாரத்திற்குள் தேயிலை விலையை உயர்த்தவில்லையென்றால் நாங்கள் உங்கள் உரிமத்தைக் கேன்சல் செய்து விடுவோம் என்று சொன்ன



பிறகு, மீண்டும் தேயிலைக்கு விலை வந்தது. அதேமாதிரி, இப்போது நாமும் இதைச் செய்ய வேண்டும். ஏல மையத்தில் நிகழும் முறைகேடுகளை அகற்ற மேலும் அதிக அளவில் புரோக்கர்களுக்கு லைசென்சு கொடுக்க வேண்டும். இப்போது. 4, 5, broker-கள் மட்டுமே ஏல மையத்தை ஆண்டுகொண்டிருக்கிறார்கள். ஊட்டி டீ மிகவும் அதிக அளவில் விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. சப்ளை செய்ய முடியவில்லை. ஆனால், நம் மாநிலத்தில் உள்ள 27,600 பொது விநியோகக் கடைகளுக்கும் ஊட்டி டீயை விற்பனைக்காகக் கொடுக்க வேண்டும். இந்தியா முழுவதிலுமுள்ள ரேஷன் கடைகளுக்கு நாம் ஊட்டி டீ அனுப்ப வேண்டும். இராணுவத்திற்கும் அனுப்ப வேண்டும், இரயில்வே கான்டீன்களுக்கு அனுப்ப வேண்டும். இன்னும் அந்த டீயின் மூலமாக, அதிக அளவிற்கு இண்ட்கோ டீ சப்ளை செய்ய முடியாமல் இருக்கிறோம். நல்ல தரம் என்று சொல்கிறோமே—50, 30, 20 சதவிகிதமாக—Incoserve மூலம் 17 தேயிலைத் தொழிற் சாலைகள், அந்த உற்பத்தியாளர்கள் இலாபம் பெறும் வகையில் அவர்களது 20 சதவிகிதத்தை மேலும் அதிகரித்து, ஊட்டி டீயை ஊக்குவிக்க வேண்டும். ஊட்டி டீயில், கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலையில் உற்பத்தியாகும் 20 சதவிகிதம் தேயிலையைத்தான் சேர்க்கிறார்கள். நமது கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலையைக் கண்டிப்பாக அதிகரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கெனவே சொன்னதுபோல, இந்தியாவிலுள்ள அனைத்து ரேஷன் கடைகளிலும், பொது விநியோகக் கடைகளிலும் கொடுத்தால், கண்டிப்பாக அதற்கு ஏற்ற இலாபம் கிடைக்கும் என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏல மைய புரோக்கர்களுக்கு, அதிக வட்டிக்குத் தொழிற்சாலை அதிபர்கள் பணம் கொடுப்பதைத் தேயிலை வாரியம் கண்டிப்பாகக் கட்டுப்படுத்த வேண்டும்.

*பிற்பகல் 1-15*

தேயிலை நார்ம்ஸ்—Norms for Licencing of Brokers in Public Tea Auction–Tea Board, Calcutta:— 'Any Company which is carrying on business as Licensed Tea Brokers will not lend money to any tea producing company or tea estate, but they make advance payments against tea for sale in the relevant auction centre and or against sold tea awaiting payment of prompt. இந்த மாதிரி இருக்கும்போது, புரோக்கர்களைக் கண்டிப்பாக நாம் தடுத்து வைப்பதற்கு, ஏல மையத்திற்கு, டீ போர்டுக்கு உரிமை உண்டு. அவர்களை (Tea Board) அதில் ஈடுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

சில்லறை விற்பனையில் 120 முதல் 400 ரூபாய் வரை டீ தூள் விற்கிறார்கள். நாங்கள் கேட்பதெல்லாம் 60 ரூபாய் மட்டும். நான் ஏற்கெனவே சொன்னது மாதிரி, சட்டமன்ற விடுதி வளாகத்திலேயே, சட்டமன்ற விடுதியில், ஒரு கோப்பைக்கு 5 ரூபாய் 50 காசு வாங்குகிறார்கள். இன்று உங்களுக்கு நான் அந்த பில்லைக்கூடக் கொண்டு வந்திருக்கிறேன். காட்டுவதற்குத் தயாராக இருக்கிறேன். (பில் பேரவைத் தலைவருக்குக் காண்பிக்கப்பட்டது.) சிறு குறு விவசாயிகளுக்கு, அரசு சிறு விவசாய நல நிதி ஆணையம் ஒன்றையும் ஆரம்பிக்க வேண்டும். வட்டியில்லாக் கடன் எங்களுக்கு, இந்த 65 ஆயிரம் பேர்களுக்கும் அரசு தர வேண்டும். ஏனென்று கேட்டால், மிகவும் அவதிக்குள்ளாகி இருக்கிறோம். வறட்சி இல்லை என்றாலும், வறுமை மாவட்டத்தில்தான் நாங்கள் இருக்கிறோம். அங்கு பணப்புழக்கமே இல்லை. வியாபாரிகளுக்கு எல்லாம் 20 சதவிகிதத்திற்கு மேல் வியாபாரம் செய்ய முடியவில்லை. ஆகவே, நீலகிரி மாவட்டத்தை வறுமை மாவட்டமாக நீங்கள் அறிவிக்க வேண்டுமென்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஊட்டி டீ விற்பனை மூலம், 'இன்கோசர்வ்' அமைப்புக்கு சுமார் 2, 3 கோடி ரூபாய் இப்போது இலாபம் வந்திருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எங்களுக்கு, 65 ஆயிரம் குடும்பங்களுக்குத்தான் அதை ஆரம்பித்தீர்களே தவிர, அவர்கள், இன்கோசர்வ், கடனைக் கட்டுவதற்காக அல்ல. கடனைக் கட்டுவதற்கு எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை. 75 சதவிகிதம் இலாபப் பணத்தை எங்களுடைய 17 தேயிலைத் தொழிற்சாலைகளின் மூலம் எங்களுக்குத் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கலப்படம் செய்யும் தொழிற்சாலைகளின் உரிமம் உடனடியாக ரத்து செய்யப்பட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, தேயிலையை Essential Commodities Act-ன்கீழ் கொண்டு வந்தால், அதன்மூலம் நல்லவிதமான நிவாரணம் தரலாம். 17 கூட்டுறவுத் தொழிற்சாலைகளில் உற்பத்திச் செலவைக் குறைப்பதன் மூலமும், மரக் கட்டைகள் நீலகிரியிலிருந்து வாங்கும்போதும் மின்சாரத்திற்கு மானியம் தருவதன் மூலமாக 3 ரூபாய் அளவிற்குச் செலவைக் குறைக்கலாம் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வாராந்திர விற்பனை, உற்பத்தியாளர்கள் கொடுக்கும் விலை ஆகியவற்றை பத்திரிகைகள், தொலைக்காட்சியில் தெரியப்படுத்த



வேண்டும். நீலகிரி கூட்டுறவுத் தொழிற்சாலை மூலம் உற்பத்தியாகும் தேயிலைக்கு, ஊட்டி டீக்கு அதிக அளவில் விளம்பரம் தேவை. சீசன் ஆரம்பித்துள்ளதால் சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வந்து கொண்டிருக்கிறார்கள். 'ஊட்டி டீயைப் பருகுங்கள்; ஊட்டி மக்களுக்கு உதவி செய்யுங்கள்' என்பது போன்ற விளம்பரங்களை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நமது நாட்டில் உற்பத்தியாகும் குப்பையின்மூலம் மின்சாரம் தயாரிக்கும் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும். ஊட்டியில் மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்திற்கு 2 கோடி ரூபாய் முன்பு 1991–96-இல் நமது அ.தி.மு.க. அரசு கொடுத்தது. ஆனால், கட்டடம் இன்னும் கட்டப்படவில்லை. கட்டடம் கட்டப்பட வேண்டுமென்றும், ஊட்டி நகரத்திற்கு மின்சாரத் தடை ஊர்தி—நடமாடும் fuse off calls வண்டிகள் தேவை. உலகத்தில் இருந்து எல்லா மக்களும் அங்கு வருகிறார்கள். வரும்போது, அவர்களுக்கு மின்சாரம் தடையாகும்போது, fuse off ஆகும்போது, அவர்களுக்கு எந்தவிதமான அவசர நடவடிக்கையும் எடுக்க முடிவதில்லை. ஆகவே நடமாடும் fuse off calls வண்டி வேண்டுமென்று கேட்கிறேன்.

கிராமப்புறங்களில் கைவினைப் பொருட்களைத் தயாரிக்கும் ஏழையெளிய மக்களுக்குக் கடன் உதவி செய்ய வேண்டும். நீலகிரி மாவட்டத்தில், கிராமப்புறப் பகுதிகளில் உள்ள மகளிர், சிறு முதலீட்டாளர்கள் மெழுகுவர்த்தி, ஊறுகாய், வற்றல், சோப்பு போன்றவை தயாரிக்கும் சிறிய தொழில்கள் செய்து மேம்பாடு அடைய, அரசு கடன் உதவி வழங்க வேண்டும். ஏற்றுமதிக்கேற்ப தரமான கதர்த் துணிகள் தயார் செய்து, நெசவாளர்களின் நலனை மேம்படுத்த வேண்டுமென்று சொல்லி, எங்களுடைய நீலகிரி மாவட்ட மக்களுக்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எல்லாவிதமான நன்மைகளையும் செய்வதற்குத் தயாராக இருந்தாலும்கூட, இந்தத் தேயிலையினுடைய விலை வீழ்ச்சி அப்படியே 4 ரூபாய் 75 பைசாவாக இப்போது இருக்கிறது; கொள்ளையடிப்பவர்கள் 400 ரூபாய் வரைக்கும் விற்கிறார்கள். ஒரு கிலோ 2 ஆயிரம் ரூபாய் வரைக்கும் சாம்ராஜ் எஸ்டேட்டிலே விற்றுக் கொண்டிருக்கிறார்கள். தயவுசெய்து தாங்கள் ஏதாவது ஒரு சிறப்புத் திட்டத்தை ஏற்படுத்தி, நீலகிரி மாவட்டத்திலுள்ள அனைத்து மக்களையும், எங்களையும்—விவசாயிகளை—காப்பாற்ற வேண்டுமென்று கேட்டு, எனக்கு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். வாழ்க பாரதம், வளர்க பாரதம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

***திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு தலைப்புகளிலே உள்ள இந்த மானியத்தில், குறிப்பாக நம்முடைய நெசவாளர்களுடைய பிரச்சினை என்பது ஒரு ஆழமான பிரச்சினையாக உருவெடுத்திருக்கிற நேரம் இது. கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து இன்று சென்னை வரையிலும் நடந்தே வந்து அந்தப் பிரச்சினையை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருப்பார்கள் என்று கருதுகிறேன். அந்த அளவுக்கு, 1945 ஆம் ஆண்டு வாக்கில், வெள்ளையன் ஆட்சிக் காலத்திலே இந்தத் துறை எந்த அளவுக்கு நலிவடைந்து இருந்ததோ, அந்த அளவுக்கு அந்தத் துறை போகக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது. எனவே, இதிலே முக்கியமான பிரச்சினை என்பது, மில் துணிகளோடு இவர்களால் போட்டி போட முடியாது, எனவே, அவர்களுக்கு வெளிநாட்டு ஏற்றுமதிக்காக....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, 'கைத்தறி' என்கிற தலைப்பின்கீழே இது வருகிறதே தவிர, கைத்தறி மானியம் அல்ல. கைத்தறி மானியம் தனியாக வருகிறது. 'கைத்தறி' என்ற தலைப்பில் வருகிறது. ஆகவே, ஊரகத் தொழில், மின்சாரம் சம்பந்தமாக மட்டும் பேசுங்கள்.

பிற்பகல் 1-20

**திரு. டி. மணி:** சரி. ஒரு விஷயத்தைச் சொல்லி முடிக்கிறேன். அதாவது, மில் துணிகளுக்கு இன்றைக்கு ஏற்றுமதி மானியம் 15 சதவீதம் அளிக்கப்படுகின்றது. இதைக் கைத்தறியிலே 30 சதவீதமாக நெசவாளர்களுக்கு வழங்குவோமேயானால்தான் கைத்தறித் துணிகளை இந்த நிலையில் பாதுகாத்துக்கொள்ள முடியும்.

அடுத்து, கதர் சம்பந்தமானது. கதர்த் துறையிலும் இதுபோன்ற நிலைதான். அது எந்த அளவுக்கு இன்றைக்கு அடிமட்டத்திற்குத் தள்ளப்பட்டு இருக்கிறது என்ற ஒரு சூழ்நிலையை நாம் பார்க்கின்றோம். அதிலே பல்வேறு தலைப்புகள் இருக்கின்றன. காகிதம் செய்வது, சோப்பு செய்வது, இப்படிப் பல்வேறு யூனிட்டுகள் இருக்கின்றன. அவை எல்லாம் முழுமையாக மூடு விழாவுக்குச் செல்கின்ற ஒரு சூழ்நிலையை நாம் பார்க்கின்றோம்.



இன்னொன்று, சமீபத்திலே பட்டு வளர்ச்சித் துறை என்று ஒன்று இருந்து, 1999-லே விற்பனையிலே ஒரு கோளாறு வந்து 2½ கோடி ரூபாய் அளவுக்கு ஊழல் நடந்ததாகச் சொல்லி, ஒரு வழக்கு எல்லாம் வந்து, பல பேர் மேல் நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். ஆனால், இப்போது அது என்ன நிலையில் உள்ளது என்று தெரியவில்லை. அந்தத் துறையிலேகூட இன்றைக்கு 1,200 ஊழியர்கள் வேலை பார்க்கின்றார்கள். அதைப் பாதியாகக் குறைக்கக்கூடிய ஒரு சூழ்நிலைக்கு அது தள்ளப்பட்டு வருகிறது. எனவே, அந்த அளவிற்கு அந்தத் துறையை நாம் பாதுகாக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஏற்கெனவே கிராமங்களிலே விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பட்டுப் புழுவிலிருந்து பட்டு நூல் எடுக்கப்படுகின்றது. அந்த வகையிலே இந்தக் கதர்த் துறையைப் பாதுகாத்துக்கொள்வதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, முந்திரி சம்பந்தமான ஒரு பிரச்சினையை இங்கே நான் கொண்டுவர விரும்புகிறேன். தமிழ்நாட்டிலே நாம் முந்திரி அதிகம் பயிரிடுகிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்து இருக்கின்ற, நம்முடைய விவசாய அரங்கத்திலே வருகின்ற ஒரு முக்கியமான திட்டம் என்ற வகையில், அரசின் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்திலே, எந்தப் பகுதிகளிலே முந்திரி அதிகம் பயிரிட முடியுமோ, அந்தப் பகுதிகளிலே அதற்கான நிலங்களை ஒதுக்கி, முந்திரியைப் பயிரிடச் செய்ய வேண்டும். முந்திரிக்கு ஒரு சரியான விலையை நிர்ணயிக்க வேண்டும். அதற்கு ஒரு குறைந்தபட்ச விலையை நம்முடைய மாநிலத்திலே நிர்ணயிக்க வேண்டும். குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்திலே 60 ஆயிரம் தொழிலாளர்கள் முந்திரி ஆலைகளிலே வேலை செய்கின்றார்கள். பெருவாரியான முந்திரியும் வெளிநாட்டிலிருந்துதான் இறக்குமதி செய்யப்படுகின்றது. எனவே, நம்முடைய நாட்டிலே, நம்முடைய ஃபேக்டரிகளிலே வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு முழுமையான முந்திரியைத் தமிழ்நாட்டிலே உற்பத்தி செய்வதன் மூலமாக நம்முடைய வருவாயை நாம் தேடிக்கொள்ள முடியும்.

இன்னும் ஒன்று. இந்த முந்திரிப் பருப்பு பூராவும் நம்முடைய மாநிலத்தின் மூலமாக ஏற்றுமதி செய்யப்படுவதில்லை. எங்கே ஏற்றுமதி செய்கிறார்கள் என்று சொன்னால், கேரளா மூலமாக ஏற்றுமதி செய்துகொண்டிருக்கிறார்கள். இதனால் அந்நியச் செலாவணி என்பது நமக்குக் கிடைப்பதில்லை. அந்த அளவுக்கு ஒரு நிலை இருக்கின்றது. எனவே, இந்த அடிப்படையிலே நின்றுகொண்டு முந்திரித் தொழிலைப்

பாதுகாத்துக்கொள்வதற்கும், அந்த விவசாயிகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். தமிழ்நாட்டிலே உற்பத்தியாகும் முந்திரிப் பருப்பு பூராவும் நம்முடைய மாநிலம் வழியாக ஏற்றுமதி செய்வதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பச்சைத் தேயிலையினுடைய விலை சம்பந்தமாக, எனக்கு முன்னாலே பேசிய பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் விவரங்களைச் சொல்லிவிட்டார்கள். இருந்தாலும்கூட, இன்றைக்கு இந்தியாவிலே நாம் ஏற்றுமதி செய்யக்கூடிய அளவுக்கு நம்முடைய தேயிலை உற்பத்தி பெருகி இருக்கின்றது. ஏன் இறக்குமதி செய்யவேண்டுமென்ற கேள்விதான் நமக்கு முன்னாலே இருக்கின்றது. எனவே, அதிகப்படியான இறக்குமதி வரியை அவர்கள் மேலே சுமத்துவதன் மூலமாகத்தான் நம்முடைய தேயிலை விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்க முடியும். அந்த வகையிலே குறைந்தபட்சம் ஒரு கிலோ பச்சைத் தேயிலைக்கு 15 ரூபாய் கிடைக்கக்கூடிய வகையில் வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய கயிறு தொழில். அது முழுவதுமாக ஸ்தம்பித்துப் போய் உள்ளது. ஏனென்றால், இறக்குமதிக்குப் பல்வேறு பொருட்கள் வந்ததன் காரணமாக, கயிற்றுத் தொழில் ஸ்தம்பித்துப் போய் உள்ளது. அதிலிருந்து ரப்பரையும், தேங்காய் மட்டை நாரையும் சேர்த்து நாம் ஒரு சில யூனிட்டுகளை உருவாக்குவோமேயானால், மெத்தைகளைத் தயாரிக்க முடியும். இதற்கு மேல்நாடுகளில் அதிகக் கிராக்கி இருக்கிறது. அந்தக் கயிற்றுத் தொழிலைப் பாதுகாத்துக் கொள்வதற்கு, கயிற்றுப் பாய், கயிற்று மெத்தைகள் போன்றவற்றை உற்பத்தி செய்து தமிழகத்தில் இருக்கக்கூடிய நம்முடைய அரசு அலுவலகங்கள் பூராவிலும் பயன்படுத்துகின்ற வகையில், கயிற்று மெத்தை, கயிற்றுப் பாய் ஆகியவற்றை அந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக நாம் வாங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். பெருவாரியாக நாம் நமக்குக் கிடைத்திருக்கின்ற தகவல்களை வைத்துப் பார்த்தால், இங்கே வியாபாரிகளிடம் வாங்குகின்ற ஒரு நிலை இருக்கின்றது. அதனாலே அந்தக் கூட்டுறவுத் துறை இன்று தகராறிலேதான் போய்க் கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே அதைச் சந்திக்க வேண்டும்.

அதுபோன்று, தீப்பெட்டித் தொழில். அதனுடைய மருந்து வகைகள் பூராவும் விலை ஏறிப்போய், அந்த அளவுக்கு இன்றைக்குத் தீப்பெட்டி



விற்பனை செய்ய முடியாத சூழ்நிலை இருக்கின்றது. இதனால் தொழிலாளர்கள் பெருவாரியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அந்த வகையிலே அந்தத் தீப்பெட்டித் தொழிலைப் பாதுகாப்பதற்கும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-25

'மேற்குத் தொடர்ச்சி மலை' என்றவொரு திட்டத்தை வைத்திருக்கிறார்கள். ஆனால், கன்னியாகுமரி மாவட்டம் அந்த மேற்குத் தொடர்ச்சி மலைத் திட்டத்திற்குள்ளே இடம் பெறவில்லை. அது இடம் பெற வேண்டும். அந்த மேற்குத் தொடர்ச்சி மலைத் திட்டத்திலே, குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், எந்த மண்ணில், எந்தப் பயிர் அதிகமாக உற்பத்தியாகும் என்பதைப் பார்த்து, நெல்லிக்காய் ஆனாலும் சரி, கடுக்காய் ஆனாலும் சரி, ஜாதிக்காய் ஆனாலும் சரி, கிராம்பு ஆனாலும் சரி, இவற்றை எந்தப் பகுதியிலே அதிகப்படியாக விவசாயம் செய்ய முடியுமோ, அங்கே விவசாயம் செய்வதற்கான உரிய நடவடிக்கைகளை நாம் மேற்கொள்வது இன்னும் கொஞ்சம்கூடப் பொருத்தமாக இருக்கும்.

அதுபோன்றுதான், நம்முடைய இந்தத் துறையிலே கதர், இதோடு சேர்ந்த, இணைந்த துறையிலேதான் தேன் உற்பத்தி என்று ஒன்றிருக்கிறது. குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்திலே மார்த்தாண்டம் என்ற ஊரில் தேன் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் ஒன்று இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) ஒரு வலுவான சங்கம் இருக்கிறது. அந்தச் சங்கத்திலே இந்த வருடம் இலட்சம் கிலோ தேனைக் கொள்முதல் செய்திருக்கிறார்கள். அது பெருவாரியாக பிற மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஆனால், விவசாயிகளுக்குக் கிடைக்கின்ற விலை என்பது சுமார் ரூ. 44 தான். ஆனால் அந்தக் கூட்டுறவுச் சங்கம் அதை விற்பனை செய்கின்றபோது, 67 ரூபாய் வேறு தரப்பிற்குப் போகிறது. எனவே, அந்த விவசாயிகள் கொண்டு வருகிற அந்தத் தேனுக்குக் கொஞ்சம் கூடுதலாக விலையைக் கொடுப்பது ஒன்று. இரண்டாவது, அவர்களுக்கு மூலதனம் இல்லாத காரணத்தால், இப்போது அதை முழுமையாக வாங்கிக் கொள்ளாத நிலை இருக்கிறது. எனவே, அதிகப்படியான மூலதனத்தை கூட்டுறவுச் சங்கத்திற்குக் கொடுக்க வேண்டும். இன்னும் சொல்லப்போனால், இப்போது அவர்கள் வாங்குகிற தேன் பூராவையும் அந்த ஆபீஸிற்கு வெளியிலே கேன்களில் வைத்திருக்கிறார்கள். ஒரு godown கட்டுவதற்கு, கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்னாலே, இந்த மாமன்றத்திலே

10 இலட்சம் ரூபாய் கேட்டோம். ஆனால், கிடைக்கவில்லை. அந்த அடிப்படையிலே அந்தத் தேன் கூட்டுறவுச் சங்கத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கும், அந்த விவசாயிகளைப் பாதுகாத்துக்கொள்வதற்கும், இன்னும் சிறப்பாகச் செயல்படுவதற்கும் ஒரு godown கட்டுவதற்கு ரூ. 10 இலட்சத்தை அரசு அனுமதிக்க வேண்டுமென்றும், அதுபோன்று அதனுடைய விலையிலே சில மாற்றங்களை ஏற்படுத்தி விவசாயிகளுக்கு சற்று அதிகம் விலை கிடைக்கக்கூடிய வகையிலே ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. டி. மணி:** கடைசியாக ஒன்றைச் சொல்லி முடித்துவிடுகிறேன். நம்முடைய இந்தக் கொள்கை விளக்கக்குறிப்பிலே 9 ஆம் பக்கத்திலே ஒரு தலைப்பு. 'பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டம்'. அதிலே எந்த அளவுக்குப் பணம் செலவிடுகிறார்கள் என்ற விவரங்கள் எல்லாம் இருக்கின்றன. ஆனால், அந்தப் பணம் இந்த மாநில அரசின் மூலமாக அது நம்முடைய மாவட்டங்களுக்குச் செல்கின்றதா? அல்லது மத்திய அரசிடமிருந்து நேரடியாக மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வந்து அவர்கள் அதைப் பயன்படுத்துகிறார்களா? அப்போது நம்முடைய கோரிக்கை என்பது—மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்ற கோரிக்கை—எந்த மட்டத்திலே அடிபடுகிறது என்பதற்கு இதையொரு உதாரணமாக நாம் எடுத்துக்கொள்ளலாம். இந்த மாநில சர்க்காரை ஒன்றும் அவர்கள் கண்டுகொள்ள வேண்டிய தேவை இல்லாத ஒரு சூழ்நிலைதான், இந்த சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலமாக மத்திய அரசாங்கத்தின் நேரடியான தலையீடாக வருகிறது. அது பொருளாதாரத் துறையிலே பல்வேறு பிரச்சினைகளை உருவாக்குகிறது. ஒன்றை மட்டும் உதாரணமாகச் சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. டி. மணி:** கன்னியாகுமரி மாவட்டத்திலே 'நேரு யுவகேந்திரா' என்று சொல்கிற ஒரு பகுதி இருக்கிறது. அந்தப் பகுதியிலேயிருக்கிற இளைஞர்கள் பூராவும் இதைப் பயன்படுத்துகிறபோது, ஒரு மதச் சார்புடைய உணர்விலே அவர்களை இழுத்துச் செல்கிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, மத்திய அரசாங்கத்திடம் இந்தத் திட்டங்கள் வருகிறபோது, மாநில அரசின் மூலமாக இதைச் செலவிடுவதற்கான ஏற்பாட்டைச் செய்வதற்கு நம்முடைய மாநில அரசு முயற்சி மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு, முடித்துக்கொள்கிறேன்.



## 8. அறிவிப்பு

### பேரவை அலுவல் குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று பிற்பகல் ஒரு மணியளவில் கூடிய அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுக்கு இணங்கவும், பேரவை அனுமதியுடனும், 16-4-2002 அன்று பேரவை விதி 185-ஐத் தளர்த்தி, நிதி அலுவல்களை எடுத்துக்கொள்வதற்கு முன்பு அரசினர் தனித் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்படும். அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

## 7. மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 13—எரிசக்தித் துறை—தொடர்ச்சி

### (ஆ) கோரிக்கை எண் 17—கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த் துறை—கதர் கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள்—தொடர்ச்சி

### (இ) கோரிக்கை எண் 42—சிறு தொழில்கள் துறை—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.எஸ். கண்ணன், இரண்டு அமைச்சர்கள் பேச வேண்டும். அதனால் சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.

***திரு. ஏ.எஸ். கண்ணன்:** பேரவைத் தலைவரவர்களே, மின் துறை, சிறுதொழில்கள், கைத்தொழில்கள் ஆகிய துறைகளைப் பற்றிப் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நான் சார்ந்திருக்கிற கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நான் இந்தத் துறைகளைப் பற்றிப் பேசுவதற்கு முன்னால், நம்முடைய முதல்வர் அவர்கள், தமிழகத்தை அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி பெறச் செய்து, தமிழகத்தைப் பொருளாதாரத் துறையில் முதன்மையாகக் கொண்டு வருவேன் என்று உறுதி பூண்டு இருக்கின்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்அனுமதியுடன் பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** இடையூறாக இருந்த புதிய பொருளாதாரக் கொள்கையை இந்த நாட்டில் அமல்படுத்தப்படுவதற்கு முன்னால் இருந்த சில நிகழ்ச்சிகளை நான் இந்தச் சபையில் மீண்டும் பதிவு செய்ய விரும்புகிறேன். 1991 ஏப்ரல் மாதம் 15 ஆம் தேதி இந்திய நாட்டில் அன்றைய பிரதமராக இருந்த மரியாதைக்குரிய நரசிம்மராவ் அவர்களும், நிதித் துறை அமைச்சராக இருந்த மன்மோகன் சிங் அவர்களும், புதிய பொருளாதாரக் கொள்கையை இந்த நாட்டுக்கு அமல்படுத்த முயற்சித்தபோது, கையொப்பமிட்டபோது, இந்திய நாட்டில் இருக்கின்ற மக்கள்மீது அக்கறை கொண்ட அரசியல் கட்சிகள் எல்லாம் அதைக் கடுமையாக எதிர்த்தன. குறிப்பாக, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும், இடது சாரிக் கட்சிகளும் அந்த ஒப்பந்தத்தை எதிர்த்தன. அப்படி எதிர்த்துக் குரல் கொடுத்தபோது, இந்திய நாட்டில் இருந்த இரண்டு மாநில முதல்வர்கள், இந்தக் கொள்கை தவறான கொள்கை, இந்த நாட்டுக்கு ஒத்து வராது, இந்த நாட்டில் இருக்கின்ற இயற்கைச் செல்வங்களையெல்லாம், பன்னாட்டு மூலதனக் கொள்ளையர்கள் சுரண்டிச் செல்வார்கள் என்று எதிர்ப்புத் தெரிவித்தார்கள். அப்படிக் கூறுகின்றபோது, வடபுலத்திலே இருந்த, மேற்கு வங்க முதலமைச்சராக இருந்த அன்புத் தோழர் ஜோதிபாசு அவர்கள் கடுமையாக எதிர்த்தார்கள். அதேபோல், தென்புலத்தில் பார்க்கின்றபோது இந்த மக்கள்மீது அக்கறை கொண்ட, நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் அக்கறை கொண்ட, அன்றைக்குத் தமிழக முதல்வராக இருந்த இன்றைய முதல்வர் அந்தப் புதிய பொருளாதாரக் கொள்கையைக் கடுமையாக எதிர்த்ததோடு மட்டும் அல்லாமல், உச்சநீதிமன்றத்திலே வழக்கைத் தொடுத்தார் என்ற பெருமையும் இன்றைய முதல்வரைச் சாரும் என்பதை இந்த நேரத்திலே நான் நன்றி உணர்வோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அந்தப் புதிய பொருளாதாரக் கொள்கை அமல்படுத்தப்பட்டபோது, தொழில் முனைவோர் அமைப்புகளை அழைத்துப் பேசினார்கள். இன்னும் சொல்லப் போனால், பாரதி அவர்கள் விவசாயத்தையும், தொழில் துறையையும், முன்னணியிலே வைத்து அவர்கள் பாமாலை



பாடிய வரலாறு இந்த நாட்டில் உண்டு. விவசாயமும், தொழில் துறையும் வளர்ந்தால்தான் இந்திய நாட்டினுடைய, தமிழகத்தினுடைய பொருளாதாரம் வளரும் என்பதை அன்றைக்கே அறுதியிட்டுச் சொன்னார்கள். அதை உணர்ந்த முதல்வர் அவர்கள், அன்றைக்கு, 1991-1996-ல் அவர் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது தொழில் துறையில் ஏற்படுகின்ற நெருக்கடிகளைத் தீர்க்க வேண்டும் என்பதற்காக உடனடியாகத் தமிழகத்திலே இருக்கின்ற தொழில் முனைவோர் அமைப்புகளைச் சார்ந்த அத்தனை நிர்வாகிகளையும் அழைத்துப் பேசி, அவர்களுடைய ஆலோசனைகளைக் கேட்டு, அவர்களுடைய குறைகளைக் கேட்டு, அதைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுத்தார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், தாழ்ந்து கிடக்கின்ற குறுந்தொழில்கள், சிறு தொழிலிலே 95 சதவிகிதமாக இருக்கின்ற குறுந்தொழில்களினுடைய நிலைமையை உயர்த்துவதற்காக அவர்கள் உடனடியாக ஒரு சில நடவடிக்கைகளை அன்று எடுத்தார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அது என்ன நடவடிக்கை என்றால், குறுந்தொழில்களுக்கு என்று தனிச் சான்றிதழ், certificate கிடையாது, ஆதலால் உடனடியாகக் குறுந்தொழில்களுக்கு என்று ஒரு தனிச் சான்றிதழ் வழங்க வேண்டுமென்று ஒரு ஆணையைப் பிறப்பித்தார். அதுமட்டுமல்லாமல், சிறு தொழில் வாரியம் என்று தமிழகத்தில் இன்றைக்கும் இருந்துகொண்டு இருக்கிறது. அந்த வாரியத்தில் எங்களைப் போன்ற குறுந்தொழில் முனைவோர்கள் உறுப்பினர் ஆவதற்கு வாய்ப்பே கிடையாது. ஆனால், நல்ல உள்ளம் படைத்த முதல்வர் அவர்கள் அன்றைக்குக் குறுந்தொழில் முனைவோர் சங்கத்தையும் வாரியத்தின் ஓர் உறுப்பினராக (மேசையைத் தட்டும் ஒலி) நியமித்ததோடு மட்டுமல்லாமல்— சிட்கோ போன்ற எஸ்டேட்களிலே வசதி படைத்தவர்கள்தான் அங்கே தொழிற்கூடங்களை வாங்கிய வரலாறு உண்டு, ஆனால் அன்றைய முதல்வர்— சிட்கோவிலே தொழிற் கூடம் கட்டினாலும், அல்லது நிலம் ஒதுக்கப்பட்டாலும், உடனடியாகக் குறுந்தொழில் முனைவோருக்கு 30 சதவிகிதம் ஒதுக்கீடு தரவேண்டுமென்ற ஓர் ஆணையை அன்றைக்குப் பிறப்பித்தார். அதுமட்டுமல்லாமல், மகளிர்மீது அக்கறை கொண்ட முதல்வர் அவர்கள், மகளிர்க்கும் தொழிற்பேட்டைகளில் 30 சதவிகிதம் இடம் ஒதுக்கப்பட வேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) என்று அன்றைக்கு ஆணையிட்டார்கள். இன்றைக்கு இருக்கின்ற வங்கிகளைப் பற்றி இங்கு இருக்கின்ற அத்தனை பேருக்கும் தெரியும். சாதாரண, குறுந்தொழில் முனைவோர் வங்கியிலே கணக்குத் துவங்கச் சென்றால், 5,000 ரூபாய்

டெபாசிட் கட்ட வேண்டுமென்ற நிலை இருந்தது. அதை அரசுக்குச் சுட்டிக்காட்டியபோது, உடனடியாக முதல்வர் அவர்கள், திருவண்ணாமலை, அம்பத்தூர், கடலூர், வேலூர் போன்ற இடங்களில் 4 'தாய்கோ' கூட்டுறவு வங்கிகளை ஆரம்பித்து, குறுந்தொழில் முனைவோர் கணக்குத் துவங்க இருந்த அந்தக் கஷ்டங்களைப் போக்கினார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் நினைவு கூர விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், பொருளாதாரச் சூழ்நிலை வளர வேண்டுமென்பதற்காக அன்றைக்கு எடுத்த நடவடிக்கை மட்டும் அல்ல, இன்றைக்கு எடுக்கின்ற நடவடிக்கையைக்கூட நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

*பிற்பகல் 1-35*

சிறு தொழிலுக்கு இருந்த அந்த மிகப் பெரிய தடையை அந்நிய மாநிலங்களிலிருந்து உதிரிப் பாகங்கள் வாங்க வேண்டும் என்றிருந்த நிலையை, கடந்த கால ஆட்சியாளர்கள் போட்ட ஜி.ஓ. 75 என்ற அரசாணையை ரத்து செய்த இந்த அரசுக்குத் தமிழகத்தில் உள்ள இலட்சக்கணக்கான சிறு, குறுந்தொழில் முனைவோர்கள் சார்பாக இந்த நேரத்திலே நான் நன்றியறிதலைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதே நேரத்திலே அதில் சில குறைபாடுகள் உண்டு என்பதையும் இந்த நேரத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன். இன்றைக்கும் போக்குவரத்துத் துறை அல்லது கே.கே. நகரில் உள்ள ஊனமுற்றோர் மருத்துவமனை போன்றவற்றில் உள்ள சிறு தொழில்களே அந்த உதிரிப் பாகங்களை அல்லது பொருள்களைத் தயாரித்து வழங்குகின்ற திறமை இங்கு தமிழகத்தில் இருந்தாலும், தேவையற்ற முறையில் இன்னும் அதிகாரிகள் லூதியானாவிலிருந்தும், கான்பூரிலிருந்தும் அவற்றை வாங்குகின்ற நிலை இன்றைக்கும் நீடிக்கிறது. அதை அமைச்சர் அவர்களுடைய ஞாபகத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.

மேலும், இங்கே முதல்வர் அவர்களைப் பணிவோடு கேட்டுகொள்வேன். இன்றைக்கு ஒரு தொழில் முனைவோருக்குத் தேவையானது மூலதனம்; வங்கிகளினுடைய உதவி. மத்திய அரசு பல்வேறு கமிட்டிகளை அமைத்தது. நாயக் கமிட்டி, அபிஜித் சென் கமிட்டி, கபூர் கமிட்டி மற்றும் கடைசியாக வந்த திட்டக் கமிஷன் அத்தனையும் சிறு, குறுந்தொழில் முனைவோருக்குப் பல்வேறு நலத்



திட்டங்களை அறிவித்திருக்கின்றன. அல்லது குறுந்தொழில்களுக்கென்று தனிச் சட்டங்கள், கொள்கைகளை வகுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கின்றன. ஆனால், இன்றைக்கு சிறு தொழில்களுக்குத் தனிக் கொள்கையை வகுக்க வேண்டுமென்ற நிலை பட்ஜெட்டிலே எடுக்கப்பட்டிருக்கிறது. தமிழக முதல்வர் அவர்களை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்வேன். சிறு தொழில்களுக்குக் கொள்கை வகுக்கின்ற அதே நேரத்தில், 95 சதவீதமாகவுள்ள குறுந்தொழில்களுக்கும் நீங்கள் ஒரு சட்டத்தைக் கொண்டு வர வேண்டும். மத்திய அரசு கொண்டு வந்திருக்கின்ற அந்த கமிட்டிகளுடைய அறிவிப்புகளை எல்லாம், முடிவுகளை எல்லாம் இன்றைக்கு வரையிலும் மத்திய அரசு நிறுவனங்கள் நிறைவேற்றவில்லை. குறிப்பாக, வங்கிகளினுடைய உதவி என்று போகின்றபோது, சுத்தமாக மறுக்கப்படுகிறது. முதல்வர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்வது; இன்றைக்கு மகளிர் மேம்பாட்டுத் திட்டம் என்று ஒன்று கொண்டு வந்திருக்கிறீர்கள். 5 இலட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கின்ற அந்த நல்ல, சிறப்பான திட்டம். ஆனால், அது நடைமுறைக்கு வரவேண்டுமென்றால், பொருளாதாரம் தேவை. வங்கிகள் ஒத்துழைப்புத் தேவை. ஆனால், என்னுடைய மாவட்டத்திலேகூட 50 ஆயிரம் மகளிர் உறுப்பினர்களுக்கு....

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிடுகின்ற திட்டம், 5 ஆண்டுகளில், 5 இலட்சம் மகளிருக்கு, 'சுய தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கும் திட்டம்' என்பதாகும். இது நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டு நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு, 2001-2002 ஆம் ஆண்டிற்கு ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட பெண்களுக்கு Entrepreneurship Training— சுயதொழில் முனைவோர் பயிற்சி-அளிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டு, 2002-2003 ஆம் ஆண்டில் ஒரு இலட்சத்து இருபத்து ஐயாயிரம் பெண்களுக்கு இந்தப் பயிற்சி அளிக்கப்படவுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** முதல்வர் அவர்களுக்கு நன்றி. ஒப்புக்கொள்கிறேன். ஆனால், அதே நேரத்தில் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தில், அந்தச் சுய தொழிலைச் செய்கின்றபோது, அவர்களுக்குத் தேவையான நிதி உதவியை வங்கிகள் முறையாகச் செய்வதில்லை;

மறுக்கப்படுகிறது. 50 ஆயிரம் ரூபாய் மூலதனம் வேண்டுமென்று கேட்டால், 15 ஆயிரம் ரூபாயும், 20 ஆயிரம் ரூபாயும் கொடுக்கின்ற நிலை, சில பேருக்கு முற்றாக மறுக்கின்ற நிலை வங்கிகளில் இருக்கிறது.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிருக்குப் பயிற்சி அளிக்கப்பட்ட பிறகு, அவர்கள் சுயதொழில் தொடங்க வேண்டுமென்றால், வங்கிகள் முன்வந்து அவர்களுக்குத் தாராளமாகக் கடன் உதவி வழங்க வேண்டும். இப்போது வங்கிகள் மெத்தனப் போக்கைக் கடைப்பிடித்து வருகின்றன என்பது ஏற்கெனவே எனது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. ஆகவே; தமிழகத்தில் உள்ள அனைத்து வங்கிகளின் மேலாளர்களை அழைத்து நான் ஒரு கூட்டம் நடத்த உள்ளேன். அவர்களுக்கு அறிவுரைகள் வழங்க உள்ளேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** முதல்வர் அவர்களுக்கு மீண்டும் நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கண்ணன், மூன்று மணித் துளிகள்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** அடுத்து, முதல்வர் அவர்களால், 1996 ஆட்சியின்போது, தனியார்களுடைய தொழிற்பேட்டை அமைக்க வேண்டும் என்பதற்காக, எங்கள் சங்கத்திற்கு 6-1/2 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டது. ஆனால், இன்றைய நாள் வரையிலும் அது எங்களிடம் ஒப்படைக்கப்படவில்லை. இடையில் ஏற்பட்ட இடைவெளி என்னவென்று உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

அதற்கடுத்து, கவலைக்குரிய விஷயமாகச் சொல்கிறேன். கிண்டி தொழிற்பேட்டையிலும், அம்பத்தூர் தொழிற்பேட்டையிலும் வளாகங்கள் கட்டப்பட்டன. அதில் கிண்டி தொழிற்பேட்டைக்கு, உங்கள் பெயர், இன்னும் சொல்லப் போனால் 'செல்வி ஜெ ஜெயலலிதா மின்னணு வளாகம்' என்று பெயர் பொறிக்கப்பட்டு, 1-12-1995-ல் அது திறக்கப்பட்டது. அதனுடைய விலை 4 இலட்சம் ரூபாய். ஆயிரம் சதுர அடி என்று அது வழங்கப்பட்டது.

பிற்பகல் 1-40

அதேபோல, அம்பத்தூர் தொழிற்பேட்டையிலும் ஆயிரம் சதுர அடி 4 இலட்சம் ரூபாய்க்கு வழங்கப்பட்டது. சம்பந்தப்பட்ட



பொறியாளர்களால், தொழில் முனைவோர்களுக்கு அந்த 120 கூடங்களில் 68 கூடங்கள்தான் விற்பனையாக்கப்பட்டன. 52 இன்றைக்கும் இருக்கிறது. இடையில் ஏற்பட்ட சங்கடம் என்னவென்று சொன்னால், நான் மற்றவர்களைக் குறை கூறுவதாக நினைத்துக்கொள்வார்கள். உங்களுடைய பெயரை வைத்தோம் என்ற ஒரே காரணத்திற்காக ஐந்தாண்டு காலம் அதைத் திருப்பியும் அவர்களுக்குத் தராமல் செய்ததோடு, (மேசையைத் தட்டும் ஒலி) அதைவிடக் கொடுமையாக அதனுடைய விலையை 9 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாயாக மாற்றிவிட்டு, இன்றைய வரையிலும் ஒரு முடிவும் எடுக்காத நிலையில் அந்தத் தொழில் முனைவோர்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு நீங்கள்தான் ஒரு முடிவு காண வேண்டுமென்று உங்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, தாழ்ந்து கிடக்கின்ற மக்களை உயர்த்த வேண்டுமென்ற எண்ணம் உங்களுக்கு இருப்பதை வரவேற்கிறேன். தாழ்த்தப்பட்ட மக்களுக்காக D.I.C.-யின் உதவியோடு கோவை முகலிப்பாளையத்திலும், ஈரோட்டில் ஈர்கூரிலும் ஏறக்குறைய 20 கோடி ரூபாயில் தொழில் முனைவோர் வளாகங்கள் தாழ்த்தப்பட்ட இளைஞர்களுக்காகக் கட்டப்பட்டன; தொழில் முனைவோர்க்காகக் கட்டப்பட்டது. ஆனால், இன்றைய வரையில்— இடையில் ஏற்பட்ட சங்கடம், ஐந்தாண்டு காலம், தாழ்த்தப்பட்டவர்களின் பகலவன் என்று சொல்லிக் கொள்கின்ற மரியாதைக்குரிய கலைஞர் கருணாநிதி ஆட்சியில்— அந்த வளாகங்களை சம்பந்தப்பட்ட தாழ்த்தப்பட்ட இளைஞர்களுக்கு ஒப்படைக்கவும் இல்லை. இன்று வரையில் ஏறக்குறைய 20 கோடி ரூபாய் அங்கே பாழ்பட்டுக் கிடக்கிறது. அதைவிடக் கொடுமை, அந்த வளாகங்களை நடத்துவதற்காக, வங்கியிலும், D.I.C.-யிலும்கூட கடனுதவி வழங்க வேண்டும் என்று போய்க் கேட்டால், அவர்கள் உதவி செய்வதில்லை என்ற நிலையை உங்களுக்குச் சுட்டிக்காட்டுகிறேன், தாழ்த்தப்பட்டவர்களுக்காகக் கட்டிய அந்த இரண்டு தொழிற்பேட்டைகளும் இயங்குவதற்கான நடவடிக்கையைத் தாங்கள் எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவோடு நான் கேட்டுக்கொள்வேன்.

எப்படி ஜி.ஓ. 75 என்பதை நீங்கள் ரத்து செய்தீர்களோ, மாநிலத்திற்குள்ளேயே உதிரி பாகங்கள் வாங்கவேண்டுமென்று ஒரு முடிவு எடுத்திருக்கிறீர்களோ, அதேபோல் உங்களுடைய கட்டுப்பாட்டில் இருக்கிற, தமிழகத்தில் இருக்கிற மத்திய அரசு நிறுவனங்களிலும்

மிகப் பெரிய தனியார் துறை நிறுவனங்களிலும் சிறு, குறுந்தொழில்களுக்கு, குறிப்பிட்ட அளவுக்கு ஒதுக்கீடு செய்து உதிரி பாகங்கள் வாங்கவேண்டுமென்ற ஒரு சட்டத்தை அல்லது அறிவுரையை நீங்கள் வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்து, கதர் கிராமத் தொழில் வாரியம், இன்னும் நட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. அதைக் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பட்டு வளர்ச்சித் துறை உற்பத்தி, தங்களுடைய ஆட்சியில் 1992-93-ல் 1342 டன் உற்பத்தி செய்திருக்கிறோம். இன்றைக்கு 517 டன்னாகக் குறைந்திருக்கிறது. நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் மின் துறை. இந்த மின் துறையில் நான் அதிகமாகப் பேச விரும்பவில்லை. சபாநாயகர் அவர்கள் அனுமதிக்கவும் மாட்டார்கள். மின் துறையில் நீங்கள் ஆட்சி நடத்தியபோது, குறுந்தொழில் முனைவோர்க்கு 10 எச்.பி.யில் சலுகை விலை என்று ஓர் ஆணையைப் பிறப்பித்திருக்கிறீர்கள். அந்தச் சலுகை விலை ஆணையை மின் துறை தேவையற்ற காரணங்களை, நிபந்தனைகளைச் சொல்லி இன்று வரையிலும் அமல்படுத்தவில்லை என்பதைப் பணிவோடு சொல்லி, அந்த ஆணையை அமல்படுத்துவதற்கான நடவடிக்கையை மின் வாரியம் எடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இலாப நட்டக் கணக்குகளைப் போட்டு. இந்த நேரத்தில் பல கோடி நட்டம் ஏற்படுவது எங்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனால், அதேநேரத்தில் சிறு, குறுந்தொழில்கள் இன்றைக்கு முற்றாக அழிக்கப்பட்டு இருக்கின்றன. கடந்த ஐந்தாண்டு கால ஆட்சியில் ஏறக்குறைய ஒரு இலட்சம் சிறு, குறுந்தொழில்கள் மூடப்பட்டதோடு மட்டுமல்ல, அதில் பணிபுரிந்த ஏறக்குறைய 6 இலட்சம் தொழிலாளர்கள் வேலைவாய்ப்பின்றி இன்றைக்கு வீதியிலே நின்று இருக்கிற கொடுமை நடந்திருக்கிறது. உங்கள் ஆட்சியிலும் அப்படிப்பட்ட கொடுமைகள் தொடரக் கூடாது என்பதற்காக உங்களை நான் வேண்டி, விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், என்னுடைய தொகுதிப் பிரச்சினை. என்னுடைய தொகுதியில் 1989-ல் மின் வாரியம், வட சென்னை, அனல் மின் நிலையத்திற்காகத் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களிடமிருந்து ஏறக்குறைய 268 ஏக்கர் நிலத்தை எடுத்திருக்கிறது. அதற்கு மாறாக,



நட்ட ஈடு மட்டுமல்லாமல் 504 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கிறோம் என்று உறுதியளித்திருக்கிறார்கள். ஆனால், அதைக் கடந்த கால ஆட்சி வழங்கவில்லை என்பது மட்டுமல்ல. அவர்கள் எதிர்த்துக் கேட்டபோது, அரசைக் கேட்டபோது, 15 நாள் அவர்களைச் சிறையில் அடைத்து, பொய் வழக்கைப் போட்டு ஒரு மோசமான நிலையை உருவாக்கியது கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி. இன்னும் சொல்லப் போனால், வருத்தத்திற்குரிய ஒரு விஷயம்; அங்கே என்னுடைய தொகுதியைச் சேர்ந்த, அமைச்சராக இருந்த, கழகத்தினுடைய துணைப் பொதுச் செயலாளராகவும் இருக்கிறவர் மரியாதைக்குரிய சுந்தரம், அப்படி அமைச்சர் அவர்கள் இருந்தும்கூட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அங்கே அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியில் தாங்கள் தயவுகூர்ந்து அவர்கள்மீது போட்டுள்ள வழக்கை வாபஸ் பெறுவதோடு மட்டுமல்லாமல், அந்தத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஏற்கெனவே அரசு மின் வாரியத் துறையும், 504 பேர்களுக்கு வேலைவாய்ப்புத் தருகிறேன் என்று மாவட்ட ஆட்சியரிடம் ஒரு ஆணையைக் கொடுத்திருக்கிறது. அதைச் செயல்படுத்த வேண்டுமென்றும் கேட்டு, பேசுவதற்கு வாய்ப்பளித்த, சபாநாயகருக்கு நன்றி சொல்வதற்கு முன்னால், மீண்டும் முதல்வர் அவர்களை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்வேன்; இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடியான நிலையில், தொழில் முனைவோர் அமைப்பைச் சேர்ந்த நிர்வாகிகளை அழைத்துப் பேசி, தொழில் பாதுகாப்பை நீங்கள் செய்து தரவேண்டுமென்று கேட்டு, மீண்டும் நன்றியைக் கூறி முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 1-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘தர்மத்தின் வாழ்வு தன்னைச் சூது கவ்வும், மீண்டும் தர்மமே வெல்லும்’ என்பதை நிரூபித்து, மக்களின் பேராதரவைப் பெற்று, தமிழகத்தை முதன்மை மாநிலமாக ஆக்குவதற்குச் சூளுரைத்து, அல்லும் பகலும் அயராது பாடுபடும் எங்கள் மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உறுதிப்பட்டு நின்றதனால், சிறைக் கதவுகள் உடைபட்டுத் தெறித்தோட, அடுத்தடுத்துப் பெறப்பட்டு வந்த பொய் வழக்குகளைப் பொடிப்பொடியாக்கி, இன்று புனிதப்பட்டு, புகழப்பட்டு,

போற்றப்பட்டு, விண்ணுக்கும், மண்ணுக்கும் விஸ்வரூப தரிசனமாய்த் தரிசிக்கப்பட்டு, எங்கள் காவல் தெய்வமாய் அர்ச்சிக்கப்பட்டு, இந்த மாமன்றத்திலே, மாற்றாரின் உண்மைக்கு மாறான பொய்யுரைகளுக்குப் 'பட்டு, பட்டு' என்று பதிலுரைக்கும் பாங்கால் மாற்றாரும் ஈர்க்கப்பட்டு, பார்க்கப்பட்டு, வியர்த்து, வெலவெலப்பு அடையப்பட்டு, அவர்கள் கலவரப்பட்டுப் போய் இருக்கும் இந்த மாமன்றத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) கதர்த் துறை, கதர் கிராமத் தொழில் மற்றும் கைவினைப் பொருட்கள், சிறு தொழில் துறை, சிட்கோ, டான்சி ஆகியவைகளின் மானியக் கோரிக்கைகளில், காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில் ஆயர்பாடி என்ற கிராமத்தில் பிறந்த சாதாரணத் தொண்டனான என்னை, ஊராட்சி மன்றத் தலைவராகவும், கூட்டுறவுச் சங்க இயக்குநராகவும், ஒன்றியக் கழகச் செயலாளராகவும் உயர்த்தி, சோளிங்கர் சட்டமன்றத் தொகுதியின் உறுப்பினராக்கி, ஊரகத் தொழில் துறை அமைச்சராக உயர்த்தி அழகு பார்த்த எங்கள் குல விளக்கு, நான் அன்றாடம் வழிபடும் தெய்வம், மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, என்னுடைய துறை பற்றிய மானியக் கோரிக்கைகளில்—இன்று என்னுடைய கன்னிப் பேச்சைத் துவக்குகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கன்னிப் பேச்சை ஏற்கெனவே தொடங்கிவிட்டீர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன்:** கன்னி பதிலுரையைத் துவக்குகிறேன். பின்தங்கிய கிராமப்புறப் பகுதிகளிலுள்ள எளிய மக்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தி, அவர்களின் வாழ்க்கையில் ஒளியேற்ற, தளராத மனம் தன்னகத்தே கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் தனிப் பெரும் தலைவி, இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் இவ்வரசு முனைப்பாகச் செயல்பட்டு வருகிறது என்பதை இந்த மாமன்றத்திலே சொல்லிக்கொள்வதிலே பெருமையடைகிறேன். இதைக் கருத்தில் கொண்டு, விவசாயப் பெருமக்களின் பொருளாதாரத்தை மேன்மையடையச் செய்யும் நோக்கத்துடன் பட்டு வளர்ப்புத் துறை செயல்பட்டு வருகிறது. இதன்மூலம் மாநிலத்தின் கச்சாப் பட்டின் உற்பத்தி கணிசமான அளவு அதிகரித்திருக்கிறது. பட்டுத் தொழில், முசுக்கொட்டை சாகுபடி மற்றும் பட்டுப் புழு வளர்ப்புச் செய்தல் என்னும் இரு பிரிவுகளைக் கொண்டது. ஒரு ஏக்கர் முசுக்கொட்டைச் செடி பயிரிடுவதன் மூலம் 5 நபர்களுக்கு வருடம் முழுவதும் வேலைவாய்ப்புக் கிடைக்கிறது. அந்த வகையிலே,



1165 ஏக்கரில் மல்பரி பயிரிடுவதன் மூலம் 5825 பேருக்கு வருடம் முழுவதும் வேலைவாயப்புக் கிடைக்கிறது. மேலும், பட்டுத் தொழிலில் 60 சதவீதம் கிராமப்புறப் பெண்கள் ஈடுபட்டுள்ளனர். இதனால், பெண்களின் வேலைவாய்ப்பு அதிகரிக்கின்றது. மாண்புமிகு அம்மா அவர்கள் பதவியேற்றவுடன், கடந்த 2001-2002 ஆம் ஆண்டில் கோபிசெட்டிப்பாளையம் பகுதியில் 18 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு, 12 மாதங்களுக்கு அவர்களுக்குத் தேவையான பயிற்சி மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கப்பட்டன. 100 முட்டைக்கு மற்றவர்கள் சராசரி 40 கிலோ பட்டுக்கூடு எடுக்கும்போது, இவர்கள் 65.5 கிலோ அறுவடை செய்துள்ளனர். இந்தக் கூடுகள் சராசரியாக கிலோ ஒன்றுக்கு 194 ரூபாய் விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த தி.மு.க. ஆட்சியில் பட்டு நூலின் உற்பத்தி அளவு 571 டன்னாக இருந்தது. ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பதவியேற்றவுடன் வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்த வகுத்துக் கொடுத்த நெறிமுறைகளினாலும், வழங்கிய அறிவுரைகளினாலும், பட்டு நூல் உற்பத்தி 2001-2002 ஆம் ஆண்டில் 655 டன், அதாவது கடந்த ஆண்டைவிட 84 டன் கூடுதலாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. எனவே இதன்மூலம் 24 ஆயிரத்து 945 ஏழையெளிய கிராமப்புற மக்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்பினை உருவாக்கித் தந்தது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுதான் என்பது மறுக்கமுடியாத உண்மை. இதில் 60 விழுக்காடு பெண்கள் ஆவார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பொறுப்பேற்றவுடன் 2001-2002-ல் கூடுதலாக நான்காயிரம் ஏக்கரில் மல்பரி நடவு செய்யப்படும் என அறிவித்தோம். ஆனால், இதைவிட அதிகமாக மார்ச் 2002 முடிய 5088 ஏக்கரில் மல்பரி நடவு செய்யப்பட்டுள்ளது என்பதை இந்த மாமன்றத்திலே அருமைப் பெரியவர் மணி போன்றோர்க்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-50

## கதர் மற்றும் கிராமத் தொழில்கள்

கடந்த தி.மு.க. ஆட்சியின், திட்டமிட்டுச் செயல்படாத தன்மையினால், அதிக அளவில் கதர்த் துணிகளை உற்பத்தி செய்து சுமார் 42 கோடி அளவுக்கு கதர்த் துணிகள் விற்பனை ஆகாமல் தேங்கும் நிலை ஏற்பட்டது. இதனால், வாரியம் பெருத்த நஷ்டத்தையும்

சந்திக்க நேர்ந்தது. மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பொறுப்பேற்றவுடன், தேங்கியிருந்த 42 கோடி ரூபாய் மதிப்புள்ள கதர்த் துணிகளை விற்பனை செய்ய, வருடம் முழுவதும் தள்ளுபடியுடன் கூடிய விற்பனைக்கு அரசு உத்தரவிட்டதன் மூலம் தற்போது சுமார் ரூபாய் 2.28 கோடி மதிப்புள்ள கதர்த் துணிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. மேலும், அரசுப் பணியாளர்கள், அரசு சார்ந்த நிறுவனங்களின் பணியாளர்கள் ஆகியோர் கதர்த் துணிகளை வாங்கியதற்கான தொகையினை திரும்பச் செலுத்தும் தவணைகளை முந்தைய தி.மு.க. அரசு குறைத்ததன் காரணமாக, கதர்த் துணிகளின் விற்பனை பாதித்தது. இந்த வகையிலான விற்பனையினை அதிகரிக்கும் நோக்கத்துடன் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, திருப்பிச் செலுத்தும் தவணைகளை அதிகரிக்க ஆணை பிறப்பித்ததன் மூலம் தற்போது விற்பனை அதிகரித்துள்ளது. இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியில், மாநிலத்தின் கைத்திறன் வளர்ச்சிக்காகவும், முன்னேற்றத்திற்காகவும், புதிய இலக்கு நோக்கி சிறப்பான உத்வேகத்துடன் முன்னேற, தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் உறுதி பூண்டுள்ளது.

கடந்த தி.மு.க. ஆட்சி முறையான நிர்வாகமின்மையின் காரணமாக அவசர, அவசரமாக மும்பையில் ஒரு பூம்புகார் விற்பனை நிலையத்தை 24-8-2000-ல் தொடங்கியது. அதன் காரணமாக, ரூ.24.81 இலட்சம் நஷ்டம் ஏற்பட்டது. இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பதவியேற்றவுடன் இதனைக் கண்டறிந்து, வியாபாரம் நடைபெற வாய்ப்பே இல்லாத இடத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிற அந்த விற்பனை நிலையத்தின் மூலம் மேலும் நஷ்டம் ஏற்படாமல் தடுக்க 24-8-2001-ல் உடனடியாக அந்த நிலையத்தை மூடினார்கள்.

2000-2001-ல் தி.மு.க. ஆட்சியில் ஏற்றுமதி விற்பனை 55.12 இலட்சம்தான். ஆனால், அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் 2001-2002-ல் இக்கழகத்தின் ஏற்றுமதி விற்பனை ரூ.75 இலட்சமாக உயர்ந்துள்ளது. இந்த நிதியாண்டில் 2002-2003-ல் ஏற்றுமதி விற்பனை ரூபாய் 100 இலட்சம், அதாவது 1 கோடியைக் கண்டிப்பாக எட்டவும், இந்நிறுவனத்தின் மொத்த விற்பனை ரூபாய் 1550 இலட்சத்தை 2002-2003-ல் கண்டிப்பாக எட்டவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியம்

பல்வேறு தரப்பட்ட தொழில்களிலும் ஈடுபட்டுள்ள அனைத்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வேண்டும் என்ற உயர்ந்த மனப்பாங்கினைக் கொண்டுள்ள மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள், பனைத் தொழிலில் ஈடுபட்டுள்ள பனைத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் வேண்டும் என்ற எண்ணத்தில் 6-1-1995-ல் தமிழ்நாடு பனைப் பொருள் வாரியத்தை ஏற்படுத்தினார்கள். பனைத் தொழிலில் தற்போது பதநீர், பனை வெல்லம், பனஞ்சீனி, பனங்கற்கண்டு, ஆகிய உண்ணும் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவதுடன் பனஞ்சக்கையைக் கொண்டு பனந்தும்பும் மற்றும் பனை ஓலைப் பொருட்கள், ஈச்சங்குடைகள் போன்ற பொருட்களும் செய்யப்படுகின்றன. இவ்வகையில், தற்போது சுமார் 6 இலட்சம் தொழிலாளர்கள் வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளனர். மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பொறுப்பேற்றவுடன் 2001-2002-ல் ரூபாய் 8 இலட்சம் பயிற்சி மானியமாகப் பெற்று, பனைத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு கடலூரிலுள்ள மண்டல பனைப் பொருட்கள் பயிற்சி நிலையத்தின் மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது.

தமிழ்நாடு மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனைக் கூட்டுறவு இணையம் மற்றும் மாவட்ட பனை வெல்ல விற்பனைக் கூட்டுறவு சம்மேளனங்களில் வியாபார அபிவிருத்திக்காக 2001-2002 ஆம் நிதியாண்டில், ரூபாய் 123.90 இலட்சம் குறைந்த வட்டி விகிதத்தில் மூலதனக் கடன் வழங்கியுள்ளது. இவ்வாரியம் மேற்கொண்ட ஆராய்ச்சியின் விளைவாக பனம்பழ ஜாம் உற்பத்தி செய்யப்பட்டு, விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மேலும், பதப்படுத்தப்பட்ட பன நுங்கும் விற்பனை செய்யப்பட உள்ளது என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்வதிலே பெருமையடைகின்றேன்.

மேலும், மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையுடன், தேனி மாவட்டம் மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ளது என்றும், தொழிற்சாலைகளோ, வளர்ச்சிப் பணிகளோ நீண்ட காலமாக இல்லை என்ற குறைபாடுகளும், கருத்துகளும் மக்களிடையே நிலவி வருகின்றன. இப்படிப்பட்ட கருத்தினையும், குறைபாடுகளையும் போக்குகின்ற வகையில், மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள தேனி மாவட்டத்தில்

இலவம் பஞ்சு-silk cotton-பயிரிடும் விவசாயிகளிடமிருந்து, தங்கள் விளைச்சலுக்கு ஆதாயமான விலை கிடைப்பதில்லை என்று வரப்பெற்ற முறையீட்டை அம்மா அவர்கள் கருணையுடன் பரிசீலித்து, இந்நிலைமையைப் போக்கும் வண்ணம், அரசே இலவம் பஞ்சு தொழிற் சேவைக் கூட்டுறவுச் சங்கம் ஒன்று அமைக்க ஆணையிட்டுள்ளார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி தாலுக்கா, மயிலாடும்பாறை கிராமத்தில் உள்ள தங்கம்மாள்புரத்தில் இலவம் பஞ்சு தொழிற் சேவைக் கூட்டுறவுச் சங்கம் ஒன்று அமைக்க அம்மா அவர்களின் அரசு ஆணையிட்டுள்ளது.

பிற்பகல் 1-55

இதைப் போலவே, தேனி மாவட்டத்திலுள்ள முந்திரி பயிரிடும் விவசாயிகள் தங்களுடைய விளைச்சலைக் தொலை தூரத்திற்குக் கொண்டு சென்று விற்க வேண்டிய கஷ்டமான நிலை உள்ளது. அவர்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, அவர்களுக்கு உதவும் பொருட்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அவர்களுடைய துயரினைத் துடைக்கும் பொருட்டு, தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி தாலுக்கா, மயிலாடும்பாறை கிராமத்தில் உள்ள தங்கம்மாள்புரத்தில் ஒரு முந்திரி தொழிற் சேவைக் கூட்டுறவுச் சங்கம் அமைக்க உத்தரவிட்டுள்ளார்கள் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவிப்பதிலே மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பட்டு வளர்ச்சித் துறை ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிறுவனத்தின் உதவியுடன் இரு சுழற்சி இன பட்டுப் புழு வளர்ப்பு, தருமபுரி மாவட்டம், ஓசூர், கிருஷ்ணகிரி, பாப்பிரெட்டிப்பட்டி மற்றும் ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் ஆகிய பகுதிகளில் அறிமுகப்படுத்தப்படும் என்பதை அம்மா அவர்களின் ஆணைப்படி தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

100 பட்டு தர மேம்பாட்டுக் குழுக்களுக்கு பட்டுப் புழு வளர்ப்பில் நோயினைக் கட்டுப்படுத்திட அழுத்த விசைத் தெளிப்பான்கள் வழங்கப்படும். இதன் செலவினமாக மொத்தத் தொகையான ரூ.25 இலட்சத்தில் ரூ.12.50 இலட்சம் சுவிஸ் வளர்ச்சி மற்றும் கூட்டுறவு நிறுவனம், அந்நிய நாட்டு உதவி மூலம் வழங்கப்படும். முறையான நோய்த் தடுப்புப் பணியால் பட்டுக்கூடு அறுவடை வருவாய் அதிகமாகும்.



மத்திய பட்டு வாரிய நிதியுதவித் திட்டங்கள் இரு சுழற்சி இன பட்டுப் புழு வளர்ப்பை அதிகரிக்கும் பொருட்டு, விவசாயிகள் தனி புழு வளர்ப்பு மனை கட்டிடவும், பட்டுப் புழு வளர்ப்புத் தளவாடங்களைக் கொள்முதல் செய்யவும், 50 சதவீத மானியம் வழங்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். மானியத் தொகையினை மாநில அரசும், மத்திய பட்டு வாரியமும் சரிசமமாக ஏற்கும். இதன்மூலம் 300 பயனாளிகளுக்கு ரூ.210 இலட்சம் செலவில் தனி புழு வளர்ப்பு மனை மற்றும் புழு வளர்ப்புத் தளவாடங்கள் அமைத்திட ஆகும் செலவினத்தில், மாநில அரசும், மத்திய பட்டு வாரியமும் தலா ரூ.52.50 இலட்சம் மானியமாக வழங்கும்.

2000 ஏக்கர் மல்பரித் தோட்டங்களில் சொட்டு நீர்ப்பாசன வசதிகள் 2002-2003 ஆம் ஆண்டு முதல் 5 ஆண்டுகளில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தில் விவசாயிகள் 50 விழுக்காடு மானியம் பெறுவர். மானியத் தொகையினை மாநில அரசும், மத்திய பட்டு வாரியமும் 10:90 என்ற விகிதத்தில் ஏற்கும். 2002-2003 ஆம் ஆண்டில் 400 ஏக்கர் மல்பரித் தோட்டத்தில் சொட்டு நீர்ப்பாசனம் அமைத்திட ரூ.5.52 இலட்சம் மானியத்தை மாநில அரசு ஏற்கும்.

கதர் மற்றும் கிராமத் தொழில்:

கதர் வாரியம் இவ்வாண்டில் குறைந்த விலையில் தரமான பாத்திரம் துலக்கும் சோப்பு dish wash வகை ஒன்றைப் புதியதாகச் சந்தையில் அறிமுகப்படுத்த உள்ளது. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தினால் உற்பத்தி செய்யப்படும் சோப்பு வகைகள் தரமாகவும், விலை குறைவாகவும் இருப்பதால், இந்த சோப்புகள் நடுத்தர மற்றும் ஏழை எளிய மக்கள் எளிதாக வாங்கும் வகையில் அனைத்து நியாய விலைக் கடைகள் மூலமாக விற்பனை செய்யப்படவுள்ளன. இதனால் விலைக் உற்பத்தி மட்டுமல்லாமல், கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பும் கூடும். இச்சோப்பு வகைகள் ஆதிதிராவிட மற்றும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர் விடுதிகளுக்கும் விநியோகிக்கப்படவுள்ளன.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், மும்பையிலுள்ள கதர் கிராமத் தொழில் ஆணையம் வழங்கும் நூறு விழுக்காடு மானியத்துடன்கூடிய விளிம்புத் தொகைத் திட்டம் ஒன்றினை நடப்பாண்டில் செயல்படுத்த உள்ளது. இத்திட்டத்தின்கீழ் கிராமியக் கைவினைஞர்களுக்கு அதிகபட்சமாக மொத்த முதலீடான

ரூ.10 இலட்சத்தில் 30 விழுக்காடு வரை விளிம்புத் தொகை மானியமாக வழங்கப்படும். 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.2.5 கோடி அளவிற்கு மானியமாக கிராமக் கைவினைஞர்களுக்கு வழங்கிட டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசால் உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்திலே இந்த மாமன்றத்திலே சொல்லிக்கொள்வதில் பெருமைப்படுகிறோம்.

## தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் மற்றும் வளர்ச்சிக் கழகம் கைத்திறத் தொழில்கள்

வளர்ச்சிக் கழகம், தனது வளர்ச்சி நடவடிக்கைகளின் ஒரு பகுதியாகவும் மற்றும் கைவினைஞர்களின் பாரம்பரியத் தொழிற்திறனை மேம்படுத்துவதற்கான குறிக்கோளினை நிறைவேற்றவும், தமிழகத்தின் முக்கிய கைத்திறத் தொழில்கள் செறிந்துள்ள பகுதிகளில் 5 கருத்தரங்குகளுக்கு ஏற்பாடு செய்ய உத்தேசித்துள்ளது. இம்மாதிரியான கருத்தரங்குகள் கைவினைஞர்கள், கைத்திறப் பொருட்கள் துறையில் கிடைக்கக்கூடிய நவீன வடிவமைப்புகள் மற்றும் தொழில் நுட்பவியல்களை அறிந்துகொள்ள வழிவகை செய்யும். கைவினைஞர்கள் நவீனத் தொழில்நுட்பவியலைப் பயன்படுத்தி, உற்பத்திக்கான அதிநவீனத் தொழிற்திறனைக் கற்றறிய வழிவகுக்கும் வகையில், முக்கியக் கலைகளான உலோக சிற்பம், கற்சிற்பம், மர சிற்பம், பித்தளை கலைப் பொருட்கள் மற்றும் தஞ்சாவூர் கலைத் தட்டு ஆகியவற்றில் இரு வார மேம்பாட்டுப் பயிற்சித் திட்டங்களை நடத்த உத்தேசித்துள்ளது. ரூ.11.50 இலட்சம் செலவில் மேற்கூறிய இரண்டு திட்டங்களும் செயல்படுத்தப்படும். இந்தத் திட்டங்கள் ஒவ்வொன்றிலும், சுமார் 150 கைவினைஞர்கள் பயன்பெறுவார்கள் என்பதை டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு அறிவித்துள்ளது என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்கிறேன்.

பெண் கைவினைஞர்கள் பங்கேற்றுப் பயன்பெறுவதற்கென்றே கைவினைப் பொருட்கள் சந்தை ஒன்று ஏற்பாடு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் பங்கேற்பதற்காக இந்தியா முழுவதிலுமிருந்து சுமார் 100 முதல் 150 பெண் கைவினைஞர்கள் அழைக்கப்படுவர். இந்தச் சிறப்பு நிகழ்ச்சிக்கு புதுடெல்லி கைத்திறப் பொருட்கள் வளர்ச்சி ஆணையத்திடமிருந்து நிதியுதவி பெற முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



பிற்பகல் 2-00

## சிறு தொழில்கள் பற்றிய விளக்கம்

தமிழகத்தின் பொருளாதாரம் மேம்பாடு அடைய சிறு தொழில்களின் வளர்ச்சிதான் அடிப்படை என்பதை நன்றாக உணர்ந்த புரட்சித் தலைவி அவர்களின் அரசு, பதவியேற்றது முதல் அடுக்கடுக்காகப் பல திட்டங்களை வகுத்து, அவற்றைச் சீரிய முறையில் நிறைவேற்றி வருகிறது என்பதை இம்மாமன்றத்தில் உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள். புரட்சித் தலைவி அவர்கள் முதல்வராகப் பதவியேற்றவுடன், இந்த மாநிலத்தின் மிகப் பெரிய பிரச்சினையாக உருவெடுத்திருந்தது தேயிலைப் பிரச்சினை. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ராஜு, திரு. கந்தசாமி ஆகியோர் கூறுவதைப்போல், அம்மா அவர்கள் பொறுப்பேற்ற உடனேயே, தேயிலை விவசாயிகள் நலனைக் காக்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு புதியதாக ஓர் ஏல மையம் தொடங்க முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கனவே இருக்கின்ற இரண்டு ஏல மையங்களிலும் தேயிலை விவசாயிகள் உறுப்பினர்களாக இல்லை. நமது அரசு அதிகாரிகளும் அதில் இல்லை. மைய அரசின் ஒரு I.A.S. அதிகாரி, இரண்டு ஏல மையங்களையும் கண்காணிக்கிறார். வியாபாரிகளும், புரோக்கர்களும், உறுப்பினர்கள். சிண்டிகேட் மூலம் குறைந்த விலைக்கே வியாபாரிகள் வாங்குகிறார்கள். இந்த ஆதிக்கத்தைப் போக்க விவசாயிகளும், நமது அரசு அதிகாரிகளும் அதிக அளவுள்ள ஒரு புதிய ஏல மையத்தை உருவாக்குவோம் என்று டாக்டர் புரட்சித் தலைவி அரசு அறிவித்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதனால், வியாபாரிகள் ஆதிக்கம், சிண்டிகேட் போன்றவற்றைத் தடுக்கலாம். தேயிலைக்கு நல்ல விலையும் கிடைக்கும் என்பதை டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், உங்களுடைய கோரிக்கையை ஏற்று அறிவித்திருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்வதிலே பெருமையடைகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மகளிர் முன்னேற்றத்தில் மிகவும் அக்கறை கொண்டிருக்கிறார்கள். மகளிர்க்கான பல முன்னோடித் திட்டங்களை அறிவித்தது புரட்சித் தலைவி அவர்களது அரசுதான்.

திரு. கந்தசாமி அவர்கள் தேயிலை பற்றிக் குறிப்பிடும்போது, மைய அரசு கிலோ ஒன்றுக்கு வழங்கி வந்த ரூ.2 மானியத்தை நிறுத்திவிட்டது என்றும் தமிழக அரசு கடந்த கவர்னர் உரையின்போதும்,

நிதிநிலையறிக்கையின்போதும் தேயிலை விவசாயிகளுக்கு ஆவன செய்யப்படும் என்று கூறியிருந்தார்கள், வழங்கவில்லை என்றும் ஒரு குற்றச்சாட்டை அல்லது ஒரு சந்தேகத்தை இந்த மாமன்றத்திலே எழுப்பினார்கள். மத்திய அரசு ரூ.2-ஐ நிறுத்தியபோதும்கூட, டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு ரூ.2 மானியத்தை மைய அரசு வழங்க வேண்டும் என வற்புறுத்தி வருகிறது என்பதை இந்த நேரத்திலே மாமன்றத்திலே கூறிக்கொள்வதிலே பெருமையடைகிறோம். அதேபோல், திரு. ராஜு அவர்கள், புதிய ஏல மையம் குன்னூரில் கேட்டார். ரமேஷ்ராம் மிஸ்ரா அறிக்கையை அரசு பரிசீலித்து வருகிறது என்பதை திரு. ராஜு அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். சென்ற அரசு அதனைக் கிடப்பிலே போட்டுவிட்டது. Percussion report அரசு சம்பந்தப்பட்டது அல்ல. Tea Board சம்பந்தப்பட்டது. தேயிலைத் தொழில் தனியார் கையில் உள்ளது. அரசு கையில் இல்லை. மைய அரசுதான் Tea Board என்ற ஒரு திட்டத்தை ஏற்படுத்தி, தன்னகத்தே வைத்துக்கொண்டுள்ளது என்பதை மாமன்ற உறுப்பினர் திரு. ராஜு அவர்களுக்கு மிகவும் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறு தொழில் துறையைப் பொறுத்தமட்டில், இதில் முக்கியப் பங்கு ஆற்றும் வகையில், ஐந்தாண்டுகளில் *1,25,000* மகளிர்க்கு மேற்கண்ட பயிற்சியினை அளிக்க, பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, சென்ற ஆண்டில் *25* ஆயிரம் மகளிருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டும் இச்சீரிய திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட, டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அத்தனை நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறார்கள் என்பதை இந்த மாமன்ற உறுபபினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் *2-05*

*1991-96*-ல் மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் *19* தொழிற் பேட்டைகளை, SIDCO நிறுவனம் உருவாக்கியது. ஆனால், *1996* முதல் *2001* ஆம் ஆண்டு வரை இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் *7* தொழிற்பேட்டைகள் மட்டுமே உருவாக்கப்பட்டன. அந்த *7* தொழிற்பேட்டைகளும்கூட டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது வாங்கப்பட்ட அடிமனைகள்தான் என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த *11* மாத காலத்தில், மகளிருக்கான *5* புதிய



தொழிற்பேட்டைகளை உருவாக்கிட ஆணை பிறப்பித்து, அதில் *3* தொழிற்பேட்டைகள் தொடங்குவதற்குத் தயார் நிலையில் உள்ளன என்பதையும் மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

சென்னைக்கு அருகில் திருமுல்லைவாயிலில் மகளிருக்கு மட்டுமேயான ஒரு தொழிற்பேட்டை அமைக்கப்பட்டுள்ளது. இங்கு *290* ஏக்கர் நிலப்பரப்பில் சிறு மற்றும் குறுந்தொழில்கள் ஆரம்பிப்பதற்கான மேம்படுத்தப்பட்ட தொழில்மனைகள் SIDCO மூலம் உருவாக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த மகளிர் தொழிற்பேட்டையைக் கூடிய விரைவிலே தொடங்கி வைக்க இருக்கிறார்கள் என்பதை மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்வதிலே மகிழ்ச்சியடைகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மேலும், மதுரை மற்றும் திருச்சி ஆகிய இரண்டு இடங்களிலும் இதுபோன்ற மகளிர்க்கான தனித் தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. கோவை மற்றும் சேலம் ஆகிய இரு நகரங்களில் மகளிர்க்கான தொழிற்பேட்டைகள் நிறுவ நிலம் கையகப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதையும் மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*1991* முதல் *1996* வரை புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியிலே *178* தொழிற்கூடங்கள் கட்டப்பட்டன. ஆனால், கடந்த *5* ஆண்டு காலத்தில் கட்டப்பட்ட தொழிற்கூடங்கள் வெறும் *45* மட்டுமே. சிறு தொழில்களுக்கு ஏற்பட்ட ஒரு முக்கியமான பிரச்சினை, அவர்களிடம் வியாபாரம் செய்யும் பெரும் தொழில்கள் செய்பவர்கள் மற்றும் பிற மாநிலத்தைச் சேர்ந்த வியாபாரிகள் வாங்கிய பொருட்களுக்கு ஒழுங்காகப் பணத்தைச் செலுத்தவில்லை என்பதுதான் ஒரு பெரிய குற்றமாகும். இந்தக் குற்றத்தை நிவர்த்தி செய்யும் வகையில், சென்னை, திருச்சி, கோவை மற்றும் மதுரை ஆகிய நான்கு பெரிய மாநகரங்களிலும், *4* மண்டலக் குழுக்கள் சட்டபூர்வமாக *7-3-2000* அன்று தோற்றுவிக்கப்பட்டன. இது மத்திய அரசினால் கொண்டு வரப்பட்ட ஒரு சட்டமாகும். சென்ற ஆட்சியில் இந்தக் குழு சரியான முறையில் செயல்படாமல் *31-3-2001* வரை *41* சிறு தொழில் நிறுவனங்களுக்கு *101.47* இலட்சம்தான் வசூல் செய்ய உதவி செய்தது. ஆனால், மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அரசு, பதவி ஏற்ற இந்த *11* மாதங்களில் மட்டும் *170* சிறு தொழில் நிறுவனங்களுக்கு ரூபாய் *464.6* இலட்சம் வசூல் செய்ய உதவி

செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும், சிறு தொழில் செய்வோரிடையே புரட்சித் தலைவியின் உத்தரவுகள் மிகுந்த நம்பிக்கையையும், உற்சாகத்தையும் ஊட்டியுள்ளன என்பதையும் மாமன்ற உறுப்பினர்களுக்கு மிகவும் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த கால அரசு எடுத்த தவறான ஒரு கொள்கை முடிவினால், அதாவது, சிறு தொழில்கள் பற்றிய அரசாணை எண் 75, நாள் 19-2-1997, சிறு தொழில் முனைவோருக்கு ஒரு பேரிடியாக அமைந்தது; மேலும், சிறு தொழில்கள் நலிவடைய மிகவும் காரணமாகவும் இருந்தது. அந்த வகையில் தமிழக சிறு தொழில் நிறுவனங்களுக்குக் கிடைக்க வேண்டிய கொள்முதல் ஆணையாக ரூபாய் 1,500 கோடியும், அரசுக்குச் சேர வேண்டிய வருவாய் இழப்பாக ரூபாய் 150 கோடியும், சிறு மற்றும் குறுந்தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு ஊதியமாகக் கிடைக்க வேண்டிய ரூபாய் 400 கோடியும் இழப்பு ஏற்பட்டது என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்களுக்கு வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

50 ஆண்டுகளுக்கு மேலாகியும், சிறு தொழில்களுக்கான கொள்கைகள் மற்றும் திட்டங்களைத் தீட்டியும், நமது மாநிலத்தில் எத்தனை சிறு தொழில் நிறுவனங்கள் உள்ளன என்றும், அவை எவ்வகைப் பொருட்களை உற்பத்தி செய்கின்றன, அவற்றின் உற்பத்தித் திறன், முதலீடு, எந்த வகையான தொழில்நுட்பம் அவர்களிடம் உள்ளது என்பது போன்ற தகவல்கள் பற்றிய முழு விவரங்களும் நம்மிடம் இல்லை. இதனால் சிறு மற்றும் குறுந்தொழில் நிறுவனங்கள் மிகவும் நலிவுற்ற நிலையை அடைந்துவிட்டன.

தமிழகத்திலுள்ள சிறு தொழில்கள், கணினி, மின்னணு வணிக முறைக்குத் தங்களைத் தயார் செய்துகொள்ள மேற்கூறிய முழு விவரங்கள் அடிப்படைத் தேவையாகும். எனவேதான், தொலைநோக்குப் பார்வையோடு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக லயோலா கல்லூரியும் இணைந்து 100 விழுக்காடு கணக்கெடுப்பு நடத்த உத்தரவிட்டு, தமிழகத்தின் நிதி நிலைமை மிக மோசமாக இருந்தபோதிலும், இதனுடைய முக்கியத்துவத்தை உணர்ந்து அதற்கு ரூபாய் 40 இலட்சம் அனுமதித்து, கணக்கெடுப்பு நடத்த அம்மா அவர்கள் உத்தரவிட்டார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மெத்தப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.



பிற்பகல் 2-10

முதற்கட்டமாக, காஞ்சிபுரம் மாவட்டத்தில் பரிட்சார்த்தமான கணக்கெடுப்பு எடுத்து முடிக்கப்பட்டுள்ளது. சுமார் 18,000 சிறு தொழில்கள் இந்த மாவட்டத்தில் இருப்பதாகத் துறைகளின் கணக்கில் இருந்தாலும், முழுக் கணக்கெடுப்பின்படி, 8,000 சிறு தொழில்களே உள்ளன. இக்கணக்கெடுப்பின்படி 10,000 சிறு தொழில்கள், இருக்கும் இடம் தெரியாமல் போய்விட்டது தெரிய வந்துள்ளது.

சிறு மற்றும் குறுந்தொழில்கள் சங்கத்தைச் சேர்ந்தவர்களுடன் நேரடிக் கலந்துரையாடல்களைப் பல வகைகளில் மேற்கொண்டு, அவர்களின் தேவைகளை உடனுக்குடன் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு நிறைவேற்றி வருகிறது. கூடுதல் மின்சார வைப்புத் தொகை, மிகக் கடுமையான பொருளாதார நெருக்கடியை சிறு மற்றும் குறுந்தொழில்களுக்கு ஏற்படுத்தும் என்ற கோரிக்கையினை ஏற்று, வைப்புத் தொகை தேவையில்லை என்ற உத்தரவினை டாக்டர் புரட்சித் தலைவி அரசு வெளியிட்டுள்ளது என்பதையும் மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நமது மாநிலத்திலேயே மிகப் பெரிய சிறு தொழில் சங்கமாகிய 'டான்ஸ்டியா', ஜெர்மன் அரசாங்கத்துடன் இணைந்து தமிழக அரசினை அணுகி, தற்போது நிலவுகின்ற சிறு தொழில்களுக்கான சாதகமான சூழ்நிலையை முழுமையாகப் பயன்படுத்தி அரசுடன் தனியார் பங்கு பெறும் ஓர் அரிய திட்டம் (public-private partnership) செயல்படவுள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ் தமிழக அரசின் சிறு தொழில்களுக்கான கணக்கெடுப்பில் முழு ஒத்துழைப்புடன் இந்தச் சங்கமும், ஜெர்மனி நாட்டின் ஒரு துறையான ZDH என்ற நிறுவனமும் முழு ஒத்துழைப்பை நல்கி வேலை செய்து வருகின்றன என்பதை மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வரின் 15 அம்சத் திட்டத்தின்கீழ் ஒரு அடிப்படைத் திட்டமானது தொழில் திறமை இல்லாத தொழிலாளர்களுக்கு, அவர்கள் செய்யும் தொழிலுக்குத் தேவையான திறனை ஏற்படுத்தும் பயிற்சிகள் பலவற்றையும் வழங்க வேண்டுமென்பதாகும். தொழில் திறன் அதிகரிக்கும்போது, ஒரு தொழிலாளி அதிக வருமானம் ஈட்ட முடியும்; உற்பத்தி பெருகும். தொழில் திறனுக்கான பயிற்சி அளிப்பதில் இத்துறை பெற்றுள்ள

50 ஆண்டு கால அனுபவத்தைக் கொண்டு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தோற்றுவித்துள்ள தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாட்டு நிலையத்தின் முழு முயற்சியுடன் முதலமைச்சரின் இந்த அருமையான திட்டம் மிகச் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தப்படும் என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்களுக்குப் பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன்.

டான்சி:-

டான்சி ஆரம்பிக்கப்பட்டு 35 ஆண்டுகள் ஆகியுள்ள நிலையில், முதல் முறையாக டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பதவியேற்ற இந்த ஆண்டுதான் உற்பத்தி ரூபாய் 44 கோடியை எட்டியுள்ளது என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்களுக்குப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். இனி வருங்காலங்களில் டான்சி ஒரு தலை சிறந்த நிறுவனமாக விளங்கும் என்பதைப் பெருமையுடன் கூறிக் கொள்கிறேன்.

முதன்முதலாக டாட்டா, ரிலையன்ஸ் போன்ற பெரிய தனியார் நிறுவனங்கள் விலை உயர்ந்த தொலைத் தொடர்பு கோபுரங்கள் தயாரிப்பதற்கு டான்சியை அணுகி, அதன் தரத்தை அங்கீகரித்து வேலைகள் கொடுத்துள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த இருபது ஆண்டு கால டான்சி வரலாற்றிலேயே டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சி ஏற்பட்ட இந்த 11 மாதங்களில் மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கையின் காரணமாக, இந்த நிறுவனம் ரூபாய் 3 கோடி இலாபம் ஈட்டக்கூடிய அளவிற்கு வளர்ந்துள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

சேகோசர்வ்:

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு 2002-2003 நிதிநிலை அறிக்கையில் நிறுவனத்திற்குக் கூடுதல் விற்பனை வரியிலிருந்து விலக்களித்தும், சேகோசர்வ் நிறுவனம் சலுகை விகிதத்தில் செலுத்தி வந்த 2% விற்பனை வரியை 4% ஆக உயர்த்தியும் உத்தரவிட்டுள்ளது.

சேகோசர்வ் நிறுவனம் முன்பு வணிகர்களிடம் 2% சலுகை விற்பனை வரியும் மற்றும் 1.5% சேவைக் கட்டணமும் வசூலித்து



வந்தது. தற்சமயம், அரசு வரி விகிதங்களை மாற்றியமைத்ததைத் தொடர்ந்து வணிகர்களுக்கான சேவைக் கட்டணம் 0.25% ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. இதுவரை ஆண்டு வருமானத்தில் 0.1% இலாபம் மட்டுமே ஈட்டி வந்தது சேகோசர்வ் நிறுவனம். மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேற்கண்ட அறிவிப்பினால் இலாபம், இனி 1% அளவு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2002-2003 ஆம் ஆண்டில் பின்வரும் புதிய திட்டங்களைச் செயல்படுத்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்களுக்குப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறு தொழில் சங்கங்கள், ஓர் அரசுத் துறை மற்றும் ஓர் அரசு சாரா நிறுவனம் ஆகிய மூன்றும் இணைந்து, முனைப்பாகப் பல திட்டங்களை நடைமுறைப்படுத்தலாம். துவக்கக் கட்டமாக, சிறு தொழில் பிரிவிற்கான உட்கட்டமைப்பு, தொழிற்சாலைகளின் புள்ளிவிவரம் சேகரித்தல் மற்றும் தொழில் மேம்பாட்டு சேவை ஆகியவற்றை முதலில் மேற்கொள்ளத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன.

பிற்பகல் 2-15

சிறு தொழில் துறையினுடைய இணைய தளத்தினை அணுகி, தற்காலிக சிறு தொழில் நிறுவனச் சான்றிதழுக்குத் தொழில் முனைவோர் விண்ணப்பிக்கலாம் என்பது நமது நாட்டிலே ஒரு முன்னோடித் திட்டமாகும்.

கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் தாமிர நகைகள் உற்பத்தியாளர் தொழில் கூட்டுறவுச் சங்கத்தில் ரூபாய் 3.15 இலட்சம் செலவில் சங்கிலி வெட்டும் அலகு அமைப்பதற்காக ரூபாய் 2 இலட்சம் வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை இம்மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பெரம்பலூர் மாவட்டம், ஜெயங்கொண்டத்தில் ரூ. 16.78 இலட்சம் செலவில், முந்திரி மற்றும் முந்திரி சார்ந்த பொருள்களை உற்பத்தி செய்யும் புதிய தொழில் கூட்டுறவுச் சங்கம் அமைப்பதற்கு, அரசின் பங்காக ரூபாய் 3 இலட்சம் வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கோயம்புத்தூரிலே விஸ்வகர்மா நகைத் தொழிலாளர்களின் மறு வாழ்வுக்காக ரூபாய் 23.17 இலட்சம் செலவில் தங்க நகை உற்பத்தித் தொழில் கூட்டுறவுச் சங்கம் அமைப்பதற்கு அரசின் பங்காக ரூபாய் 5 இலட்சம் வழங்க முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்வோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகம், தேசிய சிறு தொழில் கழகத்துடன் இணைந்து, குறுந்தொழில்களுக்குக் கடன் வழங்கும் திட்டத்திற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மிகவும் மகிழ்ச்சியோடு இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த இரு மானியக் கோரிக்கைகளின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களின் மேலான ஆலோசனைகளையும், கருத்துகளையும் வழங்கியுள்ளார்கள். மேலும், வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துள்ளார்கள். வெட்டுத் தீர்மானங்களுக்குத் தேவையான விளக்கங்களை அளித்துள்ளேன். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுமாறு அன்போடு கேட்டுக்கொண்டு, இந்த இரு மானியக் கோரிக்கைகளையும் நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தங்கள் பேச்சிலிருந்து சிறு தொழில் எவ்வளவு வளர்ந்திருக்கிறது என்று தெரிகிறது. மாண்புமிகு மின் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய' வள்ளலாரைப்போல, தமிழக மக்கள் வாடாமலிருக்க வாழும் வள்ளலாரே, வள்ளலின் வாரிசே, தான் உண்டு, தன் பிள்ளைகள் உண்டு எனத் தன் மக்களுக்காக வாழுகின்ற தலைவர்கள் மத்தியில், தமிழ் மக்களுக்காக வாழுகின்ற மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) சாலையோர மக்களும், சாமானிய மக்களும், ஏழை எளிய மக்களும் ஏற்றம் பெறவேண்டும் என்பதற்காக, தன் வாழ்க்கையையே தமிழ் மக்களுக்காக அர்ப்பணித்துக் கொண்டு இருக்கும் மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களைப் பணிந்து வணங்குகிறேன்.



இச்சட்டப் பேரவையின்முன், முதன்முதலாக எரிசக்தித் துறைக்கெனத் தனியாக மானியக் கோரிக்கையை வைக்கும் அரிய வாய்ப்பினை எனக்கு அளித்தமைக்கு நான் மீண்டுமொரு முறை மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுக்கு எனது பணிவான நன்றியைக் கூறிட விழைகிறேன்.

இந்த மானியக் கோரிக்கை எண் 13, தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சிக் கழகம், அரசு தலைமை மின் ஆய்வகம் மற்றும் மின் விசை நிதிக் கழகம் ஆகிய நான்கு துறைகளையும் உள்ளடக்கியதாகும்.

மின் துறையின் இயக்கச் செயல்பாட்டை நிர்வகிப்பதில் இந்தியாவிலேயே மிகச் சிறந்த நிறுவனமாக, தமிழ்நாடு மின்சார வாரியம் திகழ்கிறது என்பதை இந்தப் பேரவைக்குப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தியாவிலேயே அதிக வருவாய் ஈட்டும் மின் வாரியங்களில் மகாராஷ்டிராவிற்கு அடுத்தபடியாக தமிழ்நாடு மின்சார வாரியம் திகழ்கிறது. ஆனால், மின் கட்டணத்தைத் திறமையாக வசூலிப்பதில் நாட்டிலேயே முதலிடத்தை வகிக்கிறது என்பதையும் தெரிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டிலுள்ள தூத்துக்குடி, மேட்டூர், வடசென்னை ஆகிய மூன்று அனல் மின் நிலையங்கள், 2001-2002-ல் மிக நன்றாகச் செயல்பட்டு, இந்திய அரசின் தங்கப் பதக்கம்/ஊக்கத் தொகை ஆகியவற்றைப் பெறுவதற்குரிய சாதனைகளைப் புரிந்துள்ளன. மூன்று அனல் மின் நிலையங்களும், இத்தகைய அரிய சாதனையைப் புரிந்து, தங்கப் பதக்கத்தை ஒரே நேரத்தில் பெறுவது இதுவே முதல் முறையாகும். இது நமது மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் நிர்வாகத் திறமைக்கு ஓர் அரிய எடுத்துக்காட்டாகும். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

"ஊருக்கெல்லாம் வெளிச்சம் போடக் கொடுத்த பணத்திலே தாங்கள் மட்டும் வெளிச்சம் போட்டு வாழ்ந்துவிட்டார்கள்" (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) என்ற கடந்த காலக் குறைகளை எல்லாம் நீக்கி, மின் துறையைச் சீராக்கி, செம்மையாக்கி, இந்தியாவின் முதன்மையான மின் துறையாக மாற்ற மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் அம்மா அவர்களின் சீரிய ஆலோசனையின் பேரில் முனைப்போடு செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மொத்த மின் உற்பத்தி நிறுவுதிறன், 7,905 மெகாவாட்டாகும். இதில், வாரிய மின் உற்பத்தி நிலையங்கள் 5,194 மெகாவாட் மற்றும் தனியார் மின் உற்பத்தி நிலையங்கள் 798 மெகாவாட் மற்றும் மத்திய மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து வரும் பங்கு 1,913 மெகாவாட் ஆகியவை அடங்கும். இவை தவிர, காற்றாலையிலிருந்து மொத்தம் 832 மெகாவாட் கிடைக்கப் பெறுகிறது.

கடந்த ஆண்டில் தென்மேற்கு, மற்றும் வடகிழக்குப் பருவமழை தவறியதன் காரணமாக, நீர் மின் நிலையங்களின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் நீர்வரத்துக் குறைந்து, சுமார் 50 கோடி யூனிட்டுகள் உற்பத்தியில் இழப்பு ஏற்பட்டது.

நாளொன்றுக்கு சராசரி மின் பயனீட்டளவு 13 கோடி யூனிட்டுகளாகவும், உச்ச மின் தேவை 6,719 மெகாவாட்டாகவும் இருக்கிறது. இச்சூழ்நிலையில் அனல் மின் நிலையங்களைச் செம்மையாகச் செயல்பட வைத்து, மின் உற்பத்தியை உயர்த்தி, மின் தேவை தங்குதடையின்றிப் பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது. இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள வழுதூர், பெருங்குளம் என்ற இடத்தில் ரூ.345 கோடி மதிப்பீட்டில் 95 மெகாவாட் திறன் கொண்ட எரிவாயு சுழலி மின் திட்டத்தை மின் வாரியம் 2002-2003-ல் இயக்கி வைக்கத் திட்டமிட்டுள்ளது. மேலும், 100 மெகாவாட் திறன் கொண்ட குத்தாலம் எரிவாயு சுழலி மின் திட்டம் ரூ.350 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். 60 மெகாவாட் திறன் கொண்ட பவானி கட்டளை, ரூ.199 கோடி மதிப்பீட்டில் இரண்டாவது மற்றும் மூன்றாம் தடுப்பணைகள், புனல் மின் திட்டங்கள் ஆகிய மூன்று திட்டங்களுக்கான பணிகள் இந்நிதியாண்டில் தொடங்கப்படும்.

பிற்பகல் 2-20

நெய்வேலி அனல் மின் நிலைய விரிவாக்கத் திட்டத்தில் ஒவ்வொன்றும் 210 மெகாவாட் திறன் கொண்ட இரண்டு பிரிவுகள் இந்நிதியாண்டில் இயக்கி வைக்கப்படும். இதன் மூலம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு 168 மெகாவாட் பங்காகக் கிடைக்கவிருக்கின்றது. நெய்வேலியில் பழுப்பு நிலக்கரியை எரிபொருளாகக் கொண்ட 250 மெகாவாட் திறன் உள்ள தனியார் மின் திட்டம் இந்நிதியாண்டில் இயங்கத் தொடங்குகின்றது.



மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு விவசாயிகளுக்குத் தோள் கொடுக்கும் அரசு. கடுமையான நிதி நெருக்கடியிலும், இலவச மின்சாரத் திட்டம் தொடரும் என்பதை அறிவித்து, மாண்புமிகு டாக்டர் அம்மா அவர்களின் அரசு (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளின் அரசு என்பதை மீண்டும் நிரூபித்துள்ளதை எண்ணி, தமிழக மக்கள் நன்றியோடு நினைத்துப் பார்க்கிறார்கள். மின் தொடர் மற்றும் மின் பகிர்மான அமைப்பை மேம்படுத்தும் வகையில் 2002-2003 ஆம் ஆண்டில் சுமார் ரூ.400 கோடி மதிப்பீட்டில் 60 புதிய துணை மின் நிலையங்களும், ரூ.167 கோடி மதிப்பீட்டில் சுமார் 800 சுற்று கிலோ மீட்டர் உயர் அழுத்த மின் கம்பிகளும் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின்சார வாரியம், சென்னை மாநகராட்சிப் பகுதியில் மீதமுள்ள மின் கம்பங்களின் மேல் செல்லும் மின் பாதைகளைப் படிப்படியாக நிலத்தடி வடங்களாக மாற்றத் திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ.22 கோடியாகும். ஒரே நாளில் மின் இணைப்பு அளிக்கும் திட்டத்தில், 2001-2002 ஆம் ஆண்டில் மட்டுமே 5½ இலட்சம் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. விரைவுபடுத்தப்பட்ட மின் மேம்படுத்துதல் மற்றும் சீரமைப்புத் திட்டத்தின் மூலம் மின் அனுப்புகை மற்றும் மின் விநியோகக் கட்டமைப்பை மேம்படுத்துதல் மற்றும் மின் உற்பத்தி நிலையங்களின் புனரமைப்பு ஆகியவற்றிற்கு மைய அரசின் நிதியுதவி பெறப்படுகிறது. இந்நிதியுதவியைப் பெறும் வகையில், மாநில அரசிற்கும், மத்திய அரசிற்கும் இடையே உடன்படிக்கை 09-01-2002 அன்று கையொப்பமிடப்பட்டுள்ளது. 2001-2002 ஆம் ஆண்டிற்கு விழுப்புரம், புதுக்கோட்டை மற்றும் கோயம்புத்தூர் தெற்கு ஆகிய மூன்று மின் பகிர்மான வட்டங்களில் மின் விநியோக மேம்பாட்டிற்காக ரூ.232.52 கோடி மதிப்பீட்டில் ஒரு திட்டமும், பாபநாசம் மற்றும் மேட்டூர் அணை (மேசையைத் தட்டும் ஒலி) புனல் மின் நிலையங்களில் புனரமைத்தல் மற்றும் மேம்படுத்துதல் ஆகிய பணிகளுக்காக ரூபாய் 50.16 கோடி மதிப்பீட்டில் மற்றொரு திட்டமும் இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி பெற்று, செயல்படுத்தப்படவுள்ளன.

மின் பகிர்மான மேம்பாட்டுப் பணிகளுக்கென, தேசிய விவசாய மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி-நபார்டு-அனைத்து மாநிலங்களுக்கும் ஊரகக் கட்டமைப்பு மேம்பாட்டு நிதி—R.I.D.F.—ஏழாவது திட்டத்தின்கீழ் கடன் வழங்குகிறது. முதல் கட்டமாக இராமநாதபுரம், தூத்துக்குடி, தஞ்சாவூர், தருமபுரி ஆகிய நான்கு மாவட்டங்களிலுள்ள திட்டங்களும் ரூபாய் 34.41 கோடி கடனுதவிக்கான அனுமதி

பெறப்பட்டுள்ளது. இரண்டாவது கட்டமாக, கரூர், திருவண்ணாமலை, சிவகங்கை, விருதுநகர் ஆகிய நான்கு மாவட்டங்களில் மின் பகிர்மான மேம்பாட்டுப் பணிகளுக்கான திட்டங்கள் ரூபாய் 48 கோடி மதிப்பீட்டில் நபார்டு நிறுவனத்தின் நிதியுதவி பெற்று மேற்கொள்ளப்படவுள்ளன. மூன்றாவது கட்டமாக, தேனி, திண்டுக்கல், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் மின் பகிர்மான மேம்பாட்டுப் பணிகளுக்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, நபார்டு நிதியுதவி பெற்று, செயல்படுத்தப்படவுள்ளன.

மேலும் தாவர எரிபொருள்—பயோமாஸ் மூலம் மின் உற்பத்தி செய்யும் 12 மெகாவாட் திறன் கொண்ட மின் திட்டம், காஞ்சிபுரம் மாவட்டம் பழையசீவரம் கிராமத்தில் தற்போது இயக்கத்திலுள்ளது. திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் என்ற இடத்தில் தேங்காய் மட்டையிலிருந்து மின் உற்பத்தி செய்யும் 1 மெகாவாட் திட்டத்திற்கும், நாமக்கல் மாவட்டத்திலுள்ள உடுப்பம் என்ற கிராமத்தில் கோழி எச்சத்திலிருந்து மின்சாரம் தயாரிக்கும் 1 மெகாவாட் திட்டத்திற்கும், கோவை மாவட்டத்திலுள்ள வரப்பட்டி கிராமத்தில் நிறுவப்படவுள்ள 1 மெகாவாட் திட்டத்திற்கும் மற்றும் விழுப்புரம் மாவட்டத்திலுள்ள வானூர் கிராமத்தில் சவுக்கு மர எரிபொருள் மூலம் மின்சாரம் தயாரிக்கும் 12 மெகாவாட் திட்டத்திற்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இது தவிர, இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள பரமக்குடியில் கருவேல்உடை மர எரிபொருள் மூலம் மின்சாரம் தயாரிக்கும் 12 மெகாவாட்டுக்கான மின் திட்டங்களும் பரிசீலனையில் உள்ளன. மேற்சொன்ன அனைத்து மின் திட்டங்களும் தனியார் துறையினால் நிறைவேற்றப்படவுள்ளன.

*பிற்பகல் 2-25*

**மின்சார ஆய்வுத் துறை:** மின்சார ஆய்வுத் துறையானது, இந்திய மின்சாரச் சட்டங்கள், இந்திய மின்சார விதிகள், திரையரங்குகள் மின் ஏய்ப்பு விதிகள் மற்றும் மின்சார லிஃப்ட் விதிகளின்கீழ் ஆய்வுகள் மற்றும் தணிக்கைகளை மேற்கொண்டு, பாதுகாப்பை உறுதி செய்வதுடன் மின் வரி மற்றும் மின் தீர்வை ஆகியவற்றை வசூலிக்கும் பணியைக் கண்காணிக்கின்றது.



தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் காற்று சக்தி, சூரிய சக்தி மற்றும் தாவர உயிரியல் சக்தி மூலம் மின்சாரம் தயாரித்தலை ஊக்குவிக்கிறது. தாவர எரிபொருள், தேங்காய் மட்டை, மற்றும் கோழி எச்சத்திலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டங்களும், மர எரிபொருள் மூலம் மின்சாரம் தயாரிக்கும் மின் திட்டங்களும் தனியார் துறையில் நிறுவப்படவுள்ளன.

**தமிழ்நாடு மின் விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்:** இந்நிறுவனம் தமிழக அரசின் மூலதனத்துடன் கம்பெனிகள் சட்டத்தின்கீழ்ப் பதிவு செய்யப்பட்ட, ஒரு வங்கிசாரா நிதி நிறுவனமாகும். தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குக் கடந்த ஆண்டு 439 கோடி ரூபாய் கடன் வழங்கியுள்ளது. இந்நிறுவனம் 2001-2002 ஆம் ஆண்டில் ரூபாய் 17 கோடி இலாபம் ஈட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இப்படியாகப் பல்வேறு திட்டங்களைத் தீட்டி, நமது அரசு மண்ணைப் பொன்னாக்கும் மதிநுட்பம் படைத்த எங்கள் அம்மா அவர்களின் சீரிய தலைமையில் (மேசையைத் தட்டும் ஒலி) மின் துறை பொன் துறையாக மாறும் என்பதில் ஐயமில்லை என்பதைக் கூறி, இங்கே கொடுக்கப்பட்ட வெட்டுத் தீர்மானங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. (குறுக்கீடு) ஞானசேகரன் (குறுக்கீடு) இத்தனை பேருடைய வயிற்றிலே அடிப்பது சரியல்ல. (சிரிப்பு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் இங்கே நெய்வேலி லிக்னைட் மின்சாரத்தைப் பற்றிச் சொன்னார்கள். ஏற்கெனவே இலாபத்தில் இயங்கிக் கொண்டிருக்கிற அந்த நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷனை இப்போது தனியார் மயமாக்குவதற்காக மத்திய அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. அப்படித் தனியார் மயமாக்கப்பட்டுவிடும் என்று சொன்னால், மின்சாரம் நமக்குக் குறைந்த விலையில் கிடைப்பது அதிக விலைக்கு மாறிவிடும். ஆகவே, அதைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசு ஏதாவது முயற்சி எடுக்கிறதா என்பதையும், ஜெயங்கொண்டம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே அறிவித்திருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே தெரிவித்திருக்கிறார்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** அவையிலே ஒன்றுமே சொல்லவில்லை. Opinion has not been expressed by the Government, so far. அரசு இதைத் தடுத்து நிறுத்துவதற்கு ஏதாவது தீர்மானத்தைக் கொண்டு வருமா? அதைத் தடுத்து நிறுத்துவதற்கு முயலுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

**(அ) கோரிக்கை எண் 13—எரிசக்தித் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 13-எரிசக்தித் துறை, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சக்ரபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி எஸ். மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். மகேஸ்வரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.



**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் தே. குமாரதாஸ்.



**டாக்டர் தே. குமாரதாஸ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். ராம்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.என். சேகரன்.

**திரு. கே.என். சேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.என். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி காசாம்பு பூமாலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஏ.எஸ். கண்ணன்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.எஸ். கண்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி.எஸ். உலகரட்சகன்.

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.எஸ். உலகரட்சகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கு. ஜெயக்குமார்.

**திரு. கு. ஜெயக்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. ஜெயக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ. அசோகன்.



**திரு. அ. அசோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. அசோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"எரிசக்தித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 13-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.2,330,54,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.200,00,00,000/- ஆகியவற்றிற்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

### (ஆ) கோரிக்கை எண் 17 கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 17—கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சக்ரபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவாகளுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. சுதர்சனம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. வேல் முருகன்.



**திரு. தி. வேல் முருகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கு. பிச்சாண்டி.



**திரு. கு. பிச்சாண்டி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அன்பில் பெரியசாமி.

**திரு. அன்பில் பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பில் பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி காசாம்பு பூமாலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஏ.எஸ். கண்ணன்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.எஸ். கண்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி.எஸ். உலகரட்சகன்.

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.எஸ். உலகரட்சகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கு. ஜெய்க்குமார்.

**திரு. கு. ஜெயக்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. ஜெயக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. இராசேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜெ. அன்பழகன்.

**திரு. ஜெ. அன்பழகன் :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஜெ. அன்பழகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"கைத்தறி, கைத்திறன், துணிநூல், மற்றும் கதர்த் துறை-கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய மானியக் கோரிக்கை எண் 17-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.5,670,74,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகிறது.



## (இ) கோரிக்கை எண்—42 சிறு தொழில்கள் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 42-சிறு தொழில்கள் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சக்ரபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ.இரா. மலையப்பசாமி.



**திரு. அ.இரா. மலையப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. பாரமலை.

**திரு. க. பாரமலை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. பாரமலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி காசாம்பு பூமாலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஏ.எஸ். கண்ணன்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.எஸ். கண்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. செல்வி க. பாலபாரதி.



**செல்வி க. பாலபாரதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி க. பாலபாரதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அன்பில் பெரியசாமி.

**திரு. அன்பில் பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பில் பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி எஸ். மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். மகேஸ்வரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கு. ஜெயக்குமார்.

**திரு. கு. ஜெயக்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. ஜெயக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி.எஸ். உலகரட்சகன்.

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.எஸ். உலகரட்சகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"சிறு தொழில்கள் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 42-ன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 44,42,40,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.52,15,000/- ஆகியவற்றிற்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் செவ்வாய்க்கிழமை (16-04-2002) காலை 10-00 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-30 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

111. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் இருபத்தி ஆறாவது ஆண்டறிக்கையும், கணக்குகளும், [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)



### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

95. மானியக் கோரிக்கை எண் 13—தமிழ்நாடு மின்சார வாரியம், மின்சார ஆய்வுத் துறை, தமிழ்நாடு எரிசக்தி நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003. (தமிழ், ஆங்கிலம்)

96. மானியக் கோரிக்கை எண் 13— 2002-2003 ஆம் ஆண்டிற்கான எரிசக்தித் துறையின் விரிவான மானியக் கோரிக்கை.

97. மானியக் கோரிக்கை எண் 17—பட்டு வளர்ச்சித் துறை, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியம் மற்றும் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003. (தமிழ், ஆங்கிலம்)

98. பட்டு வளர்ச்சித் துறை, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், தமிழ்நாடு பனைப்பொருள் வளர்ச்சி வாரியம் மற்றும் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சி கழகம் பற்றிய 'மக்கள் சாசனம்' என்ற சிறு வெளியீடு, 2002. (தமிழ், ஆங்கிலம்)

99. பட்டு வளர்ச்சித் துறை பற்றிய சாதனைத் திட்டம், 2001-2002. (தமிழ், ஆங்கிலம்)

100. மானியக் கோரிக்கை எண் 17—2002-2003 ஆம் ஆண்டிற்கான கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை— கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய விரிவான மானியக் கோரிக்கை.

101. மானியக் கோரிக்கை எண் 42—சிறு தொழில்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003. (தமிழ், ஆங்கிலம்)

102. மானியக் கோரிக்கை எண் 42—2002-2003 ஆம் ஆண்டிற்கான சிறு தொழில்கள் துறையின் விரிவான மானியக் கோரிக்கை.

103. சிறு தொழில்கள் பற்றிய செயலாக்கத் திட்டம், 2002-2003. (தமிழ், ஆங்கிலம்)

104. பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்தி ஒன்றாவது அறிக்கை. (2001-2002)

105. பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்தி இரண்டாவது அறிக்கை. (2001-2002)

106. பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்தி மூன்றாவது அறிக்கை. (2001-2002)

107. பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்தி நான்காவது அறிக்கை. (2001-2002)

108. பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்தி ஐந்தாவது அறிக்கை. (2001-2002)



# இணைப்பு I

*(93 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

**கோரிக்கை எண் 13—எரிசக்தித் துறை**

**கொள்கை விளக்கக் குறிப்பு**

**தமிழ்நாடு மின்சார வாரியம்**

*முன்னுரை*

தமிழ்நாடு மின்சார வாரியம் 1948 ஆம் ஆண்டு மின்சாரம் (வழங்கல்) சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டு, 1957 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் முதல் நாளன்று நிறுவப்பட்ட அமைப்பாகும். தமிழ்நாடு மின்சார வாரியத்தின் முக்கியக் குறிக்கோள் மின் உற்பத்தி, மின் செலுத்துகை மற்றும் மின் பகிர்மானம் ஆகியவற்றை சீரிய முறையில் மேற்கொண்டு மின் பயனீட்டாளர்களுக்குத் தரமான மின்சாரத்தை வழங்குவதாகும்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மொத்த மின் உற்பத்தி நிறுவு திறன் 7905 மெகாவாட்டாகும். இதில் வாரிய மின் உற்பத்தி நிலையங்கள் 5194 மெகாவாட், தனியார் மின் உற்பத்தி நிலையங்கள் 798 மெகாவாட் மற்றும் மத்திய மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து பங்கு 1913 மெகாவாட் ஆகியவை அடங்கும். இவை தவிர காற்றாலையிலிருந்து மொத்தம் 832 மெகாவாட் கிடைக்கப் பெறுகிறது.

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் 28-2-2002 அன்றுள்ளபடி மொத்தம் 935 துணை மின் நிலையங்கள் உள்ளன. மற்றும் 1,65,490 கி.மீ. மிக உயரழுத்த/உயரழுத்த மின் கம்பிகள், 4.32 இலட்சம் கி.மீ. தாழ்வழுத்த மின் கம்பிகள் உள்ளன. மேலும் 1,39,933 மின் மாற்றிகள் இயங்கி வருகின்றன.

தமிழ்நாட்டில் 31-1-2002 முடிய மொத்தம் 149.91 இலட்சம் மின் பயனீட்டாளர்கள் உள்ளனர்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 9-3-2002 அன்று மேதகு ஆளுநர் உரையின் பத்தி 15(ix)ல் மாண்புமிகு முதலமைச்சரின் எரிசக்தி

[2002 ஏப்ரல் 12

பாதுகாப்பை அடைவதற்கான இலட்சியப் பாதை குறிக்கப்பட்டுள்ளது.

அதில் கீழ்க்கண்ட இரு அம்சங்கள் உள்ளடங்கும்:

* அனல், புனல், அணுசக்தி ஆகிய எரிசக்தி ஆதாரங்கள் மற்றும் காற்று, சூரியசக்தி, உயிரினக் கழிவு எரிசக்தி போன்ற புதுப்பிக்கத்தக்க வகையிலான எரிசக்தி ஆதாரங்கள் ஆகியவற்றில் தொடர்ந்து கவனம் செலுத்தி நிலைபெற்ற ஆதாரங்களை ஏற்படுத்துதல்.
* வேளாண்மை, தொழில் மற்றும் வீட்டுப் பயனுக்காக எரிசக்தியில் தன்னிறைவை எய்துதல்.

உச்ச மின் தேவை 6603 மெகாவாட் 8-3-2002 அன்று நிறைவேற்றப்பட்டது. தற்போதைய மொத்த மின் உற்பத்தி நிறுவு திறன் 7905 மெகாவாட்டாகும். 2001-02ஆம் ஆண்டில் மின் தேவையின் வளர்ச்சி 6 முதல் 7 விழுக்காடாக இருந்தது. மின் தேவை மற்றும் மின் பயனீட்டளவு முறையே ஒரு வருடத்திற்கு 300 மெகாவாட் மற்றும் 3000 மில்லியன் யூனிட்டுகள் என்ற அளவிற்கு உயர்ந்துள்ளது. நடப்பு ஆண்டில் (2001-02) மின் தேவை 224 மெகாவாட்டும், மின் பயனீட்டளவு 3000 மில்லியன் யூனிட்டுகளும் உயர்ந்துள்ளன.

### அனல் மின் நிலையங்களின் செயல்பாடு

தூத்துக்குடி, மேட்டூர், வடசென்னை ஆகிய மூன்று அனல் மின் நிலையங்களும் 2001-02-ல் மிக நன்றாகச் செயல்பட்டு, இந்திய அரசின் தங்கப் பதக்கம்/ஊக்கத் தொகை ஆகியவற்றைப் பெறுவதற்குரிய சாதனைகளை புரிந்துள்ளன.

அதிகரிக்கும் மின் தேவையை நிறைவேற்ற தமிழ்நாடு மின்சார வாரியம் அடுத்த ஐந்து ஆண்டுகளில் (2002-07) அதனுடைய மின் உற்பத்தித் திறனை (1900 மெகாவாட்) உயர்த்தவும் மின் தொடர் மற்றும் மின் பகிர்மானத்தை அடுத்த ஐந்து ஆண்டுகளில் (2002-07) விரிவாக்கவும் திட்டமிட்டுள்ளது. 2002-03-ல் மின் உற்பத்தித் திறன் 521 மெகாவாட் கூடுதலாகும் - (வாரியம் - 103 மெகாவாட், மத்திய துறை பங்கு - 168 மெகாவாட் மற்றும் தனியார் துறை - 250 மெகாவாட்). இதில் வாரியத் துறையில், 8 மெகாவாட் புனல் மின் திட்டங்களின் மூலமாகவும் (சிறுபுனல்/குறுபுனல்), 95 மெகாவாட் (பெருங்குளம்) எரிவாயுத் திட்டத்திலிருந்தும் கிடைக்கும்.



2002 ஏப்ரல் 12]

தமிழ்நாடு மின்சார வாரியம், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள பெருங்குளம் என்ற இடத்தில் 95 மெகாவாட் திறன் கொண்ட எரிவாயு சுழலி மின் திட்டத்தை ஜுன் 2002-ல் துவக்கி வைக்கவுள்ளது. நெய்வேலி அனல் மின் நிலையம்-1 விரிவாக்கத் திட்டத்தில், ஒவ்வொன்றும் 210 மெகாவாட் திறன் கொண்ட இரண்டு பிரிவுகள் முறையே ஜுன் 2002 மற்றும் நவம்பர் 2002 ஆகிய மாதங்களில் இயக்கி வைக்கப்படும். இதன் மூலம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு 168 மெகாவாட் பங்காகக் கிடைக்கும். தனியார் மின் திட்டமான 250 மெகாவாட் திறன் கொண்ட நெய்வேலி சீரோ யூனிட் டிசம்பர் 2002-ல் துவக்கி வைக்கப்படும்.

### 2002-03-ல் மின் நிலைமை

எதிர்வரும் 2002-03 ஆம் ஆண்டில் மின் தேவை 6623 மெகாவாட்டாக இருக்கும். சராசரி மின் பயனீட்டளவு நாளொன்றுக்கு 13 கோடி யூனிட்டுகளாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. கையிருப்பிலுள்ள நிறுவுதிறன் மற்றும் திட்டமிடப்பட்டுள்ள கூடுதல் நிறுவுதிறன் ஆகியவற்றைக் கொண்டு மின் தேவையை நிறைவேற்ற முடியும்.

மின் தொடர் மற்றும் மின் பகிர்மான அமைப்பை மேம்படுத்தும் வகையில் 2002-03 ஆம் ஆண்டில் பல்வேறு மின் அழுத்தங்களில் 60 புதிய துணை மின் நிலையங்களும் சுமார் 800 சுற்று கிலோ மீட்டர் மிக உயரழுத்த/உயரழுத்த மின் கம்பிகளும் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. பத்தாவது திட்ட காலத்தில் (2002-07) மொத்தம் 315 புதிய துணை மின் நிலையங்களை அமைக்கவும், 4000 சுற்று கிலோ மீட்டர் மிக உயரழுத்த/உயரழுத்த மின்கம்பிகளும் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மின்சார வாரியம் தற்போதைய மின் தொடர் மற்றும் மின் பகிர்மான இழப்பான 16.25 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காடாக ஐந்து வருட காலத்தில் குறைக்க ஊரக மின் மயமாக்கல் கழகத்திற்கும், மின் நிதிக் கழகத்திற்கும் மேம்பாட்டுத் திட்டங்களை அனுப்பியுள்ளது. இந்த திட்டங்களின் மொத்த மதிப்பு ரூ.4165 கோடியாகும்.

தமிழ்நாடு மின்சார வாரியம், சென்னை மாநகராட்சிப் பகுதியில் மீதமுள்ள மின்கம்பங்களின் மேல் செல்லும் மின் பாதைகளை படிப்படியாக நிலத்தடி வடங்களாக மாற்றத் திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ.22 கோடியாகும்.

[2002 ஏப்ரல் 12

**வேளாண்மை, தொழில் மற்றும் வீட்டுப்பயனுக்காக எரிசக்தியில் தன்னிறைவை எய்துதல்**

இந்தக் குறிக்கோளை அடைவதற்காக மொத்தம் 1900 மெகாவாட் மின் உற்பத்தித் திறனைக் கூட்டவும், புதிய துணை மின் நிலையங்கள் மற்றும் மின் தொடர்களை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிடப்பட்ட வசதிகளை உருவாக்க எதிர்வரும் ஐந்து ஆண்டுகளில் ரூ.6954 கோடி மதிப்பீட்டில் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிலும் திட்டமிடப்பட்டுள்ள பணிகளுக்கான திட்ட மதிப்பீடுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| வ.எண் | விவரம் | பத்தாவது திட்ட மதிப்பீடு (2002-07) | 2002-03 ஆம் ஆண்டிற்கான திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|
| 1. | உற்பத்தி | 1118 | 378 |
| 2. | புதுப்பித்தலும், நவீனமயமாக்குதலும் | 364 | 140 |
| 3. | மின் அனுப்புகை மற்றும் மின் பகிர்மானம் | 4932 | 567 |
| 4. | ஊரக மின்மயமாக்குதல் | 490 | 120 |
| 5. | ஆய்வுகள் | 50 | 4 |
| | மொத்தம் | 6954 | 1209 |

**விரைவுபடுத்தப்பட்ட மின் மேம்படுத்தல் மற்றும் சீரமைப்புத் திட்டம் (APDRP)**

இத்திட்டம் மூலம் மின் அனுப்புகை மற்றும் மின் விநியோக கட்டமைப்பு, மின் உற்பத்தி நிலையங்களில் புனரமைப்பு, சீரமைப்பு ஆகியவற்றிற்கு மைய அரசின் நிதி உதவி பெறப்படுகிறது. 2001-2002ஆம் ஆண்டிற்கு மூன்று மின் பகிர்மான வட்டங்களில் மின் விநியோக மேம்பாட்டிற்காக ரூ.232.52 கோடி மதிப்பீட்டில் கருத்துரு இந்திய அரசிற்கு ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், இதற்கான அனுமதி இதுவரை கிடைக்கவில்லை.



2002 ஏப்ரல் 12]

**பிரதம மந்திரியின் கிராமப்புற வளர்ச்சித் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ் நீலகிரி, வேலூர் மாவட்டங்களிலுள்ள மலைச்சாதி மற்றும் பிற்படுத்தப்பட்டோர் குடியிருப்புகளுக்கு மின்சாரம் வழங்கவும், மின்சாரக் கட்டமைப்பை மேம்படுத்தவும், மொத்தம் ரூ.28 கோடிக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதில் முதல் தவணையாக ரூ.5.868 கோடி மத்திய அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் கொடைக்கானல் பகுதிக்காக மொத்தம் ரூ.1389 கோடிக்கு கூடுதல் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

**ஊரக கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (RIDF)**

ஊரக வளர்ச்சிக்கான தேசிய விவசாய வங்கியானது, எல்லா மாநிலங்களிலும் RIDF ஏழாவது திட்டத்தின்கீழ் ஊரக மின் மயமாக்கும் பணிகளுக்காகக் கடன் வழங்குகிறது. முதல்படியாக இராமநாதபுரம், தூத்துக்குடி, தஞ்சாவூர் மற்றும் தருமபுரி ஆகிய நான்கு மாவட்டங்களுக்கான திட்டங்களுக்காக மொத்தம் ரூபாய் 34.41 கோடி கடனுதவிக்கான அனுமதி பெறப்பட்டுள்ளது.

**2002-2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு வரவு-செலவுத் திட்டத்தில் செய்துள்ள ஒதுக்கீடுகள்:**

1. விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் கொடுப்பதன் மூலம் ஏற்படும் மின் கட்டண இழப்பீட்டிற்கு ஈடாக ரூபாய் 250 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலதனச் செலவுகளுக்கு தமிழ்நாடு அரசின் மூலதனப் பங்கீட்டுத் தொகையாக ரூபாய் 100 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

3. விரைவுபடுத்தப்பட்ட மின் மேம்பாடு மற்றும் சீரமைப்பு திட்டத்திற்காக ரூபாய் 100 கோடி கடனாகவும், ரூபாய் 100 கோடி உதவித் தொகையாகவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

[2002 ஏப்ரல் 12

## மின்சார ஆய்வுத் துறை

**I.** *முன்னுரை :*

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் மின்சாரம் பொதுப் பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளது. ஆகவே இந்திய மின்சார சட்டம் 1910, மின்சார (வழங்கல்) சட்டம், 1948, மற்றும் மின்சார ஒழுங்குபடுத்துதல் ஆணைய சட்டம், 1998, ஆகியவை பாராளுமன்றத்தால் இயற்றப்பட்டு அவற்றிற்கான திருத்தங்களும் பாராளுமன்றத்தினால் மேற்கொள்ளப்படுகிறது. மின்சார ஆய்வுத் துறை இந்திய மின்சார சட்டம், 1910-ன் படி சட்டப்படியாக உருவாக்கப்பட்டது. மின்சார சக்தி சம்பந்தமாக இயற்றப்பட்ட முதல் சட்டம், 1910-ம் ஆண்டு இந்திய மின்சார சட்டமாகும். மின் ஆய்வுத் துறையின் செயல்பாடுகள் 1-8-1993 முதல் தமிழ்நாடு அரசின் எரிசக்தித் துறையின் கட்டுப்பாட்டில் இருந்துவருகிறது. 2-10-1939-க்கு முன்னர் இந்திய மின்சார சட்டம், 1910-ன்கீழ் நியமிக்கப்பட்ட மின்சார ஆய்வாளர்கள் அந்நாளைய மின்சார இலாகா தலைமைப் பொறியாளரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வந்தனர். 2-10-1939 முதல் மின்சார ஆய்வாளர் தன்னிச்சைப் பொறுப்பு அளிக்கப்பட்டு, அப்போதைய சென்னை மாநிலத்தில் மின்சார துறையால் மின் வழங்கல் செய்யப்பட்ட பகுதிகள் தவிர பிற பகுதிகளுக்கு மின்சார ஆய்வாளராக நியமிக்கப்பட்டார். அரசு மின்சாரத் துறையால் மின் சக்தி வழங்கிய பகுதிகளுக்கு அரசு மின்சாரத் துறையைச் சார்ந்த தலைமை மின்சார இயக்கப் பொறியாளர் மற்றும் தலைமை மின்சார பகிர்மானப் பொறியாளர் ஆகியோர் 1910-ம் ஆண்டு இந்திய மின்சார சட்டத்தின்கீழ் மின்சார ஆய்வாளர்களாக நியமிக்கப்பட்டனர்.

1-7-1957 முதல் தமிழ்நாடு மின்சார வாரியம் உருவாக்கப்பட்ட பின்னர் 7-9-1961 வரை தலைமை மின்சார ஆய்வாளர் மின்சார வாரியத்திற்கு உட்பட்ட பகுதிகள் தவிர பிற பகுதிகளுக்கு சட்ட ரீதியாக தன்னிச்சைப் பொறுப்பு அளிக்கப்பட்டு தனியாக இயங்கினார்.

அதே காலகட்டத்தில் தமிழ்நாடு மின்சார வாரியத்தைச் சேர்ந்த தலைமை மின்சார இயக்கப் பொறியாளர் மற்றும் தலைமை மின்சார பகிர்மானப் பொறியாளர் ஆகியோர் தமிழ்நாடு மின்சார வாரியத்தால் மின்சாரம் வழங்கப்பட்ட பகுதிகளுக்கு இந்திய மின்சாரச் சட்டம், 1910-ன்கீழ் மின்சார ஆய்வாளர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர்.



2002 ஏப்ரல் 12]

பின்னர், மின்சார ஆய்வுத் துறை திருத்தி அமைக்கப்பட்டு 7-9-1961 முதல் அரசு தலைமை மின்சார ஆய்வாளர் இந்திய மின் சட்டம் 1910-ன்கீழ் சட்ட ரீதியாக தமிழ்நாடு மாநில முழுமைக்கும் மின்சார ஆய்வாளராக நியமிக்கப்பட்டார்.

**II.** *நிர்வாகம் :*

அரசு தலைமை மின் ஆய்வாளரை துறைத் தலைவராகக் கொண்டு இயங்கி வரும் மின்சார ஆய்வுத் துறை 31-7-1993 முடிய அரசின் பொதுப் பணித் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் இயங்கியது. பின்னர் 1-8-1993 முதல் எரிசக்தித் துறை தனியாக உருவாக்கப்பட்டபோது அத்துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் வந்தது.

பல வகையான மின்சாரச் சட்டங்கள் மற்றும் விதிகளின் நிர்வாகம் மற்றும் அமலாக்கம் அரசுத் தலைமை மின் ஆய்வாளரின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளன.

அரசு தலைமை மின்சார ஆய்வாளரின் கட்டுப்பாட்டில் கீழ்க்கண்ட அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

| | |
|---|---|
| முதுநிலை மின் ஆய்வாளர் (கோயம்புத்தூரிலுள்ள ஒரு | 2 |
| முதுநிலை மின் ஆய்வாளர் மண்டலம் உட்பட) | 24 |
| மின் ஆய்வாளர் (பல்வேறு மாவட்டங்களில்) | 26 |
| உதவி மின் ஆய்வாளர்கள் | 11 |
| இளநிலை மின் ஆய்வாளர்கள் | 1 |
| ஆட்சி அலுவலர் | 7 |
| தலைமைக் கணக்கர் | 1 |
| தலைமைக் கணக்கர் (உள் தணிக்கை) } | |
| தமிழ்நாடு அமைச்சுப் பணியாளர்கள், } | |
| தமிழ்நாடு அடிப்படைப் பணியாளர்கள், } | |
| தமிழ்நாடு மின் ஆய்வுத் துறை சார்நிலைப் பணியாளர்கள் | 235 |

**III.** *சட்ட ரீதியான செயல்பாடுகள் :*

இந்திய மின்சாரச் சட்டம் 1910, இந்திய மின்சார விதிகள் 1956 ஆகியவை மின்சார உரிமதாரர், மின்சார உரிமம் பெறாதவர், மின்சக்தி வழங்கும் நிறுவனங்கள், மின்சார நுகர்வோர் ஆகியோர் பின்பற்ற வேண்டிய நிபந்தனைகள் அவர்களால் கடைப்பிடிக்கப்படுகின்றனவா

[2002 ஏப்ரல் 12

என்பதைக் கண்காணிப்பது பிரதான பணிப்பொறுப்பாக அமைந்ததால் இத்துறை மின்சார ஆய்வுத் துறை என்று பெயரிடப்பட்டது.

இவ்வாறு மின்சாரச் சட்டம் 1910-ன்கீழ் நியமிக்கப்பட்ட மின்சார ஆய்வாளர்கள் மின்சாரம் என்ற பொருளைப் பொறுத்தவரை அரசுக்கு சிறப்பு ஆலோசகர்கள் ஆவார்கள். மேலும் நீதிமன்றத்திற்கு வரும் மின்சாரம் சம்பந்தப்பட்ட வழக்குகளில் மின்சார ஆய்வாளர்கள் அரசுத் தரப்பில் நிபுணத்துவம் பெற்ற சாட்சிகளாக விளங்குகிறார்கள்.

மேலும் மின்சார ஆய்வாளர்கள் மின்சாரச் சட்டத்தில் உள்ள விதிகளுக்குத் தற்போது நடைமுறையில் உள்ள நவீன தொழில் நுட்பங்கள் வணிக நுட்பங்கள் சார்ந்த விளக்கங்களை அளிப்பதில் நடைமுறை அனுபவம் பெற்ற நிபுணர்களாவார்கள்.

மின்சாரம் சம்பந்தப்பட்ட எந்த வழக்குகளிலும் பாரபட்சமற்ற முடிவு எடுக்கக்கூடிய நிலையில் மின்சார ஆய்வாளர்கள் உள்ளனர்.

மின்சார ஆய்வுத் துறைக்கு இந்திய மின்சாரச் சட்டம் 1910, இந்திய மின்சார (வழங்கல்) சட்டம் 1948 மற்றும் இந்திய மின்சார விதிகள் 1956 ஆகியவற்றை அமல்படுத்துவதோடு கீழ்க்கண்ட சட்டரீதியான பொறுப்புகளையும், கடமைகளையும் நிறைவேற்றும் பொறுப்புண்டு.

1. இந்திய மின்சாரச் சட்டம், 1910 மற்றும் மின்சார (வழங்கல்) சட்டம், 1948,

2. தமிழ்நாடு மின் தீர்வைச் சட்டம், 1939 மற்றும் தமிழ்நாடு மின் தீர்வை விதிகள் 1939.

3. தமிழ்நாடு மின்சார (நுகர்வு) வரிச் சட்டம், 1962 மற்றும் விதிகள் 1964,

4. தமிழ்நாடு மின்சாரம் வழங்கும் நிறுவனங்களைக் கையகப்படுத்தும் சட்டம், 1954 மற்றும் அதன் விதிகள்.

5. தமிழ்நாடு லிஃப்ட் 'சட்டம், 1997 மற்றும் தமிழ்நாடு லிஃப்ட் விதிகள் 1997.

6. மின்சார உரிமதாரர் பகுதிகளில் விதிக்கப்பட்ட வரையறை மற்றும் கட்டுப்பாட்டு ஆணைகள் குறித்த பொறுப்புகளும், செயலாக்கப் பணிகளும் (அதாவது மூன்று கிராமியக் கூட்டுறவு மின்சார விநியோகச் சங்கங்கள்).



2002 ஏப்ரல் 12]

7. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிச் சட்டம், 1920-ன்படி மின்சார பணியாளர்கள் சம்பந்தப்பட்ட சட்டரீதியான நடவடிக்கைகள்.

8. தமிழ்நாடு திரையரங்கச் சட்டம், 1955 மற்றும் தமிழ்நாடு திரையரங்க (ஒழுங்கு முறை) விதிகள், 1957 ஆகியவற்றின்கீழ் மின்சார ஆய்வுத் துறைக்கு வரையறுக்கப்பட்ட கடமைகளும், பொறுப்புகளும்.

9. இந்திய மின்சாரச் சட்டம், 1910-ன்கீழ் உருவாக்கப்பட்ட மத்திய மின்சார வாரியத்தில் தமிழக அரசின் சார்பில் நியமிக்கப்பட்ட உறுப்பினராதலால் 1956 ஆம் ஆண்டு இந்திய மின்சார விதிகளுக்குத் திருத்தங்கள், மாற்றங்கள் செய்யும் சட்டப்பூர்வமான பணிகளில் உறுப்பினராகப் பங்கேற்றல்.

10. மின்சாரம் சம்பந்தமாக அரசு கோரும் இனங்களில் கருத்து அளித்தல்.

11. மின்சாரத் தொழில்நுட்பம் தொடர்புடைய இந்திய தர நிர்ணயங்களை உருவாக்கும் இந்திய தர நிர்ணயக் குழுமத்தில் உறுப்பினராகப் பணிபுரிதல்.

12. அரசு தர நிர்ணய ஆய்வுக் கூட்டத்தில் மின்சார அளவைக் கருவிகளுக்கான எச்சிலான் 11 மின்சார (மண்டல ரீதியான தரம்) தரம் அளவைக் கருவிகளை நிர்மாணித்தல். மேலும் அரசுத் தலைமை மின் ஆய்வாளர் அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ள மின்சார தர நிர்ணய ஆய்வுக் கூடத்தில் தமிழ்நாடு மின்சார வாரியம் உட்பட இந்தியாவில் உள்ள அனைத்து மாநில மின்சார வாரியங்களிலிருந்தும் வரும் துணை நிலை தரம் கொண்ட மீட்டர்கள் மற்றும் மின் அளவைக் கருவிகளின் அளவைக் குறியீடுகளை ஒப்பீடு செய்து பிழை சம்பந்தமான சான்றளித்தல், தொழிற்சாலைகள், வணிக நிறுவனக் கட்டடங்கள், குடியிருப்புக் கட்டடங்கள் ஆகியவற்றில் உள்ள மின் இணைப்புகளில் சோதனைகள் மேற்கொள்ளக்கூடிய சோதனைக் கருவிகளை நிறுவுதல்.

13. இந்திய மின் விதி எண் 45-ன்கீழ் உருவாக்கப்பட்ட தமிழ்நாடு மின்சார உரிமம் வழங்கும் வாரியத்தின் தலைவராகப் பணிபுரிதல்.

[2002 ஏப்ரல் 12

14. தமிழ்நாடு திரையரங்க ஒழுங்குமுறை விதிகள் 1957-ன்படி உருவாக்கப்பட்ட திரைப்படக் கருவி இயக்குனர்களுக்கான தேர்வாணையத்தின் தலைவராகப் பணிபுரிதல்.

15. மின் சக்தி சேமிப்பை ஊக்குவிப்பதற்காகச் செயல்படும் வல்லுனர் கண்காணிப்புக் குழுவில் உறுப்பினராகச் செயல்படுதல்.

16. மின்சாரம் மற்றும் தொலைத்தொடர்பு ஒருங்கிணைப்புக் குழுவில் உறுப்பினராகச் செயல்படுதல்.

17. சென்னை மாநகராட்சி உயர்மட்டக் குழுவில் உறுப்பினராக இருந்து மின்சாரம் தொடர்பான விபத்துக்களைத் தடுக்கும் வழிமுறைகளைக் கூறுதல்.

***(அ) இந்திய மின்சாரச் சட்டம் 1910-ன்கீழ் வரும் சட்டரீதியான செயல்பாடுகள்.***

இந்திய மின்சாரச் சட்டம், 1910 மற்றும் அதன் விதிகள் மின் சக்தி விநியோகம் மற்றும் பயன்பாடு குறித்த உயர் தொழில்நுட்பச் சட்டமாகும். மின்சாரம் மற்றும் மின் சாதனங்கள் பயன்படுத்துவோருக்கும், அவர்கள் உடைமைகளுக்கும் பாதுகாப்பு அளிக்கும் வகையில் இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

மின்சார உற்பத்தி, மின்சார விநியோகம் மற்றும் உபயோகம் ஆகியவற்றில் வரும் மின் இணைப்புகள் மற்றும் சாதனங்களை ஆய்வு மேற்கொண்டு ஒழுங்குமுறை விதிகளைக் கடைபிடித்தலைக் கண்காணித்து மக்களுக்கும் உடைமைகளுக்கும் தீங்கு ஏற்படாமல் பாதுகாப்பை உறுதி செய்தல்.

நுகர்வோர்களுக்கு மின் வழங்கும் நிறுவனங்கள் மின்சார சக்தியை முறையாகவும் போதுமான அளவிலும் விநியோகிக்கப்படுவதை உறுதி செய்தல்.

மின் சக்தி உற்பத்தி, மின் சக்தி கொண்டு செல்லுதல், மின் சக்தி விநியோகம் மற்றும் மின் சக்தி நுகர்வு ஆகியவற்றினால் தொலைத்தொடர்புப் பாதைகள் மற்றும் மின்காந்த ஆய்வுக் கூடங்களின் பாதுகாப்பை உறுதி செய்தல்.



2002 ஏப்ரல் 12]

மின் சக்தி உற்பத்தி, மின் சக்தி கொண்டு செல்லுதல், மின் சக்தி விநியோகம் மற்றும் மின் சக்தி நுகர்வு சம்பந்தமான இனங்களில் காலமுறை ஆய்வு மற்றும் சோதனைகள் செய்வதுடன் நுகர்வோர்களும், மின் வழங்கும் நிறுவனங்களும் மேற்கொண்ட மின்சார சோதனை சம்பந்தமான பதிவுறுக்களைப் பரிசீலித்தல் ஆகிய முறைப்படுத்தும் பணிகளை செய்தல்.

***இந்திய மின்சாரச் சட்டம், 1910 மற்றும் இந்திய மின்சார விதிகள் 1956-ன் கீழ், கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன***

1. உயர் மின்னழுத்த மின் அமைப்புகள், காற்றாலை மின் உற்பத்தி நிலையங்கள், தனியார் மின் உற்பத்தி நிலையங்கள், சுய மின் உற்பத்தி நிலையங்கள் ஆகியவற்றிற்கான திட்ட வரைபடங்களைக் கூராய்வு செய்து ஒப்புதல் அளித்தல்.

2. (i) உயர் மின்னழுத்த நிறுவனங்கள் மற்றும் மின் வணிக நிறுவனங்கள் ஆகியவற்றை இந்திய மின்சார விதி எண்.46-ன் கீழ் ஆண்டுதோறும் ஆய்வு செய்தல்.

(ii) தமிழ்நாடு மின் வாரியத்திற்குச் சொந்தமான அதி உயர்/உயர் மின்னழுத்த துணை மின் நிலையங்கள் மற்றும் பகிர்வு மின் மாற்றிகள் ஆகியவற்றையும் விதி 46-ன்கீழ் காலமுறை ஆய்வு செய்தல்.

3. மின் உற்பத்தி, மின் விநியோகம் மற்றும் மின் உபயோகம் ஆகியவற்றில் ஏற்படும் மின் விபத்துக்கள் இந்தத் துறைக்குத் தெரிவிக்கப்பட்டு, பொதுமக்களின் பாதுகாப்பிற்குப் பாதிப்பு ஏற்படுத்தும் காரணங்களைக் கண்டறிந்து புலனாய்வு செய்வது.

4. குறைந்த மின்னழுத்த மின் நுகர்வோர் மின்னமைப்புகள் விதி 46-ன்கீழ் மின்சார வாரியம் மேற்கொள்ளும் காலமுறை ஆய்வுகளை உறுதிப்படுத்துதல்.

5. ***மின் பாதுகாப்பு***
தொழிற்சாலையில் உள்ள தொழிலாளர்கள், பொதுமக்கள் மற்றும் மின் சாதனங்கள் ஆகியவற்றிற்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் மின் இணைப்புகள் மற்றும் சாதனங்களைத் தரமாக்குதல் மற்றும் தொழிலாளர்களுக்குப் பயிற்சியளித்தல். ஆண்டுதோறும் விளம்பரம் மூலமாகவும், கருத்தரங்க மூலமாகவும் மின்சாரப் பாதுகாப்பு முறைகள் பொதுமக்களுக்

[2002 ஏப்ரல் 12

பிரச்சாரம் செய்யப்படுகிறது. மேலும் பிரதி மே மாதம் முதல் வாரம் மின் பாதுகாப்பு வாரமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

**(ஆ) மின்சார லிஃப்ட் சட்டத்தின்கீழ் உள்ள சட்ட ரீதியான பணிகள்**

பொதுமக்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு வணிக வளாகங்கள் மற்றும் குடியிருப்பு வளாகங்களில் உள்ள மின்சார லிஃப்ட்களை மின்சார ஆய்வுத் துறை ஆய்வாளர்களால் பாதுகாப்பு குறித்து, ஆய்வு செய்யப்பட்டு உரிமங்கள் குறிப்பிட்ட காலங்களுக்கு வழங்கப்பட்டு, காலமுறைதோறும் புதுப்பிக்கப்படுகிறது.

**(இ) தமிழ்நாடு திரையரங்க (ஒழுங்குமுறை) விதிகள், 1957-ன் கீழான சட்டரீதியான பணிகள்**

திரையரங்குகளில் திரைப்படக் காட்சி காண வரும் பொதுமக்களின் பாதுகாப்பினை முன்னிட்டு திரையரங்க மின்சார சாதனங்களின் பாதுகாப்பு மற்றும் தீ தடுப்பு சாதனங்கள் பராமரிப்பு, அவசர காலங்களில் இயங்கும் நிலை மற்றும் பராமரிப்பு, ஆய்வின்போது சரிபார்க்கப்படும் மின்சாரச் சான்றிதழ் குறிப்பிட்ட காலங்களுக்கு வழங்கப்பட்டு காலமுறைதோறும் புதுப்பிக்கப்படுகிறது.

**(ஈ) தமிழ்நாடு மின் தீர்வைச் சட்டம், 1939 மற்றும் விதிகள்**

மின் தீர்வை என்பது மின்சாரம் வழங்கும் உரிமதாரர்களால் விற்கப்படும் மின்சார சக்திக்கு வசூலிக்கப்படும் தொகையாகும். இந்த மின் தீர்வை ஒரு யூனிட்டிற்கு மூன்று பைசா வீதம் ஏனைய நிறுவனங்களுக்கு விற்கப்படும் மின் சக்திக்கு வசூலிக்கப்படுகிறது.

இந்த மின் தீர்வை அரசுக்குச் செலுத்தப்படுவதைக் கண்காணிப்பது மின்சார ஆய்வுத் துறையின் பணியாகும். மூன்று மின்சார வழங்கும் உரிமதாரர்களால் (கும்பகோணம், வந்தவாசி, திருமயம் ஆகிய கிராமியக் கூட்டுறவு மின் வழங்கும் சங்கங்கள்) பேணப்படும் கணக்குப் பதிவேடுகள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. மின் வழங்கும் உரிமதாரர்கள் தாங்கள் விற்ற மின்சார யூனிட்டுகளின் விவரங்கள் மற்றும் அதற்காகச் செலுத்தப்பட வேண்டிய தீர்வை விவரம் ஆகியவற்றை மாதந்தோறும் அரசுக்குத் தெரிவிக்கிறார்கள்.



2002 ஏப்ரல் 12]

சுய மின் உற்பத்தி செய்ய அனுமதிக்கப்பட்ட தொழில் நிறுவனங்கள், அவர்கள் பயன்படுத்தியது போக உபரியாக உள்ள மின் சக்தியை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும் சகோதர நிறுவனங்களுக்கும் விற்க அனுமதி வழங்கப்படுகிறது. இவர்களும் மின்சார சக்தி வியாபாரத்தில் ஈடுபடுவதால் உபரியாக விற்கும் மின்சார சக்திக்கு இவர்களிடமும் மின்சாரத் தீர்வை வசூலிக்கப்படுகிறது.

தனியார் மின் உற்பத்தி நிலையங்களில் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு தமிழ்நாடு மின் வாரியத்திற்கு மட்டுமே மின்சாரத்தை விற்கும் நிறுவனங்களும் மின் வழங்கு உரிமதாரர் ஆவதால் அவர்களிடமும் மின்சாரத் தீர்வை வசூலிக்கப்பட உள்ளது.

**(உ) தமிழ்நாடு மின்சார (நுகர்வு) வரிச் சட்டம், 1962 மற்றும் நுகர்வு வரி விதிகள், 1964**

இந்திய அரசின் மின் நுகர்வு நிறுவனங்கள் தவிர ஏனைய மின் நுகர்வோர்களால் பயன்படுத்தப்படும் மின்சார சக்திக்கு மின்சார விலையின் சதவிகித அடிப்படையில் மின் உபயோக வரி விதிக்கப்படுகிறது. இந்த வரியானது தமிழ்நாடு மின்சார வாரியத்தாலும் மற்றும் மின் வழங்கல் உரிமதாரராலும் வழங்கப்படும் மின்சாரத்திற்கும் மற்றும் சுய மின் திறன் மின்னாக்கிகள் மூலம் உற்பத்தி செய்யப்பட்டுப் பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்கும் பொருந்தும்.

மேற்கண்ட சட்டத்தில் வரையறுக்கப்பட்ட மின்சார நுகர்வு வரியானது 1-5-1979 முதல் தமிழ்நாடு மின் வாரியத்தால் வழங்கப்படும் மின்சாரத்தை உபயோகப்படுத்துவதற்கான மின் கட்டணத்துடன் சேர்க்கப்பட்டது.

மின் இணைப்புகளில் பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்கு 1-9-1991 முதல் 4 சதவிகித கூடுதல் மின் நுகர்வு வரி விதிக்கப்பட்டது. அவ்வரி 1-4-1994 முதல் 5 சதவிகிதமாக உயர்த்தப்பட்டு நடைமுறையில் உள்ளது.

1992-ல் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய தொழில் கொள்கைப்படி புதியதாகத் தொடங்கப்படும் தொழிற்சாலைகளில் முதன்மைப் பொருட்கள் உற்பத்தி துவங்கும் நாளிலிருந்து மூன்று வருடங்களுக்கு மேற்கண்ட ஐந்து சதவிகித மின்சார நுகர்வு வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

[2002 ஏப்ரல் 12

சுய பயன்பாட்டு மின்னாக்கிகள் மூலம் மின் சக்தி உற்பத்தி செய்து சுயமாக நுகர்வு செய்யும் மின் சக்தி சம்பந்தப்பட்டவர்களுக்கு கீழ்க்காணும் இனங்கள் தவிர மற்ற இனங்களுக்கு மின் நுகர்வு வரி விதித்து வசூலிப்பது நடைமுறையில் உள்ளது:

1. டீசல் எண்ணெய் மற்றும் எல்.எஸ்.எச்.எஸ். வகை எண்ணெயை எரிபொருளாகக் கொண்டு மின் சக்தி உற்பத்தி செய்யும் ஜெனரேட்டர்கள்.
2. மரபு வழி சாரா எரிபொருள், (கரும்பு சக்கை, உமி போன்ற எரிபொருள்) மின் சக்தி உற்பத்தி செய்யும் மின்சார ஜெனரேட்டர், காற்றாலை மின்சார ஜெனரேட்டர், சூரிய வெப்ப சக்தி மின்சார ஜெனரேட்டர் போன்றவை.
3. காகித உற்பத்தி ஆலைகள், துணி நூல் ஆலைகள், சர்க்கரை ஆலைகள் மற்றும் ரசாயன ஆலைகளில் நிறுவப்பட்டுள்ள எந்த வகையான எரிபொருளாலும் இயங்கும் சுய மின்சார உற்பத்தி ஜெனரேட்டர்கள்.

மின்சார வாரியத்தாலும், மூன்று மின் வழங்கும் உரிமதாரர்களாலும் வசூலிக்கப்பட்டு அரசுக்குச் செலுத்தப்படும் வரி மதிப்பீடு மற்றும் வரி செலுத்துதல் விபரங்களின் கணக்குப் பதிவேடுகள் இத்துறை அலுவலர்களால் ஆய்வு செய்யப்பட்டு வரி வசூல் கண்காணிக்கப்படுகிறது.

### (ஊ) தமிழ்நாடு மின் விநியோக நிறுவனங்களை கையகப்படுத்தும் சட்டம், 1954 மற்றும் அதன் கீழான விதிகள்

சமீப காலத்தில் கீழ்க்கண்ட ஐந்து மின் சக்தி வழங்கும் நிறுவனங்கள் அரசினால் கையகப்படுத்தப்பட்டு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

1. கோவை மாநகராட்சி மின் வழங்கும் உரிமதாரர்
2. மதுரை மாநகராட்சி மின் வழங்கும் உரிமதாரர்
3. பொள்ளாச்சி நகராட்சி மின் வழங்கும் உரிமதாரர்
4. தஞ்சாவூர் நகராட்சி மின் வழங்கும் உரிமதாரர்
5. கரூர் நகராட்சி மின் வழங்கும் உரிமதாரர்

இந்நிறுவனங்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஈட்டுத் தொகை கணக்கிடப்பட்டு சரிக்கட்டப்பட வேண்டியுள்ளது.



2002 ஏப்ரல் 12]

### (எ) மின் சக்தி சேமிப்பு மற்றும் மின் சக்தி உபயோகத் தணிக்கை

கருத்தரங்குகள் மற்றும் செயல்முறைப் பயிற்சி விளக்கக் கூட்டங்கள் மூலமும், மின்சார சேமிப்பு வழிமுறைகளை பொதுமக்களுக்கும், தொழிற்சாலைகளுக்கும் வணிக வளாகங்களுக்கும் தெரிவிப்பதில் இத்துறை பங்கேற்கிறது.

## IV. தமிழ்நாடு மின்சார உரிமம் வழங்கும் வாரியம்

1955-ம் ஆண்டு அரசாணை எண் 4317, பொதுப் பணித் துறை, நாள் 16-11-1955-ன்படி இந்த உரிமம் வழங்கும் வாரியம் இந்திய மின்சார விதி 45(1)இல் குறிப்பிட்டுள்ள ஷரத்துக்களை நடைமுறைப்படுத்துவதற்காக சட்டரீதியாக ஏற்படுத்தப்பட்டது. இந்த வாரியம் 1986 ஆம் ஆண்டு திருத்தி அமைக்கப்பட்டு மின் ஒப்பந்தக்காரர்களுக்கு உரிமங்கள் வழங்குதல் மற்றும் புதுப்பித்தல், மின் கம்பி உதவியாளர், மின் கம்பியாளர், மின் மேற்பார்வையாளர், மின் உற்பத்தி (இயக்குதல் மற்றும் பராமரித்தல்) மேற்பார்வையாளர் ஆகியோர்களுக்கான தகுதிச் சான்றுகள் வழங்கல் மற்றும் புதுப்பித்தல் ஆகியவற்றை மேற்கொள்ளும் பணிகளைச் செய்து வருகிறது.

சுய வேலைவாய்ப்பினை ஊக்குவிக்கும் வகையில் இதுவரை கீழ்க்கண்ட எண்ணிக்கைகளில் மின் ஒப்பந்தக்காரர்கள் உரிமங்கள் மற்றும் பிற தகுதிச் சான்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

வழங்கப்பட்ட மின் ஒப்பந்தக்காரர்களின் உரிமங்கள்

(28-2-2002-ல் உள்ளபடி)

| | | |
|---|---|---|
| நிலை | இ.எஸ்.ஏ. | 116 |
| நிலை | இ.ஏ. | 1,086 |
| நிலை | இ.எஸ்.பி. | 1,012 |
| நிலை | இ.பி. | 12,147 |

வழங்கப்பட்ட தகுதிச் சான்றிதழ்கள்

| | | |
|---|---|---|
| 1. | மின் மேற்பார்வையாளர் | 27,925 |
| 2. | மின் கம்பியாளர் | 83,086 |
| 3. | மின் கம்பி உதவியாளர் | 14,884 |
| 4. | மின் உற்பத்தி நிலைய (இயக்குதல் மற்றும் பராமரித்தல்) மேற்பார்வையாளர் | 297 |

[2002 ஏப்ரல் 12

கல்வியறிவையும், களச் செயல்பாட்டையும் ஒருங்கிணைக்கும் முகமாக மின்சார உரிமம் வழங்கும் வாரியம் தொழிற்பயிற்சி நிறுவனங்களில் பயிற்றுவிக்கப்படும் மின் கம்பியாளர் மற்றும் மின்வினைஞர் தொழிற்பயிற்சி பாடத் திட்டங்கள் மற்றும் தொழில்நுட்ப பள்ளிகளில் பயிற்றுவிக்கப்படும் மின் பொறியியல் பட்டயச் சான்றுக்கான பாடத் திட்டங்கள் ஆகியவற்றுக்கு திருத்தப்பட்ட கல்வி பாடத் திட்டத்தினை பரிந்துரை செய்கிறது. தற்பொழுது மின் உரிமம் வழங்கும் வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட மின் மேற்பார்வையாளர் சான்றிதழ் ஒரே நிலையாகும். மாறிவரும் தொழில்நுட்ப தேவைகளுக்கேற்ப களப் பணியாளர்கள், மின்சார ஆலோசகர்கள் போன்ற பல நிலைகளில் தகுதிச் சான்றிதழ்கள் வழங்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

### V. அரசு தர நிர்ணய சோதனைக்கூடம் மற்றும் நடமாடும் ஆய்வுக்கூடம்

அரசு தர நிர்ணய ஆய்வுக் கூடம் சென்னையிலுள்ள அரசு தலைமை மின் ஆய்வாளர் அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இது ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்படுத்தப்பட்ட ஆய்வுக் கூடமாகும். இந்த ஆய்வுக்கூடம் இந்தியாவிலுள்ள அனைத்து மின்சார வாரியங்களின் துணை நிலை மின் அளவை மீட்டர்கள் மற்றும் கருவிகளைச் சோதனை செய்து சான்றுகள் வழங்கக்கூடிய ஒரே ஆய்வுக்கூடமாகும்.

மின் அளவைக் கருவிகளுக்கு சான்றுகள் வழங்குவதுடன் மின் ஒப்பந்தக்காரர்கள் மற்றும் தொழில் நிறுவனங்களின் மின் அளவைக் கருவிகளை சோதனை செய்து சான்றிதழும் வழங்கி வருகிறது.

மேலும் தமிழ்நாடு மின் வாரியத்திற்கும் நுகர்வோருக்குமிடையே மின் அளவைக் கருவி மற்றும் மின்சார மீட்டர்கள் ஆகியவை சரியாக உள்ளனவா என்பது குறித்து தகராறு ஏற்படும் பொழுதெல்லாம் அவற்றைச் சோதனை செய்து சரியான முடிவைத் தெரிவிக்கிறது.

மேலும் நுகர்வோரின் மின் இணைப்புகளில் உயர் மின்னழுத்த சோதனைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. ஏப்ரல் 2001 முதல் பிப்ரவரி 2002 முடிய உள்ள காலத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகள் விவரம் பின்வருமாறு:



2002 ஏப்ரல் 12]

| | |
|---|---|
| 1. சார்நிலை தர மீட்டர்கள் | 744 |
| 2. பிற மின் அளவைக் கருவிகள் சோதனை | 2,555 |

### VI. எதிர்காலத் திட்டம்

முன்னேற்றம் அடைந்து வரும் தொழில்நுட்பங்களுக்கேற்ப அதிக துல்லியமாக உள்ள மின் அளவைக் கருவிகளை சோதனை செய்து தரச்சான்று அளிக்க வேண்டியது அவசியமாகிறது. ரூபாய் 6,15,000/- செலவில் புதிய கருவிகள் வாங்கப்பட்டுள்ளன.

### VII. வரவு-செலவு அறிக்கை (1-4-2001 முதல் 31-1-2002 முடிய)

| வரவு | ரூபாய் |
|---|---|
| இந்திய மின் விதிகள் | 1,82,12,097 |
| தமிழ்நாடு திரையரங்க (ஒழுங்குமுறை) விதிகள் | 4,69,756 |
| லிஃப்ட் சட்டம் | 23,74,281 |
| மின் வரி | 15,82,35,005 |
| மொத்தம் | **17,92,91,139** |
| **செலவு** | |
| முதன்மைத் தலைப்பு | 2,78,49,541 |
| வரித் தலைப்பு | 11,06,947 |
| வரி வசூலிப்பு | 17,05,990 |
| மொத்தம் | **3,06,62,478** |

[2002 ஏப்ரல் 12

## தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம்

பொருளாதார தாராளமயமாக்கல் மற்றும் பொருளாதாரச் சீர்திருத்தங்களை நமது நாட்டில் கடந்த பத்து ஆண்டுகளாக அறிமுகப்படுத்தியதன் மூலம் நமது நாட்டின் பொருளாதார அமைப்பு நவீனப்படுத்தப்பட்டு புதுப்பிக்கப்பட்டுள்ளது. இச்சீர்திருத்தத்தின் முக்கியக் குறிக்கோள்கள், உற்பத்தி உயர்வு, வேலைவாய்ப்புகளை அதிகரித்தல் மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதலாகும். இம் முன்னேற்றக் கொள்கைகளாலும் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் என்ற பேரார்வத்தாலும் நமது எரிசக்தியின் தேவை தொடர்ந்து உயர்ந்து கொண்டே இருக்கின்றது. நாம் நமது தேவைக்கு நிலக்கரி, எண்ணெய், இயற்கை வாயு, விறகு போன்ற பலதரப்பட்ட எரிசக்தி ஆதாரங்களை உபயோகப்படுத்துகிறோம். மின்சாரம் என்பது ஒரு வகை எரிசக்தி. நமது தேவைக்கேற்ற அளவிற்கு, தேவைப்பட்ட இடத்திற்குக் கொண்டு சென்று நாம் உபயோகிக்கக்கூடியது. உலகம் முழுமையும் தற்போது மின்சார உற்பத்தி பெருமளவு நிலக்கரியைச் சார்ந்தே உள்ளது. வரும் ஆண்டுகளிலும் நிலக்கரி மற்றும் எண்ணெய் மூலம் மின் உற்பத்தி செய்வது நிலையாக தொடர்ந்து கொண்டே இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், இவற்றை அடிப்படையாகக் கொண்டு மின் உற்பத்தி செய்வதால் நமக்கு ஏற்படும் பல இடர்ப்பாடுகளையும், அதாவது வேகமாகக் குறைந்து வரும் நிலக்கரி இருப்பு, நிலக்கரியின் தரக்குறைவு, நிலக்கரி மற்றும் எண்ணெய் விலைகளில் ஏற்படும் உயர்வு, அன்னியச் செலாவணி, போக்குவரத்துச் செலவினம் மற்றும் சுற்றுப்புறச்சூழல் பாதிப்பு போன்ற நிலைமைகளையும் நாம் சமாளித்தாக வேண்டும்.

இத்தருணத்தில் புதுப்பிக்கக்கூடிய மரபு சாரா எரிசக்தி வளங்கள், மரபு சார்ந்த எரிசக்தி வளங்களுக்கு ஒரு முக்கியமான மாற்று ஆதாரமாக விளங்கும் நிலையில் உள்ளது. புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி வளங்களைப் பயன்படுத்துவதன் வாயிலாகத் தூய்மையான எரிசக்தி பெறலாம். மேலும் இவ்வளங்கள் உலகின் முதன்மையான ஆதார சக்தியான சூரிய சக்தியை அடிப்படையாகக் கொண்டுள்ளதால், இவை என்றென்றும் நமக்குக் கிடைத்துக் கொண்டேயிருக்கும். இவ்வளங்கள் குறைவதே இல்லை.

தமிழ்நாடு அரசு மேற்கண்ட காரணங்களைக் கருத்திற்கொண்டு 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் என்ற



2002 ஏப்ரல் 12]

அமைப்பை மரபு சாரா எரிசக்தி ஆதாரங்களை ஊக்குவிக்கவும், மேம்படுத்தவும், அதற்கான திட்டங்களைத் தமிழ்நாட்டில் செயல்படுத்தவும் ஏற்படுத்தியுள்ளது. இந்நிறுவனம் புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி தொடர்பான மாநில திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. மேலும் இந்திய அரசின் மரபு சாரா எரிசக்தி அமைச்சகத்தின் சார்பு அமைப்பாக மைய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்துகின்ற திட்டங்களையும் இந்நிறுவனம் செயல்படுத்துகின்றது.

தொடக்கத்திலிருந்தே, தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம், காற்று சக்தி, சூரிய சக்தி, உயிரியல் சக்தி ஆகியவைகளைச் சார்ந்த பல்வேறு முன்னோடி திட்டங்களை போற்றத்தக்க வகையில் சிறப்பாகச் செயல்படுத்தி வந்துள்ளது. கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக மேற்கொள்ளப்பட்ட இடையறாத முயற்சிகளால் புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி ஆதாரங்கள் பற்றிய அடிப்படைக் கருத்து இம்மாநிலத்தில் நன்கு வேரூன்றிக் கீழ்க்கண்ட பலன்களை அடைந்துள்ளது:

அ. புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி ஆதாரங்களைக் கொண்டு தரமான மின் உற்பத்தி செய்வதற்கு முதன்மை அளிக்கப்பட்டுள்ளது. அதில் பெருமளவு முன்னேற்றமும் செய்யப்பட்டுள்ளது.

ஆ. சூரிய ஒளி சுடு நீர் அமைப்புகள், சூரிய ஒளி இறைப்பான்கள், சூரிய ஒளி விளக்குகள், சூரிய ஒளி தெரு விளக்குகள், சூரிய சக்தி மூலம் காற்றைச் சூடாக்கும் அமைப்புகள், சாண எரிவாயுக் கலன்கள், தாவர எரிவாயு இயந்திரங்கள் மற்றும் நீர் இறைக்கும் காற்றாலைகள் போன்ற சாதனங்களின் உபயோகத்தினை ஊக்குவிக்க முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

இ. ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தித் திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலைகள் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மலைப் பகுதிகள் மேம்பாட்டுத் திட்டம் ஆகியவை மூலம், கிராமப் பகுதிகளில் புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி பற்றிய கருத்தையும், பயன்களையும் பிரச்சாரம் செய்ய தனிக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

9-3-2002 அன்று அளித்த தமிழக ஆளுநர் உரையில் தெரிவிக்கப்பட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 15 அம்சங்கள் உள்ளடக்கிய திட்டத்தில், புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி ஆதாரங்களைப் பற்றிய பின்வரும் சிறப்புத் திட்டங்கள் உள்ளன:

[2002 ஏப்ரல் 12

*(1) உறைவிடப் பாதுகாப்பு*

சூரிய சக்தி பயன்பாடு அனைவரின் பொறுப்பு என்பதன் அடிப்படைக்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்ட வீட்டு வசதிப் பணிகளை மேம்படுத்துதல் (பத்தி 15-vii ஆளுநர் உரை)

*(2) எரிசக்திப் பாதுகாப்பு*

அனல், புனல், அணுசக்தி ஆகிய எரிசக்தி ஆதாரங்கள் மற்றும் காற்று, சூரிய சக்தி, உயிரின கழிவு எரிசக்தி போன்ற புதுப்பிக்கத்தக்க வகையிலான எரிசக்தி ஆதாரங்கள் ஆகியவற்றில் தொடர்ந்து கவனம் செலுத்தி நிலை பெற்ற ஆதாரங்களை ஏற்படுத்துதல், வேளாண்மை, தொழில் மற்றும் வீட்டுப் பயனுக்காக எரிசக்தியில் தன்னிறைவை எய்துதல், (பத்தி 15-ix ஆளுநர் உரை)

தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தால் செயல்படுத்தப்படும் புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி ஆதாரங்கள் பற்றிய திட்டங்கள் மேற்கூறிய சிறப்பு அம்சங்களைக் கணக்கில் கொண்டு அந்த நோக்கத்தை 2006 ஆம் ஆண்டு மார்ச் திங்களுக்குள் அடையும்படி பின்வருமாறு செயலாக்கப்படும்.

*சூரிய சக்தி*

*சூரிய வெப்ப சாதனங்கள்*

*சூரிய வெப்ப சுடுநீர் அமைப்புகள்*

சூரிய வெப்ப சுடு நீராக்கி தொழில்நுட்பம் நன்கு வளர்ந்து வாணிபச் சந்தையில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. பயன்படுத்துவோரின் தேவைக்கேற்ப பல வடிவ அமைப்புகளிலும், கொள்ளளவுகளிலும் இவ்வமைப்புகள் தயாரிக்கப்படுகின்றன.

மாநில மற்றும் மைய அரசுகளின் பல்வேறு மானியத் திட்டங்களின் கீழ் இதுகாறும் 3,503 வீட்டு உபயோகத்திற்கான சுடுநீர் அமைப்புகளும் (100 லிட்டர் அளவு), 345 பெரிய அளவிலான சுடு நீர் அமைப்புகளும் (1,000 லிட்டர் அளவு) நிறுவப்பட்டுள்ளன. பெரிய அளவிலான சூரிய சுடுநீர் அமைப்புகள், உணவு விடுதிகள், தங்கும் விடுதிகள், தொழிற்சாலைகளில் உள்ள சிற்றுண்டிச் சாலைகள், ஆகியவற்றில் நிறுவப்பட்டுள்ளன. இத்தகைய சூரிய சுடுநீர் அமைப்புகளை



2002 ஏப்ரல் 12]

(2,000 லிட்டர் அளவு) மாநில அரசின் மருத்துவமனைகளிலும், மாணவர்கள் தங்கும் விடுதிகளிலும் நிறுவ தமிழ்நாடு அரசு 100 விழுக்காடு நிதி உதவி வழங்கி தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் நிறுவி வருகிறது. இதுகாறும் இத்தகைய சுடுநீர் அமைப்புகள் 14 மாநில அரசு மருத்துவமனைகளிலும், 8 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர் விடுதிகளிலும் மற்றும் ஒரு விருந்தினர் மாளிகையிலும் நிறுவப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் (2001-2002) இத்திட்டத்தின்கீழ் மூன்று சுடுநீர் அமைப்புகள் பின் வரும் இடங்களில் நிறுவப்பட்டுள்ளன:

ஸ்டான்லி அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையுடன் இணைந்த ஆண்கள் மற்றும் பெண்கள் விடுதிகள், சென்னை அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையுடன் இணைந்த ஆண்கள் விடுதி.

இவ்வமைப்புகளிலிருந்து பெறப்படும் சுடுநீர் மருத்துவமனை நோயாளிகளுக்கும், விடுதி மாணவர்களுக்கும் பெரிதும் பயனளிக்கிறது.

2001-2002 ஆம் ஆண்டில் சூரிய வெப்ப சுடுநீர் அமைப்புகள் நிறுவக் கீழ்க்கண்ட மானியங்கள் வழங்கப்பட்டுள்ளன:

1. தொழிற்சாலைகளுக்குப் பயன்படும் பெரிய அளவிலான 1,000 எல்.பி.டி. 8 கலெக்டர்களுடன் சூரிய வெப்ப சுடுநீர் அமைப்பு ஒன்றிற்கு ரூ.20,000 வீதம் மானியம் வழங்கப்பட்டுள்ளது-20 எண்கள்.
2. வீட்டு உபயோகத்திற்கான சூரிய வெப்ப சுடுநீர் அமைப்பு ஒன்றிற்கு ரூ.3,000 வீதம் மானியம் வழங்கப்பட்டுள்ளது-400 எண்கள்.

சூரிய ஒளி சுடுநீர் அமைப்புகள் நிறுவுவதற்கான மொத்தச் செலவும், அதனால் சேமிக்கப்படும் மின்சாரத்தின் மூலம் 3 ஆண்டுகளுக்குள் பயனாளிக்குத் திரும்பக் கிடைக்கப் பெற்றுவிடும். மற்றும் அது 10 ஆண்டுகளுக்குக் குறையாமல் இயங்கும். ஆகையால் இந்த அமைப்புகள் வணிகச் செயலுக்கு உகந்ததாகக் கருதப்படுகிறது. எனவே கீழ்க்கண்ட வகைகளில் அமைக்கப்படும் புதிய கட்டடங்களில் சூரிய ஒளி சுடு நீர் அமைப்புகள் நிறுவுவது கட்டாயமாக்கப்பட வேண்டும் என்ற கருத்து வழங்கப்பட்டுள்ளது:

[2002 ஏப்ரல் 12

1. மருத்துவமனைகள் மற்றும் மருத்துவ இல்லங்கள்
2. உணவகங்கள், தங்குமிடங்கள் மற்றும் விருந்தினர் இல்லங்கள்
3. பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் உடன் இணைந்த விடுதிகள், பயிற்சி மையங்கள்
4. படைத் துறை மற்றும் காவலர்களின் குடியிருப்புகள்
5. 150 சதுர மீட்டர் பரப்புக்கு மேல் கொண்ட தனியார் வீடுகள்
6. ரயில் நிலையங்கள், விமான நிலையங்களில் உள்ள காத்திருக்கும் அறைகள், ஓய்வு அறைகள், அலுவல் ஆய்வு விடுதிகள் மற்றும் சிற்றுண்டி விடுதிகள்
7. சமுதாய மையங்கள், விருந்து மண்டபங்கள், கல்யாண மண்டபங்கள் மற்றும் இதுபோன்ற பொது நலனுக்காக பயன்படுத்தப்படும் கட்டடங்கள்.

மத்திய அரசின் மரபு சாரா எரிசக்தித் துறையால் வடிவமைக்கப்பட்ட மாதிரி துணை விதிகள் இத்துடன் இணைப்பில் இணைக்கப்பட்டுள்ளன. இதனை சென்னை பெருநகர வளர்ச்சி ஆணைக் குழு மற்றும் உள்ளாட்சி மன்றங்கள் மேற்கொண்டு சூரிய ஒளி சுடுநீர் அமைப்புகளை மேற்கூறிய இடங்களில் கட்டாயமாக்கப்பட்டு சூரிய சக்தியின் பயனால் தினமும் 24 மணி நேரமும் சுடுநீர் கிடைக்க அனைவரும் பயனடையும்படி செயல்படுத்தலாம்.

இந்த சூரிய ஒளி சுடுநீர் அமைப்புகளை நிறுவுவதற்குத் தேவையான நிறுவனங்களைப் பதிவு செய்யும் பணியினை தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் செய்யும். இந்நிறுவனங்களின் திறன், அறிமுக ஆவணங்கள் மற்றும் செயலாக்கம் ஆகியவற்றைச் சரிபார்த்து வருடத்திற்கு ஒரு முறை அவர்களிடமிருந்து கட்டணம் வாங்கி பதிவு செய்யப்படும். இந்த சுடுநீர் அமைப்புகளை நிறுவுவதற்கு முன்வரும் விண்ணப்பதாரர்களுக்கு சுடுநீர் அமைப்புகளை நிறுவுதல், அதனைச் சரிபார்த்தல் மற்றும் அவற்றைப் பேணிப் பராமரித்தல் ஆகியவை சம்பந்தமாக தொழில்நுட்ப உதவிகளை, அவர்களிடமிருந்து உரிய கட்டணம் வாங்கி, தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் வழங்கும்.



2002 ஏப்ரல் 12]

இந்தச் செயல் திட்டத்தின் மூலம் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்திற்குக் கூடுதல் வருமானம் பெற்று அதன் பணியாளர் செலவின் ஒரு பகுதியை ஈடுசெய்து தமிழக அரசிடமிருந்து பெறப்படும் உதவி/மானியத்தின் சுமையைக் குறைக்கலாம்.

**கட்டடக் கலையில் சூரிய ஒளி சக்தியைப் பயன்படுத்தும் முறை**

புதிதாக நிறுவப்படும் கட்டடங்களில் கோடைக் காலத்தில் குளிர்ச்சியையும், குளிர் காலத்தில் வெப்பத்தையும் சூரிய ஒளியின் சிறப்பு இயல்புகள் மற்றும் கோட்பாடுகள் ஆகியவற்றைப் பயன்படுத்திப் பெறலாம். கட்டடத்தை வடிவமைக்கும்போதே இதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இதன் மூலம் அதிக அளவு மின்சாரச் செலவை மிச்சப்படுத்தலாம்.

இந்த முறையை முன்னோடியாக சென்னை மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் புதிய கட்டடம் கட்டும் பணியில் செயல்படுத்தலாம். இந்தத் துறையில் நிபுணத்துவம் மற்றும் அனுபவம் உள்ள கட்டடக் கலை நிபுணர்களை பயன்படுத்தி இதனை வடிவமைக்கலாம்.

இத்தகைய கட்டடங்களை வடிவமைத்து திட்டக் கருத்துரு தயாரிப்பதற்கும், கட்டடம் கட்டுவதற்கு ஆகும் செலவிற்கும், மத்திய அரசின் மரபு சாரா எரிசக்தி அமைச்சகம் நிதி உதவி அளித்து உதவுகிறது. இதனை தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் பெறலாம்.

**சூரிய வெப்ப சுடு காற்று அமைப்புகள்**

சூரிய வெப்ப சுடு காற்று அமைப்புகளைப் பயன்படுத்தி தொழிற்சாலைகளில் தேயிலை, பழங்கள், தானிய வகைகளை உலர வைப்பதில் தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது. சூரிய வெப்ப சுடு காற்று அமைப்புகள் சூரிய சக்தியை பெற்று, அதனை வெப்ப சக்தியாக மாற்றி காற்றின் வெப்பத்தை 65-70 டிகிரி வரை அதிகரிக்கச் செய்கின்றன. இத்தகைய அமைப்புகள் காற்றின் வெப்பத்தை சூரிய சக்தி மூலம் அதிகரிப்பதால் 25 விழுக்காடு எரிபொருள் சிக்கனத்திற்கு வழி வகுக்கிறது. தமிழ்நாட்டில் இதுவரையில் 14 சூரிய வெப்ப சுடு காற்று அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன. தற்பொழுது இத்திட்டத்திற்கு மானியம் வழங்கப்படுவதில்லை.

[2002 ஏப்ரல் 12

### சூரிய ஒளி மின் சாதனங்கள்

சூரிய ஒளி மின் தொழில்நுட்பத்தில் சிலிகான் செல்கள் மூலமாக சூரிய ஒளியிலிருந்து நேரடியாக டி.சி. மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த டி.சி. மின்சாரத்தை நீர்ப்பாசனத்திற்காக தண்ணீர் இறைக்கப் பயன்படுத்தலாம். அல்லது சூரிய ஒளியிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட டி.சி. மின்சாரத்தை மின் கலங்களில் சேமித்து ஏ.சி. மின்சாரமாக மாற்றி விளக்குகளையும், மின் விசிறிகளையும் இயக்க உபயோகிக்கலாம். சூரிய ஒளி மின் தொழில்நுட்பம் மூலம் மின்சாரத்தை அதிக அளவில் தயாரித்து மின் வாரியக் கட்டமைப்பில் செலுத்தலாம். எனவே சூரிய ஒளி மின் சாதனங்களின் உபயோகம் எதிர்காலத்தில் சிறந்து விளங்கும். சூரிய ஒளி மின் நீரேற்றிகள், லாந்தர்கள், தெரு விளக்குகள், சிறிய அளவிலான மின் சக்தி ஜெனரேட்டர்கள் ஆகிய சாதனங்கள் வர்த்தக ரீதியில் தற்போது பல இடங்களில் விற்கப்படுகின்றன.

### சூரிய ஒளி மின் பம்பு

சூரிய ஒளி மின் பம்பு என்பது சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் தயாரித்து பம்பை இயக்கித் தண்ணீரை இறைக்கக்கூடிய ஒரு சாதனம். 900 வாட் திறன் உள்ள ஒரு பம்பு ஒரு நாளைக்கு 50,000 லிட்டர் தண்ணீரை மொத்தம் 30 அடி உயரத்திற்கு இறைக்க வல்லது. அது ஒன்றிலிருந்து இரண்டு ஏக்கர் நிலங்களுக்கு நீர் பாய்ச்சும்.

தமிழ்நாட்டில் மொத்தம் 4,80,000 விவசாயிகள் பம்புகளுக்கு மின்சாரம் பெறக் காத்திருந்திருக்கிறார்கள். ஆனால் தமிழ்நாடு மின்சார வாரியம் ஆண்டிற்கு 40,000 பம்புகளுக்கு மட்டுமே மின் இணைப்பு வழங்குகிறது. ஆண்டுதோறும் மிக அதிக அளவில் புதிய பம்பு செட்டு இணைப்பிற்கான விண்ணப்பங்கள் மின் வாரியத்தால் பெறப்படுகின்றன. இத்தகைய சூழ்நிலையில் சூரிய ஒளி பம்புகள் சிறு விவசாயிகளுக்கு நம்பகமான ஒரு மாற்றாக அமையும்.

சூரிய ஒளி பம்புகள் நிறுவுவதை ஊக்கப்படுவதற்காக மைய அரசும், மாநில அரசும் கணிசமான அளவில் மானியங்களை வழங்குகின்றன.

சூரிய ஒளி பம்பு பயன்படுத்துபவர்களுக்கு மத்திய அரசு ஒரு வாட்டிற்கு ரூ.110 வீதம், அதிகபட்சமாக ஒரு பம்புக்கு ரூ.2,50,000 வரை மானியம் அளிக்கிறது. 900 வாட் திறனுள்ள பம்பின் விலை ரூ.2.24,000. அதில் ரூ.99,000 மத்திய அரசு மானியமாக வழங்கப்படுகிறது.



2002 ஏப்ரல் 12]

மாநில அரசு கூடுதல் மானியமாக ஒரு பம்பிற்கு ரூ.59,000 வீதம் 1997-98, 1998-99 மற்றும் 1999-2000 ஆம் ஆண்டிற்கு வழங்கியுள்ளது. இது தவிர, இந்திய புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி நிறுவனம், பயனாளிகளுக்கு குறைந்த வட்டியில் மானியம் போக மீதித் தொகைக்குக் கடன் வழங்குகிறது.

விவசாயத்திற்காக நமது மாநிலத்தில் இதுவரை 195 சூரிய ஒளி பம்புகள் நிறுவப்பட்டுள்ளன. இவற்றில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் 72 பம்புகளும், கோயம்புத்தூரில் 24 பம்புகளும், கடலூர் மாவட்டத்தில் 6 பம்புகளும், சேலம் மாவட்டத்தில் 9 பம்புகளும், ஈரோடு மாவட்டத்தில் 10 பம்புகளும், மீதியுள்ளவை மற்ற 14 மாவட்டங்களிலும் நிறுவப்பட்டுள்ளன.

சூரிய ஒளி பம்புகள் நிறுவுவதன் மூலம் விவசாயிகள் மிகச் சிறந்த பயன் மற்றும் தன்னிறைவு அடையலாம். ஒரு பகுதியில் உள்ள 50 முதல் 100 விவசாயிகள் இந்த சூரிய ஒளி பம்புகள் நிறுவ முன் வந்தால் குத்தகை அடிப்படையில் ஒரு திட்டம் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் உருவாக்கலாம். இதனை, இந்திய புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி நிறுவனத்தால் பதிவு செய்யப்பட்ட நிதி இடையீட்டாளர் நிறுவனம் மூலம் செயல்படுத்தலாம். இதன்படி நிறுவப்படும் பம்புகள் 10 வருடங்களுக்கு அவற்றை வழங்கிய நிறுவனத்தால் பராமரிக்கப்படும். இதன் மொத்தச் செலவில் பயனாளிகளின் பங்காக ரூபாய் 60,000 அளவுக்கு மானியமாக வழங்கலாம். விவசாயிகளுக்குத் தற்போது வழங்கப்படும் இலவச மின்சாரத் திட்டத்திற்கு மாற்றாக இதனைச் செயல்படுத்தலாம்.

### சூரிய ஒளி லாந்தர்

சூரிய ஒளி லாந்தர் 60 வாட் பல்பு கொடுக்கக்கூடிய வெளிச்சத்தைத் தரக்கூடிய ஒரு சாதனமாகும். இதைத் தேவைப்படும் இடங்களுக்கு எடுத்துச் சென்று பயன்படுத்தலாம். ஒரு நாளைக்கு 4 மணி நேரம் எரியும். எளிதாக எடுத்துச் செல்ல முடிவதால் இதனை வீட்டு உபயோகத்திற்கும் வெளி உபயோகத்திற்கும் எடுத்துச் செல்லலாம். இது மின் வசதி செய்யப்படாத இடங்களிலும் அடிக்கடி மின்சாரத் தடை ஏற்படக்கூடிய இடங்களிலும் மிகவும் உபயோகமாக இருக்கும்.

[2002 ஏப்ரல் 12

ஒவ்வொரு ஆண்டும் மைய அரசின் மரபு சாரா எரிசக்தி அமைச்சகம் தனி நபர்களுக்கும், வணிகம் சாராத நிறுவனங்களுக்கும் மானியத் திட்டத்தின்கீழ் சூரிய ஒளி விளக்குகளை விற்க இலக்கு நிர்ணயம் செய்கிறது. ஒரு விளக்கின் விலை ரூ.4,000; மரபு சாரா எரிசக்தி அமைச்சகம் வழங்கும் மானியம் ரூ.1,300.

மாநிலம் முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் இதுவரை 12,398 சூரிய ஒளி லாந்தர்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. இதில் 2001-2002 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட 4500 லாந்தர்களும் அடங்கும்.

### சூரிய ஒளி தெரு விளக்குகள்

11 வாட் திறனுள்ள சிறிய குழல் விளக்கினை உடைய சூரிய ஒளி தெரு விளக்கு தனித்து இயங்கக்கூடியது. இது 12 மணி நேரம் எரியும். இது 37 வாட் திறன் கொண்ட இரண்டு சூரிய ஒளி மாட்யூல்கள், 11 வாட் திறன் உள்ள சிறிய குழல் விளக்கு மற்றும் மின்னணு சுற்றுக்களை உடையது. ஒரு விளக்கின் விலை சுமார் ரூ.30,000.

இதுவரை மொத்தம் 1375 சூரிய ஒளி விளக்குகள் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தாலும், தமிழ்நாடு மின்சார வாரியத்தாலும் நிறுவப்பட்டுள்ளன. தற்போது மத்திய அரசு மானியம் ஒரு விளக்கிற்கு ரூ.11,000/- வழங்கப்படுகிறது. 2001-2002 ஆண்டில் 150 தெரு விளக்குகள் நிறுவப்பட்டுள்ளன. தொழிற்சாலைகள் சூரிய ஒளி தெரு விளக்குகள் நிறுவ ஊக்குவிக்கலாம். இவை இரவில் தொழிற்சாலைகளின் பாதுகாப்புச் செயலுக்கு உகந்ததாகக் கருதலாம்.

### சூரிய ஒளி வீட்டு உபயோக மின் விளக்கு

இது வீட்டினுள் நிலையாகப் பொருத்தப்பட்ட சூரிய ஒளி மின் விளக்கு. மொத்தம் 4 விளக்குகள் அல்லது 2 விளக்குகள் மற்றும் ஒரு டி.சி. ஃபேன், தொலைக்காட்சிப் பெட்டியையும் இணைக்கலாம். இதன் மொத்த விலை ரூபாய் 18,000 ஆகும். அதில் ரூ.5,500 மத்திய அரசு மானியமாக வழங்குகிறது. இதுவரை 470 வீடுகளில் நிறுவப்பட்டுள்ளது. இதில் 400 வீடுகளில் 2001-2002 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டுள்ளது. இவற்றை வீட்டிற்குப் பயன்படுத்தி மின் தடங்கலால் ஏற்படும் சிரமங்களைத் தவிர்க்கலாம்.



2002 ஏப்ரல் 12]

### மின் கலம் மூலம் இயங்கும் ஊர்தி

இந்த ஊர்திகள் இயங்க பெட்ரோல் தேவை இல்லை. சத்தம் எழுப்பாது. சுற்றுச்சூழலின் தூய்மையும் பாதுகாக்கப்படும். இவ்வகை ஊர்திகள் நெரிசலான பகுதி, மருத்துவமனை, தொழில் கூடங்கள், வன விலங்குப் பூங்கா, வானூர்தி தளம், பள்ளிக்கூடம் மற்றும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் விலை தோராயமாக ரூ.13 லட்சம் ஆகும். அதில் 50 சதவீதம் மத்திய அரசு மானியமாக வழங்குகிறது. இதுவரை 18 ஊர்திகள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றில் 4 ஊர்திகள் வண்டலூரில் உள்ள அறிஞர் அண்ணா விலங்கியல் பூங்காவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு மின் வாரியக் கட்டமைப்புடன் இணைந்த சூரிய ஒளி மின் நிலையங்கள்

மின் வாரியக் கட்டமைப்பில் இணைந்த சூரிய ஒளி மின் நிலையங்கள் தமிழ்நாட்டில் முன்னோடித் திட்டங்களாக நிறுவப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் கயத்தாறில் ரூ.44.75 இலட்சம் செலவில் 15 கிலோவாட் திறன் கொண்ட சூரிய ஒளி மின் நிலையம் ஒன்றை நிறுவியுள்ளது. இது 1995 ஆம் ஆண்டு பிப்ரவரி முதல் தமிழ்நாடு மின் வாரியக் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நிலையம் தென்னிந்தியாவிலேயே இவ்வகையில் முதலாவதாகும். 100 கிலோ வாட் திறன் கொண்ட மின் கட்டமைப்புடன் இணைந்த மற்றொரு மின் நிலையம் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உடுமலைப்பேட்டை அருகில் நல்லூர்பாளையத்தில் ஒரு தனியார் நிறுவனத்தால் நிறுவப்பட்டுள்ளது.

மைய அரசின் மரபு சாரா எரிசக்தி அமைச்சகம் இத்தகைய மின் நிலையங்களை நிறுவுவதற்கு மானியம் அளிக்கிறது. ஒவ்வொரு 25 கிலோவாட் திறனுள்ள நிலையம் நிறுவ, திட்ட மதிப்பீட்டில் மூன்றில் இரண்டு பங்கே (அதிகபட்சம் ரூ.50 இலட்சம்) மானியமாக வழங்குகிறது. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொன்றும் 25 கிலோவாட் திறன் கொண்ட இரண்டு மின் கட்டமைப்புடன் இணைந்த மின் நிலையங்கள் கோயம்புத்தூர் மாவட்டத்தில் எல்.ஜி. பாளையம் மற்றும் எஸ்.என். பாளையம் ஆகிய இடங்களில் தனியார் நிறுவனம் மூலம் நிறுவப்பட்டுள்ளன. இத்திட்டத்தை இந்நிறுவனமே சொந்தமாக இயக்கி வருகிறது.

[2002 ஏப்ரல் 12

### சூரிய ஒளி மின் உற்பத்தி நிலையம்

தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் 4 கி.வாட் திறன் கொண்ட ஒரு சூரிய ஒளி மின் நிலையத்தினை ரூ.17.80 இலட்சம் செலவில் தனது சென்னை அலுவலகத்தில் நிறுவியுள்ளது. இது பிப்ரவரி 1999 முதல் செயல்பட்டு வருகிறது. தினமும் 4 மணி நேரத்திற்கும் அதிகமாக அலுவலக விளக்குகள் மற்றும் மின் விசிறி இதன் மூலம் செயல்பட்டு வருவதுடன், இது மின்சார வாரிய மின் விநியோகத்திற்கு ஒரு மாற்றாகவும் செயல்படுகிறது. தொழிற்சாலைகள், சூரிய ஒளி மின் நிலையத்தினை நிறுவி மின்சார வாரியத்தின் விநியோகத்திற்கு மாற்றாகவும் கணினிகளுக்குத் தடங்கல் இல்லா மின்சாரம் பெற ஏதுவாக அமையும்.

### காற்று சக்தி

### காற்று சக்தி மின் உற்பத்தி

தமிழ்நாடு காற்று சக்தி மூலம் மின் உற்பத்தி செய்வதில் இந்தியாவில் முதன்மையாக விளங்குகின்றது. மாநில அரசு அறிவித்துள்ள தெளிவான கொள்கைகள், வழங்கி உள்ள வசதிகள் மற்றும் மாநிலத்தில் பரவலாக உள்ள காற்று சக்தி மிகுந்த பகுதிகள் ஆகியவற்றால் காற்று மூலம் மின் உற்பத்தி செய்யும் காற்றாலைப் பண்ணைகள் தமிழ்நாட்டில் பெருகி வருகின்றன. இதன்மூலம் தமிழ்நாட்டில் காற்று மூலம் மின் உற்பத்தி செய்வது தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ரீதிகளில் சாத்தியமானது என்று நன்கு நிரூபிக்கப்பட்டுள்ளது. குறிப்பிடத்தக்க அளவில் தமிழ்நாடு அடைந்துள்ள சாதனைகளில் சில கீழே தரப்பட்டுள்ளன:

(அ) தமிழ்நாட்டில் 28-2-2002 நாள் வரை அரசு செயல் விளக்கத் திட்டங்கள் மூலம் 19.010 மெகாவாட் திறன் கொண்ட 117 மின் காற்றாலை இயந்திரங்களும், தனியார் துறையின் மூலம் 813.395 மெகாவாட் திறன் கொண்ட 2,915 மின் காற்றாலை இயந்திரங்களும் நிறுவப்பட்டு இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது.

(ஆ) நாட்டிலேயே முதலாவது தனியார் துறை காற்றாலைப் பண்ணை தமிழ்நாட்டில் 1990 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.



2002 ஏப்ரல் 12]

(இ) காற்றாலைப் பண்ணை மூலம் மின் உற்பத்தி செய்வதில் நாட்டின் மொத்த உற்பத்தியில் 61 சதவிகிதம் தமிழ்நாட்டின் பங்காகும்.

(ஈ) நாட்டிலேயே மிகப் பெரிய அளவில் 415 மெகாவாட் திறன் அளவில் தனியார் காற்றாலைப் பண்ணைகளின் ஒரு பெரிய தொகுப்பு தமிழ்நாட்டில் மட்டுமே நிறுவப்பட்டுள்ளது. இது அமெரிக்காவில் கலிஃபோர்னியாவில் உள்ள காற்றாலைப் பண்ணைகளின் தொகுப்புக்கு அடுத்ததாக உள்ளது.

(உ) தமிழ்நாட்டில் உள்ள காற்றாலைப் பண்ணைகள் 28-2-2002 வரை 6,277.905 மில்லியன் யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்து தமிழ்நாடு மின் சுட்டமைப்புக்கு அளித்துள்ளன. தமிழ்நாட்டில் காற்றாலைகள் மூலம் மின் உற்பத்தி செய்வதை ஊக்குவிப்பதற்கு மைய அரசும், மாநில அரசும் அளிக்கின்ற பல்வேறு சலுகைகள் கீழே தரப்பட்டுள்ளன:

### மைய அரசின் சலுகைகள்

(அ) மின் உற்பத்தி காற்றாலை இயந்திரங்கள் வெளியில் பொது உரிமத் திட்டத்தின்கீழ் எளிய முறையில் இறக்குமதி செய்யலாம். நான்கு முக்கியமான உதிரிப் பாகங்களை இறக்குமதி வரியின்றி இறக்குமதி செய்யலாம்.

(ஆ) 100 சதவிகிதம் தேய்மான வருமான வரிச் சலுகை.

(இ) திட்டத் தொகையில் 75 சதவிகிதம் வரை கடன் வசதி.

### தமிழக அரசின் சலுகைகள்

(அ) தனியார் நிறுவனத்தினர் தங்களது காற்றாலைகள் மூலம் உற்பத்தி செய்யும் மின்சாரத்தை தமிழ்நாடு மின் வாரியக் கட்டமைப்பின் மூலம் செலுத்தித் தமிழ்நாட்டிலுள்ள தங்களது தொழிற்சாலைகளின் தேவைகளுக்குப் பயன்படுத்தலாம். அந்த மின்சாரத்தில் ஐந்து விழுக்காடுகள் மட்டும் மின் வாரியத்துக்குக் கமிஷனாகச் செலுத்த வேண்டும். இதை ஒரு மாதப் பயனீட்டளவுக்கு எதிராக ஈடுகட்டலாம்.

(ஆ) உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை மின் வாரியத்தின் வாயிலாக சேமித்துக் கொள்ளலாம். சேமிக்கும் மின்சாரத்தில் 5 விழுக்காடுகள் மட்டுமே மின் வாரியத்துக்குக் கமிஷனாகச்

[2002 ஏப்ரல் 12

செலுத்த வேண்டும். இதற்கான கால அளவு ஒரு வருடமாக இருக்கும்.

(இ) தனியார் நிறுவனத்தினர் உற்பத்தி செய்யும் காற்றாலை மின்சாரத்தை மின் வாரியம் தற்பொழுது ஒரு யூனிட்டுக்கு ரூ.2.70 வீதம் வாங்குகிறது. தற்பொழுது மின் உற்பத்தி செய்பவர்களுக்கும், புதிதாகக் காற்றாலை மூலம் மின்சாரம் உற்பத்தி செய்பவர்களுக்கும் இத்தொகை வழங்கப்படும். இது முதலில் ஒரு யூனிட்டிற்கு ரூ.2.25 மட்டும் வழங்கப்படும். மீதி தமிழக மின் வாரிய நிதிநிலை முன்னேற்றம் காண்கையில் பிறகு வழங்கப்படும். ஆனால் மார்ச் 2001-ல் நிறுவப்பட்ட காற்றாலைப் பண்ணைகளுக்கு ஏற்கெனவே அவற்றால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு யூனிட்டுக்கு ரூ.2.25 வீதம் மின் வாரியம் வழங்கும். இதற்கு ஆண்டுக்கு 5 விழுக்காடுகள் வீதம் ஐந்து ஆண்டுகளுக்குக் கூடுதல் விலை வழங்கப்படும்.

(ஈ) மின் உற்பத்தி காற்றாலை இயந்திரங்கள் வாங்க விற்பனை வரியிலிருந்து விலக்களித்தல்.

நம் நாட்டில் காற்றாலை தொழில்நுட்ப உள்ளமைப்பை வலுவுடையதாக்க இந்திய அரசு காற்று சக்தி தொழில்நுட்ப மையம் என்ற அமைப்பை சென்னையிலும், அதனைச் சார்ந்த மின் காற்றாலை ஆய்வு நிலையம் ஒன்றினை தூத்துக்குடி மாவட்டம், கயத்தாறிலும் நிறுவியுள்ளது. தமிழக அரசு, சென்னை மற்றும் கயத்தாறில் இந்நிலையங்கள் அமைத்திட நிலங்களை அளித்துள்ளது. இம்மையம் இந்தியாவிலேயே காற்று சக்தி தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்கான ஒரே ஒரு தொழில்நுட்ப மையமாக இருக்கும். காற்று சக்தி தொடர்பான ஆராய்ச்சி, காற்று வள மதிப்பீடு, அமைப்பு ஒப்புதல், இயந்திர சான்றிதழ் வழங்கல், பயிற்சி அளிப்பு ஆகிய பணிகளை இம்மையம் மேற்கொள்ள உள்ளது. ஆகையால் இம்மையம் காற்று சக்தித் துறையைச் சார்ந்த தொழில் முனைவோருக்கும், முதலீட்டாளர்களுக்கும், காற்றாலை உரிமையாளர்களுக்கும் மற்றும் அரசு அதிகாரிகளுக்கும் பெரிதும் உதவிகரமாய் அமையும்.

*நீர் இறைக்கும் காற்றாலைகள்*

காற்று மூலம் மின் உற்பத்தி செய்யும் திட்டங்களுடன் தமிழக அரசு நீர் இறைக்கும் காற்றாலைகள் நிறுவவும் ஊக்கமளித்து



2002 ஏப்ரல் 12]

வருகின்றது. தமிழ்நாட்டில் மொத்தம் 871 நீர் இறைக்கும் காற்றாலைகள் நிறுவப்பட்டுள்ளன. மத்திய அரசு மானியம் அல்லாமல், தமிழக அரசு ஒரு காற்றாலைக்கு தலா ரூ.20,000 மானியம் அளித்து 2001-2002 ஆம் ஆண்டில் மானியத் தொகை 8 பம்புகளுக்கு வழங்கியுள்ளது. இதில் 4 பம்புகள் நிறுவப்பட்டு வருகின்றன.

காற்றாலைப் பம்புகள் மூலம் விவசாயிகளுக்குக் கூடுதல் சக்தி பெறுவதற்கு சூரிய ஒளி மற்றும் காற்றாலை மூலம் இயங்கும் கலப்பினப் பம்புகளை நிறுவலாம். மத்திய அரசு இதற்கு 50 சதவீதம் வரை மானியம் வழங்கும்.

***உயிரியல் மற்றும் தாவர சக்தி***

கால்நடை மற்றும் விவசாயக் கழிவுப் பொருட்கள் மூலம் சாண எரிவாயு தயாரித்து அதனை எரிபொருளாக உபயோகிப்பது தொழில் நுட்ப ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் இயலும் என்று அறியப்பட்டுள்ளது. இது தவிர ஆய்வுகளின் அடிப்படையில் சர்க்கரை ஆலைகளில் உபயோகமற்றதெனக் கருதப்பட்ட கரும்பு வீழ்படிவு மூலமாகவும் எரிவாயு தயாரிக்க இயலும் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் மைய மற்றும் மாநில அரசுகளின் மானிய உதவிகளோடு சர்க்கரை ஆலைகளில் கரும்பு வீழ்படிவுகளை உபயோகித்து பணியாளர்களின் உணவு விடுதி மற்றும் தங்கும் விடுதி ஆகியவற்றின் பயன்களுக்காக எரிவாயுக் கலன்களை நிறுவ நடவடிக்கை எடுத்து வருகிறது. 1999-2000 ஆம் ஆண்டுகளில் தமிழக அரசின் மானியமாக ரூ.75,000 ஒவ்வொரு கலனுக்கும் வழங்கி 60 கன மீட்டர் அளவு கொண்ட 2 கலன்கள் தலா ஒரு கூட்டுறவு தனியார் சர்க்கரை ஆலைகளில் நிறுவப்பட்டுள்ளது.

35 கன மீட்டர் கொள்ளளவு கொண்ட மனிதக் கழிவிலிருந்து எரிவாயு தயாரிக்கும் எரிசக்திக் கலன் தேனி மாவட்டத்தில் உள்ள பெரியகுளம் ஜெயராஜ் அன்னபாக்கியம் பெண்கள் கல்லூரியில் நிறுவப்பட்டுள்ளது. இதன் மொத்தச் செலவில் (ரூ.8 இலட்சம்) ரூபாய் 4.37 இலட்சம் மத்திய அரசு மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பெறப்படும் வாயு, சுற்றுப்புறச்சூழல் பாதிப்பில்லாமல் சமையல் செய்வதற்குப் பயன்படுத்தலாம். இதனைப் பயன்படுத்தி இருமுக எரிபொருள் என்ஜின் மூலம் மின்சாரம் தயாரித்து விளக்கு எரிப்பதற்கும், சிறிய மோட்டார் மூலம் தண்ணீர் எடுப்பதற்கும் உபயோகப்படுத்தலாம்.

[2002 ஏப்ரல் 12

இத்திட்டம் தற்பொழுது மத்திய அரசுத் துறையிலிருந்து, மாநில அரசுத் துறைக்கு மாற்றப்பட்டுள்ளது. ஆகவே, எரிசக்தி தன்னிறைவு அடைய இத்தகைய பயன் உள்ள கலன்களை கல்வி நிலையங்கள், சிறைச்சாலைகள் ஆகிய இடங்களில் நிறுவ நிதி உதவி அளிக்கும் திட்டம் மாநில அரசால் பரிசீலிக்கப்படும்.

மாவட்டங்களில் உபரியாகக் கிடைக்கும் தாவர மற்றும் விவசாயக் கழிவுகளைப் பற்றிய மதிப்பீடு ஆய்வு, மத்திய அரசு மற்றும் மாநில அரசின் நிதி உதவியுடன் 37 தாலுக்காக்களில் செய்யப்பட்டுள்ளது. மேலும் 12 தாலுக்காக்களில் இந்த ஆண்டு (2001-2002) செய்யப்பட்டு வருகிறது. இதில் 2 தாலுக்காக்கள் மாநில அரசின் திட்டத்தின்கீழ் அடங்கும். இவ்வாய்வு அறிக்கைகளின் துணை கொண்டு உபரியாகக் கிடைக்கும் தாவரக் கழிவுப் பொருட்களிலிருந்து மின் உற்பத்தித் திட்டங்கள் நிறுவிட தனியார் முதலீட்டாளர்கள் அவர்களாகவே முன்வர இயலும். மேலும் இத்திட்டங்களுக்கு மைய அரசால் வழங்கப்படும் வட்டி மானியம் பெற இவர்கள் தகுதி பெறுவார்கள். இதன் மூலம் அவர்கள் எரிசக்தியில் தன்னிறைவைப் பெற முடியும்.

சேலம், தருமபுரி மாவட்டங்களில் மிகுதியாகக் காணப்பெறும் மரவள்ளிக் கிழங்கு மாவு உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளிலிருந்து வெளிப்படும் கழிவுகளால் சுற்றுப்புறச் சூழ்நிலைக்கு ஏற்படும் தீங்குகளைக் கட்டுப்படுத்தவும் அக்கழிவு நீரிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்ய அமெரிக்காவிலுள்ள நியூஜெர்சி பல்கலைக்கழகத்தின் உதவியுடன் ஒரு திட்ட ஆய்வறிக்கை தயார் செய்யப்பட்டது. ஆய்வறிக்கைகளினை அடிப்படையாகக் கொண்டு தருமபுரி மாவட்டத்தில் ஒரு தனியார் தொழில் முனைவர் தோராயமாக 500 கிலோவாட் மின் உற்பத்தி செய்யும் கலன் ஒன்றை நிறுவ முன் வந்ததின்பேரில் அவரது கருத்துரு மத்திய அரசின் ஏற்பளிப்புக்குச் சிபாரிசு செய்து அனுப்பப்பட்டு தற்சமயம் மத்திய அரசு அதனை ஏற்றுச் செயல் முறை விளக்கத் திட்டத்தின்கீழ் ஒப்பந்தப்புள்ளி முடிவு 14-8-2001 அன்று அனுமதி அளித்துள்ளது.

இதற்கான பணி ஆணை தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தால் வழங்கப்பட்டுவிட்டது. இத்திட்டம் ஜூலை 2002-ல் முடிவுறும். இதற்கான மொத்தச் செலவில் (ரூ.359 இலட்சம்) 50 சதவீதம் மத்திய அரசால் வழங்கப்படுகிறது. மீதித் தொகை பயனாளி நிறுவனத்தால் ஏற்றுக்கொள்ளப்படும்.



2002 ஏப்ரல் 12]

கோழிக் கழிவிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் 1.2 மெகாவாட் திறன் கொண்ட மற்றுமொரு திட்டம் நாமக்கல்லில் செயல்பட்டு வருகிறது. இந்த மின்சாரம் மின் வாரியக் கட்டமைப்பிற்கு வழங்கப்படும். இத்திட்டத்தின் மொத்தச் செலவில் (ரூ.1,400 இலட்சம்) மத்திய அரசு ரூ.351 இலட்சம் மானியமாக வழங்குகிறது. ரூ.641 இலட்சம் இந்திய புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி நிறுவனத்தால் கடனாக வழங்கப்படுகின்றது. மீதித் தொகை பயனாளி நிறுவனத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இத்திட்டம் ஜூன் 2002-ல் முடிவுறும்.

மேலும் பல பயனீட்டாளர்களிடமிருந்து, மொத்தம் 3.974 மெகா வாட் திறன் கொண்ட, மரவள்ளிக் கழிவிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் இத்தகைய திட்டங்கள் ரூ.2,806 இலட்சம் செலவில் பெறப்பட்டு, தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தால் மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது. இதற்கு வட்டி மானியம் மத்திய அரசால் வழங்கப்படும்.

தாவர எரிசக்தி இயந்திரங்கள் மூலம், தாவரக் கழிவுகளை 1,000 டிகிரி வெப்பம் வரை எரித்து, 70 சதவீதம் திறப்பாடில், வாயு பெறப்படுகிறது. இந்த வாயுவை சமையல் செய்வதற்கும், ஒரே அளவில் சீராக சூடு செய்தல் அல்லது உலர வைப்பதற்கும் பயன்படுத்தலாம். இந்த வாயுவை சுத்தம் செய்து மின்சாரம் தயாரிக்கவும் பயன்படுத்தலாம். தமிழ்நாட்டில் இதுவரை 26 தாவர இயந்திரங்கள், பள்ளிகள், சிறைச்சாலைகள், விடுதிகள் மற்றும் தொழிற்சாலைகள் (500 கி.வாட் வெப்பம்) திறன் வரை நிறுவப்பட்டுள்ளது. இதனால் தொழிற்சாலைகளில் டீசல் அல்லது எரி எண்ணெய் பயன்படுத்துவதில் சேமிப்பு பெறப்பட்டுள்ளது. இதனை நிறுவ ஆகும் மொத்தச் செலவையும் 2 வருடங்களில் பெற முடியும். 2001-2002 ஆம் ஆண்டில் 100 முதல் 125 கி.வாட் திறன் கொண்ட 3 இயந்திரங்கள் நிறுவ மத்திய அரசு மானியம் வழங்க அனுமதி அளித்துள்ளது. மேலும் 500 கி.வாட் திறன் கொண்ட 4 இயந்திரங்கள் அமைக்க மதுரையில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்திற்கு மத்திய அரசிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது.

இத்திட்டம் தொழிற்சாலைகளுக்கு எரிசக்தியில் தன்னிறைவை அடைய மிகப் பயனுள்ளதாக இருக்கும். இதனை இயக்க அருகாமையில் உபரியாகக் கிடைக்கும் தாவரக் கழிவுகள் அல்லது தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் கிடைக்கும் மரக் கழிவுகளையும் பயன்படுத்தலாம்.

[2002 ஏப்ரல் 12

தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் பல்கலைக்கழகங்கள் மற்றும் பொறியியல் கல்லூரிகள் ஆகியவற்றில் எரிசக்திப் பூங்கா, மத்திய அரசின் நிதி உதவியுடன் நிறுவி வருகிறது. இதன் மூலம், மாணவர்கள் மற்றும் பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. இது வரை 8 பூங்காக்கள் நிறுவப்பட்டுள்ளன. மேலும் 4 பூங்காக்கள் நிறுவப்பட்டு வருகின்றன.

மாநகர மற்றும் நகரங்களில் வெளிப்படும் அன்றாடக் கழிவுகளை மதிப்பீடு ஆய்வு செய்யவும், அவைகளிலிருந்து மின் உற்பத்தி செய்யவும் முதல் கட்ட நடவடிக்கையாக சம்பந்தப்பட்ட துறைகளின் துணையுடனும் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தால் சேலம் மாநகராட்சிக்கான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் மற்றும் திருச்சி மாநகராட்சிகளுக்கான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணியும் நடைபெற்று முடிவடைந்துள்ளது. இவ்வறிக்கைகளின் துணை கொண்டு தனியார் நிறுவனங்கள் நகரக் கழிவுகளைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்யும் திட்டங்களை நிறுவ முன்வரலாம்.

சர்க்கரை ஆலைகளில் இணை மின் உற்பத்தி செய்யும் திட்டங்களைப் பெரிய அளவில் நிறைவேற்ற மாநில மற்றும் மைய அரசுகள் ஊக்கம் அளித்து வருகின்றன. இதனால் கூடுதல் மின்சாரம் உற்பத்தி செய்யலாம். இது சம்பந்தமாக சர்க்கரை ஆலைகளில் உள்ள கொதிகலன் மற்றும் இதர உபகரணங்களின் திறனை மேம்படுத்தி இணை மின் உற்பத்தி செய்து, தமிழ்நாடு மின் வாரியத்திற்கு அதிகப்படியான மின்சாரம் தயாரித்து வழங்க இவ்வாலைகள் வலியுறுத்தப்பட்டுள்ளன. இத்திட்டங்களுக்கு, மைய அரசு கூட்டுறவு ஆலைகளுக்கு ஒரு மெகாவாட் மின் உற்பத்திக்கு ரூ.2.00 கோடி வரையிலும், தனியார் ஆலைகளுக்கு வட்டி மானியமும் வழங்குகிறது.

தமிழ்நாட்டிலுள்ள 37 சர்க்கரை ஆலைகளில், பத்து சர்க்கரை ஆலைகளில் 142.10 மெகாவாட் மொத்தத் திறன் கொண்ட இணை மின் உற்பத்தி நிலையங்கள் நிறுவப்பட்டு (3 கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் 20.00 மெகாவாட் மற்றும் 7 தனியார் சர்க்கரை ஆலைகள் 122.10 மெகாவாட்) மின்சாரம் தயாரிக்கப்படுகிறது. 2001-2002 ஆம் ஆண்டில் இன்னும் கூடுதலாக சுமார் 19 மெகாவாட் திறன் நிறுவப்படலாம். 2002-2003 ஆம் ஆண்டில் மேலும் 100 மெகாவாட் திறன் நிறுவப்படும். பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் 500



2002 ஏப்ரல் 12]

மெகாவாட் மின் உற்பத்திக் குறியீட்டை அடைய முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணி**

தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தின் பல்வேறு குறிக்கோள்களில் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிகளை ஊக்குவிப்பதும் ஒன்றாகும். தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம், தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களுடனும், தொழில்நுட்ப நிலையங்களுடனும் இணைந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மரபு சாரா எரிசக்தித் திட்டங்களின் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள உள்ளது.

**ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தித் திட்டம்**

தமிழ்நாட்டில் 21 தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரங்களில் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் மூலம் ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தித் திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. இத்திட்டத்தின்கீழ் கிராம மக்களின் சமையல், விளக்கு வெளிச்சம், குடிநீர் ஆகிய அடிப்படைத் தேவைகளுக்குப் பயன்படும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள எரிசக்தி உபகரணங்கள் அவர்களின் தேவைக்கேற்ப மானிய விலையில் விநியோகிக்கப்படுகின்றன. இத்திட்டத்தில் பணியாளர்களுக்கான சம்பளச் செலவினத்தை இந்திய அரசும், திட்டச் செலவினத்தை தமிழக அரசும் ஏற்கின்றது. கீழ்க்கண்ட எரிசக்தி சேமிப்பு உபகரணங்கள் 25 முதல் 100 விழுக்காடுகள் வரை மானியமாக இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படுகின்றன:-

1. மேம்படுத்தப்பட்ட மண் அடுப்புகள் (100 விழுக்காடு மானியம்)
2. உராய்வு குறைவான புட் வால்வுகள் (75 விழுக்காடு மானியம்)
3. நீர் இறைக்கும் காற்றாலைகள் குடிநீர்த் தேவைக்காகப் பொதுக் கிணறுகளில் அமைத்தல் (100 விழுக்காடு மானியம்)
4. பிற வகையான எரிசக்தி சேமிப்பு உபகரணங்கள் (25 விழுக்காடு மானியம்)

**விளம்பரம்**

மரபு சாரா எரிசக்தி வளங்களைப் பற்றியும், அது தொடர்பான பல்வேறு உபகரணங்களின் பயன்களையும் மக்களிடையே பிரபலப்படுத்தும் நோக்கத்துடன், தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி

நிறுவனம் பல கருத்தரங்குகளை நடத்தி வருகிறது. பிற நிறுவனங்கள் நடத்தும் கண்காட்சிகளிலும் பங்கேற்று வருகிறது. தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்திடம் இருக்கும் ஒரு விளம்பர ஊர்தியில், மரபு சாரா எரிசக்தி உபகரணங்களின் மாதிரிகள் நிறுவப்பட்டுள்ளன. இந்த ஊர்தி பொருட்காட்சிகள், அரசுத் திட்டங்களின் விழாக்கள் மற்றும் கருத்தரங்குகள், கல்வி நிறுவனங்கள் ஆகிய இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு உபகரணங்களின் பயன்கள் மக்களுக்கு விளக்கப்படுகின்றன. 2001-2002, ஆம் ஆண்டில் மரபு சாரா எரிசக்தி வளங்கள் பற்றிய விளம்பர நடவடிக்கைகளுக்காக ரூ.5.00 இலட்சம் ஒதுக்கப்பட்டது.

மரபு சாரா எரிசக்தி வளங்கள் பற்றிய இரண்டு, மூன்று நாள் நடைபெறும் பொருட்காட்சி மற்றும் கருத்தரங்குகள் திருநெல்வேலியில் ஒன்றும், திருச்சியில் ஒன்றும் நடத்தப்பட்டது. மேலும் சென்னையில் தற்சமயம் நடைபெற்று வரும் 28-வது அகில இந்திய சுற்றுலா மற்றும் வணிகப் பொருட்காட்சியிலும் பங்கேற்றுள்ளது.

மத்திய அரசின் செய்தி மற்றும் விளம்பர விழிப்புணர்ச்சித் திட்டத்தின்கீழ், நாட்டிலேயே முதன்மையான சார்பு அமைப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு மத்திய அரசின் மரபு சாரா எரிசக்தி ஆதாரங்கள் அமைச்சகத்தால், 1999-2000 ஆம் ஆண்டிற்கு தமிழ்நாட்டிற்கு முதல் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

மின்சாரத் துறையுடன் இணைந்து நாட்டிலேயே முதன்முறையாக மரபு சாரா எரிசக்தித் துறைக்கு முக்கியத்துவம் அளித்து இந்த அரசினால் அமைக்கப்பெற்றுள்ள மரபு சாரா எரிசக்தித் துறை அமைச்சகம் வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 15 அம்சத் திட்டத்தில் கூறப்பட்டுள்ள பின்வரும் திட்டங்களுக்கு சிறப்பான கவனம் செலுத்தப்படும்:

### உறைவிடப் பாதுகாப்பு

சூரிய சக்தி பயன்பாடு அனைவரின் பொறுப்பு என்பதற்கு இணங்க வீட்டுப் பணிகள் நிறைவேற்றப்படுதல்.

### எரிசக்திப் பாதுகாப்பு

காற்று, சூரிய சக்தி, உயிரினக் கழிவுகளின் சக்தி போன்ற புதுப்பிக்கத்தக்க வகையிலான எரிசக்தி ஆதாரங்கள் ஆகியவற்றில்





தொடர்ந்து கவனம் செலுத்தி நிலைபெற்ற ஆதாரங்களை ஏற்படுத்தி, வேளாண்மை, தொழில் மற்றும் வீட்டுப் பயனுக்காக எரிசக்தியில் தன்னிறைவை அடைதல்.

மேற்படி நோக்கங்கள் அடுத்த 4 ஆண்டுகளில் நிறைவு செய்ய அனைத்து முயற்சிகளும் இந்த அரசினால் எடுக்கப்படும்.

## தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்

### முன்னுரை

தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் 9-1-1991 ஆம் தேதியிடப்பட்ட அரசு ஆணை எண் 47 (பொ.பது) கீழ் உருவாக்கப்பட்டது. இந்நிறுவனம் 27-6-1991 ஆம் தேதி அன்று நிறுவப்பட்டது. இந்நிறுவனம் தமிழக அரசிற்கு முற்றிலும் சொந்தமான ஒரு வங்கி சாரா நிதி நிறுவனமாகும். இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கமானது, வைப்புநிதித் தொகைகளைத் திரட்டி, அவற்றை தமிழகத்தின் மின் உற்பத்திப் பிரிவுகளுக்கு, குறிப்பாக தமிழ்நாடு மின் வாரியத்தின் மின் உற்பத்தி, மின் பங்கீடு மற்றும் மின் விநியோகத் திட்டங்களுக்கு நிதி உதவி அளிப்பதுமாகும். இந்நிறுவனம் முக்கியமாக வைப்புநிதி மூலம் திரட்டும் நிதியினை தமிழ்நாடு மின் வாரியத்திற்கு தவணைக் கொள்முதல் கடன், நீண்ட காலக் கடன் மற்றும் குத்தகைக் கடனாகவும் வழங்கி வருகிறது.

இந்நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ.50 கோடிகளாகும். இதில் இன்றைய தேதியில் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.22 கோடிகள். அனைத்துப் பங்கு மூலதனமும் தமிழக அரசு வசம் உள்ளது. இந் நிறுவனம் பாரத ரிசர்வ் வங்கியில் வங்கி சாரா நிதி நிறுவனமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன் பதிவு எண் 07.00389.

### வைப்பீட்டுத் தொகைகள் திரட்டுதல்

வைப்பீட்டாளர்களுக்கு சிறந்த மற்றும் உரிய நேரத்தில் சேவை செய்வதின் மூலமாகவும், நாளிதழ்களில் விளம்பரம் செய்தும் மற்றும் தமிழகம் மற்றும் இதர மாநிலங்களில் வைப்பீடு திரட்டும் முகாம்/ வைப்பீட்டாளர்களின் சந்திப்பையும் நடத்தி பொது மக்களிடமிருந்து வைப்பீட்டுத் தொகையை அதிகரிக்கும் முயற்சியில் இந்நிதி நிறுவனம்

செயல்பட்டு வருகிறது. வைப்பீட்டுத் தொகையின் அதிகரிப்பை நோக்கும்போது இந்நிதி நிறுவனத்தின்மீது பொதுமக்கள் கொண்டுள்ள நம்பிக்கை மற்றும் பற்றுறுதி தெள்ளத் தெளிவாகிறது. 28-02-2002 ஆம் தேதி அன்று இந்நிறுவனத்தின் வைப்பீட்டுத் தொகை ரூ.950.91 கோடியாகவும், வைப்பீட்டாளர்களின் எண்ணிக்கை 75,118 ஆகவும் உள்ளது.

### தமிழ்நாடு மின் வாரியத்திற்கு அளிக்கப்பட்டுள்ள கடனுதவி

இந்நிதி நிறுவனத்தால் திரட்டப்பட்ட நிதித் தொகை அனைத்தும் தமிழ்நாடு மின் வாரியத்தின் மின் உற்பத்தி/மின் பங்கீடு மற்றும் மின் விநியோகத் திட்டங்களுக்குக் கடனாக அளிக்கப்பட்டு வருகிறது. இந் நிறுவனம், தமிழ்நாடு மின் வாரியத்திற்கு 28-02-2002-ம் தேதி முடிய ரூ.2,677.52 கோடிகளை தவணைக் கொள்முதல் கடன், நீண்ட காலக் கடன் மற்றும் குத்தகைக் கடனாக அளித்துள்ளது. தமிழ்நாடு மின் வாரியத்திற்கு அளிக்கப்பட்ட கடன் தொகையில் நிலுவையில் உள்ள கடன் தொகை ரூ.1,410 கோடிகள் ஆகும்.

### பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டம் 2001

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தினை மேம்படுத்துவதற்கும், பெண் சிசுக் கொலையை வேருடன் அழிப்பதற்கும் மற்றும் ஆண் குழந்தை மோகத்தை தவிர்ப்பதற்கும் "பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்தினை" மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிமுகப்படுத்தியுள்ளார்கள், 2001-2002 நிதிநிலை அறிக்கையில் பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்தில் சில மாற்றங்கள் செய்யப்பட்டு அதிகப்படியான நிதி உதவிகளை கல்வி மற்றும் ஏனைய தேவைகளுக்காக 20 வயதிற்குட்பட்ட ஏழைக் குழந்தைகளுக்கு வழங்கிட வழிவகை செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் இந்நிதி நிறுவனத்தின் பங்கு யாதெனில் வைப்பீட்டுத் தொகைகளைப் பெற்று அதற்குப் பின் வட்டியை உரிய காலத்தில் வழங்கி சேவை செய்வதேயாகும்.

### இலாபம் மற்றும் ஈவுத் தொகை

இந்நிறுவனம் துவக்கத்திலிருந்து தொடர்ந்து இலாபம் ஈட்டி வருகிறது. மேலும், இந்நிறுவனம் செலுத்தப்பட்ட மூலதனத்தில் 20 சதவிகிதத்தை ஈவுத் தொகையாக 1995-96 முதல் வழங்கி வருகிறது. இந்நிறுவனம் 2000-2001 ஆம் ஆண்டு ரூ. 12.95 கோடி (வரிக்குப் பின்)



இலாபம் ஈட்டியுள்ளது. இந்த ஆண்டில், 2001-2002-ல் இந்நிறுவனம் ரூ.17.39 கோடி (வரிக்குப் பின்) இலாபம் ஈட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### எதிர்காலத் திட்டங்கள்

1. அடிப்படை வசதி பத்திரங்களை வெளியிட சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்தல்.
2. வைப்பீட்டுதாரர்களுக்கான முகாம்களை முக்கிய நகரங்களுக்கு விரிவுபடுத்துதல்.
3. இதர அரசுத் துறை நிறுவனங்களுக்கும் நிதி உதவி அளித்தல்.
4. வாடிக்கையாளர்களிடம் அணுகும் முறை மற்றும் ஏனைய துறைகளிலும் தகுந்த பயிற்சி அளிப்பதன் மூலம் பணியாளர்களின் பணித்திறமையை மேம்படுத்துதல்.

## இணைப்பு

## செயல்பாட்டிலுள்ள கட்டடங்களில் சூரிய ஒளி சுடு நீர் அமைப்புகள் (சாதனங்கள்) நிறுவுதல் குறித்த மாதிரி முறை விதிகள்/ துணை விதிகள்

மாநில அரசின் கட்டட துணை விதிகளில் சேர்ப்பதற்கான காப்புரைகள் பின்வருமாறு:—

1. கீழ்க்கண்ட வகைகளைச் சேர்ந்த எந்த ஒரு புதிய கட்டடமும், அந்த புதிய கட்டடத்தில் சுடுநீர் வழங்க ஒரு அமைப்போ, நிலையமோ ஏற்பாடு செய்யப்பட்டிருந்தால் அந்த அமைப்பு மற்றும் நிலையத்துடன் சேர்த்து கூடுதலாக சூரிய சக்தி சுடுநீர் கலம் அமைப்பில்லாமல் கட்டப்படக்கூடாது.

(1) மருத்துவமனைகள் மற்றும் மருத்துவ இல்லங்கள்.

(2) உணவகங்கள், தங்குமிடங்கள் மற்றும் விருந்தினர் இல்லங்கள்.

(3) பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் உடன் இணைந்த விடுதிகள், பயிற்சி மையங்கள்.

(4) படைத் துறை மற்றும் காவலர்களின் குடியிருப்புகள்

(5) 150 சதுர மீட்டர் பரப்புக்கு மேல் கொண்ட தனியார் வீடுகள்.

(6) இரயில் நிலையங்கள், விமான நிலையங்களில் **உள்ள** காத்திருக்கும் அறைகள், ஓய்வு அறைகள், அலுவலர் ஆய்வு விடுதிகள் மற்றும் சிற்றுண்டி விடுதிகள்.

(7) சமுதாய மையங்கள், விருந்து மண்டபங்கள், கல்யாண மண்டபங்கள் மற்றும் இதுபோன்ற பொது நலனுக்காகப் பயன்படுத்தப்படும் கட்டடங்கள்.

**அட்டவணை**

பொருள் வரையறை

| | | |
|---|---|---|
| (அ) | "சூரிய ஒளி உதவியுடன் இயங்கும் சுடுநீர் அமைப்பு" | சூரிய சக்தியை சுடவைப்பதற்கு ஆதாரமாகக் கொண்டு இயங்கும் சுடுநீர் அமைப்பு. |
| (ஆ) | "துணை கூடுதல் அமைப்பு" | சூரிய ஒளி சுடுநீர் அமைப்பிலிருந்து வெளிவரும் நீரை மின்சாரத்தால் இயங்கும் அல்லது எரிபொருள் கொண்டு கொதி கலனில் எரிக்கும் அமைப்பில் சூடாக்கி தொடர்ந்து சுடுநீர் பெறுதல். |
| (இ) | "புதிய கட்டிடம்" | மேற்கூறிய வகைகளில் இத்தகைய கட்டிடங்கள் கட்டுவதற்கு திட்ட வரை படத்தை தகுதியுடைய அதிகாரிக்கு அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்ட வகைகள். |
| (ஈ) | "நடைமுறையில் உள்ள கட்டடம்" | தத்தம் செயல்பாடுகளுக்கு உரிமம் வழங்கப் பெற்ற கட்டடங்கள். |



**2. சூரிய ஒளி சுடு நீர் அமைப்புகள் நிறுவுதல்**

***(அ) புதிய கட்டடங்கள் :*** மேற்கூறிய வகைகளில் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கான திட்ட வரைபடத்திற்கான அனுமதி அளிக்கும் முன், அந்த கட்டடங்களில் மேல் கூரையிலிருந்து சுடுநீர் தேவைப்படும் பகிர்வு இடங்களுக்கு இன்சுலேட்டர் செய்யப்பட்ட பைப்லைன் எடுத்துச் செல்வதற்கு கட்டடத்தின் வடிவமைப்பிலேயே ஏற்பாடு செய்ய வேண்டும். கட்டடத்தில் சூரிய ஒளி சுடுநீர் அமைப்புக்குத் தொடர்ந்து தண்ணீர் செல்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். கட்டடத்தின் மேற்கூரையில் சூரிய ஒளி நேரிடையாகப் படும்படி திறந்தவெளி இருக்க வேண்டும். கூரைக்கு ஒரு சதுர மீட்டருக்கு *50* கி. கிராமுக்குக் குறையாமல் பளுதாங்கும் திறன் இருக்க வேண்டும். மேலே கூறிய வகைகளில் உள்ள எல்லா புதிய கட்டடங்களும் தத்தம் தொழில் தொடங்க உரிமம் பெறுவதற்கு முன்னால் சூரிய ஒளி சுடு நீர்அமைப்பு நிறுவி முடித்திருக்க வேண்டும்.

***(ஆ) நடைமுறையில் உள்ள கட்டடங்கள்:*** மேலே கூறிய வகைகளில் பயன்படுத்துதல் மாறும்பொழுது, அந்தக் கட்டடங்களில் சுடுநீர் கொண்டு செல்லும் அமைப்பு இருக்குமானால் அங்கு சூரிய சக்தி உதவியுடன் சுடுநீர் அமைப்பு நிறுவுதல் கட்டாயமாக்கப்படவேண்டும்.

***(இ) திறன் :*** வெவ்வேறு வகைக் கட்டடங்களில் நிறுவப்பட வேண்டிய சூரிய ஒளி சுடுநீர் அமைப்பின் திறன் எவ்வளவு என்று உள்ளாட்சி மன்றம் முடிவு செய்யும் இது குறைந்தது ஒரு குளியல் அறை மற்றும் சமையல் அறைக்கும் ஒரு நாளுக்கு *25* லிட்டருக்கு குறையாமலும், அதிகபட்சமாக மேல் கூரையின் அளவில் *50* சதவிகிதத்திற்கு இந்த அமைப்பு இருக்க வேண்டும் என்று பரிந்துரைக்கப்படுகிறது.

***(ஈ) விவரக் குறிப்பீடு:*** நிறுவப்படும் சுடுநீர் அமைப்பு இந்திய தர நிர்ணயச் செயலகத்தின் (பி.ஐ.எஸ்) விவரக்குறிப்பீடு ஐ.எஸ். *12933*-க்கு ஒத்து இருக்க வேண்டும். இந்த அமைப்பில் உள்ள சூரிய ஒளி சேகரிப்பான்கள், இந்திய தர நிர்ணய அமைப்பின் சான்றிதழ் (BIS) பெற்று இருக்க வேண்டும்.

***(உ) இணை அமைப்பு:*** எந்தெந்த இடங்களில் சுடுநீர் தொடர்ந்து தேவைப்படுகின்றதோ, அங்கு மின் சக்தியால் அல்லது எண்ணையால் சூடாக்கத் தேவைப்படும் அளவு திறன் கொண்ட அமைப்புகளைக் கூடுதலாக நிறுவிக் கொள்ளலாம்.

[2002 ஏப்ரல் 12

## இணைப்பு II

*(320 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

**கோரிக்கை எண் 17—பட்டு வளர்ச்சித் துறை**

**கொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003**

1.00 தமிழ்நாட்டில் பட்டு வளர்ப்புத் தொழில் கிராமப்புறங்களில் வேலைவாய்ப்புகளை உருவாக்கி அதன்மூலம் கூடுதல் வருமானத்தை விவசாயிகளுக்கும், கிராமப்புற மகளிருக்கும் அளிக்கும் தொழிலாகும். மல்பரி தோட்டப் பராமரிப்பு, பட்டுப்புழு வளர்த்தல், பட்டுக்கூடு அறுவடை செய்தல், பட்டு நூல் நூற்பு ஆகியவைகளில் கிராமப்புறப் பெண்கள் ஈடுபட்டு வருகின்றனர். பட்டுத் தொழிலில் 60 சதவீத பட்டு வளர்ப்புப் பணிகள் பெண்களால் மேற்கொள்ளப்படுகின்றன. பட்டு வளர்ப்புத் தொழிலில் உள்ள நடவடிக்கைகள் அரசின் கொள்கைகளின்படியே அமைந்துள்ளன.

1.01 பண்ணை உற்பத்தியை அதிகரித்தல், பாமர மற்றும் ஓரளவு படித்த மக்களுக்கு தொழில்நுட்ப திறன் வழங்குதல், இன ஒருதலைச் சார்பு நிலையை நீக்குதல், ஒடுக்கப்பட்ட பிரிவினரின் பொருளாதார நிலையினை மேம்படுத்துதல், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி தொடர்பான விவரங்களை வழங்கி விஞ்ஞானிகளுக்கும், விவசாயிகளுக்கும் உள்ள இடைவெளியை நீக்கி தொடர்பு ஏற்படுத்துதல், விவசாயத்திற்கு போதிய பாசன வசதியளித்தல், வேலை வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்துவது ஆகியன அரசின் கொள்கைகளாகும்.

1.02 பட்டு வளர்ச்சித் துறையின் செயல்பாடுகளானது பின்வருமாறு:—

(அ) உயர் விளைச்சல் தரும் மல்பரி ரகங்களைப் பயிரிட விவசாயிகளை ஊக்குவித்தல்.

(ஆ) மல்பரி சாகுபடி, பட்டுப்புழு வளர்ப்பு மற்றும் பட்டு நூற்புத் தொழில்களில் பயிற்சி வழங்குதல்,

(இ) நவீன பட்டுப் புழு வளர்ப்புத் தளவாடங்களைக் கொள்முதல் செய்தல், தனியாக பட்டுப்புழு வளர்ப்புமனை கட்டிடவும் உதவிடல்,



2002 ஏப்ரல் 12]

(ஈ) நோயற்ற தரமான பட்டு முட்டைகள் விநியோகம் செய்வதை உறுதிப்படுத்துதல்,

(உ) விவசாயிகள் தமது புழு வளர்ப்பில் நோய் தாக்குதல் ஏற்படாவண்ணம் பாதுகாத்து கூடுதல் பட்டுக்கூடுகளை அறுவடை செய்வதற்குத் தேவைப்படும் தொழில் நுட்பங்களை அளித்தல், தனியார் பட்டு நூற்பு நிலையங்களை நிறுவுவதற்கு உதவிடல்,

(ஊ) விவசாயிகளின் மல்பரித் தோட்டங்களில் சொட்டு நீர்ப்பாசன அமைப்பினை நிறுவுவதற்கு உதவிடல்,

(எ) அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினப் பயனாளிகளுக்கு நிதி ஒதுக்கீட்டின்படி திட்ட உதவிகள் வழங்குதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவர்தம் பொருளாதார முன்னேற்றத்திற்காக தொடர்ந்து இத்தகைய நிதி உதவிகள் கிடைத்திட துறை மூலம் உறுதி செய்யப்படும்,

(ஏ) பட்டுக்கூடுகள் மற்றும் பட்டு நூலுக்கு விற்பனை அமைப்புகளை ஏற்படுத்திடல்,

(ஐ) பட்டு விவசாயிகள் புதிய தொழில்நுட்பங்களை எளிதில் கடைப்பிடிக்க வசதிகள் செய்து தருதல்.

1.03 1979 ஆம் ஆண்டில் சேலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு பட்டு வளர்ச்சித் துறையினை தோற்றுவித்த பின்னர் பட்டுத் தொழிலின் வளர்ச்சிக்கு பட்டு விதைப் பண்ணைகள், பட்டு வித்தகங்கள், பட்டுக்கூடு அங்காடிகள், தொழில்நுட்ப சேவை மையங்கள், பட்டு நூற்பகங்கள், பயிற்சி மையங்கள், பட்டு பரிமாற்றகம் முதலிய உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. ஆறு மண்டல அலுவலகங்களும், 27 உதவி இயக்குநர் அலுவலகங்களும் வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தும் பொருட்டு செயல்பட்டு வருகின்றன. தொடர்ந்து பட்டுத் தொழிலின் வளர்ச்சிக்காக நிதி ஒதுக்கீடு கணிசமாக உயர்த்தப்பட்டது. பட்டுத் தொழில் வளர்ச்சிக்கு திட்டச் செலவினங்களை மேற்கொண்டதுடன், வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டம், மலைப் பகுதி மேம்பாட்டுத்

திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம், ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம், உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்ட தேசிய பட்டு வளர்ச்சித் திட்டம், சுவிஸ் நிறுவன வளர்ச்சி மற்றும் ஒத்துழைப்புக்கான உதவி அளிக்கும் திட்டங்கள், மத்திய பட்டு வாரிய நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் கிரியா ஊக்கித் திட்டங்கள் போன்ற வளர்ச்சித் திட்டங்கள் மூலம் நிதி உதவி பெற்று பட்டுத் தொழில் வளர்ச்சிப் பணிகளுக்கான செலவினங்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

1.04 தமிழ்நாடு, கச்சாப்பட்டினை பெருமளவு உபயோகிக்கும் மாநிலமாகும். மாநிலத்தில் கச்சாப்பட்டின் தேவை 1500.00 மெட்ரிக் டன்கள் ஆகும். தமிழகத்தில் 1992-93 ஆம் ஆண்டில் கச்சாப்பட்டு உற்பத்தி 1342.00 மெட்ரிக் டன்கள் என்ற உயர்நிலையை அடைந்து 2000-2001 ஆம் ஆண்டில் பட்டுக்கூடுகளின் விலைச் சரிவு, சீனாவிலிருந்து பட்டு நூல் வரத்து, கூடுதல் வருவாய் தரக்கூடிய பிற பணப்பயிர்களை சாகுபடி செய்தல், நகர்ப்புற மயமாக்கம், பெப்ரின் நோய்த் தாக்குதலால் பட்டுப்புழு வளர்ப்பில் கேடடைவு முதலிய காரணங்களால் பட்டு உற்பத்தி 571.00 மெட்ரிக் டன்கள் என்று குறைந்துள்ளது. இத்தகைய இடையூறுகளைக் கடந்து உற்பத்தியை மேம்படுத்துவதற்காக மத்திய பட்டு வாரியம் அறிமுகம் செய்துள்ள புதிய தொழில்நுட்ப முறைகளை விவசாயிகளிடத்தில் நடைமுறைப்படுத்தி வருவதால் பட்டு உற்பத்தித் திறன் குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்துள்ளது. 2001-2002 ஆம் நிதியாண்டில் பட்டு முட்டைத் தொகுதிகள் விநியோகம், பட்டுக்கூடு உற்பத்தி மற்றும் பட்டு உற்பத்தி அதிகரிக்கப்பட்டுள்ளன.

| வருடம் | முட்டைத் தொகுதிகள் வளர்ப்பு (இலட்சத்தில்) | பட்டுக்கூடு உற்பத்தி (மெட்ரிக் டன்களில்) | பட்டு உற்பத்தி (மெட்ரிக் டன்களில்) |
|---|---|---|---|
| 2000-2001 | 117.970 | 5138.000 | 571.000 |
| 2001-2002 | 131.500 | 5882.000 | 655.000 |



2.00 ***அரசின் 15 அம்சத் திட்டத்தின்கீழ் வரும் பட்டு வளர்ச்சி நலத் திட்டங்கள்***

2.01 ***பண்ணை உற்பத்தியை அதிகரித்தல்***

மல்பரி இலைகளை பட்டுப் புழுக்கள் தங்களது உணவாக உட்கொள்கின்றன. அப்புழுக்கள் பட்டுக்கூடுகளை தோற்றுவிக்கின்றன. பட்டுக்கூடுகளிலிருந்து பட்டு நூல் உற்பத்தி செய்யப்படுகிறது. கூடுதலாக மல்பரி இலைகளை உற்பத்தி செய்வதால் கூடுதலாக பட்டுப் புழுக்களை வளர்க்க இயலும். அவை மூலம் கூடுதலாக பட்டுக்கூடுகள் உற்பத்தியாகி அதிக வருமானம் பெறுவதற்கு வழிவகுக்கிறது. மல்பரி இலைகள் உற்பத்தியை 70 விழுக்காடு அளவிற்கு உயர்த்த வி-1 போன்ற உயர் விளைச்சல் இரக மல்பரி சாகுபடி செய்ய ஊக்குவிக்கப்படுகிறது. ஆண்டுக்கு ஒரு ஹெக்டேருக்கு மல்பரி இலைகள் உற்பத்தி 35.00 மெட்ரிக் டன்களிலிருந்து 70.00 மெட்ரிக் டன்களாக உயரும்.

2.02 அதே போன்று பாரம்பரிய கலப்பினப் பட்டுக்கூடுகளிலிருந்து பெறப்படுவதை விட 35 சதவீதம் கூடுதலாக இரு சுழற்சி இன பட்டுக்கூடுகளிலிருந்து பட்டு நூல் உற்பத்தி ஆவதால் கச்சாப்பட்டு நூல் உற்பத்தியை அதிகரிக்க விவசாயிகள் இரு சுழற்சி இன புழு வளர்ப்பை மேற்கொள்ளுமாறு ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

2.03 2002-2003 ஆம் ஆண்டில் அதிக மல்பரி இலைகள் உற்பத்திக்காக 1165 ஏக்கர் பரப்பில் உயர் விளைச்சல் இரக மல்பரி சாகுபடி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் உயர் விளைச்சல் மல்பரி இரகங்கள் 5825 ஏக்கர் பரப்பில் நடவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

2002-2003 ஆம் ஆண்டில் உத்தேசிக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் விவரங்கள் கீழ்வருமாறு:—

[2002 ஏப்ரல் 12

| வ. எண் | திட்டம் | உயர் விளைச்சல் மல்பரி ரகங்கள் சாகுபடி (ஏக்கரில்) | விவசாயி கள் எண் ணிக்கை | மொத்த நிதி ஒதுக் கீடு | பண்ணை உற்பத்திக் கான தொகை (ரூ.இலட் சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1. | திட்டப் பணிகள் | 1000.00 | 2000 | .. | .. |
| 2. | மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் | 15.00 | 60 | 8.800 | 0.363 |
| 3. | மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம் | 125.00 | 500 | 25.410 | 3.400 |
| 4. | பழங்குடியினர் நல துணைத் திட்டம் | 25.00 | 100 | 3.925 | 0.605 |
| | மொத்தம் | 1165.00 | 2660 | 38.135 | 4.368 |

2.04 பரிசோதனை அடிப்படையில் மத்திய பட்டு வாரியமும் ஜப்பானிய பன்னாட்டுக் கூட்டுறவு நிறுவனமும் இணைந்து ஈரோடு மாவட்டம் கோபிச்செட்டிப்பாளையம் பகுதியில் இரு சுழற்சி இன புழு வளர்ப்பை மேற்கொண்டது. மத்திய பட்டு வாரியம் மற்றும் ஜப்பானிய பன்னாட்டுக் கூட்டுறவு நிறுவன விஞ்ஞானிகள் அப்பகுதியிலுள்ள 18 விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர். இளம் புழு வளர்ப்புக்கு புழு வளர்ப்புத் தட்டுக்கள், தெளிப்பான்கள், ஈரப்பதமானி, வெப்பமூட்டும் கருவிகள், மின் ஆக்கிகள் மற்றும் சுழல் சந்திரிகைகள் விநியோகிக்கப்பட்டன. ஜனவரி 2000 முதல் பிப்ரவரி 2002 முடிய புழு வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டு கூட்டாக ஆய்வு செய்யப்பட்டது. 33350 இரு சுழற்சி இன முட்டை தொகுதிகள் வளர்க்கப்பட்டு 65.57 கிலோ பட்டுக் கூடுகள் சராசரியாக ஒவ்வொரு 100 முட்டை தொகுதிகளுக்கு உற்பத்தி செய்யப்பட்டு ஒரு கிலோ



2002 ஏப்ரல் 12]

ரூ.194 வீதம் விற்பனை செய்யப்பட்டுள்ளது. அதிகரிக்கப்பட்ட கூடு உற்பத்தி மற்றும் அதன் வருமானத்தைக் கண்ட மற்ற விவசாயிகளும் இரு சுழற்சியின புழு வளர்ப்பை மேற்கொண்டுள்ளனர்.

2.05 2002-2003 ஆம் ஆண்டில் 10.00 இலட்சம் இரு சுழற்சியின மத்திய பட்டு ஆராய்ச்சி வீரிய இன (சி.எஸ்.ஆர்.) பட்டு முட்டை தொகுதிகள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும். பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் விநியோகிக்கப்படும் இரு சுழற்சி இன பட்டு முட்டைகள் விவரம் பின்வருமாறு:-

| வருடம் | இரு சுழற்சியின முட்டை தொகுதிகள் (இலட்சத்தில்) | இரு சுழற்சியின பட்டு நூல் உற்பத்தி (மெட்ரிக் டன்னில்) |
|---|---|---|
| 2002-2003 | 10.00 | 80.00 |
| 2003-2004 | 14.00 | 110.00 |
| 2004-2005 | 19.00 | 150.00 |
| 2005-2006 | 31.00 | 250.00 |
| 2006-2007 | 38.00 | 300.00 |

3.00 பாமர மற்றும் ஓரளவு படித்த மக்களுக்கு தொழில்நுட்ப திறன் வழங்குதல்.

3.01 பட்டு வளர்ப்புத் தொழிலை மேற்கொள்ளும் பெரும்பாலான விவசாயிகள் பாமர மற்றும் ஓரளவு படித்த விவசாயிகளாக இருப்பதால் இத்துறை அவர்களுக்குப் புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் திறன் அபிவிருத்திக்குப் பயிற்சி அளித்து வருகின்றது. மேம்படுத்தப்பட்ட பட்டுத் தொழில்நுட்பங்களை நடைமுறைப்படுத்தி தொழில் திறனை உயர்த்துவதன் வாயிலாக, உற்பத்தியும் தரமும் உயர்த்தப்படுகிறது.

3.02 மத்திய அரசும் சுவிட்சர்லாந்தும் இணைந்து செயல்படுத்தும் பட்டுத் தொழில் வளர்ச்சித் திட்டம் "பட்டு 2000" 1998-99 முதல் 5 ஆண்டுகள் சுவிஸ் அபிவிருத்திக் கழக நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டம் மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு பட்டுத் தொழிலில் புதிய பொருத்தமான

தொழில்நுட்பங்களைத் தேவையான இடங்களில் மேற்கொள்ளச் செய்வதை நோக்கமாகக் கொண்டு செயல்படுத்தப்படுகிறது. மத்திய அரசும் சுவிட்சர்லாந்து அரசாங்கமும் இணைந்து பட்டு அபிவிருத்தியை இந்தியாவில் கூட்டு முயற்சியுடன் மேலோங்கிடச் செய்ய இத்திட்டத்தின் மூலம் விவசாயிகளிடையே குழு நடவடிக்கைகள் ஏற்படுத்தி வருகிறது. "பட்டு 2000" திட்டத்தின் கீழ் 2001-2002 முடிய 220 பட்டுத் தர மேம்பாட்டுக் குழுக்கள் 8 முதல் 12 உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன. தீவிர மல்பரி அபிவிருத்தி இல்லாத பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு, தீவிர மல்பரி அபிவிருத்தி உள்ள பகுதியில் பயிற்சி வழங்கி, புதிய தொழில்நுட்பங்களைக் கடைப்பிடிக்கச் செய்தல், பட்டுத் தரத்தினை மேம்படுத்தும் பொருட்டு பட்டு நூற்புப் பயிற்சியை, தீவிர மல்பரி உள்ள இடங்களில் வழங்குதல் போன்றவையும் இத்திட்டத்தின் இதர செயல்பாடுகள் ஆகும்.

3.03 நவீன உத்திகளை கடைப்பிடித்து உற்பத்தித் திறனை அதிகரித்து வருவாயைப் பெருக்க, இந்த பட்டுத் தர மேம்பாட்டுக் குழுக்கள் தொழில்நுட்ப ரீதியாக 2002-2003-ல் வலுப்படுத்தப்பட உள்ளன. முறையாக மருந்தடிப்பு செய்ய இக்குழுக்களுக்கு 2002-2003 ஆம் ஆண்டில் செலவினத்தைச் சமமாகப் பகிர்ந்து 100 குழுக்களுக்கு பயன்மிகு அழுத்து விசைத் தெளிப்பான்கள் வழங்கப்படும். இதனால் பட்டுப்புழு வளர்ப்பில் நோய்த் தாக்குதலால், அறுவடைக் குறைவு ஏற்படுவது தவிர்க்கப்படும். அழுத்து விசைத் தெளிப்பான்கள் விநியோக விவரம் வருமாறு:—

| வருடம் | விசைத் தெளிப்பான்கள் (எண்ணிக்கை) | சுவிஸ் அபிவிருத்திக் கழகப் பங்குத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 2002-2003 | 100 | 12.50 |
| 2003-2004 | 60 | 7.50 |
| 2004-2005 | 60 | 7.50 |
| மொத்தம் | 220 | 27.50 |

3.04 நவீன பட்டுத் தொழில்நுட்ப உத்திகளை நடைமுறைப்படுத்தும் விவசாயிகள் உள்ள பட்டுத் தொழில் பெருவளர்ச்சி அடைந்த





பகுதிகளுக்கு, பட்டுத் தர மேம்பாட்டுக் குழு உறுப்பினர்கள் அழைத்து செல்லப்படுவார்கள். இதனால், குழு உறுப்பினர்கள் அங்குள்ள விவசாயிகளுடன் கலந்துரையாட வாய்ப்பு ஏற்பட்டு, உறுதி செய்யப்பட்ட நவீன தொழில்நுட்ப விவரங்களை தாமும் அறிந்து பயனடைவர். 2002-2003 ஆம் ஆண்டில் பட்டு தர மேம்பாட்டுக் குழுக்களில் உள்ள 500 விவசாயிகளை பட்டுத் தொழில் பெருவளர்ச்சி அடைந்த பகுதிகளுக்கு அழைத்துச் செல்ல உத்தேசிக்கப்பட்டுள்ளது. பட்டு-2000 திட்டத்தின் கீழ் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் சுவிஸ் அபிவிருத்தி கூட்டுறவு நிறுவன நிதியுதவியுடன் இத்திட்டம் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

| வருடம் | பட்டு விவசாயிகள் எண்ணிக்கை | சுவிஸ் அபிவிருத்தி திட்ட பங்குத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 2002-2003 | 500 | 7.800 |
| 2003-2004 | 500 | 7.800 |
| மொத்தம் | 1000 | 15.600 |

3.05 வெளிநாட்டு நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் இதே திட்டத்தின்கீழ், கூடுதல் விலை கிடைக்க பட்டு உப பொருட்களைப் பாதுகாத்து, பயன்படுத்தும் தொழில்நுட்பத் திறன் பயிற்சி, பட்டு நூற்பாளர்களுக்கு வழங்கப்படும். மத்திய பட்டு வாரிய பயிற்சி நிலையத்தில் நூற்பாளர்கள் பயிற்சி பெறும் விபரம் வருமாறு:—

| வருடம் | பட்டு நூற்பாளர்கள் எண்ணிக்கை | சுவிஸ் அபிவிருத்திக் கழகப் பங்குத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 2002-2003 | 30 | 0.300 |
| 2003-2004 | 40 | 0.400 |
| 2004-2005 | 30 | 0.300 |
| மொத்தம் | 100 | 1.000 |

[2002 ஏப்ரல் 12

3.06 பட்டு விவசாயிகள் இரு சுழற்சி இன பட்டுப்புழு வளர்ப்பின் பயன்களை உணர்ந்து, விழிப்புணர்வு பெறும்பொருட்டு 2002-2003-ல் விழிப்புணர்வுக் கூட்டங்கள் நடத்தவும், இரு சுழற்சி இன புழு வளர்ப்பு வெற்றிகரமாக மேற்கொள்ளப்படும் இடங்களுக்கு நேரில் அழைத்துச் சென்று இரு சுழற்சி இன பட்டுப்புழு வளர்ப்புத் தொழில் நுட்ப பயிற்சி 300 விவசாயிகளுக்கு வழங்கவும், மேலும் பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் விவசாயிகளுக்கு இரு சுழற்சி இன பட்டுப்புழு வளர்ப்புத் தொழில்நுட்பப் பயிற்சி கீழ்க்கண்டவாறு வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது:

| வருடம் | பயிற்சியாளர்கள் எண்ணிக்கை | நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 2002-2003 | 300 | 2.400 |
| 2003-2004 | 300 | 2.400 |
| 2004-2005 | 300 | 2.400 |
| 2005-2006 | 300 | 2.400 |
| 2006-2007 | 300 | 2.400 |
| மொத்தம் | 1500 | 12.000 |

4.00 *ஆண்-பெண் சமத்துவம்*

4.01 பட்டுத் தொழிலில், புழு வளர்ப்பு மற்றும் தோட்டப் பராமரிப்பில் பெண்களே கூடுதலான அளவில் பங்கு கொள்கின்றனர். இதன் காரணமாக, துறை செயல்படுத்தும் பல்வேறு பயிற்சித் திட்டங்களிலும் பட்டு விவசாயிகளுக்கு அளிக்கப்படும் நிதியுதவித் திட்டங்களிலும் பெண்களும் பங்கு கொண்டு பயிற்சியும், நிதியுதவியும் பெறுகின்றனர். 2002-2003 ஆம் ஆண்டில் பெண் பயனாளிகளுக்கு வழங்கப்படும் திட்ட உதவிகள் வருமாறு:



2002 ஏப்ரல் 12]

| வ.எண் | திட்ட விவரம் | பெண் பயனாளிகள் |
|---|---|---|
| 1. | உயர் விளைச்சல் மல்பரி ரக சாகுபடி செய்தல் | 300 |
| 2. | இரு சுழற்சி இன பட்டுப் புழு வளர்ப்பில் பயிற்சி அளித்தல் | 40 |
| 3. | சொட்டு நீர்ப்பாசன அமைப்பு நிறுவ நிதியுதவி | 10 |
| 4. | தனியாக புழு வளர்ப்பு மனை கட்ட நிதியுதவி | 50 |
| 5. | நவீன புழு வளர்ப்புத் தளவாடங்கள் கொள்முதல் செய்ய நிதியுதவி | 50 |
| | மொத்தம் | 450 |

4.02 பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஒவ்வோர் ஆண்டும், இதுபோன்ற பெண் பயனாளிகள் பட்டுத் தொழிலில் ஈடுபடுவதற்கு உதவியளிக்கப்படும்.

5.00 **ஒடுக்கப்பட்ட பிரிவினரின் பொருளாதார நிலையை மேம்படுத்துதல்.**

5.01 ஒடுக்கப்பட்ட பிரிவினர் பட்டுத் தொழிலை மேற்கொள்வதன் வாயிலாக அவர்தம் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்காக, அரசு வழிகாட்டுதல்களின்படி, நிதி ஒதுக்கீடு செய்யப்படும். 2002-2003 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும் பின்வரும் திட்டங்களின்கீழ் ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்பட்ட வகுப்பினர் முதலிய ஒடுக்கப்பட்ட பிரிவினர்களுக்கு உதவியளிக்கப்படும்.

| வ.எண் | திட்ட விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | உயர் விளைச்சல் மல்பரி ரக சாகுபடி செய்தல் | 750 |
| 2. | சொட்டு நீர்ப்பாசன அமைப்பு நிறுவ நிதியுதவி | 80 |
| 3. | தனியாக புழு வளர்ப்பு மனை கட்ட நிதியுதவி | 60 |
| 4. | நவீன புழு வளர்ப்புத் தளவாடங்கள் கொள்முதல் செய்ய நிதியுதவி | 60 |
| 5. | இரு சுழற்சி இனப் பட்டுப் புழு வளர்ப்பில் பயிற்சி அளித்தல் | 50 |
| | மொத்தம் | 1000 |

[2002 ஏப்ரல் 12

5.02 பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், ஆண்டுதோறும் 1000 ஒடுக்கப்பட்ட பிரிவினருக்கு நிதி உதவியளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

6.00 **ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி தகவல்களை வழங்கி விஞ்ஞானிகளுக்கும், விவசாயிகளுக்கும் உள்ள இடைவெளியை நீக்கி தொடர்பு ஏற்படுத்துதல்.**

6.01 மைசூரில் உள்ள மத்திய பட்டு ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையம் பட்டு உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதற்காக நோய்க் கட்டுப்பாட்டு முறைகள், சீரான முட்டை பொரிப்பு, பணியாட்கள் செலவினத்தைச் சேமிக்க எளிமையான தொழில்நுட்பங்கள், பட்டுப்புழு வளர்ப்பில் பயன்படுத்தும் பாதுகாப்பான இடுபொருட்கள் போன்ற நவீன தொழில்நுட்ப கட்டுக் கோப்பு முறைகளைப் பரிந்துரைத்துள்ளது. 2002-2003 ஆம் ஆண்டில், தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஒசூர், கிருஷ்ணகிரி மற்றும் பாப்பிரெட்டிப்பட்டியிலும், ஈரோடு மாவட்டத்திலுள்ள சத்தியமங்கலத்திலும் மாநில அரசு, மத்திய பட்டு வாரியம் மற்றும் ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு நிறுவனம் ஆகியவற்றின் கூட்டு நடவடிக்கைகள் மூலமாக இரு சுழற்சி இன பட்டுப்புழு வளர்ப்புத் தொழில்நுட்பத்தினை அறிமுகம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. 2002-2003 ஆம் ஆண்டு முதல் ஐந்தாணடு காலத்தில் இந்தக் கூட்டு முயற்சி தொடரும்.

6.02 மத்திய பட்டு வாரியத்தின்கீழ் செயல்படும் சேலம் மற்றும் குன்னூரில் உள்ள மண்டல பட்டு ஆராய்ச்சி நிலையங்கள், ஆண்டுதோறும் மூன்று கிராமங்களைத் தத்தெடுத்து பட்டு உற்பத்தியை அதிகரிக்கும் புதிய தொழில்நுட்பங்கள் விவசாயிகளிடையே பிரபலப்படுத்தத் திட்டமிட்டுள்ளன.

7.00 **பாசனத்திற்குத் தேவையான நீர்**

கசிவு மற்றும் ஆவியாதலால் ஏற்படும் இழப்புகளிலிருந்து பாதுகாத்து பாசனத்திற்குப் போதுமான நீர் அளிக்க உறுதி செய்யவும், இயற்கை வளத்தைப் பாதுகாத்து பாசன நீர் போதுமான அளவு கிடைக்கச் செய்யவும், 2002-2003 ஆம் ஆண்டில் 400 ஏக்கர் மல்பரி பரப்பில் சொட்டு நீர்ப்பாசன வசதியை அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. பத்தாவது



2002 ஏப்ரல் 12]

ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் வருடத்திற்கு 400 ஏக்கர் வீதம் மொத்தம் 2000 ஏக்கர் மல்பரி பரப்பில் சொட்டு நீர்ப்பாசன அமைப்பு நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது.

| வ.எண் | ஆண்டு | பரப்பு (ஏக்கரில்) |
|---|---|---|
| 1. | 2002-2003 | 400 |
| 2. | 2003-2004 | 400 |
| 3. | 2004-2005 | 400 |
| 4. | 2005-2006 | 400 |
| 5. | 2006-2007 | 400 |
| | மொத்தம் | 2000 |

8.00 **வேலைவாய்ப்பு அளித்தல்**

8.01 ஒரு ஏக்கர் பரப்பில் மல்பரி சாகுபடி செய்வதன் மூலம் 5 நபர்களுக்கு ஆண்டு முழுவதும், தோட்டப் பராமரிப்பு, பட்டுப்புழு வளர்ப்பு, பட்டு நூற்பு மற்றும் பட்டுத் துணை உற்பத்தி ஆகியவற்றில் தொடர்ந்து வேலைவாய்ப்புக் கிடைக்கிறது. 2002-2003 ஆம் ஆண்டிலிருந்து வருடத்திற்கு 5825 நபர்களுக்கு 1165 ஏக்கரில் மல்பரி சாகுபடி செய்வதன்மூலம் வேலை வாய்ப்பினை உருவாக்கவும், பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஒவ்வொரு வருடமும் 1165 ஏக்கரில் மல்பரி சாகுபடி செய்து, ஆண்டொன்றுக்கு 5825 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

8.02 **ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான நலத் திட்டங்கள்**

(1) ஆதிதிராவிடர்கள் பயன்பெறும் வகையில் பட்டு வளர்ப்புத் தொழிலில் வேலைவாய்ப்பு மற்றும் வருவாய் கிடைத்திட 100 பயனாளிகள் பயன்பெறும் வகையில் ரூ.2.30 இலட்சத்தில் 2002-2003 ஆம் ஆண்டில் பட்டு வளர்ப்பு மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

(2) 100 பழங்குடியினர் பயன்பெறும் வகையில் 2002-2003 ஆம் ஆண்டில் பட்டு வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன.

9.00 அரசு அண்ணா பட்டுப் பரிமாற்றகம், காஞ்சிபுரம்

9.01 பட்டு நூற்பாளர்கள், பட்டு நூலை விற்பனை செய்யுமிடமே பட்டுப் பரிமாற்றகமாகும். பட்டு நூலுக்கு நியாயமான போட்டி விலை கிடைப்பதற்காக, 1991 ஆம் ஆண்டில் காஞ்சிபுரத்தில் "அரசு அண்ணா பட்டுப் பரிமாற்றகம்" நிறுவப்பட்டது. தரமான பட்டு நூல் பற்றிய விழிப்புணர்வினைப் பெறுவதற்காக காஞ்சிபுரத்தில் மத்திய பட்டு வாரியத்தின் பட்டு நூல் தரப் பரிசோதனை நிலையம் நிறுவப்பட்டு, செயல்பட்டு வருகிறது. பட்டுப் பரிமாற்றக உறுப்பினர்கள் பட்டு நூலின் தரத்தினைப் பரிசோதனை செய்துகொள்ள இப்பரிசோதனை நிலையம் உதவுகிறது. 2001-2002-ஆம் ஆண்டில் இப்பட்டுப் பரிமாற்றகத்தில் 200.00 மெட்ரிக் டன் கச்சாப்பட்டு கொள்முதல் செய்ய நிர்ணயிக்கப்பட்ட இலக்கில் 137.00 மெட்ரிக் டன் பட்டு நூல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. பட்டு நூல் விற்பனையாளர்களிடமிருந்தும், கொள்முதல் செய்வோரிடமிருந்தும் மொத்தம் ரூ.26.02 இலட்சம் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

10.00 டான்சில்க், காஞ்சிபுரம்

10.01 டான்சில்க், தலைமைக் கூட்டுறவு விற்பனை இணையமாக 1978 ஆம் ஆண்டு காஞ்சிபுரத்தில் தோற்றுவிக்கப்பட்டது. டான்சில்க், கச்சாப்பட்டு நூலை அரசு அண்ணா பட்டுப் பரிமாற்றகத்தில் கொள்முதல் செய்து பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், பட்டு முறுக்கேற்றுவோருக்கும் பாவு மற்றும் ஊடையாக்குவதற்காக விற்பனை செய்து வருகிறது. கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், காதி மற்றும் கிராமத் தொழில் வாரியத்திற்கும் தேவையான பாவு மற்றும் ஊடை பட்டு நூலையும் விற்பனை செய்து வருகிறது. இவ்விணையத்திற்கு அரசு முதலீடாக ரூ.1.70 இலட்சமும் உறுப்பினர்கள் பங்கு மூலதனத் தொகையாக ரூ.155.29 இலட்சமும் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் தேசிய கூட்டுறவு அபிவிருத்திக் கழகம் மூலம் ரூ.34.36 இலட்சமும் தேசிய பட்டு நூல் வங்கித்





திட்டத்தின் மூலம் ரூ.147.49 இலட்சமும் காஞ்சிபுரம் மத்தியக் கூட்டுறவு வங்கி மூலம் காசுக்கடனாக ரூ.150.00 இலட்சமும் நிதி உதவி பெற்று இவ்விணையம் செயல்பட்டு வருகிறது. 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.4007.77 இலட்சம் மதிப்புள்ள 293.00 மெட்ரிக் டன்கள் பட்டு நூல் இவ்விணையத்தின் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

11.00 பட்டு அபிவிருத்தி மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதி

11.01 உலக வங்கி நிதி உதவித் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்ட தேசிய பட்டு வளர்ச்சித் திட்டத்தில், ஒழுங்குமுறை அங்காடியில் விற்பனை செய்யப்படும் பட்டுக்கூட்டிற்கும் கச்சாப்பட்டிற்கும் அவற்றின் விற்பனை விலையில் ஒரு தொகை கட்டணமாக வசூலிக்கப் பரிந்துரைக்கப்பட்டது. அதன்படி 1990 ஆம் ஆண்டு பட்டு அபிவிருத்தி மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதி தோற்றுவிக்கப்பட்டது. தற்போது 0.75 சதவீதம் விற்பனைத் தொகையில் பட்டுக்கூடுகளுக்கும், பட்டிற்கும் கட்டணத் தொகையாக வசூலிக்கப்பட்டு அரசின் கணக்குத் தலைப்பில் செலுத்தப்பட்டு வருகிறது.

11.02 இதுவரை ரூ.689.00 இலட்சம் கட்டணமாக வசூலிக்கப்பட்டு, பட்டு அபிவிருத்தி மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதிக் குழுவால் அனுமதி பெற்று, பின்னர் அரசாணை பெற்று பட்டுத் தொழில் அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படுகிறது.

12.00 2002-2003-ல் செயல்படுத்த கருத்துருக்கள் அனுப்பப்பட்டுள்ள திட்டங்கள்:

12.01 (அ) மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

நீலகிரி மாவட்டத்தில் 1981-82 ஆம் ஆண்டு முதல் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பட்டு வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.8.00 இலட்சம் மதிப்பீட்டில் திட்டங்களைச் செயல்படுத்தி 70 விவசாயிகள் பயன்பெறவும், அரசு பட்டுப் பண்ணைகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

[2002 ஏப்ரல் 12

2002-2003 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு கீழ்க்கண்ட உதவிகள் வழங்கப்பட உள்ளன:

(அ) ஒவ்வொரு பயனாளிக்கும் 50 சதவீத மானியமாக ரூ.605 வீதம் நாற்று மானியமாக வழங்கப்படும்.

(ஆ) ஒவ்வொரு பயனாளிக்கும் கல்வி சுற்றுலா மற்றும் களப்பயிற்சிக்காக ரூ.500 உதவித் தொகை வழங்கப்படும்.

(இ) ஒவ்வொரு விவசாயிக்கும் ரூ.320 மதிப்பிலான பயிற்சி உபகரணங்கள் வழங்கப்படும்.

(ஈ) பட்டுப்புழு வளர்ப்பினை மேற்கொள்வதற்காக அடிப்படைப் புழு வளர்ப்புத் தளவாடங்கள் விநியோகிக்கப்படும்.

(உ) ஒவ்வொரு விவசாயிக்கும் ரூ.2500 மதிப்பிலான புழு வளர்ப்புத் தளவாடங்கள் வழங்கப்படும்.

2002-2003 ஆம் ஆண்டில் 60 பயனாளிகளுக்கு உதவிகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

12.01 (ஆ) மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம்

மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் பட்டு வளர்ச்சித் திட்டங்கள் 1985-86 ஆம் ஆண்டு முதல் கீழ்க்காணும் மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:

1. கோயம்புத்தூர்
2. திண்டுக்கல்
3. தேனி
4. விருதுநகர்
5. திருநெல்வேலி
6. ஈரோடு

2001-2002 ஆம் ஆண்டில் 546 பயனாளிகளுக்கு ரூ.18.436 இலட்சம் மதிப்பீட்டில் பட்டு வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு நிதி வழங்கப்பட்டுள்ளது.



2002 ஏப்ரல் 12]

2002-2003 ஆம் ஆண்டில் 500 பயனாளிகளுக்கு உதவி அளிக்க கீழ்க்காணும் பட்டு வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன:

(அ) 50 சதவீத மானியத்தில் ரூ.680 மதிப்புள்ள மல்பரி நாற்றுகள் ஒவ்வொரு விவசாயிக்கும் வழங்கப்படும்.

(ஆ) ஒவ்வொரு விவசாயிக்கும் பயிற்சி உதவித் தொகை ரூ.250-வுடன் பயிற்சி வழங்கப்படும்.

(இ) ஒவ்வொரு விவசாயிக்கும் ரூ.160 மானிய உதவியுடன் நோய்த் தடுப்பு மருந்துப் பொருட்கள் வழங்கப்படும்.

(ஈ) ஒவ்வொரு விவசாயிக்கும் தண்டு அறுவடை முறை புழு வளர்ப்புத் தாங்கிகள் அமைப்பதற்கும், பாலிமர் சந்திரிகைகள் கொள்முதல் செய்வதற்கும், ரூ.1250 மானியமாக வழங்கப்படும்.

**12.01 (இ) பழங்குடியினர் நல துணைத் திட்டம்**

2002-2003 ஆம் ஆண்டில் நாமக்கல் மாவட்டம் கொல்லிமலை பகுதியிலும், திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாது, ஏலகிரி மலைப் பகுதியிலும் ரூ.3.925 இலட்சம் மதிப்பீட்டில் 100 பழங்குடியினருக்கு உதவியளிக்கும் வகையில் பட்டு வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன:

பழங்குடியினருக்கு கீழ்க்காணும் உதவிகள் வழங்கப்படும்:

(அ) ஒவ்வொரு பழங்குடியின பயனாளிக்கும் நாற்று மானிய உதவியாக ரூ.605 வீதம் அளிக்கப்படும்.

(ஆ) ஒவ்வொரு பழங்குடியின பயனாளிக்கும் பயிற்சி வழங்கப்பட்டு, பயிற்சி உதவித் தொகையாக ரூ.500 வழங்கப்படும்.

(இ) ஒவ்வொரு பழங்குடியின பயனாளிக்கும் ரூ.320 மதிப்பிலான நோய்த் தடுப்பு மருந்துப் பொருட்கள் வழங்கப்படும்.

(ஈ) ஒவ்வொரு பழங்குடியின பயனாளிக்கும் தண்டு அறுவடை முறையில் புழு வளர்ப்பு மேற்கொள்வதற்கு தாங்கிகள் அமைக்கவும், பாலிமர் சந்திரிகைகள் கொள்முதல் செய்யவும் ரூ.2500 வீதம் வழங்கப்படும்.

**13.00** பட்டு-2000

**13.01** 2002-2003 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம், பட்டுத் தர மேம்பாட்டுக் குழுக்களின் திறமைகளை தொழில்நுட்ப ரீதியாக மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

(அ) கூடுதல் பட்டுக்கூடு அறுவடைக்குப் பயனுள்ள வகையில் சரியான முறையில் நோய்த் தடுப்பு மருந்தடிப்பு செய்ய அழுத்த விசைத் தெளிப்பான்கள் கொள்முதல் செய்வதற்கு நிதி உதவி வழங்கப்படும். ரூ.25.00 இலட்சம் மதிப்பில் 100 அழுத்த விசைத் தெளிப்பான்கள் கொள்முதல் செய்யப்பட உள்ளன. ரூ.25,000 மதிப்பிலான இந்த அழுத்த விசைத் தெளிப்பான்கள் கொள்முதலில் 50 சதவீத தொகையைப் பட்டுத் தர மேம்பாட்டுக் குழுக்கள் ஏற்கும்.

(ஆ) குழு உறுப்பினர்களுக்குத் தேவையான இரசாயன உரங்கள் நோய்த் தடுப்பு மருந்துப் பொருட்கள், பட்டு முட்டைகள் போன்ற நுகர்பொருட்களைக் கொள்முதல் செய்ய பட்டுத் தர மேம்பாட்டுக் குழுக்களுக்கு நிதியுதவி வழங்கப்படும். இதற்காக பட்டுத்தர மேம்பாட்டுக் குழு ஒன்றுக்கு ரூ.20,000 வீதம் குழு உறுப்பினர்களின் பங்குத் தொகைக்கு இணையாக ஒரு தடவை மட்டும் நிதி உதவி அளிக்கப்படும். 100 பட்டுத் தர மேம்பாட்டுக் குழுக்களுக்கு மொத்தம் ரூ.20.00 இலட்சம் நிதியுதவி சுழல் நிதியாகப் பயன்படுத்த வழங்கப்படும்.

(இ) பட்டுப்புழு வளர்ப்பில் நடைமுறைப்படுத்தப்படும் தொழில் நுட்ப உத்திகளை தர மேம்பாட்டுக் குழு உறுப்பினர்கள் அறிந்து பின்பற்றி உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதற்காக பட்டுத் தொழில் வளர்ச்சியடைந்துள்ள பகுதிகளுக்கு குழு உறுப்பினர்களை நேரில் அழைத்துச் சென்று கண்டுணர்தல் பயிற்சி அளிக்கப்படும். இதற்காக மொத்தம் 500 பட்டுத் தர மேம்பாட்டுக் குழு உறுப்பினர்களுக்கு ரூ.7.80 இலட்சம் நிதியுதவி வழங்கப்படும்.



(ஈ) சர்க்கா நூற்பாளர்கள், கையினால் இராட்டைகளைச் சுற்றும் சிரமத்தினைக் குறைப்பதற்காக மின் மோட்டார்களைப் பொருத்துவதற்கு ஒரு அலகிற்கு ரூ.10,000 வீதம் மொத்தம் 20 அலகுகளுக்கு ரூ.2.00 இலட்சம் நிதியுதவி அளிக்கப்படும்.

(உ) உற்பத்தியாகும் பட்டு உப பொருட்களின் தரத்தினை நிலைப்படுத்தும் முறையினை அறிய, பெங்களூரில் உள்ள பட்டு நூல் ஆராய்ச்சி மையத்தில் 30 பட்டு நூற்பாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். இதற்காக ஒரு தொழில் முனைவோருக்கு ரூ.1,000 வீதம் பயிற்சிக்கட்டணம், உணவு மற்றும் தங்குமிடச் செலவினங்களுக்கும் வழங்கப்படும்.

(ஊ) சிறு பட்டு நூற்பாளர்களுக்கு நடைமுறை மூலதன கடன் உதவி அளிக்க ஒரு குழுவிற்கு ரூ.7.50 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.37.50 இலட்சம் சிறு கடன் உதவிக்காக சுழல் நிதி பட்டுத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக வழங்கப்படும்.

பட்டு 2000 திட்டச் செயல்பாட்டின் மொத்த மதிப்பீடு ரூ.70.10 இலட்சமாக இருக்கும்.

**14.00 கிரியா ஊக்கித் திட்டங்கள் (தொடர் திட்டம்)**

14.01 உற்பத்தி செய்யப்படும் கச்சாப்பட்டின் தரம் மற்றும் உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதற்காக தனியாக புழு வளர்ப்பு மனை கட்டுதல், நவீன புழு வளர்ப்புத் தளவாடங்களைக் கொள்முதல் செய்தல், நோய் தடுப்பு மருந்துகள் விநியோகம் செய்தல், மல்பரி தோட்டங்களில் சொட்டு நீர்ப்பாசனம் அமைத்தல், பலமுனை பட்டு நூற்பு இயந்திரங்கள் நிறுவுதல், இளம் புழு வளர்ப்பு மையங்கள் அமைத்தல் போன்றவற்றிற்காக மாநிலங்களுக்கு மத்திய பட்டு வாரியம் நிதியுதவி அளித்து வருகிறது. சேலம் மற்றும் குன்னூரில் அமைந்துள்ள மத்திய பட்டு வாரியத்தின் மண்டல பட்டு ஆராய்ச்சி மையங்கள் மற்றும் அதன் சார்நிலை அலகுகள் மூலமாக, தொழில்நுட்ப ரீதியான உதவியுடன் கூடிய இணையான மானியம், மத்திய பட்டு வாரியத்தால் வழங்கப்படுகிறது. இத்திட்டங்களைச் செயல்படுத்தத் தேவையான

[2002 ஏப்ரல் 12

நிதி. பட்டு வளர்ச்சி மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதியிலிருந்து பெறப்படும். திட்ட விவரங்கள் பின்வருமாறு:—

| வ எண் | விவரம் | அலகு |
|---|---|---|
| 1. | சொட்டு நீர்ப்பாசனம் அமைத்தல் | 400 ஏக்கர் |
| 2. | தனி புழு வளர்ப்பு மனை அமைத்தல் | 300 மனைகள் |
| 3. | நவீன புழு வளர்ப்புத் தளவாடங்கள் கொள்முதல் செய்தல் | 300 பயனாளிகள் |
| 4. | இளம் புழு வளர்ப்பு மையம் அமைத்தல் | 2 மையங்கள் |

15.00 **2002-2003 ஆம் ஆண்டிற்கான திட்டம்**

15.01 2002-2003 ஆம் ஆண்டில் கீழ்க்குறிப்பிட்டுள்ள இலக்கினை அடையத் திட்டமிடப்பட்டுள்ளது:

(அ) பல்வேறு திட்டங்கள் மூலமாக, 1165 ஏக்கர் பரப்பில் உயர் விளைச்சல் தரும் மல்பரி ரகங்கள் நடவு செய்யப்படவுள்ளது.

(ஆ) 164 இலட்சம் பட்டு முட்டைத் தொகுதிகளை வளர்க்க உறுதி செய்தல்.

(இ) 920 மெட்ரிக் டன் கச்சாப்பட்டு உற்பத்தி செய்தல்.

(ஈ) 5825 கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்குதல்

16.00 நிதி ஒதுக்கீடு

16.01 மேலே குறிப்பிட்டுள்ள இலக்கினை எய்துவதற்காக, 2002-2003 ஆம் ஆண்டில் தொடர் திட்டங்களுக்காகவும், புதிய திட்டங்களுக்காகவும் வரவு-செலவுத் திட்டத்தில் மொத்த நிதி ஒதுக்கீடு ரூ.2493.63 இலட்சமாகும்.



2002 ஏப்ரல் 12]

நிதி ஒதுக்கீடு விவரம் வருமாறு:—

| வ. எண் | திட்ட விவரம் | நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | திட்டப் பணிகள் (அ) பகுதி-1 திட்டம் | 167.99 |
| 2. | திட்டம் சாராப் பணிகள் | 2212.87 |
| 3. | பழங்குடியினர் நலத் துணைத் திட்டம் | - |
| 4. | மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் | 8.80 |
| 5. | மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம் | 25.41 |
| 6. | தன்னாட்சி அமைப்புகள் உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள் | 4.71 |
| 7. | பட்டு 2000 | 73.85 |
| | மொத்தம் | 2493.63 |

[2002 ஏப்ரல் 12

## தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்

### கொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003

தமிழ்நாடு, கிராமப்புறத் தொழில்களில் பெருமளவிலான வேலைவாய்ப்பு ஆற்றலைக் கொண்டு திகழ்கிறது. இந்த ஆற்றலைப் பயன்படுத்தி வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தரும் நோக்குடன் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியச் சட்டம், 1959-ன்கீழ் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், 1960 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் உருவாக்கப்பட்டது. கிராமப்புற வளர்ச்சிப்பணியில் ஈடுபட்டுள்ள ஒத்த நோக்கமுடைய நிறுவனங்களின் ஒத்துழைப்புடன், ஊரகப்பகுதிகளில் கதர் மற்றும் கிராமத் தொழில்களை வளர்ச்சியடையச் செய்வதே இவ்வாரியத்தின் நோக்கமாகும். கடந்த 40 ஆண்டுகளாக, கதர் கிராமத் தொழில் வாரியம் இம்மாநிலத்தில் குறிப்பாக கிராமப்புறத்தில் கதர் கிராமத் தொழில்களின் வளர்ச்சிக்கு, மிகச் சிறந்த சேவையினை செய்து வருகிறது. கதர் மற்றும் கிராமத் தொழில்களை முன்னேற்ற, ஒருமித்த நோக்கமுடைய மக்களால் உருவாக்கப்படும் கூட்டுறவுச் சங்கங்களை, கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின்கீழ் பதிவு செய்ய வாரியத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இக்கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக வாரியம் கிராமத் தொழில்களை வளர்ச்சியடையச் செய்வதோடு, அதன் மூலமாக அதிகபட்ச அளவில் கிராமிய கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்க வழிவகை செய்துள்ளது.

கிராம மக்கள் மற்றும் மலைவாழ் பழங்குடியினர் ஆகியோருக்கு தேனீ பெட்டிகள் வழங்கவும் நெசவாளர்களின் தறிகளை நவீனப் படுத்துவதற்கும் கிராம கைவினைஞர்களுக்கு உரிய உபகரணங்களை வழங்கவும் மாநில மற்றும் மத்திய அரசுகள் மானியம் மூலமாக நிதி உதவி அளித்து வருகின்றன. மாநில மற்றும் மத்திய அரசுகள் வழங்கும் நிதியுதவியுடன் வாரியத்தால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் கீழ்வருமாறு:—



2002 ஏப்ரல் 12]

| வ. எண் | திட்டத்தின் பெயர் | உதவி அளிக்கப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) | பயனாளிகள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம். | 553.14 | 8,397 |
| 2. | மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியிலுள்ள கைவினைஞர்களுக்கான மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம். | 121.32 | 5,822 |
| 3. | நீலகிரி மாவட்டம் மற்றும் அதைச் சுற்றியுள்ள கைவினைஞர்களுக்கான மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம். | 213.36 | 6,107 |
| 4. | ஆதிதிராவிடர்களுக்கான சிறப்பு மைய உதவி. | 2,707.00 | 37,317 |

கதர் வாரியமும், அதன்கீழ் செயல்படும் நிறுவனங்களும் ஊரக மக்களுக்கு நேரடி வேலைவாய்ப்பினை உருவாக்குவதுடன், கிராமிய கைவினைஞர்களுக்கு உதவும் வகையில் கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் "விளிம்புத் தொகைத் திட்டம்" எனும் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. மும்பை, கதர் கிராமத் தொழில் ஆணையத்தினால் வரையறுக்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளுக்கு ஏற்ப இவ்வுதவி வழங்கப்பட்டு வருகிறது. கதர் கிராமத் தொழில் ஆணையத்தினால் அடையாளம் கண்டுள்ள 119 கிராமத் தொழில்கள் இத்திட்டத்தின்கீழ் நிதி உதவி பெற தகுதி உடையவைகளாகும். பயனாளிகளுக்கு இந்த நிதி உதவி, வங்கிகள் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது. வங்கிகளினால் தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு, கதர் கிராமத் தொழில் ஆணையத்தால் மானியமாக அளிக்கப்படும் அதிகபட்சமாக 30 விழுக்காடு வரையிலான தொகை வாரியத்தின் வழியாக வழங்கப்படுகிறது. இதுவரை 289 பயனாளிகளுக்கு ரூ.121.56 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இப்பயனாளிகளில் பெரும்பாலோர்

[2002 ஏப்ரல் 12

கிராமப்புறத்தில் உள்ளவர்கள். இத்திட்டம் அவர்களின் நிரந்தரப் பிழைப்பிற்கு வழிவகை செய்கிறது.

வாரியத்தின் நிதி ஆதாரம், மாநில அரசின் வரவு-செலவுத் திட்டத்தின் துணையுடன் வழங்கும் நிதி உதவி மற்றும் வாரியத்தின் விற்பனை வரவு என இரு வகையாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. அரசின் வரவு-செலவுத் திட்டத்தில், தள்ளுபடி மானியம், வணிகம் சாராப் பணியாளர்களின் ஊதியத்திற்கான மானியம் மற்றும் பகுதி-2 திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு வழங்கும் மானியங்களே முக்கியமானதாகும். இது தவிர, அரசு, வாரியத்தின் கணக்குகளைத் தணிக்கை செய்யும் தணிக்கையாளர்களுக்கு தணிக்கைக் கட்டணம் வழங்குகிறது. அக்கட்டணத் தொகை அரசின் வரவினத் தலைப்பில் சரிசெய்யப்படுகிறது. மாநில அரசால் வழங்கப்படும் நிதி உதவியின் விவரம் பின்வருமாறு:—

| வ. எண் | நிதியுதவி அளிக்கப்படும் தலைப்பு | திருத்திய மதிப்பீடு 2001-2002 | வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 2002-2003 |
|---|---|---|---|
| | | (ரூபாய் | இலட்சத்தில்) |
| (i) | நிகர செலவு மானியம் | 2,000.00 | 2,200.00 |
| (ii) | தணிக்கைக் கட்டணம் | 260.00 | 260.00 |
| (iii) | கதர் விற்பனைத் தள்ளுபடி | | |
| | (அ) கதர் வாரியம் | 200.00 | 200.00 |
| | (ஆ) சான்றளிக்கப்பட்ட நிறுவனங்கள் | 500.00 | 500.00 |
| (iv) | சிறப்புத் திட்டங்களைச் செயல் படுத்துவதற்காக | 36.30 | 17.11 |
| | மொத்தம் | 2,996.30 | 3,177.11 |

2. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின், கதர் மற்றும் கிராமத் தொழில்கள் குறித்த பல்வேறு செயல்பாடுகளின் விவரம் பின்வருமாறு:—



2002 ஏப்ரல் 12]

I. கதர்:—

1. கதர் பருத்தி மற்றும் பாலியஸ்டர்:-

கதர் வாரியத்தின் முக்கியச் செயல்பாடுகளுள் ஒன்றான கதர் உற்பத்தியானது கிராமக் கைவினைஞர்களுக்கான வேலை வாய்ப்பினை உருவாக்குவதில் பெரும் பங்கு வகிக்கிறது. அனைத்து கதர் இரகங்களின் உற்பத்தியின்கீழ் நூல் நூற்றல், நெசவு நெய்தல், சலவை மற்றும் அச்சிடுதல் போன்றவை முக்கிய செயல்முறைகளாகும். பவானிசாகரில் உள்ள ஒரு சாயச் சலவை அச்சு அலகுடன் 210 கிராமிய நூற்பு நிலையங்கள், 86 உப நிலையங்கள், 46 நேபாளி தறி நிலையங்கள் ஆகியவை உள்ளன. இந்த நிலையங்களில் 20,000 கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. அவர்களில் 12,500 பேர் கிராமப் பெண்களாவர். பருத்தி கதரின் மூலம் பல்வேறு மாதிரியான வேட்டிகள், சட்டைத் துணிகள், துண்டுகள், போர்வைகள், படுக்கை விரிப்புகள், சீருடைத் துணிகள் மற்றும் ஏனைய இரகங்கள் உற்பத்தி செய்யப்படும் பெரும்பான்மையான உற்பத்திப் பொருட்களாகும். ரூபாய் 8 கோடி மதிப்பிற்கு கதர் மற்றும் பாலியஸ்டர் இரகங்கள் வாரியம் மூலம் உற்பத்தி செய்ய 2002-2003 ஆம் ஆண்டிற்குக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

2. கதர்ப் பட்டு:-

பட்டுத் தொழில் ஒரு பழம் பெருமையுடைய தொழிலாகும். இவ்வாரியத்தினால் சாதாரண விலை முதல் அதிக விலை வரை உற்பத்தி செய்யப்படும் பட்டுப் புடவைகள், தனித்தன்மை வாய்ந்ததுடன் சந்தையில் முதன்மை பெரும் அளவிற்கு மதிப்பு வாய்ந்ததாகும். வாடிக்கையாளர்களின் கவனத்தினை ஈர்க்கும் வகையில், கரை ஒட்டாத அச்சிடப்பட்ட பட்டுப் புடவைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. தொடர் முயற்சி எடுத்து வண்ணங்களை மாற்றியும் வடிவமைப்பு மற்றும் கணினி வடிவமைப்புகளுடன்கூடிய பட்டுப் புடவைகள் வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கேற்ப உற்பத்தி செய்து வருகிறது. இவ்வாரியம், 1280 பட்டு நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பினை வழங்கி வருகிறது. இது தவிர, வாரியத்திற்குச் சொந்தமாகப் பட்டு-முறுக்கு மையமும் மற்றும்

[2002 ஏப்ரல் 12

காட்டம்பட்டியில் பட்டுச் சாயமிடும் மையமும் இயங்கி வருகின்றன. 2002-2003 ஆம் ஆண்டிற்கு, வாரியத்தால் மேற்கொள்ளப்படும் கதர்ப் பட்டு உற்பத்திக் குறியீடு ரூ.27 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

3. கதர் மற்றும் பட்டு இரக விற்பனைக்கான தள்ளுபடி:—

மாநில அரசு மற்றும் மும்பை, கதர் கிராமத் தொழில் ஆணையத்தால் வழங்கும் இந்தத் தள்ளுபடி மானியமே ஒரு பிரதான நிதி ஆதரவாகும். மாநில அரசு, கதர் கிராமத் தொழில் ஆணையத்தின் தள்ளுபடியுடன் சேர்த்து, ஆண்டு முழுவதற்கும் கதர் இரகங்களுக்கு 30 விழுக்காடும், பட்டு இரகங்களுக்கு 20 விழுக்காடும் ஒவ்வோர் ஆண்டும் தள்ளுபடி வழங்கி வருகிறது. அரசு, தள்ளுபடி மானியம் வாரியத்திற்கு 2001-2002 ஆம் ஆண்டிற்கு அதிகபட்சமாக ரூ.4.00 கோடி என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கதர் கிராமத் தொழில் ஆணையத்தால் சான்றளிக்கப்பட்ட நிறுவனங்களுக்கும் இந்தத் தள்ளுபடி ஆதரவு அளிக்கப்பட்டு வருகிறது. சான்றளிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு 2001-2002 ஆம் ஆண்டிற்கான அரசின் தள்ளுபடி மானியம் அதிகபட்சமாக ரூ. 5 கோடி என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

4. நூற்போர், நெசவாளர் மற்றும் கைவினைஞர்களுக்கான நலத் திட்டம்:—

வாரியம் கைவினைஞர்களுக்கான நல நிதி ஒன்றினைச் செயல்படுத்தி வருகிறது. அவர்களது கூலியிலிருந்து 12 விழுக்காடு இந்த நல நிதிக்கு வழங்குவதுடன் வாரியமும் அதற்கு ஈடான பங்குத் தொகையை நல நிதியாக வழங்குகிறது. இவ்வகையில் தோற்றுவிக்கப்பட்ட நிதி, நூற்போர் மற்றும் நெசவாளர்களது நலத்திற்காகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இத்துடன், நூற்போர் மற்றும் நெசவாளர்களுக்கு கூலியுடன் 10 விழுக்காடு தொகையினை ஊக்குவிப்புத் தொகையாக வாரியம் வழங்கி வருகிறது. திருமணம், கல்வி, மருத்துவச் செலவு போன்றவற்றிற்கு இந்நிதியிலிருந்து உதவி அளிக்கப்படுகிறது.

வாரியத்தைச் சேர்ந்த, நூற்பாளர் மற்றும் நெசவாளர் மரணமுற்றால் அவரது வாரிசுதாரர்களுக்கு கருணைத் தொகையாக ரூ.20,000 குடும்ப நல நிதித் திட்டத்திலிருந்து வழங்கும் திட்டத்தை வாரியம் நடைமுறைப்படுத்தி வருகிறது.



2002 ஏப்ரல் 12]

வாரியத்தைச் சேர்ந்த, 60 வயது அடைந்த கதர் நூற்பாளர்களுக்கு/நெசவாளர்களுக்கு மாதம் ரூபாய் 200 ஓய்வூதியம் வழங்கும் திட்டம் வாரியத்தால் அமல்படுத்தப்பட்டு வருகிறது.

II கிராமத் தொழில்கள்:—

1. தச்சு மற்றும் கருமாரத் தொழில்கள்:—

வாரியத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கிராமப்புறத் தொழில்களில் தச்சு மற்றும் கருமாரத் தொழில் ஒன்றாகும். இது கிராமம் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் வேலைவாய்ப்புகளை உருவாக்குகிறது. மூன்று பெரும் தச்சு மற்றும் கிராமத் தொழில் அலகுகள் சென்னை, கிண்டி தொழிற்பேட்டையிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் பேட்டையிலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் திருப்பூரிலும் மற்றும் இதர மாவட்டங்களில் ஆறு சிறு அலகுகளையும் வாரியம் இயக்கி வருகின்றது. பெரும்பாலான அரசுத் துறைகளின் தளவாடத் தேவைகள் இவ்வலகுகளால் நிறைவேற்றப்படுகின்றன.

வாரியத்தின் தச்சு அலகினை அதன் சொத்து, கடன் மற்றும் தொடர்புடைய பணியாளர்களுடன் டான்சி நிறுவனத்திற்கு மாற்றம் செய்யும் கருத்துரு பரிசீலனையில் உள்ளது.

தோல் தொழில்:—

இவ்வாரியத்தின் தோல் தொழிலின் கீழ் ஷூக்கள், காலணிகள் மற்றும் இதர தோல் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. தமிழ்நாடு முழுவதும் இவ்வாரியத்தின்கீழ் 26 காலணி அலகுகள் இயங்குகின்றன. அவற்றில், அம்பத்தூர், பெரம்பூர் மற்றும் பல்லாவரம் ஆகிய இடங்களிலுள்ள அலகுகளே பெரிய அலகுகளாகும். சிறை, காவல், தீயணைப்பு போன்ற அரசுத் துறைகள் மற்றும் போக்குவரத்துக் கழகங்கள் போன்ற பொது நிறுவனங்களின் தேவைகளை இவ்வாரியம் நிறைவு செய்கிறது. இவ்வலகுகளின் தோல் பொருட்கள் உற்பத்தியில் ஈடுபடுத்தப்படும் தொழிலாளர்களில் ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினரே பெரும்பாலானோர் ஆவர்.

[2002 ஏப்ரல் 12

3. உண்ணா எண்ணெய் மற்றும் சோப்புத் தொழில்:—

இவ்வாரியம், பல்வேறு இரக சோப்பு உற்பத்தி செய்வதற்கு அடிப்படை மூலப்பொருட்களான வேப்ப எண்ணெய், சந்தன எண்ணெய் மற்றும் இதர உள்ளடங்கிய மூலப்பொருட்களைக் கொண்டு சோப்பு உற்பத்தி செய்கிறது. இவ்வாரியம் உற்பத்தி செய்யும் சலவை சோப்பு, குளியல் சோப்பு, சோப்புத்தூள் ஆகிய சில குறிப்பிட்ட வகைகள் இம்மாநிலம் மற்றும் கேரள மாநிலத்திலுள்ள வாடிக்கையாளர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு பெற்றவையாகும். சமீபத்தில் வாரியம் அறிமுகப்படுத்தியுள்ள மூலிகை ஷாம்பு, சுத்தமான மூலிகைப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படுகிறது. இச்சோப்புத் தொழிலின் செயல் முறைகளை வளர்ச்சியடையச் செய்வதற்காக இவ்வாரியம் பாத்திரம் துலக்கும் சோப்பினை விரைவில் அறிமுகப்படுத்த உள்ளது. இவ்வாரியத்தின்கீழ், 37 சோப்பு அலகுகள் இயங்கி வருவதோடு, அதில் கிராமப்புற மக்களே பெரும்பான்மையான தொழிலாளர்களாக உள்ளனர்.

4. தேனீ வளர்ப்புத் தொழில்:—

தேனீ வளர்ப்புத் தொழில், வாரியத்தின் செயல்பாடுகளில் முக்கியமான ஒன்றாகும். வாரியத்தால் உற்பத்தி செய்யப்படும் தேன், மக்கள் மத்தியில் மிகச் சிறந்த ஆதரவைப் பெற்றுள்ளது. கன்னியாகுமரி மாவட்டம், அம்சியில் உள்ள வாரியத்தின் தேன் பதப்படுத்தும் அலகில் முதல் தரமான (ஏ-கிரேடு) தேன் உற்பத்தி செய்யப்படுகிறது. பச்சைத்தேன் திருவண்ணாமலை மாவட்டம் ஜமுனாமருதூர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டம் மார்த்தாண்டம் ஆகிய இடங்களிலிருந்து அதிக அளவில் கொள்முதல் செய்யப்படுகிறது. விற்பனைக்குச் சிப்பமிடுமுன் இந்த பச்சைத்தேன் 100 விழுக்காடு பரிசோதிக்கப்படுகிறது. இத்தொழிலின்கீழ், மேற்குத் தொடர்ச்சி மலைத் திட்டம், மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்களின் மூலமாக மலைவாழ் பழங்குடியினர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆகியோர்களுக்கு தேனீப் பெட்டிகள் வழங்க மானியமாக அரசு நிதி உதவி வழங்குகிறது. தேனீ வளர்ப்புத் தொழிலில் ஈடுபடும் விவசாயிகள், அவர்கள் விவசாயக் கூலியின் மூலம் பெறும் வருவாயுடன் கூடுதல் வருவாயை இதன் மூலம் ஈட்டுகின்றனர்.



2002 ஏப்ரல் 12]

5. கைமுறைக் காகிதத் தொழில்:—

கைமுறைக் காகிதத் தொழில், "கழிவிலிருந்து செல்வம்" எனும் அடிப்படையை ஆதாரமாகக் கொண்டதாகும். இத்தொழிலில் கோப்பு அட்டைகள், காகித உறைகள் மற்றும் கைப்பைகள் ஆகியவைகளே பிரதான உற்பத்தியாகும். இந்த அலகுகளில் பணியில் ஈடுபடும் அதிக அளவிலான தொழிலாளர்கள் கிராமப்புறத்தைச் சார்ந்தவர்கள். இத்தொழிலாளர்களுக்கு குறைந்த பட்சக் கூலிச் சட்டத்தின்படி கூலி வழங்கப்படுகிறது. இரயில்வேத் துறைக்குத் தேவையான காகித உறைகள் போன்றவைகளையும் மற்றும் தனியார் நிறுவனங்களின் தேவைக்கும் விநியோக ஆணைகள் பெறப்பட்டுள்ளன. இப்பொருட்கள் தொடர்பான விற்பனையினை விரிவுபடுத்தும் முயற்சி தொடரும். இதனால் கைமுறைக் காகிதத் தொழிலின் கீழ், கிராம விவசாயிகளுக்குத் தொடர் வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது.

6. மட்பாண்டத் தொழில்:-

இம்மாநிலத்தின் பாரம்பரியத் தொழில்களில் மட்பாண்டத் தொழிலும் ஒன்றாகும். வாரியத்தின் கட்டுப்பாட்டின் கீழ், 4 மட்பாண்ட அலகுகள் செயல்படுகின்றன. இவ்வலகுகளில் மெருகு மட்பாண்டங்கள் மற்றும் இதர மட்பாண்டப் பொருட்கள் உற்பத்திச் செய்யப்படுகிறது. இவற்றுக்கு சந்தையில் நல்லாதரவு உள்ளது. இம்மாநிலத்தில் பரவலாக உள்ள கதரங்காடிகளின் மூலம், இவ்வலகில் தயாரிக்கப்படும் அழகு வண்ண அலங்கார மட்பாண்டப் பொருட்கள் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

III. விற்பனை:-

வாரிய அலகுகளில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் விற்பனைக்காக 201 கதரங்காடிகளும், 10 கிராம சில்பாக்களும், 8 தோல் விற்பனை நிலையங்களும் வாரியத்தின்கீழ் செயல்பட்டு வருகின்றன. கண்காட்சிகள் நடத்துவதன் மூலமும், கிராமப்புறங்களில் சிறப்பு விற்பனை செய்வதன் மூலமும், விளம்பரங்களுக்கு மின் ஒளிபரப்புகளைப் பயன்படுத்தியும், கதர் மற்றும் கிராமத் தொழில் உற்பத்திப் பொருட்களை விற்பனை

[2002 ஏப்ரல் 12

செய்திட வாரியம் முனைந்து செயல்படுகிறது. ஏற்றுமதி ஆணை பெற்றிட கணிப்பொறி இணையதளம் www.khadikraft.com இயக்கப்படுகிறது. விற்பனையை அதிகரிக்கும் நோக்கத்துடன் வாரியத்தின் விற்பனைப் பிரிவில் பணியாற்றும் ஊழியர்களுக்கு, சென்னை உற்பத்தித் திறன் குழுவினரால், ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், கதர் ஆணையத்தினால், வழங்கப்பட்ட நிதியிலிருந்து சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாரியத்தின் உற்பத்திப் பொருட்கள் தமிழ்நாடு முழுவதிலுமுள்ள கதரங்காடிகள் மற்றும் கிராம சில்பாக்கள் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. அரசு நிறுவனங்களால் சான்றளிக்கப்பட்ட கைவினைஞர்களால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களும், மகளிர் மேம்பாட்டுத் திட்டக் குழுமத்தின்கீழ் இயங்கும் மகளிர் குழுக்களில் உள்ள, மகளிரால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களான ஊதுவத்தி, பொம்மைகள் மற்றும் Aavin, Tampcol, Tantea, Indco-serve ஆகியவற்றின் உற்பத்திப் பொருட்களும் விற்பனைத்தரகு அடிப்படையில் கதரங்காடிகள் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன. வாரியத்தின் சந்தைச் செயல்பாடுகள் கிராமப்புறக் கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பை முன்னேற்றுகிறது.

**IV.** ***ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான நலத் திட்டங்கள்:-***

சிறப்பு உள்ளடக்குத் திட்டத்தின்கீழ், வாரியம் ஆதி திராவிடர் கைவினைஞர்களுக்கு காலணி தயாரிப்பு, பிரம்பு மற்றும் மூங்கில் பொருட்கள் தயாரிப்பு, தச்சு மற்றும் கருமாரத் தொழில்களில் வேலைவாய்ப்பினை உருவாக்கிச் செயல்படுத்தி வருகிறது. இதுவரை 37,317 ஆதிதிராவிடக் கைவினைஞர்கள் பயனடைந்துள்ளனர்.

தேனீ வளர்ப்புத் தொழிலின் மூலம் மலைவாழ் மக்கள் பயன் பெறுகின்றனர். ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்படி, வாரியம் இதுவரை 8,397 பழங்குடியினருக்கு உதவியுள்ளது.



2002 ஏப்ரல் 12]

**V.** ***அரசின் 15 அம்சத் திட்டத்தின்கீழ் வரும் நலத் திட்டங்கள்:—***

அரசின் 15 அம்சத் திட்டத்தில், பின்வரும் மூன்று திட்டங்களில் மட்டும் வாரியத்தின் செயல்பாடுகள் அடங்குகின்றன:-

(i) வாழ்வாதாரப் பாதுகாப்பு:-

கதர் இரகங்கள் மற்றும் சோப்பு, தேன், கைமுறைக் காகிதம், தோல் பொருட்கள் போன்ற கிராமத் தொழில் பொருட்கள் உற்பத்தி மற்றும் விற்பனை செய்வதன் மூலம் நெசவாளர்கள் மற்றும் கிராமப்புறக் கைவினைஞர்களுக்கு வாரியம் வேலைவாய்ப்பினை வழங்குகிறது. இது குறித்து வாரியம் மேலும் அதிக முயற்சி மேற்கொள்ளும்.

(ii) உயிரின வாழ்க்கைச் சூழல் பாதுகாப்பு:—

கந்தல் துணி, பயனற்ற காகிதங்கள் மற்றும் பயனற்ற வேளாண் நார்ப் பொருட்கள் ஆகிய மூலப்பொருட்களைக் கொண்டு சுழற்சி முறையில், மீண்டும் பயன்படுத்துதல் முறையில் கைமுறைக் காகிதம் மற்றும் இதர பொருட்களான தூக்குப் பைகள் மற்றும் கோப்பு அட்டைகள் ஆகியவை வாரியத்தால் உற்பத்தி செய்யப்படுகின்றன. கைமுறைக் காகிதம் சுற்றுப்புறச்சூழலின் நண்பன்.

(iii) ஒடுக்கப்பட்ட மக்களுக்கான புதிய அணுகுமுறை:—

சிறப்பு உள்ளடக்குத் திட்டம், ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம், மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் போன்ற பல திட்டங்கள் மூலம் வாரியம், ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகியவர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கி உள்ளது.

[2002 ஏப்ரல் 12

## தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியம்

### கொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003

இந்தியாவிலேயே, தமிழ்நாடு, பனைத் தொழில் வளர்ச்சியில் முதன்மையாக உள்ளது. இந்தியாவிலுள்ள சுமார் 8.59 கோடி பனைமரங்களில் தமிழ்நாட்டில் 5.10 கோடி பனைமரங்கள் உள்ளன. தமிழ்நாடு, பனைத் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான வளங்களைக் கொண்டு, பனைத் தொழில் வளர்ச்சிக்கும் அவற்றின் மேம்பாட்டிற்கும் மையமாக அமைந்துள்ளது. மேலும் பனைபொருட்களை அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் அந்நியச் செலாவணி கிட்டும் வாய்ப்புகள் உள்ளன.

பனைபொருட்களுக்கு சந்தையில் போட்டி ஏற்படுத்துவது தொடர்பாக அவற்றை வாடிக்கையாளர்களைக் கவரும் வண்ணம் பனைபொருட்களை உற்பத்தி செய்தல், அதற்குத் தேவையானத் தொழில்நுட்பங்கள் அளித்தல், பனைபொருள் வளர்ச்சிக்குத் தேவையான ஆராய்ச்சிகள் செய்துப் பனைபொருட்களை முழுமையாக, பயன்படுத்தி, பனைத் தொழிலில் ஈடுபட்டுள்ள பனைத் தொழிலாளர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் போன்ற முக்கியக் குறிக்கோள்களைக் கொண்டு, தமிழ்நாடு சட்டம் (15) 1994-ன்படி "தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியம்" தனியாக அமைக்கப்பட்டு, 6-1-1995 முதல் செயல்பட்டு வருகிறது. தற்பொழுது சென்னை, எழும்பூரில் இவ்வாரியத்தின் தலைமையிடம் அமைந்துள்ளது.

தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியம், பனைபொருள் உற்பத்தி மற்றும் விற்பனை போன்ற நேரடியான வியாபாரத்தில் ஈடுபடவில்லை. பனைத் தொழில் வளர்ச்சிக்காக, 996 ஆரம்ப பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்களும் (பனையோலைத் தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட) 8 மாவட்டப் பனைவெல்ல விற்பனைக் கூட்டுறவுச் சம்மேளனங்கள் மற்றும் ஒரு தமிழ்நாடு மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனைக் கூட்டுறவு இணையம் ஆகியவை நேரடியாக பனைபொருட்கள் உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்டு வருகின்றன.



2002 ஏப்ரல் 12]

தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியத்திற்கு தனியாக வரவு-செலவுத் திட்டம் இல்லை. இவ்வாரியத்தின் செலவினம், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய வரவு-செலவுத் திட்டத்தில் அடங்குகிறது.

*பனைபொருள் வளர்ச்சி தொடர்பான பல்வேறு நடவடிக்கைகள் பற்றிய விவரம்:—*

**1. உற்பத்தி:**

பனைத் தொழிலில் பல்வேறு வகையான பனைவகை உண்பொருட்களான பதநீர், பனைவெல்லம் (கருப்பட்டி), பனஞ்சீனி, பனங்கற்கண்டு, பதப்படுத்திய நுங்கு, பனம்பழ் ஜாம் வகைகள், பாம் சாக்லெட் வகைகள் மற்றும் உண்ணா பொருட்களான பனைஓலைப் பொருட்கள், பனைநார்ப் பொருட்கள், பனந்தும்பு, பனந்தும்பினால் செய்யப்பட்டத் தூரிகைகள், ஈச்சங்கூடைகள் மற்றும் இதர வகையான கைவினைப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

2002-2003 ஆம் ஆண்டிற்கு மாநில இணையம்/மாவட்ட சம்மேளனங்களின் கட்டுப்பாட்டிலுள்ள அலகுகளுக்கு பனைபொருட்கள் உற்பத்திக் குறியீடாக ரூ.1230.00 இலட்சம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**2. விற்பனை:**

2002-2003-ஆம் ஆண்டிற்கு ரூ.1430.00 இலட்சம் மதிப்புள்ள பனைபொருட்களை விற்பனை செய்திடக் குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**3. வேலைவாய்ப்பு:**

பனைத் தொழிலின் மூலம் சுமார் ஆறு இலட்சம் கைவினைஞர்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது.

**4. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் திட்டம்:**

பதநீர் இறக்குதல், பனைவெல்லம் தயாரித்தல், பனந்தும்பு அடித்தல், ஈச்சங்கூடைகள் முடைதல் ஆகிய பனைத் தொழில்களில் சுமார் 30,000 ஆதிதிராவிட இனத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

[2002 ஏப்ரல் 12

5. *பனந்தும்பு மற்றும் பனைஓலைப் பொருட்கள் ஏற்றுமதி:*

பனந்தும்பு, தமிழ்நாட்டில் தூத்துக்குடியில் இருந்து அமெரிக்கா, இங்கிலாந்து, பெல்ஜியம், பிலிப்பைன்ஸ், ஜப்பான், ஜெர்மனி, ஆஸ்திரேலியா, நெதர்லாந்து போன்ற அயல்நாடுகளுக்கு தமிழ்நாடு மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனைக் கூட்டுறவு இணையம் மற்றும் ஏற்றுமதியாளர்கள் மூலம் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனைக் கூட்டுறவு இணையம், பனந்தும்பு ஏற்றுமதிப் பிரிவின் மூலம் 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.200.00 இலட்சம் மதிப்புள்ள பனந்தும்பினை ஏற்றுமதி செய்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாவட்டத்தில், மணப்பாடு, திருவள்ளூர் மாவட்டத்தில் பழவேற்காடு, வேலூர் மாவட்டத்தில் அடுக்கம்பாறை, சிவகங்கை மாவட்டத்தில் மானாமதுரை ஆகிய பகுதிகளில் பெண் கைவினைஞர்களால் அழகிய பனையோலைப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இப்பொருட்கள் அமெரிக்கா, இலண்டன், பிரான்சு, ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, கனடா, ஜப்பான், மற்றும் நெதர்லாந்து போன்ற பல்வேறு அயல்நாடுகளுக்கு முகவர்கள் மூலமாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

6. *பனைத் தொழிலில் பயிற்சிகள்:*

கடலூரில் உள்ள தமிழ்நாடு மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனைக் கூட்டுறவு இணையத்தின் மண்டல பனைபொருட்கள் பயிற்சி மையத்தின் மூலம், கிராமப்புறக் கைவினைஞர்களுக்கு பனைத் தொழில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

7. *ஆராய்ச்சி*

பதநீரை முழுமையாகப் பயன்படுத்தி, அதிக மதிப்புள்ள மாற்றுப் பொருளாக பனங்கற்கண்டு (Palm Candy), பனைத் தொழிலாளர்களால் தொடர் மரபு முறையில் தயார் செய்யப்பட்டு வருகிறது. இந்த முறையில் பனங்கற்கண்டு தயாரிக்கையில் கற்கண்டு படிகங்கள் உருவாவதற்கு 45 நாட்கள்



2002 ஏப்ரல் 12]

ஆவதோடு, விளைச்சலும் குறைந்த அளவில் உள்ளது. அண்ணா பல்கலைக்கழகம் மூலம் மேற்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப ஆராய்ச்சி, படிகம் உருவாகும் கால அளவினை 25 நாட்களாக குறைத்தும், நல்ல தரமானதும், அதிக விளைச்சலும் பெறக்கூடிய பனங்கற்கண்டு தயாரிக்க உதவியுள்ளது. இந்த மேம்படுத்தப்பட்டத் தொழில்நுட்ப முறை வழியாக பனங்கற்கண்டு தயார் செய்யும் முறை பனைத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

பனநுங்கு மற்றும் பனம்பழ ஜாம் உற்பத்திக்கான ஆராய்ச்சிகள் செய்து முடிக்கப்பட்டு, தமிழ்நாடு மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனைக் கூட்டுறவு இணையத்திற்கு இதற்கான தொழில்நுட்பங்கள் அளிக்கப்பட்டுள்ளன. இது பனைத்தொழிலில் ஈடுபட்டுள்ள சுய உதவிக் குழுக்கள் மற்றும் இத்தொழிலில் ஆர்வமுள்ள தனி நபர்களுக்கு இப்பொருட்களை உற்பத்தி மற்றும் விற்பனை செய்தல் போன்றவற்றில் விழிப்புணர்வை ஏற்படுத்தும்.

8. *அரசின் 15 அம்சங்கள் உள்ளடக்கிய திட்டத்தில் இவ்வாரியம் சார்ந்த நலத்திட்டங்கள்:—*

(i) *தொடர் பசுமைப் புரட்சி:*

தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வேளாண்மைத் துறையின் மூலம் பனை விதைகள் நடவுத் திட்டம் செயல்படுத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ii) *உணவுப் பாதுகாப்பு:*

பதநீர் மற்றும் கருப்பட்டி, ஊட்டச்சத்துள்ள இயற்கை மருத்துவ குணம் நிறைந்துள்ள உணவாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. பொது மக்களிடையே இப்பொருட்களில் அடங்கியுள்ள ஊட்டச்சத்தின் தன்மையினை விளம்பரப்படுத்தி விழிப்புணர்ச்சி ஏற்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(iii) *வாழ்வாதாரப் பாதுகாப்பு:*

பனைத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளித்தல், தொழில்நுட்பம் வழங்குதல், பனநுங்கு, பனந்தும்பு,

[2002 ஏப்ரல் 12

மற்றும் பனையோலைப் பொருட்களை அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்திட மேலும் வழிவகைகள் மேற்கொள்ளப்படும்.

**(iv)** சூழல் பாதுகாப்பு:

பனைமரம் தமிழ்நாட்டின் ''மாநில மரமாக'' அறிவிக்கப்பட்டுள்ளது. பனைமரங்கள் மண் அரிப்பைத் தடுத்து இயற்கை வளத்தைப் பாதுகாக்கிறது. பனைபொருட்கள் தூய்மைக்கேடு அற்றவையும், சுற்றுப்புறச்சூழலுக்கு உகந்தவையும் ஆகும். எனவே, தொலைநோக்குக் கண்ணோட்டத்துடன் பனைமரங்கள் வளர்த்து பாதுகாப்பது தொடர்பாக பொதுமக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படுத்தவும், பனைத் தொழில் வளர்ச்சிக்கும், அதனடிப்படையில் கிராமப்புறத்திலுள்ள இலட்சக்கணக்கான பனைத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் இத்திட்டங்கள் மூலம் வகை செய்யப்படுகின்றன.

## தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்

### கொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003

***1.00*** மாநிலத்தில் கைத்திறன் வளர்ச்சிக்காகவும் மற்றும் முன்னேற்றத்திற்காகவும் புதிய இலக்கு நோக்கி சிறப்பான உத்வேகத்துடன் முன்னேற ஒரு தனி நிறுவனம் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் என்ற பெயரில், தமிழ்நாடு அரசின் பொதுத்துறை நிறுவனமாக *26-7-1973* அன்று நிறுவனங்களின் *1956* ஆம் ஆண்டைய சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டது. இந்நிறுவனம் *1-8-1973* முதல் செயல்படத் தொடங்கியது. இந்நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டபோது, தொழிற் துறை மற்றும் தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சந்தை சங்கங்களின்கீழ் இயங்கிவந்த அனைத்து கைத்திறன் விற்பனை நிலையங்களும், பல்வேறு பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையங்களும், இந்நிறுவனத்தின்கீழ் உடனடியாக மாற்றப்பட்டன. *759* அண்ணாசாலையில் உள்ள *3.85* கிரவுண்ட் பரப்புள்ள இடத்தில் இந்நிறுவனத்தின் பதிவு பெற்ற அலுவலகம் இயங்கி வருகிறது. அரசிடமிருந்து அனைத்து விற்பனை நிலையங்களும், பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையங்களும் உரிமை மாற்றம்



2002 ஏப்ரல் 12]

செய்யப்பட்டபின் இந்நிறுவனம், "பூம்புகார்" என்ற பெயரில் இயங்கத் தொடங்கியது. தற்போது பூம்புகார் தமிழ்நாட்டின் தலை சிறந்த கைத்திறன் பொருட்களின் களஞ்சியமாக உள்ளது.

***2.00*** **இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கங்கள்**

இந்நிறுவனம் அமைக்கப்பட்டதற்கான முக்கியக் குறிக்கோள்கள் வருமாறு:

(i) தமிழகக் கைவினைஞர்களால் உருவாக்கப்படும் கைவினைப் பொருட்களுக்கு சீரான சந்தை வாய்ப்பை ஏற்படுத்தித் தரும் பணியை மேற்கொள்ளுதல்.

(ii) கைவினைஞர்களின் தொழில் திறனை மேம்பாடடையச் செய்ய முறையான பயிற்சி அளித்தல்.

(iii) கைவினைப் பொருட்களின் உற்பத்தித் திறனையும் தரத்தினையும் மேம்படுத்தி அதே நேரத்தில், அத்தொழிலில் உள்ள உற்சாகமற்ற கடின உழைப்பைக் குறைத்து, தொழில்முறை இடர்ப்பாடுகளைக் களைதல்.

(iv) வடிவமைப்புகளில் புதுமையினைப் புகுத்துதல்.

(v) கைவினைஞர்களுக்கு சமூக மற்றும் பொருளாதார பாதுகாப்பு அளித்தல்.

இக்குறிக்கோள்களை அடைவதற்காக, இந்நிறுவனம் சந்தை வாய்ப்பு, உற்பத்தி, சிறப்புக் கோயில் திட்டங்களை மேற்கொள்ளுதல், கைவினைஞர்களுக்கு பயிற்சி அளித்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

***3.00*** வணிகச் செயல்பாடுகள்

*(அ)* சந்தை வாய்ப்பு

***3.01*** விற்பனை

இந்நிறுவனத்திற்கு மாநிலத்திலுள்ள முக்கிய நகரங்களிலும், பாண்டிச்சேரி, பெங்களூர், கொல்கத்தா மற்றும் புதுதில்லி ஆகிய இடங்களிலும், "பூம்புகார்" என்ற பெயரில் **19** விற்பனை நிலையங்கள் உள்ளன. அவை கைவினைஞர்கள் தயாரித்தளிக்கும் கைவினைப் பொருட்களை விற்பனை செய்கின்றன. இதுதவிர, விற்பனையைப் பெருக்குவதற்கு வருடம் முழுவதும் பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன. அவற்றில் சில, உள்ளூர்ப்

[2002 ஏப்ரல் 12

பண்டிகைகளை ஒட்டி நடத்தப்படுகின்றன. இக்கண்காட்சிகள் இந்நிறுவனத்தின் சொந்த நிதியிலிருந்தோ அல்லது வளர்ச்சி ஆணையர் (கைத்திறத் தொழில்கள்) அவர்களின் நிதி ஆதாரத்துடனோ நடத்தப்படுகின்றன. 1973-1974 ஆம் ஆண்டில் ரூ.50.00 இலட்சம் என இருந்த விற்பனை, 2000-2001 ஆம் ஆண்டில் ரூ.1370.65 இலட்சத்தை எட்டியுள்ளது.

**3.02** உலகளாவிய பொருளாதார மந்த நிலை காரணமாகவும் குறிப்பாக அமெரிக்காவில் 2001 ஆம் ஆண்டு செப்டம்பர் 11 ஆம் தேதியன்று நடந்த நிகழ்ச்சிக்குப் பிறகு, சுற்றுலாப் பயணிகளின் வருகை எண்ணிக்கை பெருமளவில் குறைந்ததன் காரணமாக இந்நிறுவனத்தின் விற்பனை மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டது.

**3.03** இந்நிறுவனம் பல கோயில்களிலிருந்து, குறிப்பாக ஆந்திரப் பிரதேசத்திலிருந்து கோயில் திட்டங்களுக்கு விலைகள் குறிப்பிட்டு கணிசமான மதிப்பில் பணியாணைகள் பெற்றிருந்தாலும், பல ஆணைகளை இந்நிறுவனத்திற்கு வழங்குவதை ஒத்திவைக்கலாம் என்று எடுக்கப்பட்ட முடிவுகள் இந்நிறுவனத்திற்கு மேலும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளன. மேற்குறிப்பிட்டுள்ள காரணங்களினால், 2001-2002 ஆம் ஆண்டின் விற்பனை, சென்ற ஆண்டு விற்பனையை விட ஏறக்குறைய ரூ.2.00 கோடி அளவிற்குக் குறைந்துள்ளது. 2001-2002 ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தின் மொத்த விற்பனை ரூ.11.73 கோடியாகும்.

**3.04** கடந்த 4 ஆண்டுகளில் இந்நிறுவனத்தின் விற்பனை பின் வருமாறு:

| ஆண்டு | விற்பனை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|
| 1998-1999 | 1139.41 |
| 1999-2000 | 1280.95 |
| 2000-2001 | 1370.65 |
| 2001-2002 | 1173.00 |
| 2002-2003 | 1550.00 (எதிர்பார்க்கப்படுகிறது) |



2002 ஏப்ரல் 12]

**3.05 15 அம்சத் திட்டம்**

**(அ) நேரடி கொள்முதல் மற்றும் விற்றபின் பணம் கொடுக்கும் முறையில் கொள்முதல்:**

இந்நிறுவனம் கைத்திறப் பொருட்களை, நேரடிக் கொள்முதல் மற்றும் விற்றபின் பணம் கொடுக்கும் முறையில் கொள்முதல் செய்வதில் ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் மற்றும் மகளிர் கைவினைஞர்களுக்கு முன்னுரிமை வழங்கும்.

**(ஆ) விற்பனைக்கான வினைமுறைத் திறம்:**

சந்தை வாய்ப்புகள், வளர்ச்சி மற்றும் கிடைக்கக்கூடிய நவீன தொழில்நுட்பவியல் ஆகியவற்றை கைவினைஞர்களுக்கு கணித்துக் கூறுவதற்கு இந்நிறுவனம் கருத்தரங்குகளுக்கு ஏற்பாடு செய்யும்.

**3.06** ஏற்றுமதி

2001-2002 ஆம் ஆண்டில் மறைமுக ஏற்றுமதி ஊக்குவிப்பதாகவிருந்ததால், இந்நிறுவனம் ரூ.75.00 இலட்சத்திற்கு ஏற்றுமதியை அடைந்தது. 2000-2001 ஆம் நிதியாண்டில் இந்நிறுவனத்தின் ஏற்றுமதி ரூ.55.12 இலட்சங்களாகும். கடந்த 4 ஆண்டுகளில் இந்நிறுவனத்தின் ஏற்றுமதி விற்பனை பின்வருமாறு:

| ஆண்டு | விற்பனை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1998-1999 | 54.16 |
| 1999-2000 | 63.54 |
| 2000-2001 | 55.12 |
| 2001-2002 | 75.00 |
| 2002-2003 | 100.00 (எதிர்பார்க்கப்படுகிறது) |

**3.07** ஏற்றுமதியினை அதிகரிக்கச் செய்ய இந்நிறுவனம் பர்மிங்ஹாம் நகரில் செப்டம்பர் 2001-இல் நடைபெற்ற "பரிசுப் பொருட்கள்"

[2002 ஏப்ரல் 12

கண்காட்சியில் பங்கு பெற்றது. இதன் விளைவாக இந்நிறுவனம் புதுதில்லி விற்பனை நிலையம் மூலம் குறைந்த அளவிற்கான சில ஆணைகளைப் பெற்றுள்ளது. மேலும் இவற்றின்மீது தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு, வரும் ஆண்டுகளில் அதிக ஏற்றுமதி ஆணைகள் பெற வழிவகை செய்யப்படும்.

3.08 ஏற்றுமதியை அதிகரிக்க இந்நிறுவனம் வளர்ச்சி ஆணையர் (கைத்திறத் தொழில்கள்) அவர்கள் உதவியுடன் தமிழ்நாடு கைத்திறப் பொருட்களுக்காக ஒரு கவர்ச்சிகரமான அட்டவணையை வெளியிட்டுள்ளது. இது ஏற்றுமதி விளம்பரத்திற்காகத் திறம்பட உபயோகப்படுத்தப்படும்.

3.09 2002-2003 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் நேரடி ஏற்றுமதியினை அபிவிருத்தி செய்ய மின்னனு வணிக வலைத்தளத்தை மேம்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

3.10 சென்னை விற்பனை நிலையத் திட்டம்

இந்நிறுவனத்தின் சென்னை விற்பனை நிலையம் புதுப்பிக்கப்பட்டு குளிர்சாதன வசதிகள் செய்யப்பட்ட பின்பு, சென்னை நகரத்தில் மிகவும் பெருமிதம் கொள்ளத்தக்க கைத்திறப் பொருட்கள் விற்பனை நிலையங்களுள் ஒன்றாகத் திகழ்கிறது. முழுவதும் குளிர்சாதன வசதி செய்யப்பட்டு வாடிக்கையாளர் நட்புடன் கூடிய இதன் சூழ்நிலை, வாடிக்கையாளர்கள் பொருட்களை வசதியாக வாங்குவதற்கு உதவுவதால் முடிவில் மிகவும் மந்தமான சூழ்நிலையிலும், விற்பனை அதிகரிக்க வழிவகுத்துள்ளது.

3.11 புதிய விற்பனை நிலையங்கள் தொடங்குதல்/சொத்துக்களைச் சேர்த்தல்

இந்நிறுவனம், ஈரோடு மற்றும் சுவாமிமலையில் விற்பனை நிலையங்களைக் கட்டுவதற்குத் திட்டமிட்டுள்ளது. ஈரோட்டில் கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது.

(ஆ) உற்பத்தி

3.12. நிறுவனத்தின் விற்பனை நிலையங்களுக்குத் தேவைப்படும் கைவினைப் பொருட்களான பஞ்சலோக சிலைகள், பித்தளை



2002 ஏப்ரல் 12]

கலைப் பொருட்கள், கல் மற்றும் மர சிற்பங்கள், தஞ்சாவூர் கலைத்தட்டுகள் ஆகியன இந்நிறுவனத்தின் 8 உற்பத்தி நிலையங்களில் தயாரிக்கப்படுகின்றன.

கடந்த 4 ஆண்டுகளில் இந்த உற்பத்தி நிலையங்களில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் மதிப்பு பின்வருமாறு:

| ஆண்டு | உற்பத்தி (ரூ. இலட்சத்தில்) |
|---|---|
| 1998-1999 | 224.24 |
| 1999-2000 | 235.50 |
| 2000-2001 | 263.21 |
| 2001-2002 | 200.00 |
| 2002-2003 | 300.00 (எதிர்பார்க்கப்படுகிறது) |

4.00 பயிற்சி

பயிற்சியாளர்கள் புதிய உத்திகளை அறிந்துகொள்வதற்கு, பயிற்சி இன்றியமையாததாகும். தற்போது சுவாமிமலையில் உலோக சிற்பம் உற்பத்தி செய்வதில் 3 ஆண்டுப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இந்தப் பயிற்சிக்காக வழங்கப்படும் பயிற்சித் தொகையின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| வருடம் | தொகை (ரூ. மாதமொன்றுக்கு) |
|---|---|
| முதல் வருடம் | 500.00 |
| இரண்டாம் வருடம் | 750.00 |
| மூன்றாம் வருடம் | 1000.00 |

இந்தப் பயிற்சித் தொகையின் ஒரு பகுதியை தமிழக அரசிடமிருந்து பெற்ற மானியத்தின் மூலமாகவும் மீதமுள்ளவற்றை நிறுவனத்தின் சொந்த நிதியிலிருந்தும் வழங்கப்பட்டு வருகிறது.

[2002 ஏப்ரல் 12

**4.01 15 அம்சத் திட்டம்**

இந்நிறுவனம் சிறிய கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கு முயற்சி செய்யும். இது கைவினைஞர்களின் செயல் திறன் நிலையினை உயர்த்துவதற்கு பல்வேறு கைத்திறத் தொழில்களில் கருத்தரங்குகள் மற்றும் பயிற்சி வகுப்புகளுக்கு ஏற்பாடு செய்யும். இதனால் கைவினைஞர்களின் செயல் திறனை மேம்படுத்துவதற்கு ஒரு வாய்ப்பாக அமையும். ஆதிதிராவிட/பழங்குடியினக் கைவினைஞர்கள் மற்றும் மகளிர் கைவினைஞர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**5.00 சிறப்புத் திட்டங்கள்**

ஒட்டுமொத்த விற்பனை நிறைவேற்றத்தில் ஏற்பட்டுள்ள குறைவினை ஈடு செய்யும் பொருட்டு, இந்நிறுவனம் பெற்றுள்ள தனது அனுபவம், சிறப்பறிவுத்திறம் மற்றும் கட்டமைப்பு வசதிகளின் மூலம் பரந்த வாய்ப்புகளுள்ள கோயில் சிறப்புத் திட்டங்களை நிறைவேற்றுவதில் தனது கவனத்தினைச் செலுத்தத் தொடங்கியது. இந்நிறுவனம் தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம் மற்றும் கர்நாடகாவிலுள்ள பல்வேறு கோயில்களின் தேவைக்கேற்ப ஆணைகள் பெறுவதற்கு, அவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டது. இதைத்தவிர, இதன் தொடர் நடவடிக்கையாக, இந்நிறுவனம் அந்தந்த மாநில அறநிலையத் துறை ஆணையர் மற்றும் இதர அலுவலர்களுடன் அவர்களது நிர்வாக ஒப்புதலைப்பெற, அவர்களுடன் தொடர்பு கொண்டுள்ளது. இந்நிறுவனத்தின் முயற்சிகள் பயனளிக்கத் தொடங்கி, தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம் மற்றும் கர்நாடகம் போன்ற மாநிலங்களிலுள்ள கோயில் இரதங்கள், மரம், வெள்ளி, தங்கத்திலான தேர்கள், கொடி மரங்கள், அலங்கார பித்தளை வரிசை கிராதிகள், வெள்ளித்தகட்டு வேலை, பித்தளை உண்டியல்கள் போன்றவற்றிற்கான ஆணைகள் பெறத் தொடங்கியது. திருமலையிலுள்ள திருமலை திருப்பதி தேவஸ்தானத்திற்காக இந்நிறுவனம் நிறைவேற்றியுள்ள சிறப்பு வாய்ந்த 21' உயர தங்கத் தேர், ஆந்திரப் பிரதேசத்திலுள்ள இதர கோயில்களிலிருந்து அவர்களது தேவைக்கு ஆணைகள் பெறுவதற்குப் பேருதவியாக இருந்தது. கடந்த நான்கு ஆண்டுகளில் சிறப்புத் திட்டங்களை நிறைவேற்றியதன் மூலம்



2002 ஏப்ரல் 12]

பெறப்பட்ட விற்பனை மற்றும் சேவைக் கட்டணமாக இந்நிறுவனம் பெற்ற தொகை பின்வருமாறு:

| ஆண்டு | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|
| 1998-1999 | 86.42 |
| 1999-2000 | 176.39 |
| 2000-2001 | 216.30 |
| 2001-2002 | 45.00 |
| 2002-2003 | 150.00 (எதிர்பார்க்கப்படுகிறது) |

தற்போது இந்நிறுவனம் ஆந்திரப் பிரதேசம், குண்டக்கல்லிலுள்ள ஆஞ்சனேய சுவாமி திருக்கோயிலுக்கு, பித்தளை வரிசை கிராதிகள் செய்து தருதல், பெங்களூரில் உள்ள ஸ்ரீ ஆஞ்சனேயசுவாமி திருக்கோயிலுக்கு வெள்ளி இரதம், காளஹஸ்தி மற்றும் திருமலை திருப்பதி தேவஸ்தானத்திற்கு, பித்தளை உண்டியல்கள் போன்ற பணிகளைச் செய்ய வேண்டி ரூ.123.00 இலட்சம் அளவிற்கு பணி ஆணைகளைப் பெற்றுள்ளது. இவற்றில் 2001-2002 ஆம் ஆண்டின் மத்தியில் பெறப்பட்ட பெரும்பாலான பணி ஆணைகள் பல கோயில் நிர்வாகத்தினர் பணிகளை மேற்கொள்ள மரம், செம்பு, வெள்ளி, தங்கம் போன்ற தேவையான பொருட்கள் வழங்க வேண்டியுள்ளதால், பணி இன்னமும் தொடங்கப்படாமல் உள்ளது. மேற்கூறிய காரணங்களினால் இந்நிறுவனம் சில திட்டங்களை நிறைவேற்ற இயலவில்லை. அத்தகைய திட்டங்கள் நடப்பு நிதியாண்டிற்கு அதாவது 2002-2003-க்கு எடுத்துச் செல்லப்படும்.

**5.01** பின்வரும் அட்டவணையில் மேற்கொள்ளப்பட்ட பெருமை வாய்ந்த சிறப்புத் திட்டங்கள், சமீப காலத்தில் முடிக்கப்பட்டவை மற்றும் தற்போது நடைபெற்றுவரும் பணிகள் குறித்த விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

| வரிசை எண் | சிறப்புத் திட்டத்தின் பெயர் | பணி ஆணை கிடைத்த நாள் | பணியின் மொத்த மதிப்பு | சேவைக் கட்டண மாக நிறுவனம் பெற்ற தொகை | சிறப்புத் திட்டப் பணியின் தற்போதைய நிலை |
|---|---|---|---|---|---|
| | தமிழ்நாட்டிற்குள் | | (ரூ. | இலட்சங்களில்) | |
| 1. | ஈரோடு மாவட்டம், சிவன் மலையில் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு 9' 8-7/8" உயரத்தில் தங்கத்தேர் செய்து தருதல். | 8-12-1999 | 50.00 | 11.25 | செப்டம்பர் 2000இல் பணி முடிக்கப்பட்டது. |
| 2. | மயிலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலுக்கு 14' 7'' உயரத்தில் தங்கத்தேர் செய்து தருதல். | 23-12-1992 | 75.00 | 9.70 | பணி 1999 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிக்கப்பட்டது. |
| 3. | திருவாலங்காடு, வடராண்யேஸ்வரர் திருக்கோயிலுக்கு 35' உயரத்தில் மரத்தேரை பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்தல். | 10-11-1999 | 15.65 | 15.65 | டிசம்பர் 2000இல் பணி முடிக்கப்பட்டது. |
| 4. | சென்னை, மாங்காட்டில் உள்ள அருள்மிகு காமாட்சி அம்மன் திருக்கோயிலுக்கு 16' 6-7/8'' உயரத்தில் தங்கத்தேர் செய்து தருதல். | 26-10-1996 | 125.00 | 24.00 | ஏப்ரல் 2001இல் பணி முடிக்கப்பட்டது. |
| 5. | விருத்தாசலம், மணவாளநல்லூர் கொளஞ்சியப்பர் திருக்கோயிலுக்கு 10' 6" உயரத்தில் வெள்ளித்தேர் செய்து தருதல். | 14-12-1999 | 45.00 | 10.16 | மரவேலை முடிவுபெற்று வெள்ளி வேலை துவங்கி நடைபெற்று வருகிறது. |
| 6. | கோவை மாவட்டம், மருதமலையில் உள்ள அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு 16' 6-7/8" உயரத்தில் தங்கத்தேர் செய்து தருதல். | 19-11-1992 | 108.00 | 15.85 | மரவேலை, செம்பு, வெள்ளி வேலைகள் முடிந்து தங்க வேலை பிப்ரவரி 2002இல் தொடங்கப் பட்டுள்ளது. |
| 7. | ஈரோடு மாவட்டம், சிவன்மலையில் உள்ள அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு ஒரு மரத்தேர் செய்து தருதல். | 17-5-2000 | 17.76 | 17.76 | வேலை முன்னேற்றமாக உள்ளது . செப்டம்பர் 2002இல் முடிவு அடையலாம். |
| 8. | திருவண்ணாமலை, அருள்மிகு அருணாசலேஸ்வரர் கோவில் கொடி மரத்திற்கு தங்க ரேக் ஒட்டுதல். | 2-11-2001 | 45.00 | 4.70 | பணி ஏப்ரல் 2002இல் முடிவடையலாம். |
| 9. | பன்னாரியில் உள்ள அருள்மிகு பன்னாரி அம்மன் திருக்கோயிலுக்கு 9' 8-7/8" உயர தங்கத்தேர் செய்து தருதல். | 13-8-2001 | 48.13 | 9.76 | 2002 மார்ச் இரண்டாம் வாரத்தில் வேலை தொடங்கப் பட்டது. |

[2002 ஏப்ரல் 12

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10 | தாரமங்கலத்தில் உள்ள அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயிலுக்கு 18' உயரத்தில் மரத்தேர் செய்து தருதல். | 4-11-2001 | 20.48 | 20.48 | பிப்ரவரி 2002 மூன்றாம் வாரத்தில் வேலை தொடங்கப் பட்டது. |
| 11. | திருவல்லிக்கேணி, அருள்மிகு பார்த்தசாரதி கோவிலுக்கு ஒரு கருட வாகனம் செய்து வழங்குதல். | 1-10-2001 | 8.28 | 1.80 | டிசம்பர் 2001இல் மரவேலை முடிவடைந்து தங்க ரேக் ஒட்டும் பணி துவங்கப்பட்டு நடைபெற்று வருகின்றது. |

ஆந்திரப் பிரதேசத்தில்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | காளஹஸ்தியில் உள்ள அருள்மிகு காளஹஸ்தீஸ்வர சுவாமி திருக்கோயிலுக்கு அலங்கார பித்தளை வரிசை கிராதிகள் செய்து தருதல். | 19-2-1999<br>9-5-2000 | 33.00<br>37.00 | 33.00<br>37.00 | செப்டம்பர் 1999-இல் பணி முடிக்கப்பட்டது.<br>ஜனவரி 2001-இல் பணி முடிக்கப்பட்டது. |
| 2. | யாதகிரிகுட்டாவில் உள்ள, அருள்மிகு இலட்சுமி நரசிம்ம சுவாமி திருக் கோயிலுக்கு அலங்கார பித்தளை வரிசை கிராதிகள் செய்து தருதல். | 26-10-1999 | 25.00 | 25.00 | மார்ச் 2000இல் பணி முடிக்கப்பட்டது. |
| 3. | திருமலை-திருப்பதி தேவஸ்தானத்திற்கு பித்தளை ஊஞ்சல், சங்கிலிகள், உண்டியல்கள் செய்து தருதல். | 11-4-2000 | 4.00 | 4.00 | ஆகஸ்டு 2000இல் பணி முடிக்கப்பட்டது |



2002 ஏப்ரல் 12]

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4. | கரீம் நகர் மாவட்டத்தில், வேமுலவாடா விலுள்ள இராஜ இராஜேஸ்வரி திருக்கோயிலுக்கு வேலைப்பாடுடைய பித்தளை வரிசை கிராதிகள் செய்து தருதல். | 14-6-2000 | 27.00 | 27.00 | டிசம்பர் 2000இல் பணி முடிக்கப்பட்டது. |
| 5. | ஸ்ரீசைலத்தில் உள்ள பிரம்மாரம்ப மல்லிகார்சுன ஸ்வாமி திருக் கோயிலுக்கு அலங்கார பித்தளை வரிசை கிராதிகள் செய்து தருதல். | 23-1-2001 | 9.83 | 9.83 | செப்டம்பர் 2001 இல் பணி முடிக்கப்பட்டது. |
| 6. | ஸ்ரீகாளஹஸ்தியில் உள்ள ஸ்ரீகாளஹஸ்தீஸ்வர சுவாமி சன்னதி முகப்பில் உள்ள சுவற்றிற்கு வெள்ளித் தகடு வேய்தல். | 24-12-1999 | 56.00 | 11.61 | மார்ச் 2002இல் பணி முடிவு அடைந்தது. |

கர்நாடகத்தில்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | பெங்களூரில் உள்ள இஸ்கான் திருக்கோயிலில் உள்ள தூண்களுக்கு வெள்ளித்தகடு வேய்தல். | 9-4-2001 | 11.45 | 2.65 | ஆகஸ்ட் 2001இல் பணி முடிக்கப்பட்டது. |

[2002 ஏப்ரல் 12

## 6.00 பூம்புகார் விருது

கைவினைஞர்களை ஊக்குவிப்பதற்காக 'பூம்புகார்' விருது வழங்கப்படுகின்றது. இந்த விருது ரொக்கத் தொகை ரூ.5000, 40 கிராம் எடையுள்ள ஒரு வெள்ளிப் பதக்கம் மற்றும் ஒரு சான்றிதழ் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். சிறந்த கைவினைஞர்களை தேர்வு செய்து, தேசிய விருதுக்கு மைய அரசுக்குப் பரிந்துரை செய்யப்படுகிறது.

## 7.00 பங்கு மூலதன அமைப்பு

இந்த நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.3.00 கோடியிலிருந்து ரூ.4.00 கோடிக்கு உயர்த்தப்பட்டது.

**7.01** 31-3-2001 ஆம் நாளில் இந்நிறுவனத்தின் செலுத்தப்பட்ட மூலதன கட்டமைப்பு வருமாறு:

| வ. எண். | விவரம் | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு அரசு | 176.693 |
| 2. | மத்திய அரசு | 116.000 |
| 3. | தொழிற் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கைவினைஞர்கள் | 0.704 |
| | மொத்தம் | 293.397 |

## 8.00 மத்திய அரசு நிதி உதவி

2001-2002 ஆம் ஆண்டில் மத்திய அரசு ரூ.12.60 இலட்சங்களை கீழ்க்கண்ட திட்டங்களுக்கு அனுமதித்துள்ளது:



2002 ஏப்ரல் 12]

| வரிசை எண் | திட்டத்தின் பெயர் | மொத்தத் தொகை | இந்திய அரசின் பங்கு | சத வீதம் | நிறுவனப் பங்கு | சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | ஹைதராபாத்/ மும்பை/ கொல்கத்தா/ பெங்களூர்/ புதுடில்லி/ சண்டிகர் ஆகிய 6 இடங்களில் கண்காட்சிகள் | 9.60 | 7.20 | 75 | 2.40 | 25 |
| 2. | புதுதில்லியில் சிறிய கைத் திறச் சந்தை நடத்துதல் | 7.20 | 5.40 | 75 | 1.80 | 25 |

## 9.00 2002-2003 ஆம் ஆண்டிற்கான சிறப்புத் திட்டங்கள்

### (அ) கைத்திறத் தொழில்களுக்கான கருத்தரங்குகள் ஏற்பாடு செய்தல்

கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் தனது வளர்ச்சி நடவடிக்கைகளின் ஒரு பகுதியாகவும் மற்றும் கைவினைஞர்களின் பாரம்பரியத் தொழிற்திறனை மேம்படுத்துவதற்கான குறிக்கோளினை நிறைவேற்றவும் தமிழகத்தின் முக்கியக் கைத்திறத் தொழில்கள் செறிந்துள்ள பகுதிகளில் 5 கருத்தரங்குகளுக்கு ஏற்பாடு செய்ய உத்தேசித்துள்ளது. இம்மாதிரியான கருத்தரங்குகள் கைவினைஞர்கள் கைத்திறப் பொருட்கள் துறையில் கிடைக்கக்கூடிய நவீன வடிவமைப்புகள் மற்றும் தொழில் நுட்பவியல்களை அறிந்து கொள்ள வழிவகை செய்யும்.

### (ஆ) கைத்திறத் தொழில்களில் மேம்பட்ட பயிற்சித் திட்டங்களை நடத்துதல்

இந்நிறுவனம் இதைப்போன்றே கைவினைஞர்கள் நவீன தொழில்நுட்பவியலைப் பயன்படுத்தி உற்பத்திக்கான அதிநவீனத் தொழிற்திறனைக் [illegible]

[2002 ஏப்ரல் 12

வகையில் முக்கியக் கலைகளான உலோக சிற்பம், கற்சிற்பம், மர சிற்பம், பித்தளை கலைப்பொருட்கள் மற்றும் தஞ்சாவூர் கலைத்தட்டு ஆகியவற்றில் இரு வார மேம்பட்ட பயிற்சித் திட்டங்களை நடத்த உத்தேசித்துள்ளது. ரூ.11.50 இலட்சங்கள் செலவில் மேற்கூறிய இரண்டு திட்டங்களும் செயல்படுத்தப்படும். இந்தத் திட்டங்கள் ஒவ்வொன்றிலும் சுமார் 150 கைவினைஞர்கள் பயன்பெறுவர்.

(இ) பெண்களால் நடத்தப்படும் கைவினைப் பொருட்கள் சந்தைக்கு ஏற்பாடு செய்தல்

மேலும் இந்நிறுவனம் பெண் கைவினைஞர்கள் பங்கேற்றுப் பயன்பெறுவதற்கென்றே ஒரு கைவினைப் பொருட்கள் சந்தைக்கு ஏற்பாடு செய்யத் திட்டமிட்டுள்ளது. இதில் பங்கேற்பதற்காக இந்தியா முழுவதிலுமிருந்து சுமார் 100 முதல் 150 பெண் கைவினைஞர்கள் அழைக்கப்படுவர். இந்தச் சிறப்பு நிகழ்ச்சிக்கு புதுடில்லி கைத்திறப் பொருட்கள் வளர்ச்சி ஆணையரிடமிருந்து நிதி உதவி பெற முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.



2002 ஏப்ரல் 12]

## இணைப்பு III

*(320 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

### கோரிக்கை எண் 42—சிறு தொழில் துறை கொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003

பொருளாதாரத்தின் முக்கிய இடத்திலுள்ள சிறு தொழில் நிறுவனங்கள், தொழில் அலகுகளில் 95 விழுக்காடும், பொருட்கள் உற்பத்தியில் 40 விழுக்காடும், ஏற்றுமதியில் 35 விழுக்காடும் மற்றும் ஏறத்தாழ 30 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிப்பதிலும், பங்கு வகிக்கின்றன. இத்தொழில் பிரிவு சிறு தொழில் நிறுவனங்கள், குறுந்தொழில் மற்றும் துணை அலகுகளை உள்ளடக்கியுள்ளது. ஒரு பக்கம் கிராமிய கைவினைஞர்களும் மறு பக்கம் ஒன்றுக்கொன்று தொடர்புடைய நவீன உயர் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம், மற்றும் உயிரியியல் தொழில்நுட்ப அலகுகளும் அமைந்துள்ளன. கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்குதல் மற்றும் வருவாய்ப் பெருக்கம் ஆகியவற்றில் சிறு தொழில் பிரிவு முக்கிய பங்கு வகிப்பதனால், இத்தொழில் பிரிவு இம்மாநிலத்தின் சமூகப் பொருளாதார நலத்திற்கு இன்றியமையாததாக உள்ளது.

நாடு விடுதலை பெற்றவுடன், அரசு பல்வேறு வளர்ச்சிப் பணிகளில் ஈடுபட்டுள்ளது. இதுவரை அதிக அளவிலான பொருட்களுக்கு இறக்குமதியை நம்பியிருந்த இந்நாட்டில், தொழில்மயமாக்குதலுக்கு பெரிதும் முக்கியத்துவம் வழங்கப்பட்டது. பல்வேறு தொழிற் கொள்கைகள் வாயிலாகப் பயனுள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மாநிலங்களின் வளர்ச்சிக்கு சிறு தொழில்கள் ஒரு முக்கியக் காரணமாக இருந்தது. சிறு தொழில்கள் வளர்ச்சியை வலியுறுத்தி தொழில் முன்னேற்ற நிலைப்பாட்டினை ஏற்றுக்கொண்ட சில மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும்.

2. சிறு மற்றும் குறுந்தொழில்களுக்கு ஆதரவளிக்க மாநில அரசு எடுத்த பல்வேறு கொள்கை முடிவுகள் காரணமாக இம்மாநிலத்தில் பிரமிக்கத்தக்க அளவில் தொழில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இருப்பினும், கடந்த ஐந்தாண்டுகளில் சில பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் சிறு தொழில்களுக்கு, காலங்காலமாக இருந்து வந்த விலை மற்றும் கொள்முதலில் கொடுக்கப்பட்ட முன்னுரிமை இரத்து செய்யப்பட்டதால் சிறு தொழில்களின் சிறப்பான வளர்ச்சி பெரிய

[2002 ஏப்ரல் 12

அளவில் பாதிக்கப்பட்டது. இந்த அரசு பொறுப்பேற்றவுடன், அரசு ஆணை நிலை எண்.75, நிதித் துறை, நாள் 19-2-1997-ல் வெளியிடப்பட்ட ஆணையை இரத்து செய்தது. விலை மற்றும் கொள்முதலில் தமிழ்நாட்டில் உள்ள சிறு தொழில்களுக்கு முன்னுரிமையை மீண்டும் வழங்கும் வகையில் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம், 1998 திருத்தப்பட்டது. சிறு தொழில்களுக்கு வருடாந்திர மின் பயனீட்டளவு வைப்புத் தொகையை உயர்த்துவதற்கு வெளியிடப்பட்ட ஆணையையும் இவ்வரசு ரத்து செய்துள்ளது. இவ்விரண்டு நடவடிக்கைகளும், சிறு தொழில் அலகுகளின் மனப்பாங்கில் குறிப்பிடத்தக்க விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

3. வறுமையை ஒழிப்பதற்கு, வேலைவாய்ப்பினை உருவாக்குதல் இன்றியமையாத தேவையாகும். சிறு தொழில் நிறுவனங்கள் மட்டுமே வேலைவாய்ப்பை ஊரகப் பகுதிகளில் உருவாக்கும் என்ற கொள்கையை இவ்வரசு முழுமையாக உணர்ந்துள்ளது. சிறு தொழில்களில் முதலீடு செய்யப்படும் ஒவ்வொரு ஒரு கோடி ரூபாயும் 523 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு அளிக்கும் என்றும், பெரிய தொழில்களில் ஒரு கோடி முதலீட்டில் 100 நபர்களுக்கு மட்டுமே மறைமுக வேலை வாய்ப்பு அளிக்க இயலும் என்று சமீபத்திய ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. இதனை முழுமையாக மனதில் கொண்டு சிறு தொழில்கள் வளர்ச்சிக்கு ஊக்கம் அளிப்பதில் இவ்வரசு நம்பிக்கை வைத்துள்ளது.

**4. மகளிர்க்குத் தொழில் முனைவோர் பயிற்சி:**

ஐந்து ஆண்டுகளில் ஐந்து இலட்சம் மகளிர்க்கு தொழில் முனைவோருக்கான திறமை பயிற்சி அளிக்கும் திட்டத்தின்கீழ், 2001-2002 ஆம் ஆண்டில் தொழில் மற்றும் வணிகத் துறைக்கு 25000 மகளிர் எனக் குறியீடு அளிக்கப்பட்டுள்ளது. இதில், 5000 மகளிர்க்கு பிரதமர் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் பயிற்சி அளிக்கப்பட்டது. மாவட்ட தொழில் மையங்கள் மூலமாக 20,000 மகளிருக்குப் பயிற்சி அளிக்க ரூ.80.00 இலட்சங்கள் இத்துறை செலவு செய்துள்ளது. இத்திட்டம் 2002-2003-லும் தொடர்ந்து செயற்படுத்தப்படும்.

**5. தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்:**

5.1. தேயிலை, கயிறு, பூட்டு, ஜவ்வரிசி, பாலிதீன், தீப்பெட்டி, செங்கல், செயற்கை வைரம் ஆகிய தொழில்கள் குறித்த தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் தொழில் மற்றும் வணிகத் துறையின்கீழ் உள்ளன. இம்மாநிலத்தில் 61,800 உறுப்பினர்கள் கொண்ட 324 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன.



2002 ஏப்ரல் 12]

5.2. தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் மூன்று அடுக்குகளாக இயங்கி வருகின்றன. ஆரம்பக் கட்டத்தில், பணியாளர்கள் அல்லது உற்பத்தியாளர்கள் சங்கங்கள் அமைக்கப்படுகின்றன. தொடக்க நிலை சங்கங்கள் பொருட்கள் உற்பத்தி செய்யும்போது, மத்திய அடுக்கு சங்கங்கள் அவற்றுக்குச் சேவையளிக்கின்றன. இவ்விரண்டு அடுக்குகளில் உள்ள சங்கங்களுக்கு விற்பனை, கொள்முதல் மற்ற பிற பணிகள் செய்வதற்கு உச்ச நிலையில் கூட்டிணைப்பு மற்றும் தலைமைச் சங்கங்கள் அமைக்கப்படுகின்றன. கயிறு கூட்டுறவுச் சங்கங்கள் மூன்று நிலைகளில் இயங்குகின்றன. ஆனால் தேயிலை கூட்டுறவுச் சங்கங்கள் இரண்டு நிலைகளில் இயங்குகின்றன. மத்திய மற்றும் உச்ச நிலை சேவைகளை வெற்றிகரமாக இணைத்து 'இன்கோசர்வ்' செயல்படுகிறது. தமிழ்நாட்டில் தொழில் துறை நடவடிக்கைகள் கூட்டுறவு மயமாக்கப்படுவது வெற்றி பெற்றுள்ளது என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இது, குறிப்பாக, ஊரகப் பகுதியில் பல தொழில்களுக்கு உதவி உள்ளது. இவ்வரசு, குறிப்பாக ஊரகப் பகுதியில் உள்ள தொழில் நடவடிக்கைகளை கூட்டுறவுமயமாக்கலாம் என நம்புகிறது. புதிய சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு புதிய தொழிற்சங்க நடவடிக்கைகள் உள்ளடக்கப்படுகின்றன. இது தொடர் நடவடிக்கை ஆகும். அடுத்த நான்காண்டுகளில் மேலும் அதிக அளவில் செய்ய வேண்டியுள்ளது. தற்போதுள்ள சங்கங்கள் மற்றும் அவற்றின் வர்த்தக நடவடிக்கைகளைப் பலப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**6. சிறு தொழில்களுக்கான ஊக்கத் தொகைகள்**

6.1. குறுந்தொழில்கள் மற்றும் ஊரகத் தொழில்களை மேம்படுத்துவதற்காக இம்மாநிலத்தில் 287 வட்டாரங்கள் தொழிலில் பின்தங்கிய, மிகவும் பின்தங்கிய பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. அப்பகுதிகளில் அமைந்துள்ள சிறு தொழிற்சாலைகள் மாநில மூலதன மானியம், குறைந்தழுத்த மின் மானியச் சலுகை மற்றும் ஏனைய மானியங்கள் பெறத் தகுதியுடையவையாகும். இந்த மானியங்கள் மற்றும் சலுகைகள் அரசு மற்றும் அரசு நிறுவனங்கள் ஏற்படுத்தும் தொழிற்பேட்டைகள் மற்றும் தொழில் வளாகங்களில் அமைந்துள்ள தொழிற்சாலைகளுக்கும் கிடைக்கின்றன.

[2002 ஏப்ரல் 12

*6.2.* பல்வேறு மானியங்கள் மற்றும் சலுகைகள் பின்வருமாறு:

(அ) பின்தங்கிய வட்டாரங்களில் அமைந்துள்ள சிறு தொழில் பிரிவுகள், அதிகபட்சமாக ரூ.15.00 இலட்சம் என்பதற்குட்பட்டு, 15 சதவீத மாநில மூலதன முதலீட்டு மானியம் பெறத் தகுதியுடையனவாகும்.

(ஆ) மிகவும் பின்தங்கிய வட்டாரங்களில் அமைந்துள்ள சிறு தொழில் பிரிவுகள் அதிகபட்சமாக ரூ.20.00 இலட்சம் என்பதற்குட்பட்டு, 20 சதவீத மூலதன முதலீட்டு மானியம் பெறத் தகுதியுடையனவாகும்.

(இ) முக்கியத் தொழில்களில் ஈடுபட்டுள்ள சிறு தொழில் பிரிவுகளுக்கு அதாவது மின்னணுத் தொழில்கள், தோல் தொழில்கள் ஆகியவற்றிற்கு நிலையான சொத்துக்கள் மதிப்பில் அதிகபட்சமாக ரூ.20.00 இலட்சம் என்பதற்குட்பட்டு, 20 சதவீத சிறப்பு முதலீட்டு மானியம் தமிழ்நாட்டிலுள்ள அனைத்துப் பகுதிகளுக்கும் கிடைக்கிறது.

(ஈ) தமிழ்நாட்டில் எந்தப் பகுதியிலும் பின்வரும் தயாரிப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள சிறு தொழில் பிரிவுகளுக்கு அதிகபட்சமாக ரூ.15.00 இலட்சம் என்பதற்குட்பட்டு, நிலையான சொத்துக்கள் மீது 20 சதவீத சிறப்பு மூலதன முதலீட்டு மானியம் கிடைக்கிறது.

(1) மோட்டார் வாகன துணைப் பாகங்கள்
(2) மருந்து மற்றும் மருந்தகப் பொருட்கள்
(3) உணவுப் பொருள் பதப்படுத்தும் தொழில்கள்
(4) சூரிய எரிசக்தி சாதனங்கள்
(5) ஏற்றுமதிக்கான தங்கம் மற்றும் வைர நகைகள் மட்டும்
(6) சணல் பதப்படுத்தும் தொழில்கள் (தெரிவு செய்யப்பட்ட 6 வட்டங்களில் மட்டும்)
(7) மாசுக் கட்டுப்பாட்டுச் சாதனங்கள்
(8) விளையாட்டுப் பொருள்கள் மற்றும் உதிரிப் பாகங்கள்
(9) அலுமினியம் போன்ற செலவுச் சிக்கனமான கட்டடப் பொருட்கள்



2002 ஏப்ரல் 12]

(உ) பின்தங்கிய/மிகவும் பின்தங்கிய வட்டாரங்களில் அமைக்கப்படும் புதிய சிறு தொழில் நிறுவனங்களில் 30 விழுக்காட்டிற்கும் மேலாக பெண் தொழிலாளர்களைக் கொண்டுள்ள சிறு தொழிற்சாலைகளுக்கு மூலதன முதலீட்டு மானியமாக அதிகபட்சமாக ரூ.5.00 இலட்சத்திற்குட்பட்டு 5 சதவீதம் அளிக்கப்படுகிறது.

(ஊ) கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைந்துள்ள சிறு தொழில் நிறுவனங்கள், சுத்திகரிப்பு நிலையத்தின் இயந்திர முதலீட்டில் அதிகபட்சமாக ரூ.2.00 இலட்சத்திற்குட்பட்டு 10 சதவீத மானியத்திற்கு தகுதியுடையவையாகின்றன.

(எ) சிறு தொழில் பிரிவுகள், மின்னாக்கி மானியமாக தங்களிடமுள்ள மின்னாக்கியின் விலையில் அதிகபட்சமாக ரூ.5.00 லட்சத்திற்குட்பட்டு, 15 சதவீதம் பெறத் தகுதியுடையனவாகும்.

(ஏ) சிறு தொழில் பிரிவுகள், அவற்றின் அமைவிடங்களுக்கேற்ப குறைந்தழுத்த மின் இணைப்புகளுக்கு உள்ளபடியாக பயன்படுத்திய மின்கட்டணத்தில் முதல் மூன்றாண்டுகளுக்கு முறையே 40 சதவீதம், 30 சதவீதம், 20 சதவீதம் என்ற அளவில் மின் கட்டணச் சலுகை அளிக்கப்படுகிறது.

**7. தேயிலை நெருக்கடி**

7.1 நீலகிரி மாவட்டத்தில் உள்ள சிறு தேயிலை விவசாயிகள், பச்சைத் தேயிலையின் விலை வீழ்ச்சி காரணமாக சந்தித்து வரும் நெருக்கடியைச் சமாளிக்கும் பொருட்டு அரசு, விற்பனை வரிக் குறைப்பு, மத்திய விற்பனை வரிக் குறைப்பு, பச்சைத் தேயிலைக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.2/- மானியம் வழங்குதல் போன்ற பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

7.2. இப்பிரச்சினையைத் திறம்படச் சமாளிக்கும் பொருட்டு, "ஊட்டி தேயிலையை" பொது விநியோக முறை வாயிலாக விற்பனை செய்யும் திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. முதலில் மாதம் ஒன்றுக்கு 200 மெட்ரிக் டன்னாக இருந்த இத்தேயிலையின் விற்பனை தற்பொழுது மாதம் ஒன்றுக்கு 250 மெட்ரிக் டன்னாக அதிகரித்துள்ளது. இது தேயிலைத் தூள் மற்றும் பச்சைத் தேயிலையின் விலையை நிலைப்படுத்தி, சிறு தேயிலை விவசாயிகளுக்கு உதவியுள்ளது. மத்திய தரப் பிரிவினர் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ற வகையில் "ஊட்டி தேயிலை" யின் தரம் உள்ளதாலும் மற்ற முன்னோடி நிறுவனங்கள் தயாரிக்கும்

[2002 ஏப்ரல் 12

தேயிலையைவிட விலை குறைவாக உள்ளதாலும், ஊட்டி தேயிலையை பொது மக்களுக்கு மற்ற வர்த்தக வழிகளில் நமது மாநிலத்தில் விற்பதற்கும், தமிழ்நாட்டிற்கு வெளியே "ஊட்டி தேயிலையை" விற்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இத்தேயிலை வட இந்தியாவிலும் விரைவில் விற்பனை செய்யப்படவுள்ளது.

*7.3.* ஏல விற்பனை முறையிலுள்ள குறைபாடுகளைத் திறம்படக் களையவும், தேவைப்பட்டால் மாநில அரசே தனது ஏல மையத்தை ஆரம்பிக்கவும் கருதுகிறது. பாதுகாப்புத் துறைக்கு தேயிலையை வழங்க மத்திய அரசை வலியுறுத்தி வருகிறது. இது ஒப்புக்கொள்ளப்பட்டால், பாதுகாப்புத் துறைக்கு தேயிலையை விற்பனை செய்வது, நீலகிரி சிறு தேயிலை விவசாயிகளுக்குப் பயனளிக்கக்கூடிய வகையில் தேயிலையின் விலையை நிலைபெறச் செய்யக்கூடிய நடவடிக்கையாக அமையும்.

***8. மற்ற நடவடிக்கைகள்:***

***8.1. ஒற்றைச் சாளரக் குழு:***

மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகக் கொண்ட ஒற்றைச் சாளரக் குழு அமைக்கப்பட்டுள்ளது. தேவையான அனுமதிகளை ஒட்டுமொத்தமாக ஒரே இடத்தில் பெற தொழில் முனைவோர் இக்குழுவிற்கு விண்ணப்பிக்கலாம்.

***8.2. பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டம்:***

படித்த வேலையில்லாத இளைஞர்கள் சுயதொழில் தொடங்கிட, மத்திய அரசின் பிரதமர் சுய வேலைவாய்ப்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் அரசு அங்கீகாரம்/ஒப்புதல் பெற்ற நிலையங்களில் எந்தத் தொழிலாக இருப்பினும் அதில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த ஆண்டு, இத்திட்டத்தின் மூலம் 20,000 நபர்களுக்கு உதவி அளிக்கப்பட்டு வருகிறது.

***8.3. பயிற்சி நிறுவனங்கள்:***

கருவி பொறியியல், குளிர்சாதனப் பெட்டி, கண்ணாடி, பீங்கான் போன்ற சிறப்புத் துறைகளில் பயிற்சி அளிப்பதற்கு கிண்டி, திண்டுக்கல், விருத்தாசலம் ஆகிய இடங்களில் தொழில் மற்றும் வணிகத் துறை பயிற்சி நிலையங்கள் நடத்தி வருகிறது.



2002 ஏப்ரல் 12]

***8.4. சிறு தொழில் வாரியம் :***

தமிழ்நாட்டில் சிறு தொழில் வாரியம் ஒன்று, மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் அவர்களின் தலைமையின்கீழ் செயல்பட்டு வருகிறது. இவ்வாரியத்தில் சிறு தொழில் சங்கங்கள் மற்றும் பல்வேறு துறையைச் சார்ந்த அலுவலர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இவ்வாரியம் 3 மாதங்களுக்கு ஒரு முறை கூடி சிறு தொழில்கள் சம்பந்தமான கொள்கைகள், அவர்களின் குறைகள் ஆகியவை குறித்து கலந்துரையாடி அரசின் நிவாரணத்திற்குப் பரிந்துரை செய்கிறது.

இந்த வாரியம் சிறு மற்றும் குறுந்தொழில்களுக்கான குறைகளைப் களைவதற்கு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூட வேண்டும். ஆனால் முந்தைய ஆண்டுகளில், அதாவது மே 1996 முதல் மே 2001 வரை இந்த வாரியம் மொத்தத்தில் நான்கு முறைகள்தான் கூடியது. அதாவது, 8-12-1997, 22-7-1998, 16-12-1999 மற்றும் 20-10-2000 ஆகிய நாட்களில் மட்டுமே கூடியது. முக்கியமான இந்த அமைப்பில் வல்லுநர்கள், சிறு தொழில் சங்கங்கள், துறை அலுவலர்கள் ஆகியோர் சிறு மற்றும் குறுந்தொழில் முன்னேற்றம் குறித்து தங்கள் கருத்துகளைத் தெரிவித்து பல்வேறு கொள்கைகளை உருவாக்கலாம் என்று இவ்வரசு நம்புகிறது. இந்த அரசு பதவியேற்றபிறகு சிறு தொழில் வாரியத்தின் கூட்டம் 2001 டிசம்பர் மாதம் கூட்டப்பட்டது. சிறு தொழில் வாரியக் கூட்டத்தைச் சார்ந்த நிறுவனங்களை, மேலும் வலுப்படுத்துவதற்காக தலைமைச் செயலாளர் அவர்கள் ஒரு கூட்டத்தைக் கூட்டினார்கள். மேலும், இது குறித்து 7-1-2002 நாளிட்ட அரசாணை (நிலை) எண் 1-ல் முதன்முறையாக தலைமைச் செயலாளர் அவர்களை அமைப்பாளராகக் கொண்டு சிறு தொழில்களுக்கான "மாநில சிறு தொழில் குழு" ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு மூன்று மாதத்திற்கு ஒரு முறை கூடும். சிறு தொழில் சங்கங்களின் உறுப்பினர்கள் நேருக்கு நேர் கலந்துரையாடுவர். இதனை சிறு மற்றும் குறுந்தொழில் பிரிவுகளின் பிரதிநிதிகள் பெருவாரியாக வரவேற்றுள்ளனர்.

***8.5. பரிசோதனை மையங்கள்:***

சிறு தொழில் நிறுவனங்கள் தாங்கள் உற்பத்தி செய்யும் பொருட்கள், மூலப்பொருட்கள், உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் ஆகியவற்றை சட்டப்பூர்வமான தேவைக்கு தனியார் சோதனை நிறுவனங்கள் மூலம் சோதனை செய்ய மிகவும் அதிகப்படியான கட்டணங்கள் கொடுக்க வேண்டியுள்ளது. இதைத் தவிர்க்கும் பொருட்டு சிறு தொழில்

[2002 ஏப்ரல் 12

நிறுவனங்களுக்கு உதவி செய்வதற்கு குறைந்த கட்டணத்தில் தரமாக சோதனை செய்ய மின் மற்றும் மின்னணு, மின் மருத்துவக் கருவிகள் மற்றும் இரசாயனப் பொருட்கள் தொடர்பான சோதனை மற்றும் சேவை மையங்கள் பலவற்றை இத்துறை நடத்தி வருகிறது.

***8.6. விருதுகள்:***

சிறு தொழில் நிறுவனங்களுக்கு மாநில மற்றும் மாவட்ட அளவிலான விருதுகள். பெண் தொழில் முனைவோருக்கான விருதுகள், தரமிக்க உற்பத்திப் பொருட்கள் மற்றும் ஏற்றுமதி நோக்குடன்கூடிய சிறு தொழில் நிறுவனங்களுக்கான விருதுகளை மாநில அரசு வழங்குகிறது.

***8.7. தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி :***

தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை உறுப்பினராகக் கொண்டு அரசு பங்கு மூலதனத்துடன் தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி 1961ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. மேலும் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் (NABARD) மறு நிதியுதவித் திட்டத்தின்கீழ் கிடைக்கக்கூடிய கடன் வசதிகளை தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பெற்றுத் தருவதற்கு இவ்வங்கி. இந்திய ரிசர்வ் வங்கியால் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

***8.8. காலம் தாழ்த்திய செலுத்துச் சட்டம்:***

**(Delayed Payment Act)**

கோவை, திருச்சி, மதுரை மற்றும் சென்னை ஆகிய நான்கு இடங்களில் மண்டல எளிதாக்கும் மன்றங்கள் (Facilitation Councils) அமைக்கப்பட்டு காலந்தாழ்த்திய செலுத்துச் சட்டத்தின்படி சிறு தொழில் நிறுவனங்களின் தாமதமான செலுத்தல்களுக்குத் தீர்ப்பு அளிக்கின்றன.

***8.9. அமைப்பு ரீதியான தொழிற்பேட்டைகள்:***

மின் மற்றும் மின்னணுத் தொழில்களுக்காக எட்டு அமைப்பு ரீதியான தொழிற்பேட்டைகள் தொழில் வணிக இயக்ககத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ளன.



2002 ஏப்ரல் 12]

**தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம்.**

தொழில் வளர்ச்சியானது தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டங்களிலிருந்து துவங்குகிறது. தொடர்ந்து வந்துள்ள அரசுகள், புதிய தொழில் முனைவோர் தொழிற்கூடங்களை அமைத்து வியாபாரத்தைத் தொடங்க அவர்களுக்குப் பயிற்சி அளித்தல், கண்காணித்தல் மற்றும் நிதியுதவியளித்தல் போன்ற ஒரே நோக்கத்திலேயே கவனம் செலுத்தியுள்ளனர். அதிக எண்ணிக்கையில் தொழில்கள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், திருப்திகரமான புள்ளிவிவரங்கள் "தொழில் வளர்ச்சியைத்" தெரிவிக்கின்றன. ஆனால், ஏற்கெனவே தொடங்கப்பட்டு நடைபெறுகின்ற தொழிற்சாலைகளின் நிலைமை மற்றும் அவற்றின் செயற்பாடு எந்த அரசுத் திட்டங்கள் மூலமும் உன்னிப்பாகக் கண்காணிக்கப்படுவதில்லை. உலகளாவிய வர்த்தகம் மற்றும் உலக வர்த்தக நிறுவனத்தின் கட்டுப்பாடு ஆகியவற்றை எதிர்நோக்கியுள்ள சிறு தொழில்களுக்கு முறையான "தொழில் வளர்ச்சித்" திட்டம் தற்போது தேவைப்படுகிறது. அரசு சாரா நிறுவனங்கள் மூலம் தொழில் முனைவோர்களைக் கண்டறிந்து, பயிற்சியளித்து, அவர்கள் சொந்தமாகத் தொழிற்சாலை ஆரம்பிக்க உதவி செய்யும் நோக்கத்துடன் பல்வேறு தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இந்த அரசு, தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் சென்னையில் நிறுவப்படும் என அறிவித்தது. இந்த அறிவிப்பை நிறைவேற்றி சென்னையில் தொழில் முனைவோர் மேம்பாட்டு வளர்ச்சி நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனம் பொறியியல் கல்லூரி இறுதி வகுப்பு மாணவர்களுக்கும், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தால் தொடங்கப்பட்ட பெண் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பயிற்சி பெறுபவர்களுக்கும் தொழில் முனைவோர் விழிப்புநிலைத் திட்டங்கள் மற்றும் பிரதமர் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் பயிற்சி ஆகியவை நடத்தியுள்ளது. உலகளாவிய வர்த்தகம் மற்றும் உலக வர்த்தக நிறுவனத்தினால் ஏற்பட்டுள்ள போட்டிகளைச் சமாளிக்க தற்சமயம் உள்ள சிறு தொழில்களுக்கும் தொழில்நுட்ப மேம்பாடு குறித்து வழிகாட்டுதல் மற்றும் தொழில் மேம்பாடு ஆகியவற்றிற்கு இந்நிறுவனம் பல்வேறு பயிற்சிகளை அளிக்கும். இவ்வகையில், தென்னிந்தியாவில் இந்நிறுவனம் முன்னோடியாக உள்ளது. சிறு தொழில்களுக்கு தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம், ஆராய்ச்சி மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றிற்கு இம்மையம் தனித்தகுதியுடையதாக அமையும்.

[2002 ஏப்ரல் 12

**தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ).**

சிறு தொழில்கள் வளர்ச்சி அடைவதற்குக் கட்டமைப்பு வசதிகளைப் பெருக்குவது அடிப்படைத் தேவையாக உள்ளது. ஆரம்ப காலத்தில் தொழிற்பேட்டைகளை உருவாக்கவும், சிறு தொழில்கள் வளர்ச்சியடைய கட்டமைப்பு வசதிகளை உருவாக்கவும் மாநில தொழில் மற்றும் வணிக இயக்ககம் பொறுப்பு வகித்தது. காலதாமதத்தை நீக்கவும், வளர்ச்சிக்கு கட்டமைப்பு வசதிகளை உருவாக்க நிறுவனம் ஏற்படுத்தவும், பெரிய அளவிலான திட்டங்களை உருவாக்கவும் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ), 1970ல் நிறுவப்பட்டது. சிட்கோ நிறுவனம் இந்த மாநிலத்தில் இதுவரை 73 தொழிற்பேட்டைகளை நிறுவியுள்ளது. இத்தொழிற்பேட்டைகள் அனைத்தும் சிறு தொழில்களுக்கு வளர்ச்சி மையங்களாக அமைந்தன. இந்தத் தொழிற்பேட்டைகள், சிறு மற்றும் குறுந்தொழில்களின் வளர்ச்சிக்குத் தேவையான அனைத்து கட்டமைப்பு வசதிகளையும் பெற்றிருக்கின்றன.

சிட்கோ நிறுவனம் சிறு தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப்பொருட்களைப் போட்டி விலையில் வழங்கி ஊக்குவிக்கிறது. இந்நிறுவனத்தின் விற்பனை நிலையங்களிலிருந்து கீழ்க்காணும் அடிப்படை மூலப்பொருட்களை விநியோகம் செய்கிறது:—

1. இரும்பு மற்றும் எஃகு
2. மெழுகு
3. பொட்டாசியம் குளோரேட்
4. காகிதம்.

**சிறு தொழில்களுக்கான விவரங்கள் மற்றும் மின்னணு வணிகம்:**

**(Data on SSIs and e-commerce)**

அடுத்தடுத்து வந்த அரசுகள் சிறு தொழில்களின் வளர்ச்சிக்கான பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தியபோதிலும், இம்மாநிலத்திலுள்ள சிறு தொழில்கள் மற்றும் குறுந்தொழில்கள் குறித்த நம்பத்தகுந்த மற்றும் முழுமையான தகவல்கள் ஏதும் இல்லை என்பது துரதிர்ஷ்டவசமானது ஆகும். புதிய பொருளாதார வளர்ச்சி நடவடிக்கைகள், குறிப்பாக தாராளமயமாக்கப்படல், உலகமயமாக்குதல்



2002 ஏப்ரல் 12]

உலக வர்த்தக அமைப்பின் ஆதிக்கம் போன்றவை, சிறு தொழில் நிறுவனங்களின் தொழில் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளை பாதிக்கத் துவங்கியுள்ளது. இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மற்றும் சேவைகள் ஆகியவற்றால் சிறு தொழில்களுக்கு ஏற்பட்டுள்ள கடும் போட்டியினால் உள்ள பிரச்சினைகளை நீண்ட காலத்திற்கு ஒத்தி வைக்க இயலாது. வருங்காலத்தில் வாழ்க்கையின் அனைத்து நிலைகளிலும் தகவல் தொழில்நுட்பம் புகுத்தப்படும் என்பது உண்மையாகிவிடும். தற்போதைய வணிகத்தினை இணைய வணிக தளம் பிடிக்கும் நாள் வெகுதூரத்தில் இல்லை. தமிழகத்தின் வணிக எழுச்சியில் இணைய வணிக தளம் (e.commerce) ஏற்கெனவே தொழிலில் புகுந்து விட்டதற்கான அறிகுறிகள் வெளிப்பட்டு வருகின்றன. இணைய வணிக தளம் இம்மாநிலத்தின் வணிகத்தை தீர்மானிக்கும் நிலை வரும்பொழுது முதலில் பாதிக்கப்படுவது சிறு தொழில்களே. ஏனெனில், இணைய தளம் வாயிலான வணிக கலாச்சாரம் பற்றியோ அல்லது கணினி வாயிலாக உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் விற்பனை அல்லது மூலப் பொருட்கள் கொள்முதல் பற்றியோ 90 விழுக்காடு சிறு தொழில் நிறுவனங்கள் அறிந்திருக்கவில்லை. எதிர்காலத்தைத் தெளிவாகக் கருத்திற்கொண்டு தமிழக அரசு சிறு தொழில்களைப் பற்றி 100 சதவீதம் புள்ளிவிவரங்கள் சேகரித்து முழுமையான ஆய்வு மேற்கொண்டு தகவல் தளம் (Data base) ஒன்றை ஏற்படுத்துவதற்கான ஒரு திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. இதை இணைய வணிகதள நோக்கங்களுக்குப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

தற்போது இம்மாநிலத்தில் அமைந்துள்ள சிறு தொழிற்சாலைகள், உற்பத்தி பொருட்கள், உற்பத்தித் திறன் குறித்த விவரங்கள் எங்கும் இல்லை. இத்தகைய விவரங்கள் பெருந்தொழில்களுக்கும், நுகர்வோருக்கும், ஏற்றுமதி சார்ந்த வணிகத்தில் ஈடுபட்டுள்ளவருக்கும், சிறு தொழில் நிறுவனங்களுக்கும் பேருதவியாக இருக்கும். எனவே, சிறு மற்றும் குறுந்தொழில்கள் குறித்த மின்னணு தகவல் தளம் (Electronic Data Base) விவரங்கள் உருவாக்குவதற்கு 100 சதவீத புள்ளிவிவரங்கள் சேகரிக்கும் பணி தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 100 சதவீத புள்ளிவிவர சேகரிப்புப் பணியின் முன்னோடித் திட்டம், காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஏற்கெனவே முடிவு பெற்றுள்ளது. வரும் ஆண்டில், இத்திட்டத்தை மற்ற மாவட்டங்களிலும் விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

224968
சென்னை-600 008

கடந்த ஆண்டு ஆளுநர் உரையில் சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தினால் திருவள்ளூர் மாவட்டம், திருமுல்லைவாயிலில் 1000 ஏக்கர் பரப்பில் ஒரு தொழிற்பேட்டை நிறுவப்படும் என அறிவிக்கப்பட்டது. முதற்கட்டமாக, 290 ஏக்கர் அரசு நிலம் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் பொறுப்பில் விடப்பட்டு, அந்நிறுவனம், மகளிர்க்காக மட்டுமேயான அத்தொழிற்பேட்டையினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளைத் துவங்கியுள்ளது.

சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மகளிருக்கு மட்டும் ஐந்து தொழிற்பேட்டைகள் நிறுவுவது குறித்து அறிவிக்கப்பட்டது. மதுரை, திருச்சி மற்றும் சென்னையில் மகளிருக்கான தொழிற்பேட்டைகள் நிறுவத் தேவையான நிலம் தயாராக உள்ளது. விரைவில் இவை துவக்கி வைக்கப்படும். சேலம் மற்றும் கோயம்புத்தூரில் நிறுவப்படும் தொழிற்பேட்டைகளுக்கான நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

**தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (டான்சி).**

இம்மாநிலத்தினைத் தொழில்மயமாக்குவதற்கு, ஆரம்பக் கட்டத்தில் புதிய தொழில் முனைவோர்களுக்குப் பயிற்சி அளிக்க, மாதிரி தொழிற் பயிற்சி மற்றும் உற்பத்தி அலகுகள் தொழில் வணிக இயக்ககத்தால் ஆரம்பிக்கப்பட்டன. இத்தொழில் பிரிவுகள் பல புதிய பொருட்களுக்குப் பரிசோதனைத் தளமாகவும், பல சமயங்களில் நம் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள சிறு தொழில் மற்றும் குறுந்தொழில் அமைப்புகளின் வளர்ச்சிக்குத் தூண்டுகோல் அமைப்பாகவும் இருந்தன. இவ்வலகுகள் பயிற்சி அளிக்கும் பணி 1965-ம் ஆண்டில் நிறைவு பெற்றதாகவும் சிறு தொழில் நிறுவனங்கள் வளர்ச்சியுற்றதால் மேலும் பயிற்சி அளிக்கத் தேவையில்லை என்றும் கருதப்பட்டது. எனவே, இந்தப் பயிற்சி மற்றும் உற்பத்தி அலகுகள் தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (டான்சி) என்னும் கழகத்தின்கீழ் கொண்டு வரப்பட்டன. அதுமுதல் டான்சி நிறுவனம் உற்பத்தி அலகுகளின் ஒரு தொகுப்பாகவும், சிறு தொழிலில் முன்மாதிரியான உற்பத்தியாளராகவும் செயல்பட்டு வருகிறது. டான்சி உற்பத்தி செய்யும் பொருட்களில் பயன்படுத்தப்படும் பொருட்களின் சுத்தம் மற்றும் நல்ல தரம் காரணமாக டான்சி பொருட்கள் தற்போதும் மிகவும் பிரபலமானவையாகவுள்ளன. டான்சி சுத்தமான மூலப் பொருட்களைப் பயன்படுத்தி நியாயமான வணிக முறையை பின்பற்றுவதால் சந்தையிலுள்ள போட்டிப் பொருட்களைக் காட்டிலும் விலை அதிகமாக உள்ளது.





கொள்முதல் முன்னுரிமை டான்சிக்கு மறுக்கப்பட்டவுடன் அதன் வர்த்தகம் சரிவடைந்து விட்டது. அரசுத் துறைகள் தரமான பொருட்களையே வாங்க வேண்டும் என்பதால் கொள்முதல் முன்னுரிமையை மீண்டும் டான்சிக்கு அளிக்க வேண்டும் என்று இந்த அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது. மேலும், அடிப்படைக் கட்டமைப்புப் பொருட்களான கைப்பம்புகள் மற்றும் மின் கோபுரங்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்வதில் டான்சி தனித்தன்மை பெற்றுள்ளது. பொதுவாக, இலாபம் குறைவாக இருப்பதால் பிற நிறுவனங்கள் இவற்றைத் தயாரிப்பது இல்லை. இருப்பினும், இந்தப் பொருட்களின் உற்பத்தி மாநிலத்தின் பொருளாதார அடிப்படைக் கட்டமைப்பிற்கு அவசியமாக உள்ளன.

இருபது ஆண்டுகளுக்குப் பிறகு டான்சி திறம்படச் செயல்பட ஆரம்பித்துள்ளதால், இந்த ஆண்டு மூன்று கோடி ரூபாய் நிகர இலாபம் ஈட்டும். மற்ற மாநிலங்களில் வர்த்தகம் செய்யவும், தனியார் துறைகளில் நுழைவதற்கும் டான்சி நடவடிக்கை எடுத்து வருகிறது. சமீபத்தில் டாட்டா, ரிலையன்ஸ் போன்ற தொழில் நிறுவனங்கள் தொலைத் தொடர்பு கோபுரங்கள் உற்பத்திக்கு, டான்சிக்கு ஏற்பு வழங்கியுள்ளன. இந்நிலைமை நீடிப்பதுடன், சிறு தொழில் சார்ந்த நிறுவனங்களில் 'டான்சி' முன்மாதிரி பொது நிறுவனமாக விளங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 15 அம்சத் திட்டம்.**

முதல்வரின் 15 அம்சத் திட்டங்களை நிறைவேற்றுவதில் சிறு தொழில் துறை பெரும் பங்கு வகிக்கிறது. வாழ்க்கைப் பாதுகாப்பு அம்சத்தில், திறமை ஏதும் இல்லாத தொழில்நுட்ப நபர்களைத் திறமையுள்ளவர்களாக மாற்றுவது முக்கிய நோக்கமாகும். இதில் கூட்டு முயற்சி வேளாண் அல்லாத வேலைவாய்ப்பினை உருவாக்கும். கருவிப் பொறியியல், குளிர்சாதனம், கண்ணாடி மற்றும் பீங்கான் போன்ற சிறப்புத் துறைகளில் நல்ல அனுபவம் வாய்ந்த தொழில் மற்றும் வணிகத் துறை 50 ஆண்டுகளாக சிறப்பாகப் பயிற்சி அளித்து வருகிறது. அதிகமான நபர்களுக்குப் பயிற்சி அளிப்பதன் மூலம் இந்த நடவடிக்கை மேலும் வலுப்படுத்தப்படும். படித்த வேலையில்லாத இளைஞர்களுக்கு பாரதப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் பயிற்சி அளித்து சுய வேலைவாய்ப்பு உருவாக்குவது தொடர்ச்சியான பணியாகும். இந்த ஆண்டிற்கான குறியீடான

20,000 நபர்கள் என்பது வெற்றிகரமாக முடிக்கப்படும். 15 அம்சத் திட்டத்தில் மிக முக்கியமான மற்றொரு அம்சம் அடிப்படைக் கட்டமைப்பு வசதி மேம்பாடு செய்தலாகும். கிராமப்புற மற்றும் நகரப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதை சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் தனது குறிக்கோளாக ஏற்றுக் கொண்டுள்ளது. தண்ணீர், மின்சாரம் மற்றும் சாலைகள் போன்ற அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் தற்போதுள்ள 73 தொழிற்பேட்டைகளில் சிட்கோ நிறுவனத்தால் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகின்றன. சிட்கோ தொடர்ந்து இந்தத் தொழிற்பேட்டைகளில் கட்டமைப்பு வசதிகளின் தரத்தை மேம்படுத்தும். மேலும், இந்நிறுவனம் கிராமப்புறங்களில் தேவைக்கேற்ப பல இடங்களில் புதிதாகத் தொழில் கட்டமைப்பு வசதிகளை உருவாக்கும்.

**தமிழ்நாடு தொழில்நுட்ப மையம்:**

போட்டிச் சந்தையில் சிறு தொழில் நிறுவனங்கள் நிலைத்து நிற்க தொழில்நுட்ப மேம்பாடு அவசியமானதாகும். தமிழ்நாடு தொழில்நுட்ப மையம், தொழில்நுட்ப மேம்பாடு தேவைப்படும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு உதவியளிக்கும் திட்டத்தை சமீபத்தில் தொடங்கியுள்ளது.

*புதிய திட்டங்கள்:*

**9.1** 2002-2003 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் மூன்று தொழிற்கூட்டுறவுச் சங்கங்களை அமைத்திட இத்துறை உத்தேசித்துள்ளது:

1. தாமிர நகைகள் உற்பத்தியாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கம், சிதம்பரம், கடலூர் மாவட்டம்.
2. முந்திரி மற்றும் முந்திரி சார்ந்த பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழிற் கூட்டுறவுச் சங்கம், ஜெயங்கொண்டம்.
3. தங்க நகை தயாரிப்பு தொழிற் கூட்டுறவுச் சங்கம், கோயம்புத்தூர்.



**சிறுதொழில் துறையில் அரசு மற்றும் தனியார் பங்குபெறுதல்:**

**(Public and Private Partnership in SSI Sector)**

தொழில் வளர்ச்சிக்கும், பொருளாதார முன்னேற்றத்திற்கும் அரசு எடுக்கும் முயற்சிகள் மட்டுமே போதுமானதாக இருக்காது. அதிக அளவில் தனியார்மயம், ஜனநாயகமாக்கல், பரவலாக்கல் இவற்றில் பல்வேறு துறைகளில் உள்ளவர்கள், குறிப்பாக, சிறு தொழில்கள் தாமே பங்கு பெறுதல் ஆகியவற்றை புதிய பொருளாதாரக் கொள்கை மையமாகக் கொண்டுள்ளது. இலாப நோக்கிற்காக அல்லது இலாப நோக்கில்லாமல் பொதுத் துறை மற்றும் தனியார் துறை இணைந்து செயல்படுவது அரசு மற்றும் தனியார் பங்கு பெறுதல் ஆகும்.

தொழிற்பேட்டைகளில் உள்கட்டமைப்பு வசதிகளைப் பராமரித்தல், வணிகத்தினைப் பெருக்குவதற்கான சேவைகள், பொது வசதி மையங்கள், சிறு தொழில்களின் 100 சதவீதம் புள்ளிவிவரம் சேகரிக்கும் பணி ஆகியவற்றில் அரசு மற்றும் தனியார் பங்கேற்பிற்கு முக்கியத்துவம் அளிக்க தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.

ஜெர்மனியைச் சார்ந்த பொருளாதார முன்னேற்றம் மற்றும் வாழ்க்கைத் தொழில் சார்ந்த பயிற்சிக்கான நிறுவனம் (SEQUA) அரசு மற்றும் தனியார் பங்கேற்பதற்கு உதவி செய்ய முன்வந்துள்ளது. ஜெர்மனியின் சிறு வணிகம் மற்றும் திறமை பெற்ற கைத்திறத் தொழில்களுக்கான கூட்டமைப்பு நமது முயற்சியில் ஒரு பங்குதாரராக இருக்கும். இந்தத் திட்டம் நடப்பாண்டிலிருந்து செயல்படத் துவங்கும்.

**சிறு தொழில்களை இணைய தளம் மூலம் பதிவு செய்தல்:**

**(On line Registration of SSIs)**

இந்த வருடத்திலிருந்து சிறு தொழில் அலகுகளை இணைய தளம் மூலம் பதிவு செய்யும் திட்டம் அமல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் இரு கட்டங்களாகச் செயல்படுத்தப்படும். முதற்கட்டமாக, சிறு தொழில்களுக்கான தற்காலிகச் சான்றிதழ் பெற இணைய தளத்தின் (On line) மூலம் விண்ணப்பிக்கலாம். ஒரு தொழில் முனைவோர் தற்காலிக சிறு தொழில் சான்றிதழுக்கான விண்ணப்பத்தினை இன்டர்நெட் வாயிலாகச் சமர்ப்பித்து அதற்கான ஒப்புகையை உடனடியாகப் பெறலாம். சென்னையிலுள்ள தொழில் வணிகத் துறை அலுவலகத்திலுள்ள மத்தியப் பரிமாற்றத்தின் (Central Server) மூலம்

[2002 ஏப்ரல் 12

விண்ணப்பத்தினை தொடர்புடைய மாவட்டத் தொழில் மையம் பெற்று சிறு தொழில்களுக்கான தற்காலிகச் சான்றிதழ் சான்றொப்பமிடப்பட்டு தொழில் முனைவோருக்கு வழங்கப்படும். சிறு தொழில்களுக்கான தற்காலிகச் சான்றிதழை இணைய தளம் மூலம் தொழில் முனைவோர் பெறுவது இந்தியாவிலேயே முதன்முதலாகச் செயற்படுத்தப்படுகின்ற திட்டமாகும்.

*தேசிய சிறு தொழில் நிறுவனம் (NSIC) தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் இணைந்து செயற்படுத்தும் குறுந்தொழில் அலகுகளுக்கான கூட்டுக் கடன் திட்டம்.*

தேசிய சிறு தொழில் நிறுவனம் (NSIC) குறுந்தொழில் பிரிவுகளுக்காக ஒரு கூட்டு பருவக் கடன் திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மொத்தம் ரூபாய் இருபத்து ஐந்து இலட்சங்கள் வரை பருவக் கடனாக நிலம் மற்றும் கட்டடம், இயந்திரத் தளவாடம் மற்றும் குறுந்தொழில் பிரிவுகளுக்குத் தேவைப்படும் நடைமுறை முதலீட்டிற்காக வழங்கப்படுகிறது. தேசிய சிறு தொழில் நிறுவனம் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்துடன் இணைந்து ஒற்றைச் சாளர முறையில் கடன் வழங்குகிறது. தேசிய சிறு தொழில் நிறுவனம் - தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனங்கள் இணைந்து வழங்கும் கடன் திட்டத்தின் சிறப்பு அம்சங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

(1) இயந்திரம் மற்றும் தளவாடங்களின்மீது ரூ.25 இலட்சம் வரை முதலீடு செய்துள்ள குறுந்தொழில் பிரிவுகள் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறத் தகுதியுடையனவாகும்.

(2) தொழில் முனைவோர், தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்திடம் அதன் தொழிற்கூடங்களில் உள்ள பணிக்கூடங்கள் அல்லது மேம்படுத்தப்பட்ட மனைகள் ஒதுக்கீடு செய்ய விண்ணப்பிப்பர். தொழில் முனைவோர் உடனடியாக தேசிய சிறு தொழில் நிறுவனத்திடம் பணிக்கூடம் அல்லது மேம்படுத்தப்பட்ட மனைகள், இயந்திரம் மற்றும் தளவாடங்கள் மற்றும் நடைமுறை மூலதனத்திற்குத் தேவையான கூட்டு பருவக் கடன் வேண்டி விண்ணப்பிப்பார்.

(3) விண்ணப்பதாரர் உத்தேசித்துள்ள திட்டம் குறித்து, தேசிய சிறு தொழில் நிறுவனம் மற்றும் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் அலுவலர்கள் சேர்ந்த ஒரு இணை மதிப்பீட்டுக் குழு இதனை மதிப்பிட்டு, கூட்டு பருவக் கடன் வழங்க பரிந்துரைக்கும்.



2002 ஏப்ரல் 12]

தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் குறுந்தொழில் பிரிவிற்கான பணிக்கூடத்தினை அல்லது மேம்படுத்தப்பட்ட மனையினை ஒரேயடியாக மொத்தமாக வாங்கிக் கொள்ள (Out-right) ஒதுக்கீடு செய்யும். தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் வழங்கியுள்ள ஒதுக்கீட்டு ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள பணிக்கூடம்/மேம்படுத்தப்பட்ட மனையின் மதிப்பின் அடிப்படையில் தேசிய சிறு தொழில் நிறுவனம் பருவக் கடனிற்கு ஏற்பு வழங்கும்.

தேசிய சிறு தொழில் நிறுவனம் இயந்திரம் மற்றும் தளவாடங்கள் மற்றும் நடைமுறை மூலதனத்திற்குத் தேவையான கடனை உடன் நிகழ்வாக அனுமதி வழங்கும்.

கடன் தொகை வழங்குவதற்கு தேசிய சிறு தொழில் நிறுவனத்திற்கு மனை/தொழிற்கூடத்திற்கான தொகையை விடுவிப்பதற்காக முதல் பொறுப்பினை வழங்கி தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் தடையின்மைச் சான்றிதழை வழங்கும்.

தவணைத் தொகையை வசூலிப்பதற்கு தேசிய சிறு தொழில் நிறுவனத்திற்கு சிட்கோ உதவும். இதற்கான சேவைக் கட்டணங்கள் இரு நிறுவனங்களாலும் தீர்மானிக்கப்படும்.

குறுந்தொழில் அலகுகள் பெரும்பாலும் வேலையில்லா தொழில் முனைவோர் மற்றும் அனுபவமுள்ள தொழில்நுட்பாளர்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஒரு சுய வேலைவாய்ப்புத் தரும் முயற்சியாகும். குறுந்தொழில் பிரிவுகள் கிராமம் மற்றும் சிறு நகர்ப்புறப் பகுதிகளில் நிறுவப்பட்டு உள்ளூர் மக்களுக்குப் பரவலாக வேலைவாய்ப்பை அளிக்கிறது.

காதி மற்றும் கிராமத் தொழில் ஆணையத்தின் விளிம்புத் தொகை உதவியை, கிராமப் பகுதிகளில் உள்ள தகுதியுடைய இனங்களில் பயன்படுத்திக் கொள்ள தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் உதவி புரியும்.

[2002 ஏப்ரல் 12

## சிறு தொழில் துறைக்கான நிதி ஒதுக்கீடு

### கோரிக்கை எண் 42

(ரூபாய் இலட்சத்தில்)

| கணக்குத் தலைப்பு | 2001—2002க்கான வரவு செலவு மதிப்பீடு | 2001 2002க்கான திருத்தப் பட்ட மதிப்பீடு | 2002—2003க்கான வரவு செலவு மதிப்பீடு |
|---|---|---|---|
| 2407 மலைத் தோட்டப் பயிர்கள் | - | 10.00 | — |
| 2851 கிராமம் மற்றும் சிறு தொழில்கள் | 3256.42 | 3734.59 | 2893.29 |
| 2852 தொழில்கள் | 498.74 | 413.73 | 426.56 |
| 2885 இதர தொழில்கள் மற்றும் கனிமங்கள் | 1000.01 | 500.00 | 1000.00 |
| 4425 கூட்டுறவுத் துறை குறித்த மூலதனச் செலவு | 7.50 | 7.50 | - |
| 4551 மலைப் பகுதிகளில் குறித்த முதலீட்டுச் செலவு | 20.00 | 20.00 | 15.00 |
| 4851 கிராமம் மற்றும் சிறுதொழில் முதலீட்டுச் செலவு | 80.97 | 82.69 | 37.15 |
| 6852 இரும்பு மற்றும் உருக்குத் தொழில்களுக்கான கடன்கள் | — | 0.15 | — |
| 6860 நுகர்வோர் தொழில்களுக்கான கடன்கள் | — | 100.00 | — |
| மொத்தம் | 4863.64 | 4868.66 | 4372 |

224948
சென்னை-600 008

அரசு மைய அச்சகம், சென்னை - 600 079.